
# போகர் நிகண்டு 1200

## மூலமும் உரையும்





தாமரை நூலகம், சென்னை - 26.

# போகர் நிகண்டு 1200

## மூலமும் கருத்துரையும்

குறைபாடல்கள் நிறையாக்கப்பட்டு

விடுபட்ட பாடல்கள் சேர்க்கப்பட்ட முழுநூல்

பதிப்பாசிரியர்

ஆர். சி. மோகன்



தாமரை நூலகம்

7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு

வடபழனி, சென்னை - 600 026

தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 238

முதல் பதிப்பு : செப்டம்பர் - 1999

இரண்டாம் பதிப்பு : செப்டம்பர் - 2012

மூன்றாம் பதிப்பு : மார்ச் 2016

நான்காம் பதிப்பு : ஜுன் 2019

உரிமைபெற்றது

## நூலைப்பற்றி

நூலின் பெயர் : போகர் நிகண்டு 1200

பதிப்பாசிரியர் : ஆர். சி. மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : ஜுன் 2019



நூல் வடிவம் : 21 செ. மீ. x 14 செ. மீ

தாளின் தன்மை : 16.6 கி.கி. வெள்ளைத்தாள்

எழுத்தின் அளவு : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 356+26

பிரதிகள் : 1000

நூலின் விலை : ரு. 180/-

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை - 34

91/4

# பதிப்புரை



இது ஒரு பொற்களஞ்சியம்!

வயிரமணிக் குவியல்!

போகர் பல இடங்களில் பொன்னாகும் பொன்னாகும் பொன்னாகும் என்று கூறுகின்றார். உண்மையிலேயே இந்த அறிவியல் கருத்துக்களை வைத்து முறையாக நாம் ஆராயத் தொடங்கி இருந்தால் இதற்குள் இந்த நாடு முழுவதுமே பொன்னாகப் போயிருக்கும்.

இவ்வளவு அறிவுச் செல்வங்களையும், ஆற்றலையும் வைத்துக் கொண்டும், நாம் அந்நியரால் மதியிலிகள் மூட நம்பிக்கைகளில் ஆழ்ந்து கிடப்பவர்கள் என்று கேவலமாக மதிக்கத்தக்க அளவில் தாழ்ந்து கிடக்கிறோம் என்பதனை நினைக்கும் பொழுது வெட்கப்படுவதா, வேதனைப் படுவதா என்று தெரியவில்லை.

பதினான்காம் நூற்றாண்டிலேயே ஒரு ஜெர்மானியர் நமது நாட்டுக்கு வந்தார். தமிழ் கற்றுத் தேறினார். எண்ணற்ற ஓலைச் சுவடிகளை வாரிக் கொண்டு சென்றார் என்பதைக் கேள்விப்படும் பொழுது, அறிவுச் செல்வங்களை அறிந்து கொள் வதற்குக்கூட இயலாதவர்களாக இருந்தோம்.

அவற்றை நாம் புறக்கணித்தோம். கொச்சைப் படுத்தினோம். நமக்கு நாமே ஒன்றும் தெரியாதவர்கள், மூடர்கள் என்று பட்டம் சூட்டிக் கொண்டு பெருமையும் அடைந்தோம் என்றுதான் நினைக்க வேண்டி உள்ளது.

போகர் இந்த நிகண்டில் கூறியுள்ள ஒவ்வொரு வரியும் ஒரு அறிவியல் அற்புதம்!

இவ்வுலகம் பஞ்ச பூதங்களால் ஆனது என்று அறிவோம். உலோகம், கல், மண், இவற்றின் வேதியல் மாறுதலே - இவை தீ, காற்று, நீர் ஆகியவற்றால் அடைந்த வேதியல் மாறுதல்களின் விளைவே - நாம் காணும் எல்லாப் பொருள்களும்! அசைவனவும் அசையாதனவும் ஆகிய எல்லாப் பொருள்களும்! உயிர் உள்ளவையும். இல்லாதவையும் ஆன எல்லாப் பொருள்களும்!

மனிதனின் உடலில் வெப்பம் இருக்கிறது. தண்ணீர் இருக்கிறது. காற்று இருக்கிறது. ஆகாயத்தின் கூறான ஜீவனும், பூமியின் கூறான கல், மண், உலோகங்களின் சத்துக்களும் உள்ளன. தாவரங்களின் கூறு இந்த உடலில் உள்ளது என்பது சொல்லாமலே விளங்கும்.

போகர் இந்த நூலில், அநேகவிதமான தாவரங்களையும் அவை உலோகங்கள், உப்புக்கள், முதலானவற்றில் உண்டாக்கும் மாறுதல்களையும் கூறியிருக்கிறார் ஒவ்வொரு தாவர இனத்தையும் அவர் எவ்வளவு நுட்பமாக ஆராய்ந்திஇருக்கிறார் என்பதை நினைக்கும் பொழுது ஆச்சரியமாக இருக்கிறது. எல்லோருக்கும் தெரிந்த அறுகம்புல். அதில் கறுப்பு அறுகு, வெள்ளை அறுகு, பவழ அறுகு என்று தனித்தனி வகைகளையும் அவை ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட குணம் இருப்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

"புகழான கறுப்பறுகு காசம் போக்கும்
வேளையாம் வெள்ளறுகு மேகம் நீக்கும்
மிகப்பவழ அறுகுக்குச் சுவாசம் போமே."

புல் என்று அதைப் புல்லாக நினைத்து நாம் புல்லர்களிலும் கடை கெட்டுப் போனோம். இந்தப் புல்லை வைத்து ஆராய்ச்சி செய்திருந்தால் நாம் வல்லார்க்கும் வல்லவர் என்று உலகம் வாய் திறந்து பேசும்படியான பெருமை அடைந் திருப்போமே.

"பிரண்டை" என்று ஒரு வகைத் தாவரம், எல்லா இடத்திலும் பார்க்கலாம் சாதாரணமாகக் கிடைக்கக் கூடியது. இதன் சாற்றில் வைரத்தினை ஊறப் போட்டால் அது நீறிப் போய் பொடிப் பொடியாகிவிடும் என்று போகர் கூறுகிறார்.

உலகத்தில் எந்த இடத்திலாவது இப்படிப்பட்ட ஒரு அறிவியல் கருத்து கூறப்பட்டுள்ளதா? இதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? எவ்வளவு பெரிய விஷயம், எவ்வளவு சாதாரணமான ஒரு பொருளால் நிகழ்ந்து விடுகிறது.

"கட்டியாம் பொன்மத்தைச் சூதங்கட்டும்
கருமத்தைக் கெந்தகத்தைக் கட்டிப் போடும்
நட்டியாம் நச்சுப்புல் ரசேந்திர குருவாகும்
நான் முகப்புல் ஈயத்தைப் பற்பமாக்கும்
குட்டியாங் காவட்டம்புல் மாந்தம் போக்கும்
கூறான சுணங்க விருக்ஷம் சூதங்கட்டும்!"

மறுபடியும் புல்லுக்கே வந்து விட்டோம், நச்சுப்புல், நான்முகப்புல் காவட்டம்புல் என்று புதிதாக மூன்று வகைப் புற்களைப் பற்றிக் கூறுகிறார்.

பொன் ஊமத்தை பாதரசத்தைக் கட்டியாகச் செய்யும் கருஊமத்தை கந்தகத்தைக் கட்டும் என்று கூறுகிறார்.

மேலும் இங்கே ஒரு விந்தை? பொன் ஊமத்தையைப் போலவே சுணங்க விருக்ஷமும் பாதரசத்தைக் கட்டக் கூடியது என்று சொல்கிறார்.

பொன் ஊமத்தை சுணங்க விருக்ஷம் என்ற இந்த இரண்டு வகைத் தாவரங்களுக்கும் உள்ள பொதுவான இயல்பு என்ன?

பொன் ஊமத்தை பாதரசத்தைக் கட்டுகிறது. ஆனால் கருஊமத்தை கட்டவில்லை ஏன் இந்த வேறுபாடு? ஒரே வகைச் செடிகளுக்கு இடையில் அதன் நிறமாறுதல் அந்த இரண்டும் வெவ்வேறான தன்மைகளை உடையவை என்பதைப் போகர் கண்டறிந்து கூறியிருக்கிறார். நிறத்தால் குணம் மாறுமா? ஏன் மாறு படவேண்டும்? இவை எல்லாம் நுட்பமான ஆராய்ச்சிக்குரிய விஷயங்களல்லவா!

பாதரசம் திரவரூபத்தில் உள்ள ஒரு உலோகம், ஒரு சொட்டு கீழே விழுந்தால் நூறு துண்டுகளாகச் சிதறி விடும்.

ஒரு துண்டின் பக்கத்தில் இன்னொரு துண்டு வந்தால் இரண்டும் ஒட்டிக் கொண்டு ஒன்றாகச் சேர்ந்து விடும். இது தங்கத்தின் மேல் பட்டால் அதைத் தின்று விடும். ஒரு தங்கக் கம்பியின் மேல் சிறிது பாதரசத்தைப் பூசினால் சற்று நேரத்திற்குள் அது துண்டு துண்டாக உடைந்துவிடும். அல்லது பொடிப் பொடியாகி விடும்.

91/4



அபூர்வமான குணங்களை உடையது இந்தப் பாதரசம்! திரவ ரூபத்தில் இருக்கும் இதனை கட்டியாகச் செய்து அதை அப்படியே அதே உருவத்தில் மணியாக நிலைக்கச் செய்வது மிகவும் கடினமான காரியம். பாதரசத்தினை மணியாக மாற்றுவதற்கு நூற்றுக்கணக்கான வழிகளைப் போகர் கூறியிருக்கிறார். எந்தெந்த தாவரம், பாதரசத்தைக் கட்டும், எந்தெந்த உப்பு அல்லது பாஷாணம் பாதரசத்தைக் கட்டும், என்பதை இந்த நிகண்டில் இருந்து தொகுத்து எடுப்பதாக இருந்தால் அதுவே ஒரு தனி நூல் என்கின்ற அளவிற்கு விரிவாகிவிடும்.

பாதரசத்தினைக் கட்டிவிட்டால் போதாது. அதற்குத் தாவரங்களின் சத்துக்கள், உலோகங்களின் சத்துக்கள் பலவகைப் பாறைகளின் சத்துக்கள், பாஷாணங்களின் சத்துக்கள், நவரத்தினங்களின் சத்துக்கள் முதலியவற்றையெல்லாம் கொடுத்து சாரணை ஏற்றி விட்டால் அந்தப் பாதரசமணி மனிதனுக்குப் பறக்கும் சக்தியைக் கொடுத்துவிடும். நொடிப் பொழுதில் மூன்று உலகங்களையும் சுற்றி வந்து விடலாம் என்று கூறுகிறார் போகர்.

சிறிது காலத்திற்கு முன்னால் அபினைத் தின்று விட்டு அல்லது கஞ்சாப் புகையின் மயக்கத்தில் இருந்த பங்கியடித்த சாமியார் ஒருவரின் அபத்தமான பிதற்றல்கள் என்றெல்லாம் ஏளனமாகக் கூறி பரிகாசம் செய்தவர்களும் உண்டு. இவர்களுடைய பரிகாசப் பேச்சுக்களின் குரல் ஓங்கி ஒலித்ததால் இதில் உண்மை இருக்கிறது என்று நம்பியவர்கள் கூட வெளிப்படையாகப் பேசத் தயங்கினார்கள்.

இந்த இடத்தில் ஒரு சிறிய கதையை நினைவூட்ட விரும்புகிறேன். ஒரு அழகான இளைஞனைப் பார்த்து, "டேய் நீ குரங்குடா, குரங்குதான்டா நீ" என்று சிலர் பரிகாசம் செய்தார்களாம். அதைப் பார்த்த மற்றவர்களும், "ஆமாண்டா நீ குரங்குதான்! குரங்குதான்" என்று உரக்கக் கூவினார்களாம்.

எல்லோருமே அவனைக் குரங்குதான் என்று முடிவாகக் கூறி விடவே அவன் உடுத்தி இருந்த உடைகளைக் கூடப் பிடுங்கி ஏறிந்துவிட்டு குரங்கு போல் மரத்தின் மேல் தாவி உட்கார்ந்து கொண்டானாம்.

அந்தக் கதையைப் போல் நாம் நமக்கிருந்த உண்மையான சக்திகளையும் இழந்து விட்டோம். அடையக்கூடிய பயன்களையும் புறக்கணித்து விட்டோம் .

மேல் நாட்டு நாகரிகத்தின் படையெடுப்பு, அந்நிய கலாச்சாரம், அடிமைத் தனத்தின் காரணமாக எல்லாவற்றிலும் அந்நியரையே பின்பற்றும் பழக்கம் ஏற்பட்டுப் போனது. இவை காரணமாக சித்த மருத்துவம் கூட புறக்கணிக்கப்படும்படியான ஒரு நிலைமை ஏற்பட்டு விட்டது.

ஆனால் இன்று..இளைஞர்களிடையே ஒரு விழிப்பு ஏற்பட்டு வருகின்றது. தமிழ்ப் பற்றும் நாட்டுப் பற்றும் நம்மை நாமே மதிக்க வேண்டும் என்ற தன்மான உணர்ச்சியும் குறிப்பிடத்தக்க வகையில் நம் இளைஞர்களிடையே ஒரு பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. சித்தர் இலக்கியங்களை வெளியிட ஆரம்பித்த பின் என்னிடம் வரும் படித்த இளைஞர்களின் ஆர்வம் மிகுந்த முகங்களைப் பார்க்கும்போது ஒரு நம்பிக்கை ஏற்படுகின்றது. இனி எதிர்காலத்தில் போகரின் ஒவ்வொரு வரியும் ஆராய்ச்சிக் கூடங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் நாள் வெகு விரைவில் வரப் போகின்றது ஆய்வு நிலையங்களில் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான அறிவியல் மேதைகள் அலசி ஆராயப் போகிறார்கள்.

மருத்துவம் மட்டுமின்றி, மாந்திரீகம், பரகாயப் பிரவேசம், ஆகாய சஞ்சாரம். முதலானவை பற்றிக் கூட ஆராயப் போகிறார்கள்.

நமது முன்னோர்களான ரிஷிகளும், சித்தர்களும் வெறும் கற்பனாவாதிகள் அல்லர். அவர்கள் யதார்த்த வாதிகளே, அவர்கள் கூறியவை எல்லாம் நடைபெறக் கூடியவையே என்பதை உலகம் உணரும் நாள் வெகு தொலையில் இல்லை. அவற்றை நடைமுறையில் சாத்தியமாக்கிக் காட்டும் நாளும் தொலைவில் இல்லை என்று உண்மையாக உறுதியாக நம்புகிறேன்.

காலத்தின் கையில் அகப்பட்டு யாருக்கும் வேண்டாத பொருளாய் செல்லரித்து, மக்கி, மடிந்து போய்க் கொண்டிருந்த சித்தர் இலக்கியங்களை மீண்டும் வகைப்படுத்தி, எல்லோரும் புரிந்து கொள்வதற்காக வரிகளைச் சரியாக அமைத்து தேவையான இடங்களில் சொற்களைப் பிரித்து மீண்டும் அச்சேற்றி வழங்கியதன் மூலம் தாமரை நூலகம் ஒரு சரியான பணியைச் செய்திருக்கிறது என்று நம்புகிறேன்.

முன்பு அறிஞர் அன்பழகன் பதவியில் இருந்த காலத்தில் அவருடைய விடாமுயற்சியாலும், தூண்டுதலாலும், பழனி தேவஸ்தானம் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை முதலீடு செய்து சித்தர்களின் நூல்கள் சிலவற்றை வெளியிட்டது.

அதற்குப்பின் யாரும் அக்கறை காட்டவில்லை. தாமரை நூலகத்தின் சார்பாக நான் இந்த முயற்சியில் இறங்கி விட்டேன். என்னிடம் இலட்சக்கணக்கான ரூபாய்கள் இல்லை. ஆர்வம்! உழைப்பு! தமிழகம் என்னைத் தாங்கும் என்ற நம்பிக்கை! இவை மூன்றுமே என்னுடைய மூலதனங்கள்! தமிழ்நாட்டு மக்கள் பெரிய அளவில் இந்த நூல்களை வாங்கி ஆதரிப்பதன் மூலம் சித்தர்களுடைய எல்லா நூல்களையும் போகர் கூறியதைப்போல்- "மக்களின் கைகளிலே ஒப்பித்து விடமுடியும்." என்பது என் நம்பிக்கை.

எனக்கு தமிழ் மக்கள் இன்னும் ஓர் உதவியும் செய்ய வேண்டும். சித்தர்களின் நூல்கள். பழைய பிரதிகளை வைத்திருப்பவர்கள் தாங்களாக முன் வந்து அவற்றை வெளியிடுவதற்குக் கொடுத்து உதவி செய்ய வேண்டும்.

இன்னும் எத்தனையோ நூல்கள் வெளி வராமல் முடங்கிக் கிடக்கின்றன. செல்லரித்து, மக்கிப்போய் அவை வீணாகப் போய்க்கொண்டிருப்பதனைப் பார்த்தும் அவற்றை வைத்திருப்பவர்கள் அவற்றை என்ன செய்வதென்று தெரியாததாலோ, அல்லது வேறு காரணத்தாலோ வெளியே கொண்டு வர விருப்பம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இந்தச் செல்வம் அழிந்து போகக் கூடாது, ஏனென்றால் இது நமது நாட்டின் பெருமையை உலகறியச் செய்யக்கூடிய அற்புதமான செல்வம்! என்றென்றும் அழியாத செல்வம்! தமிழன் ஒவ்வொருவனும் பெருமை படத்தக்க செல்வம்! இதை எல்லோரும் உணர வேண்டும்.

சித்தர்களின் நூல்கள் எங்கெங்கு கிடைப்பினும், எப்படிக்கிடைப்பினும், யார் மூலமாகக் கிடைப்பினும் அவற்றையெல்லாம் வகைப்படுத்தி முறைப்படுத்தி வெளியிடுவதனையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டுள்ளேன். தமிழ் மக்கள் நல்லாசி புரிவார்களாக!

சென்னை - 26
1.8.1999

எஸ். பி. ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்.

## பொருளடக்கம்

முற்றும்

ஓம்
சிவாய நம:

# போக நாயனார் அருளிச் செய்த நிகண்டு (1200)

அகண்டபரி பூரணமாம் ஐயர் பாதம் போற்றி
அடுக்க நின்று உன் மனைத்தாய் பதத்தைப் போற்றி
நிகண்டெனவே திருமூலர் நாயர் பதம் போற்றி
நீங்காமல் காலாங்கி அய்யர் பதம் போற்றி
புகன்று நின்ற நாதாக்கள் ரிஷிகள் பதம் போற்றி
பேரான வாக்குடைய வாணி பதம் போற்றி
முகன்று நின்ற குஞ்சரத்தின் பதத்தைப் போற்றி
பூவுலகு மெச்சுதற்கு நிகண்டு கேளே. 1

**சவுக்காரச் சுண்ணம்**

கேளப்பா அறுபத்து நாலு மரபு உள்ளோர்
கெடியாகப் பாடியதோர் சாத்திரத்துக்கெல்லாம்
வாளப்பா மறைப்பான சூத்திரத்திற் கெல்லாம்
மாலையைப் போல் பேர் மறப்பை வெளியாய் சொல்வேன்
சூளப்பா சவுக்காரச் சுண்ணமாகச்
சூட்சமெல்லாம் நிகண்டுக்குள் சொல்லக்கேளு
பாளப்பா சவுக்காரம் பாக்கு போலேசீவி
பல மஞ்சு புத்தோட்டிற் பரப்பிடாயே. 2

பரப்பி விட்டு மல்லிகைபூச் சாறு வாங்கிப்
பாவகமாய் நனைத்துவா சவுக்காரத்தை
நிரப்பிவிட்டு ரவியில் வைத்து பாகம் பண்ண
நேசமாய் நாள் ஏழுமான பின்பு
உறப்பிவிட்ட சீலைதனில் மல்லிகையினிலையை
உசத்தியாய்ப் பரப்பியே சவுக்காரம் வைத்து
மறப்பிவிட்டு மேலு மந்தயிலை பரப்பி
வளமாக நெல்லின்மேல் டோலிபோல் வையே. 3

வைத்துமே சீலை தன்னைத் தொங்கவிட்டு
வாகான சட்டி கொண்டு மேலே மூடி
ஐத்துமே நெல்லின் ஆவி வெளியே வந்தால்
அசையாம லெடுத்துமே புத்தோட்டி லிட்டு
நைத்துமே ரவி தனிலே காயப்போட்டு
நலங்காமல் முன்போல சீவலாக்கி
நெய்த்துமேயிலை பரப்பியதன் மேல் வைத்து
நேர்பாக நெல்லுக்கு வித்துலத்தே. 4

உலத்தியே மூன்று தரம் வித்தெடுத்து
உத்தமனே நற்சுண்ணம் சுட்டுக் கொண்டு
கலத்திலே கற் சுண்ணஞ் சீலைதனில் பரப்பி
கசக்காமல் சவுக்காரத்தின் மேல் வைத்து
மலத்தியே கற் சுண்ணத்தாலே மூடி
மைந்தனே கிளி போற் றளரக்கட்டு
குளத்தியே சட்டிக்குள் அசையாமல் வைத்து
கோணாமல் சட்டியின் மேலோடு கொண்டுமூடே. 5

மூடியதோர் ஒட்டுக்குள் துளைதான் இட்டு
முத்திரத்தின மல்லை கையினிலையைப் போட்டு
ஆடியதோர் அடுப்பில் வைத்து கொதிகுளம்பாய்க்காய்ச்சி
ஆறாமல் துளவினால் நிறைய மட்டும் விட்டு
நாடியதோர் மேல் சட்டி மூடிப் போட்டு
நன்றாக வலியுமது அமர்ந்த பின்பு
தேடியதோர் சீலை தனை அசையாமலெடுத்து
சிறப்பாக மறு சீலைக்குள்ளே போடே. 6

சீலைக்குள் கிளிபோல தளரக்கட்ட
சிறப்பாக கற்சுண்ணம் புதிதாய்ச் சுட்டு
மாலைக்குள் சுண்ணத்தால் கீழ் மேல்மூடி
மைந்தனே தமரியுட வோட்டை வைத்து
வேலைக்குள் முன்னீரைக் கொதிக்க வைத்து
விளங்கவேது வார்த்ததால் விட்டு நீத்து
ஆலைக்குள் சாறு போ லெண்ணை யெல்லாம்
அசையாதே பதினொன்று தரமும் நீற்றே 7

நீற்றியே சவுக்கார மெடுத்துக் கொண்டு
நேராமல் மல்லிகையி னிலையும் வேரும்
மாற்றியே யரைத்து நன்றாய்க் குகைபோல் பண்ணி
வளமாகச் சவுக்கார மதற்குள் வைத்து
போற்றியே மேல் மூடிச் சீலை செய்து
புகழாகக் கிளிஞ்சி நீற்றுக்குள்ளே வைத்து
ஆற்றியே நீ எரிப்பாய் சாம மொன்று
ஆறவிட்டு சவ்க்காரம் வாங்கிக் கொள்ளே. 8

வாங்கியே சவுக்காரங் கல்வத்திட்டு
வளமான கடுங்காரத் திராவகத்தைக் குத்தி
யோங்கியே யிருசாமம் நேர்வாட்டி
உற்பனமாய் காகபோல் வில்லைபண்ணி
தாங்கியே அண்டோட்டுக்குள்ளே வைத்து
சாதகமாய் அண்டோட்டினாலே மூடி
தேங்கியே சுண்ணாம்புச் சீலைசெய்து
சிறப்பாக பத்தெருவில் புடத்தைப் போடே. 9

புடம்போட்டு யெடுத்துடனே வெள்ளையாடும்
பெரிதான கல்வத்திலிட்டு ஆட்டு
கடம்போட்டு கடுங்கார செயநீர் குத்தி
காசுபோல் வில்லைதட்டிக் காயப்போட்டு
நடம்போட்டுக் கடுங்காரக் குகைக்குள் வைத்து
நலமாக மேல்மூடிச் சீலை செய்து
விடம்போர்ட்டுப் பத்தெருவில் புடத்தைப்போடு
வெண்ணீறாய்ச் சுண்ணாம்பு ஆகும்பாரே. 10

ஆகும் பா சவுக்காரம் சுண்ணாம்பாக
அரிதரிது யிம்முறை போலாருக்குமில்லை
வேகுமப்பா சரக்கெல்லாங் கட்டிப்போகும்
விறச்சி நின்ற கல்லுப்புமணி போலாகும்
சாகுமப்பா நவச்சாரந் தந்தம்போலத்
தலையான கற்பூரச் சுண்ணமாகும்
நோகுமப்பா சடமெல்லாங் காயசித்தியாகும்
நோக்கான சவுக்காரச் சுன்னத்தாட்டே. 11

**சவுக்காரம்**

சவுக்காரப் பேர் தனையே சாற்றக்கேளு
சதாசிவமாம் வெண்சாரை தணித்த வண்ணான்
உவக்காரஞ்சிற்பரையாம் உப்பான வழலை
உசந்தகுரு முறையாகு முமையாளீசன்
நவக்காரம் வாதத்தியாதி யானோன்
நாதியாங்குடி யானோன் சூர்மையாளன்
கவுக்காரஞ் சோமன் ரவி-வன்னியானோன்
சுயம்பாகி நெருபாந்த சுத்தியானே. 12

சுத்தியாகுஞ் சூலானோன் சுடலையாடி
செகத்திலிலுள்ள படைப்புக்கு சிருட்டியாளன்
முத்தியாம் வாதத்தில் தலைமையானோன்
முடியாத வாதத்தை முடிக்கின்றோனாம்
பத்தியா மந்தகனா மகரந்த மலரானோன்
பவள மென்னும் மேடையோன் பாதத்தோனாம்
முத்தியா மகத்துக்கு மார்க்க மானோன்
மூதண்ட மாட்டு வித்த மூர்க்கனாமே. 13

**பூவழலை**

மூர்க்கனாந் தரணிக்கு நாதனானோன்
முதிர்ந்த தொரு பூநீறு பூமிநாதந்
தீர்க்கனா மொட்டச்சி ஊஷரமாம் வெள்ளை
சிறந்த பூசாரத்தி பாரத்தங்கு சத்தி
யாற்கனாம் வேதத்தி பூமியது சவுடு
அழுக்ககற்றும் வண்ணாத்தி ஆதிமுதற்குருச்சி
ஊற்கனா முகந்துவரை காயத்தை திருத்தி
யுற்ற பூவழலை யென்று முறை செய்தபடியே. 14

படியான வழலை விட்டால் வாதமில்லை
படிப்படியா யேறுகிற முறையுமில்லை
பிடியான யைச்சித்தி கெவுனசித்துமில்லை
போய்க் கூற்றாய்ச் சுட்டலைந்து பிரேதமா வான்
அடியான மரத்தில் நின்று தொத்தியேற
ஆகாகா நுனிமட்டு மேறலாகும்
முடியான வழலையுப்பை முன்னே செய்தால்
மோசமில்லை முடிவுமட்டும் ஏறலாமே. 15

## நவச்சாரப் பெயர்

ஆகுமே நவச்சாரப் பேறைக் கேளு
அடுக்காகும் நவசித்தி சாரமானோன்
வாகுமே சலக்கூர்மை வாருதிக்குள் கப்பல்
வழங்கினோன் ஒன்பதிட வமுரியானோன்
வேகு மெய் சுந்தரன் மேகநாதன்
மெய்யான வாதத்துக் கொப்பாய் நின்றோன்
போகுமே வாதமென்ற வாருதிக்குள் நாதன்
பேரான செயநீர்க்கு நாதனாமே. 16

ஆமென்ற வாதத்திற்கு சிரோமணியாய் நின்றோன்
அசுரனாஞ் சகல குருஅக் கினித்தீயோன்
வேமென்ற துருசுக்கு மேற் குருவானோன்
விடுபட்ட நவசாரி கடுஞ்சாரி யானோன்
போமென்ற வாதத்தை சமைக்குகின்றோன்
பேரான கெங்கையுட குணமுள்ளோனாம்
நாமென்ற சத்தியிட கூறாய் நின்றோன்
நவச்சாரப் பேரெல்லாம் நாட்டினேனே. 17

## சத்திச் சாரம்

சத்தியென்ற சாரத்தின் பேரைக் கேளு
சாதகமாஞ் சவளச்சி சக்கிலிச்சியாகும்
முத்தியென்ற வாதத்தி கள்ளத்தியாகும்
முழச்சூதக் கண்டகி யாங் காந்தாரி பரச்சி
மெத்தி யென்ற சாரோகியச் சாரெச்சாரி
யெளிதான சுவாச்சாதி யெமனுட குணத்தி
பத்தியென்ற சத்தியிட் சாரத்துக்கு
பாடியதோர் நாமமதைப் பண்பாய்ப் பாரே. 18

## எவச்சாரம்

எவச்சார நாமத்தைஇயம்பக் கேளு
யெர நிறமாங்கருப்பியே வடக்கி யாகும்
நவச்சியாந் திரணச்சி யெவ சோதியாகு
நலமான குட்டிச்சிப் புகை நீர்க்காதி

புவட்சி யாங்கா ரணமாஞ் சத்தியாகும்
பூதச்சி சோர் வாறிப் புலச்சியாகுங்
கவட்சி யாமெவச்சார நாமத்துக்
கண்டபடி பேர்சொன்னோங் கருதிப் பாரே. 19

**காசிச்சாரம் ஏகம்பச் சாரம்- வெண்காரம்- சூடன் சீனம்**

**காசிச் சாரம்**

காசியுடச் சாரப் போக்கே கேளு
கடுங்குப் பிச்சாரந்தான் துரைச்சியாகும்
வேசியுடவூ ஷரத்தினுப்பில் தானும்
வெடியுப்பு நவச்சார மொக்கக் கூட்டி
ஒசியே குப்பியிலே சமைத்து விட்ட
உத்தமமாம் லவணமது மிணங்கனாகும்
மாசியுட பறங்கிக் கூர்மையாகும்
மாச்சரியங் காசியென்ற சாரப் போக்கே. 20

**ஏகம்பச் சாரம்**

ஏகம்பச் சாரத்தின் நாமம் கேளு
யேமத்திற் பிறந்தவள் தானேற்றமுள்ள கன்னி
யாகம் பலோகங்கள் பேதிக்குங் கண்ணி
அழகான துரைப் பெண் தாருணி பொற்சிவப்பி
வாகம்பச் சூலினியாம் மாலினுட தங்கை
மகத்தான தாதுவுக்கு சத்துரு நாமத்தி
ஏகம்ப மித்தியம் பொன் பிறந்த கன்னி
புகழ்கின்ற யேகம்பச் சாரந்தானே. 21

**சீனாக்காரப் பெயர்**

சீனத்தின் பேர்தனையே சொல்லக் கேளு
சிறந்த வெண் காரிதான் பழகிசீனி
மானத்தின் மின்போல வெள்ளச்சியாகும்
மகத்தான பாணிச்சி குருச்சியாம்
பானுத்தி னுப்புக்கு சத்துரு வேயாகும்
பாங்கான வெண்நீலி கடுஞ் சுண்ணத்தி
கானத்தின் கடுஞ் சீனப் பேருமாகுங்
கடுஞ்சுண்ண முறைகளுக்கு யதனை நாட்டே. 22

**வெண்காரம்**

வெண்காரப் பேர்தனையே விளம்பக் கேளு
மேதினியோர் தங்களுக்கு உருக்கினமாகுஞ்
சங்காரம் போலவே சத்தெல்லாமாகும்
சத்தானப் பொரிகாரிக் குடோரியாகும்
அங்காரி டங்கணமுமா மடங்காத
தூமத்தை அடங்கப் பண்ணி
பொங்காரி சரக்குக்கு மித்துரு வேயான
பொரிகாரி தனக்கிசைந்த பேருமாமே. 23

### சூடன்

சூடனுடபேர் தனையே சொல்லக் கேளு
சுடர்க்கொடி தூனத்தனிப் பண்ணச் சூடனாகு
மாடான தீபக் கொடிச்சி மாபத்தருபி
மகத்தான தீத்தருஞ்சி மாசற்ற ஜோதி
வேடன் வெடியுப்புக் கருவாய்ப் பட்டை
விளங்கியதோர் பாண்டத்தில் சமைந்த கன்னி
யாடனாலத்தி கற்பூர மென்றும் பேராமால்
ஆபத்த கேசரிதான் அதிதமென்று சொல்லே. 24

### பச்சை கற்பூரம்

பச்சைக் கற்பூரத்தின் பேரைக்கேளு
பலகையாமது சந்திரனு மாகும்
மூச்சை கண்ணீராக்கி யுதை ரவிக்கஞ்சி
உண்மையரங்க தளிப்பு மதிபூரமாகும்
கொச்சை மதன் சாரியாங் குருவுக்காதி
கொடி தானமுக் கண்ணிலொரு கண்ணாகும்
கசையாம்படி சோமன் சீதளமுமானோன்
கற்பூரமென்று பேர்க் கருவாய்ப் பாரே. 25

### அமுரி உப்பு

அமுரியுப்பின் பேர்தனையே அறையக் கேளு
ஆதார மூலத்தின் சாரமாகும்
குமுரியுப்பு முழங்குகின்ற வமுரி யென்பார்
மூலவன்னி தீச்சலமா முதிர்ந்த சடவுப்பு
உமுரியுப்பு சலக்கூர்மை வத்து உப்பு
உத்தம மாங்காய சித்தியாகுமுப்பு
நமுரி உப்பு சங்காரக் கால உப்பு
லவண மாங் கடுங்கூர்மை நாமமாயே. 26

### கல்லுப்பு

கல்லுப்பு பேர் தனையே கருதக்கேளு
கடல் குருவி பாறையுப்பு வன்னக் கூர்மை
அல்லுப்புவக் கூடிய பேரம் பிரெத்தமாகும்
அறுசுவைக்கு மாதாரமான உப்பு
வெல்லுப்பு வேலை நீர் முநிமூத்திர மென்பார்
வேண்டும் சவர்ச்சால மோமிருத்திய நேதம்
நல்லுப்பு வாதத்தைச் சமைக்கின்றோனாம்
நலமான தற்கால லவணமாமே. 27

### வெட்டளை - இந்துப்பு - வளையலுப்பு

வெட்டளையின் பேர்தனையே பொருந்தக் கேளு
பேரான படையரசன் இணங் கனாகுங்
கட்டளையின் பூனாதம் பூமிக் கூர்மை
கருதியதோர் படலவணங் கருவாமுப்பு

அட்டளை யினுரவாத்தி லவணமென்று
அக்கினிக்கு உயர்கிறோன் ஆண் மையுள்ளோன்
அட்டளையின் சங்கத்தின் சத்துருவாகு
நவச்சார மித்துரு வென்றறிந்திடீரோ. 28

இந்துப்பின் பேர்தனையே இயம்பக் கேளு
எழிலான செந்தூரத்தஞ் சயந்துமாகும்
சந்திரனான முப்பதாம் தனித்த மதிக் கூர்மை
தயங்காத வேலை தனிற்றளர்ந்த பனிக்கூர்மை
மந்திரம் போல் வளர்ந்த மதியுப்புச் சிலாலம்
மதியென்ற பூரத்தின் மித்துருவாகும்
மந்திரம் போல் பாண்டத்தில் சமைந்தவுப்பு
ஆச்சர்ய மிந்துப்புப் பேருமாமே. 29

## வளையலுப்பு

வளையலுப்பு பேர்தனையே வகுக்கக் கேளு
மண் கூர்மை கடுங்குப்பி லவணமாகும்
களையலுப்புக் காசுசங்குஞ் சிறுசங்காச்சு
மண்ணி கஞ்சகமாம் வேடக் காசமுப்பு
வளையத்துப் புத்தெல்லுப்பு உருப்பட்ட பலகை
ஒப்பரிய கண்டகியாஞ் சிறந்த கருவுப்பு
நிளையலுப்பு வைப்பாவை வளையலுப் பென்று
நெருப்பு குளிர்கின்ற உப்பென்று சொல்லே. 30

## சவுட்டுப்பு- திலாலவணம்- பிடாலவணம்- செந்திலவணம்

சவுட்டுப்பு பேர்தனையே சாற்றக் கேளு
தற்பரஞ்சு லவணமது கார்முக உப்பு
யவுட்டுப்பு சவுட்டுப் புமண்ணிற் கூர்மையாகும்
அக்கினியின் கூர்மையாகுமூஷ ரத்தின் சாரந்
தவுட்டுப்புக் கூர்மையா, மத்தமாஞ்சார்
தனித்த நல்லுப்பாகும் காச்சு நீருப்பு
கவுட்டுப்புச் சரக்குக்குக் காலனாகும்
காரியமாஞ் சவுட்டுப்பின் நாமமாமே. 31

திலாலவணப் பேர்தனையே செப்பக் கேளு
சிவந்த நிறமாயிருக்கும் கண்டூ ஷமமாகும்
பிலால் போல் நாறுமது பேர்க் கானலவணம்
பொருந்தியதிக் கூர்மை யாந்தி லாச்சாரமாகும்
[illegible] காரப்புக் கடுங்கூர்மையுப்பு
கசக்கமாற உப்பது [illegible]
மலால் போல் மத்திமமா மறு குன்ற வுப்பு
வைப்பான திலாலவணப் பேருமாமே. 32

கெந்தியுட லவணத்தின் பேரைக் கேளு
கெடியான நாதமது அழுக நாறும்
மத்தியாங் கெந்தக முமுப்புங் கூட்ட
வைக்கின்ற உப்பதுதான் கூர்மை நாறி
உந்தியாஞ் சிற்பரி யினுப்பதுதானுசத்தி மெத்த
ஒழுக்கான உப்பதுதானு புத்தி மெற்ற
புந்தியா மீறியதோர் வைப்பினாலே
போக்கான கல்லுப்பிற் சமைந்த தாமே. 33

பிடாலவணப் பேர்தனையே புகலக் கேளு
பேரான வெடியுப்புங் கல்லுப்புங் கூட்டி
திடாலமென்ற சீனமுமே வொக்கச் சேர்ந்து
சிறப்பாக பாண்டத்திற் சமைந்த வுப்பு
சுடால வணச்சாரணைக்கு ஆதியாகுங்
கடிசானச் சந்தானக் கூர்மையாகும்
விடாலவண மந்தாரயக காந்தியாகும்
விசுவாத விளங்காத லவணமாமே. 34

## சிந்து லவணம் - காச்சுலவண்ம்- பொன்னம்பர்

சிந்து லவணப் பேர் செப்பக்கேளு
சிறந்த கடுக் கூர்மைதான் சிற்பரப்பு
பந்துவென்ற கற்பார் லவணமாகும்
பாங்கான கடுஞ்சிந்துச் சாரமாகும்
கந்துவென்ற மலைதனிலே பாறைக்குள்ளே
கடிசான பணியாலே விளைந்தவுப்பு
தந்துவென்ற தற்பரத்தி னுப்புமாகுந்
தனிச்சிந்து லவணமென்று சாற்றலாமே. 35

காச்சென்ற லவணப் பேர் கருதக்கேளு
கார்மேக சாரமாங் கருவென்ற சாரம்
நீச்சுவெனக் கடிகார மாஞ்சிவப்பாஞ் சாரம்
சிறப்பான மேகத்தின் தோயமாகும்
மாச்சு என்ற சார மாமுப்பு
மாடிய சங்காத சமபூத அணித்தியுமுப்பு
ஈச்சுவென்ற காசியென்ற லவணத்துக்கு
முயற்சியா யெடுத்துரைத்த நாமந்தானே. 36

பொன்னம்பர் பேர்தனையே புகலக் கேளு
பேர் பெரிய பட்சியுட யெச்சமாகும்
பன்னம்பர் பறவையுட வச்சிரமுமாகும்
பாங்கான மச்சத்திற் செரித்த மலக்களமாம்
தன்னம்பர் தட்சணத்தினிரா சனாகுஞ்
சார்வான சூதத்தைக் கத்துஞ் சூரன்
கன்னம்பர் கட்சயத்தின் வாசனாகுங்
கடுகும் பொன்னம்பருட நாமமாமே. 37

## மீனம்பர்- கடல்நுரை- காரசாரத் தொகுப்பு

மீனம்பர் நாமத்தை விளங்கக் கேளு
மீன்வயித்தில் விளங்குகின்ற வயிரந்தானாங்
கானம்பர்க் கானமலப்பட்சி தானுங்
கபகுறித்த பச்சை தான் கருப்புமாகும்
வானம்பர் செம்மீனின் வயிரமாகும்
மகத்தான ஊன்மலமாம் வாசமாகும்
தேனம்பர் மீனம்பர் நாமமாகுஞ்
சிறப்பாக பேர்தனையே செப்பினேனே. 38

கடல்நுரையின் பேர்தனையே கருதக் கேளு
கடலுக்குள் அக்கினியாஞ் சலமுமாகும்
மிடலான சமுத்திரத்தின் கோஷ்டமாகும்
மிசையான வாருதியி னாதமாகும்
படலான சலக்கனலாமக்கிய திக்காட்டி
பாங்கான மீனஞ்சு வன்னியாகும்
மிடலான மலசாகர மெனும் பேர்தான்
மேதினிக்குள் கடல்நுரையாம் என்றபேராமே. 39

## தொகுப்பு

பேரான லவணமொடு காரசாரம்
பிரிவாக ஐவஞ்சாரந் தொகுப்பு கேளு
காரான வழலையொடு பூநீறு சாரஞ்
சத்தியென்ற சாரமொடு எவச்சாரமாகும்
காரான காசியென்ற சாரத்தோடு
கனகமாம் மேகம்பச் சாரமாகும்
சீரான சீனமொடு வெண்காரஞ்சூடன்
திருவான ।ச்சையென்ற பூரமாமே. 40

ஆமென்ற வமுரியுப்புக்கல்லுப்பு யிணங்கள்
அசையாத யிந்துப்பு வளையலுப்பு சவடு
தேமென்ற திலாலவணங் கெந்தியென்ற லவணஞ்
சிறப்பான பிடாலவணஞ் சிந்துவென்ற லவணங்
காமென்ற காச்சுவென்ற லவணத்தோடு
காரமாம் பொன்னம்பர் மீனம் பருமாகும்
வாமென்ற கடல்நுரையோ டிருபத்தைந்து
மகத்தான வேதையதின் மருவிப்பாரே. 41

பாரப்பா லவணமுதற் காரசாரம்
பரிவாக யிருவத்தஞ்சந் தன்னை
சீரப்பா வகைக்குவொரு பலம்நிறுத்தி
சிறப்பான கல்வத்திற் பொடியாய்ப் பண்ணி
வாரப்பா எலுமிச்சை பழச்சார் படிதான்
மல்லிகைப் பூச்சாறு மொருபடியும் வாரு
காரப்பா சிவப்பான காயச்சறகு யிலையைக்
கசக்கியே சாறு மொருபடியும் வாரே.

படியான மேனிச்சாறொக்க விட்டு
பண்பான புங்கம்பால் படியும் வாரு
கெடியான பாண்டத்திலொன்றாய்ச் சேர்த்துக்
கிண்டியே பொடியெல்லா மொக்கப்போடு
நெடியான மூன்றுநாள் கலக்கி வைத்து
நெருப்பான வடுப்பேற்றியடிப் பற்றாமல்
துடியான கரண்டியினால் கிண்டிக்கிண்டி
துப்புறவாய் மெழுகான பதத்தில் வாங்கே. 43

வாங்கியே யரைத்து நன்றாய் வில்லை தட்டி
வளமாக ரவியிலிட்டு காயப்போட்டு
ஓங்கியே கலயத்தில் வைத்துமூடி
உறுதியாய் புடம் போடச் சுண்ணமாகும்
நீங்கிய கடுங்காரச் செயநீர் குத்தி
நினைவாக வரைத்து நன்றாய் வில்லைதட்டி
தேங்கியே கடுங்காரக் குகையில் வைத்துச்
சிறப்பாக புடம்போடச் சுண்ணமாமே. 44

## செயநீர் பாறையுப்புக் கட்டு

ஆமிந்த சுண்ணத்துக்குக் கிடைதான் சாரம்
அரைத்துமே மூன்றுநாள் ரவியிலிட்டு
வேமிந்த அண்டோட்டில் வைத்துமூடி
மெதுவாகப் புடம்போடப் பூப்போலாகும்
ஓமிந்தப் பீங்கானிற் பொடியாய் பண்ணி
உத்தமனே பனியில் வைக்க செயநீராகும்
நாமிந்த செயநீரில் வீரம் பூரம்
நலமாகப் பொடித்திட்டு வைத்துக் கொள்ளே. 45

கொள்ளென்ற செயநீரில் பாசாணங்கள்
குறிப்பாக வாட்டயிலே கட்டிப் போகும்
துள்ளென்ற சூதமது கட்டிப் போகுந்
துடியான பூவங்கஞ் சோர்ந்து போகும்
தள்ளென்ற வுபரசங்கள் மெது சற்றாகும்
கார சாரங்க ளெல்லாமணிப் போலாடும்
விள்ளென்ற உப்பெல்லாங் கரியிலாடும்
விறைச்சுப்போம் சரக்கெல்லாம் மணி போலாமே. 46

ஆமென்ற வுப்பை யெல்லாங் கட்டக்கேளு
அப்பனே பாறையுப்பு பலந்தான் பத்து
காமென்ற பாக்குப் போலுடைத்துக் கொண்டு
கலங்காதே செயநீரில் தோய்த்துப் போடு
ஓமென்ற வேழுநாள் ரவியில் போட்டு
யேற்றமாம்பழம் பிளியுங்கடல் நுரையுங் கூட
தாமென்ற மேனியிலை மூன்றுங் கேளு
நலமாக சமபாகம் நிறுத்திக் கொள்ளே. 47

நிறுத்தந்த மூன்றையும் தானே கரைத்து
நேராக கெண்டையாய்த் தட்டிக் கொண்டு
மறுத்தந்தப்பாறை யுப்பை யடைக்குள் வைத்து
மறு அடையால் மூடியதை சீலை செய்து
உறுத்தந்த பத்தெருவிற் புடத்தைப் போடு
உற்பன மாயாறியதை பின்னெடுத்து வாங்கி
யறுத்தந்த முன் போல யஞ்சு புடம் போட்டு
யாற விட்டுப் பார்த் தாக்கால் முத்துப் போலாமே. 48

ஆமிந்த மணியெடுத்துக் கரியில் வைத்துருக்க
ஆஆஆ பொன்போலே கண்விட்டாடும்
தாமிந்த வெளுப்புக்குச் சங்க மொவ்வா
தவளமாம் படிகம் போல் நிறமாகும்
ஒமிந்தவுப்பு நின்று வுருகும் போது
உற்பனமாய்த் தாளகத்தை யிடைக்கிடை தானீய
வாமிந்த மஞ்சள் நிற மணியுமாகும்
மகத்தான லிங்கத்தை யீய்ந்திடாயே. 49

ஈயவே சிவப்பான மணியுமாகும்
ஏத்தமாம் கல்லுப்பை யுருக்கிக் கொண்டு
காயவே கான்முகிலை யிடைக்கிடைக் கீய்ந்தால்
கருப்பென்ற நிறமாகுங் கல்லுப்பை யுருக்கி
மாயவே சாரத்தை இந்துப்புச் சேர்த்து
மகத்தான மணிபோல வுருக்குதற்கு
தோயவே துரிசியைத்தான் ஈய்ந்தாயானால்
சுத்தமாய்ப் பச்சையென்ற நிறமதாமே. 50

நிறமான வீரத்தை யிடைக்கிடை தானீய
நேர்போன வெளுப்பான மணியுமாகும்
அறமாக பஞ்சவுப்பைத் தர வடமாய்க் கோத்து
அஞ்செழுத்து மெட்டெழுத்துஞ் செபித்தாயாகில்
திறமான சிவன் வந்து நிர்த்தஞ் செய்வார்
தேவி வந்து முன்னின்று செப்புவாள் - பார்
குறமாக வாதத்தின் சுருக்கமெல்லாங்
குறிப்பாகச் சொல்லு விப்பாள் சூர்ந்து பாரே. 51

## மஞ்சள்- சிவப்பு- கருப்பு- பச்சை- வெளுப்பு- மணி பலரகம்

பாரப்பா மஞ்சள் மணியா யிரத்துக்கோடும்
பரிவான சிகப் பென்றால் அதற்கிரட்டி
காரப்பா கறுப் பென்றாலதற் கிரட்டி
கனமான பச்சை யென்றால் அதினில் ரெட்டி
வேரப்பா வெளுப் பென்றால் பத்துக்கோடு
மீளாதே பண விடைதான் தேனிலுண்ண
ஆரப்பா வந்தந்த வர்ணமாகும்
ஆச்சரிய பஞ்சவர்ண வுப்பு தானே. 52

தானென்ற வுபரசங்கள் நூற்றிரண்டு பத்துஞ்
    சாங்கமாய் வெகு நூலை யாராய்ந்து பார்த்து
வானென்ற சரக்கையெல்லாம் தேவனைக் கொண்டு
    மறப்பை யெல்லாம் நிகண்டுக்குள்ளே வெளியாய்ச் சொல்வேன்
கானென்ற வருள் போலச் சாத்திரங்கள் எல்லாம்
    கரை காணப் போகாமல் பாடிப் போட்டார்
தேனென்ற நிகண்டுக்குள் வெளியாய்ச் சொன்னேன்
    சித்தர் சொன்ன நூலெல் லாங்கரடு தானே. 53

## துருசு, பொன் நிமிளை பேர்

துருசிப் பேர்தனைத் தானுஞ் சொல்லக் கேளு
    சுடலையோன் நிறமூத்தன் நிட்களந்தான்
ரிஷி போகங் காளன் ஆடுங் கூத்தனச்சம்
    இல்லானல்ல பச்சையா மாதிகுருநாதன்
மரிசிபோல் மாற்றாமல் மச்சினந்தான்
    மந்தார கெங்கையோன் பரசு பாணி
கருகிப் போகடுமேகன் பல்லுக்கேத்தான்
    கடுங் கூற்றன் காசாம்பு வர்ணத்தோனே. 54

கூற்றங்குலை யோனாங் குன்றைத் தானுங்
    குனித்து வில்லாக்கினோன் கொடிய கண்டர்
மூன்றனாஞ் சரக்குக் குருவுமானோன்
    மூதண்ட சூதத்தை முடிக்குகின்றோன்
கார்த்தனாங் கண்ணுக்கு உறவானோன்
    கல்லுப்பு பழச்சாறு தயிருங் கூட்டி
ஆர்த்தறாஞ் செம்புக்குளமர்ந்த சத்தி
    ஆதியாங் குருவென்ற அரசன் தானே. 55

பொன்னி மிளைப்பேர் தனையே புகலக் கேளு
    பொன் பிறந்த கற்பத்திலுற் பத்தி யானோன்
கன்னியாஞ்சத்தியுட நாதமாம்தான்
    கருவேகங் கன்னியுட மாத நீரா
மன்னிய தோர் மாட்சிகம் பொன்னிற முதிர்ந்தோன்
    மாயியுடயாதி மகா நாதமாகும்
நன்னிய தோர் வெகு காமி பொன்னி நிறசத்தி
    நாமமெல்லாம் நிமிளைக்கு நாலுமாமே. 56

நாலாக நிமிளையுட பேரைக் கேளு
    நலங்கியதோர் முதல்தரந்தான் ரசிதமென்ற நிமிளை
மேலாக கஞ்ச மென்ற நிமிளையோடு
    விளங்கிய தோர் லோகமென்ற நிமிளைதானும்
மாலா மென்ற நிமிளை யோடும்
    மருவியதோர் சடைச்சி யென்றுஞ் சத்தியென்றும் பேராஞ்
கூலாக சிற்பரியாம் வெள்ளச்சி கருப்பி
    [illegible]ளாம் நாதாந்தி துறச்சியென்றும் பேரே 57

பேரான செய கெந்தித் தங்கத்தை நீற்றும்
பெருமையாஞ் சத்துருக்குப் பெயராய் நின்றோன்
தூரான சின்னத்தோன் சுக்கிரன் தானாகுந்
துலங்கிய தோர் சனி பகவான் தூய் மையாளன்
வாரான லோகத்தைத் தகர்த்துச் சாடும்
மாரு தியாஞ் சூதத்தை மெத்தை யானோன்
காரான நிமிளையுட குணங்களெல்லாங்
கண்டறிந்தபடி சொன்னேன் கருத்தாய்ப்பாரே. 58

## அப்பிரகம் பேர் காந்தம் பேர்

அப்பிரகப் பேர்தனையே யறையக் கேளு
ஆதியாமே வர்ணஞ் சிவப்பு வர்ணம்
அப்பியதோர் கிருட்டிண வர்ணஞ்சுவே தவர்ணமும்
முக்கியமாம் பூவிந்து நாதமுமாகும்
அப்பியதோர் கெந்தகந்தான் மனோன்மணியின்
நாதமாம் விந்துவாம் மகாபிரகாச சக்தி
தப்பியதோர் கேசரமாம் பறையினாதந்
தனித்து நின்ற பேரெல்லாமப் பிரகமாமே. 59

காந்தத்தின் பேர்தனையே கருதக் கேளு
காயசித்துக் கடியான பத்திர வானாம்
பாந்த மாஞ்சிவலோக சேவகந்தான்
பாரமாம் அயசியிலிட ஈயமானோன்
தாந்த மாந்தவலோக சிவனாகுந்
தரணிக்கு நாதனாஞ்சூத அங்குசம்
நாந்தமாம் நவலோகத் திரட்டியாகும்
நால் வகையாங் காந்தமது நாடிப்பாரே. 60

## கற்பூர சீலை, கல்நார் சாத்திர வேதியின் பெயர்

நாடிப் பார்க்க கான காந்த மொன்று
நலமாக ஊசி யெட்டிப் பிடிக்குங் காந்தம்
ஊட்டிப் பாரு ருளையாங் காந்த மொன்று
உருளையாங்கல் காந்தத்தோடு நாலு
பூடடிப்பார் சத்தெடுத்துச் சூதத்துக்குப்
பேரண்ட லோக சத்தி விடிவிலக்கி
மூட்டிப்பார் காயத்துக்கு யிருமானோன்
மூதண்ட மாட்டி வந்த காந்தமாவோ. 61

கற்பூர சீலையுட பேரைக் கேளு
கடுசான காயசித்திக் கடுத்த சுண்ணஞ்
கற்பூரச் சீலத்துக்குப் பிருதிவி யாகுஞ்
சேர்ந்த சலாசத்து வாகுங்கல் குருவாகும்
அற்பூர மாத்தினுட விந்து வாகும்.
அழகாகுங் குலத்துக்குச்சிலா மணியானோன்
உப்பினிற் காந்தியோன் கன்னத் தோனாம்
உபரசத்தி லாதியாஞ் சுண்ணமாமே. 62

கல்நாரின் பேர் தனையே கருதக் கேளு
கல்லுக்குள் சவளையாங்கடிய சிலை நாரு
அல்நாரு வயலுக்குள் சிலா விருந்தமாகும்
ஆறதிகம் மருவகல் லின் காரமாகும்
செல் நாருச்சிலையின் ரவி கல்லுமாகும்
சிறு நாரு கல்லது தான் சிகப்புமாகும்
முல் நாரு சத்து மாஞ் சுண்ண மாகும்
உக்கிர மாங்கல் நாரின் பேருதானே. 63

சாத்திர வேதியின் பேரைச் சாற்றக் கேளு
சலத் தோடுங் கல்லுயிர்தான் சகத்திர பேதி
ஆத்திர றாகுமலை நாத மாகு
அழன்ற கனல் வேதியா மலைக் கருவாகும்
போத்திரத்தின் கெந்தியாஞ் சிலை கெந்தியாகும்
பொதிகை மலை தென் மலையாம் பொருப்பின்
கோத்திரத்தின் சீமையா மிமைய வெற்ற
குறிப்பான சாத்திரத்தின் வேதிப் பேரே. 64

**கல்மதம்- அஞ்சனக்கல்- கருங்கல்- படிகக்கல்**

கல்மதத்தின் பேர்தனையே கருதக் கேளு
கதறிட்டு கல்மலையி னாத மாகும்
வல்மதமா மலைத்துடக்கு மலையினமதாகும்
மலைத்தூமை மலைரெத்தம் மலையினமதாகும்
சில் மதமாம் சிலையொடுக்கு சிலைக்குள் தீட்டாஞ்
சென்னீர்தான் சிலையினோடு சுரோணிதமாகும்
அல்மதமாங் கல்லுக்குள் சோரமாகும்
அடங்காத கல்காமிக் கல் மதத்தின் பேரே. 65

அஞ்சனத்தின் பேர்தனையே கருதக் கேளு
அழகான கண்ணுக்குள் சீன முமாகும்
நெஞ்சினத்தில் சீலை சூதமாகும்
நேர் கல்வி நியமாம் லோக சொர்ணம்
குஞ்சனத்தின் சிலாஞ் சீனமாஞ் சூதாஞ்சனமாங்
கெடிய வெற்பின் அஞ்சின் மாங்கு வட்ட நீயம்
பஞ்சனத்தின் செவ் வீரஞ்சன்மாகும்
பாங்கான கிருஷ்ண வஞ்சனமுமாமே. 66

கருங்கல்லின் பேர்தனையே சொல்லக் கேளு
காரணமாம் விக்கிரமாங் கல்லுருவாங் கல்லு
உருப்பட்ட சிலையுமாகு முசத்தி யென்ற
யந்திரமா நிலமாகும்
அருங்கல்லு மேகத்தினுற் பவிக்குங்கல்லு
அந்தி மேகத்தில் அருள் சிலையுமாகும்
அருங்கல்லு மந்திர மாங் கூடக் கல்லு
மாசித்தியான கல்லு மருவு கருங்கல்லே. 67

படிகக்கல் பேர்தனையே பகரக் கேளு
படிகமாம் நிறமாகும் செம்படிகமாகும்
நெடி கமாம் நீலமாஞ் சேலொத்த வெண்கல்
நிறைந்த காஷ்மீரி மாமொளியுமாகும்
மடிக்கல் மாலைக்கல் வனங்கு மதிக்காந்தி
மாசறு நாதாந்தம் வளர்ந்த கல்லு
வடித்த கல்லு சத்தியுடன் கூறாங் கல்லு
வளைய மென்ற கல்லாகும் பாலைசிலைக்கல்லே. 68

சுக்கான கல் பேர்தனையே சொல்லக் கேளு
சொரிக் கல்லு சுருஷர கல்லு
மக்கான சுமைக்கல்லு தழற் கல்லுமாகும்
மருவியதோர் சுண்ணக்கல் வங்கக்கல்
புக்கான கல்பொறிக் கல்லு பூச் சர்ரக் கல்லு
பூமிக்குள் விளைந்த கல்லு பேராங் கல்லு
வக்கான கல்நெறிக்கல் அமுக்கத்துங் கல்லு
வடங்காத வெறிக்கல்லு சுக்கான் கல்லே. 69

**ஈரக்கல்**

ஈரக்கல் பேர்தனையே யியம்பக் கேளு
யெத்தமாம் மந்தாரக் கல்லுமாகும்
மாரக்கல் மாங்கிஷத்தின் சிலையுமாகும்
மருவியதோர் வித்தார கல்லுமாகும்
கோரக்கல் கோழிக்கல் குறுஞ்சிலைக் கல்லு
கெந்தார ரெத்தக்கல் கொழுப்புக் கல்லு
சீரக்கல் சிவப்பான கல்லுமாகும்
சித்திக்கல் வீரக்கல் நாமமாமே. 70

**ரசாவர்த்தம்**

வத்தத்தின் பேர்தனையே வழுத்தக் கேளு
மண்ணின் வற்றம் மலைமேல் சொர்ணக் கல்லு
சித்தன் செய் வாதத்தின் செம்மையான
சிறப்பான வாதத்தின் திறமைக்கான கல்லு
முத்தான வாதத்தில் மாட்டுக் கல்லு
முற்கமாம் இராசாவின் வற்றக்கல்லு
நித்தந்தா நீலக்கல் நிறுமைக்கல்லு
நிதையான வாதத்தின் பேருமாமே. 71

கெருட பட்சிக் கல்லினுட சித்தி கேளு
கெடியான விடத்துக்கு அரசனாகும்
வருட பட்சிவயின தேயக் கல்லுமாகும்
மகத்தான விடராசன் பட்சி ராசன்
மருட பட்சி பால்போல சிரசோனாகும்
பட்டத்துக் காருடன் காற் கோடனாகும்
கருடபட்சி கலுழனாங் கல்லு மாகுங்
காரியனாங் கெருட பட்சி நாமமாமே. 72

ஒட்டினுட வேரின் பேர் உறுதிக் கேளு
உத்தமமாம் பாண்டத்துக்குச் சக்களத்தி
சிட்டினுட சில்லுத்தான் குசத்தியாகுஞ்
சித்தியாகுந் தேசாந்திரி செயலற்ற மண்ணினோடு
பூட்டின பேர் மண்கலமாம் அழகாம் பாண்டம்
புதுக்கலசஞ் சக்கரமாம் புகையுஞ் சூளை
நாட்டினலே யிரந்துண்ட வோட்டுக்குத் தான்
நலமாகச் சாற்றியதோர் நாம மாமே. 73

**செங்கல்லு, எலும்பு, ரோமத்தின் பெயர், நண்டு, நத்தை**

செங்கல்லுப் பேர்தனையே செப்பக் கேளு
செஞ்சிலை மணக்கல்லு சிறந்த கல்லு
மங்கலக்கல் செம்பலகை யுருக்குங் கல்லு
மகத்தான காளவாய்க் கல்லுமாகும்
மங்கலச் சூளைக்கல்லுகோ புரக்கல்லு
பாரமா மீட்டுக்கல் பருமணக்கல்லு
அங்கல்லு செங்கல்லு சிலையாங் கல்லு
அழகான செங்கல்லு நாமமாமே. 74

எலும்பினுட பேர்தனையே இயம்பக் கேளு
இரத்தமாஞ்சல விடந்தான் வந்தயங்கம்
மலும்பான மண்ணுயிரின் குறிதோணாமல்
வச்சிரமாந் தண்டாகும் வரிச் சங்கமாகும்
பலுமையின் விலாக் கொடி தானுயிரின் சத்துப்
பல்விலா தோரணமாம் பல்லியமுமாகும்
கலும்பாகு மெலும்பாகும் பேரு தன்னைக்
கண்டுரைத்தபடி தானும் கருதிப் பாரே. 75

மயிரினுட பேர் தனையே வழுத்தக் கேளு
மகத்தான கேசரமாம் ரோமமாகும்
பயிரான குழைக் கூந்தல்கதுப்பு ஓதி வணக்கம்
பாங்கான கொந்தளகம் சுத்தி வேரு
உயிரான மசகந்தான் சிகையுமாகும்
உற்ற கேசா சாபங்கு ஞ்சியாகும்
நயிரான கேதகையாமாச த்தின் கந்தம்
நயமான கம்பிளியாம் மயிரின் பேரே. 76

நண்டினுடைய பேர்தனையே நவிலக் கேளு
நரியுண்ணித் தலையில்லாச் சேவகன்தான்
பண்டினுக்குப் பத்து காலுடைய மன்னன்
பருந்துக்கு விருந்தானான் பரமயோகி
தண்டினுக்குக் கொத்துகின்ற குறடு வுள்ளோன்
தயங்காத குளத்துக் குருவி யானோன்
வண்டினுக்கு ஊளை தாளங் கலவனானோன்
மாசற்ற நண்டுக்குப் பேருமாமே. 77

நத்தையுடைய பேர்தனையே நவிலக்கேளு
    நலமான ஊமச்சி யுமுரியாகும்
பத்தையுட நீர்க்காயங்கல் லொட்டியாகும்
    பாங்கான குளத்துக் குறுத்தி ராட்சம்
பித்தையுட செலக் கூபமுள்ளுயிருமானோன்
    மாசற்ற நீர்க்குன்று கொம்பூதியாகுஞ்
சத்தையாமேல் மூடியூர்ந்து நிற்போன்
    சாங்கமாம் நத்தைக்கு நாமமாமே. 78

## நாகர வண்டு, கிளிஞ்சல், ஆமையின் முட்டை. ஆனைக் கொம்பு

நாகரமாம் வண்டினுடைய பேரைக் கேளு
    நாகரமாம் பாம்புக்கு வாய்க் கிரையுமானோன்
சாகரமாஞ் சங்கினுட செடியில் குடிபுக்கி
    சங்கினுட காட்டுக்குள் அமுரியாகும்
பாகரமாங் காட்டுக்குள் சங்குமாகும்
    பாமரவுக்கு தண்ணீருங் கொடு போ மன்னன்
ஒகரமாஞ் சுண்ணத்திற் கூர்மையானோன்
    உற்ற நாகர வண்டின் பெருமாமே. 79

கிளிஞ்சியுட பேர்தனையே கூறக்கேளு
    கெட்டியா யுடலிரண்டு முயிரு மொன்று
ஒளிஞ்சிய தோர் கடலுக்குள் பட்சியாகு
    மோடிய தோர் ஒடந்தானு யிருமாகுந்
தெளிஞ்சிய தோர் சிப்பிதான் துளி போலாடுஞ்
    சுண்ணத்தி வலைசாரி குளத்திற் சிப்பி
தெளிஞ்சி மாசாரி சித்த சிப்பி
    செப்பிய தோர் பேரெல்லாங் கிளிஞ்சிக்காமே. 80

ஆமையுடைய பேர்தனையே அறையக் கேளு
    அந்தரங்கத்தி யானியாம் நீர்ப்பரிசையாகும்
ஊமையாந் தனித்தாம் மோதரன் தான்
    உந்தங்க மூடியே மவுனியாகும்
பாமையாம் பஞ்சாங்கக் கூர்மையுடன் உள்ளோன்
    பாரமாங் கச்சனாங் கூர்மராசன்
வாமையால் ரசப்பிர திட்டை யுள்ளோன்
    வகுத்த தெல்லாம் ஆமையுட பேருமாமே. 81

முட்டையுட பேர்தனையே மொழியக் கேளு
    மும்மூர்த்தி மஞ்சள் வெள்ளை கருவுமாகும்
நிட்டையாங் கடுங்கார நீறு மானோன்
    நீற்றுண்டை யூமையா முருளையாகும்
துட்டை யாஞ் சுண்ணத்துக்கு உயிருமானோன்
    கொடுவண்டம் மெழுகுக்குங் கூர்மையானோன்
கட்டையாம் லோகங்கள் தகர்ந்து சாடுங்
    காரத்தின் சத்துருவாம் முட்டை தானே. 82

ஆனையுட கொம்புக்குப் பேரைக்கேளு
அழகான கெசபிடிதான் கரியின் கொம்பு
வானையாம் வாரணத்தின் கோடுமாகும்
மகத்தான வொளிர் மருப்புக்கிம் புரியாகும்
காரானை யாங்கோடேயிருதந்த மாகும்
மதங்கத்தின் ஏரவுகுஞ்சர மாகும்
ஆனையாங் குஞ்சரத்தின் கோடுமாகும்
மதத்துநிற்கும் ஆனையுட கொம்புப் பேரே.

### பன்றிக்கொம்பு

பண்ணியுட கொம்புப் பேர் பகரக் கேளு
பாரமா மலைவாசி வராகத் தந்தம்
குண்ணியுட நிறமானக் கண்ணையுள்ளோன்
சூர்மையாய்த் தரணி தனைக் கிளையுங் கொம்பு
கண்ணியாங் கருமாவே யேறுழிரெழில்
கானகத்தின் சேவகனாஞ் சூரனுமாகும்
கிண்ணியாங் கிரிட்டி எரி கீடம் பேணங்
குரோடமே போத்திரிய மேனமாமே.

### கலங்கொம்பு

கலைக்கொம்பின் பேர்தனையே கருதக்கேளு
கானகத்தின் சாரங்க மருணனாகும்
பலன் கொம்பு புள்ளி நிற மிருகந்தானாம்
புகழ்ந்த மாசிங்க மாமரனாமாகுந்
தலங்கொம்பு கடவிழிதான் சாதகவேழம்
சாத்தமாங் கிருஷ்ணனிட மிருகந்தானாம்
நலங்கொம்பு மணியொலியிற் சாவு சொல்லும்
நலமான கலைக்கொம்பு நாட்டும் பேரே.

### மாட்டுக்கொம்பு- ஆட்டுக்கொம்பு- பல்லின் பேர்

மாட்டினுட கொம்பின் பேர் வகுக்கக் கேளு
மயுடமாங்கரு மேதை கிடாக்காலந்தான்
கோட்டினிட செழும்பசுவுக்கோவு மாகுங்
கூறான ஆவாகுஞ் சுரபியாகும்
நாட்டினுட விடையெருது ரிஷபக் கொம்பு
நலமான கிருமிய்டகார் சவரிக்கொம்பு
வீட்டினுட் திட்டு முரியுங்கவசம் மூவு
வெண்பசுவின் கொம்பாகும் மாட்டுக்கொம்பே

ஆட்டினுட கொம்புப் பேரறியக் கேளு
அவச்சாத கர்சர் கஞ்சாளகமு மாகும்
வீட்டினுட மேஷத்தின் கொம்புமாகும்
விளங்கியதோர் செம்போத்து விலனோச்சாகி

காட்டினுட வோமத்திற் கலந்த வகைப் பசுவாங்
காரணமா முருப்பிர மங்கரியகு கூறும்பாடு
தீட்டினுட செம்பிலியா விரகச்சாகம்
செப்பியதோர் பேரெல்லாம் ஆட்டுக் கொம்பே. 87

பல்லினுட பேர்தனையே பகரக் கேளு
பரிவாக கடைக்கலாதான தந்தமாகுந்
தல்லினுட தள வாய்த்தான் சரகூடமாகுஞ்
சாந்தமாம் பார்வை தான் தவளமுத்து
வில்லினுட ஒலிக்கடலாஞ்சர முல்லையாகும்
விளங்கியதோர் நகைமுறுவல் பல்லெயிறுமாகுங்
கல்லினுட பல்லாகும் பேருதன்னைக் கண்டு
சொன்ன மொழிப்படியே கருதிப்பாரே. 88

பூநாகப் பேர்தனையே பொருந்தக் கேளு
பேரான மேகத்தின் விந்துவாகும்
மீனாதம் விளங்கு சஞ்சீவியாகு
மிக்கான சோதிமயமான வேதி
மாறாகப் பாம்புதான் மாங்குளுத்தான்
மகத்தான பூமிவேர் மாசிலாதான்
கூறாக மாசதீ பன் அமுதூட்டுஞ் சத்து
கூறியதோர் பேரெல்லாம் பூனாகமாமே. 89

## இந்திரகோபம், செவ்வட்டை, தவளை- கோழி

இந்திரக் கோபப்பூச்சி பேரைக் கேளு
யெழிலான மூன்றுவிதம் வெளுப்புசெம்மை
தந்திரமாங் கருப்பாகுஞ் சந்திர வீசந்
தனிப்பீசந்தானாம் பீசமாகும்
தந்திரமா மிடிதனிலே சார்ந்த பீசன்
சார்வாள ரம்பையுட வமுத சுரோணிதமாம்
பந்திர மாஞ்சஞ்சீவி நாகபேதி
பரிவாக விந்திர கோப பூச்சி பேரே. 90

செவ்வட்டை பேர்தனையே செப்பக் கேளு
திறமான வாயிரமாங் கூதலியாகும்
மவ்வட்டைய மாந்தவரிச் சுருளுமாகும்
மகத்தான கானகத்தி பாவுந்தட்டான்
தவ்வட்டை தாயிருக்கும் குண்டலிதானாகும்
சமத்தான மண்திண்ணி சத்துக்கானோன்
கவ்வட்டை செவ்வட்டை நாமமுத்துங்
கண்டு சொன்ன படிதானாங் கருதிப்பாரே. 91

தவளையுட பேர்தனையே சாற்றக் கேளு
சாற்றறிய காபேகன்கச்ச தூரஷன்
துவளை யாமிராச மண்டு கவுச்சிபன்
துடியான தத்தரான் பண்டிகந்தான்

குவளையாந் தண்ணீர் தவளையானோன்
கொடியான மேகத்தின் வார்த்தையறிபவனாம்
உவளையா முத்தியதோர் கோஷ்டமூர்க்கன்
முதிர்ந்து நின்ற சொரி யானோன் தவளைப் பேரே. 92

கோழியுட பேர்தனையே கூறக்கேளு
குக்கிடமாம் வாரணமாம் ஞானியாகும்
பூமியென்ற சேவலனார் பாவையறிவோனாம்
புகழ்கின்ற சண்முகர்க்கு நீண்ட கொடியோனாம்
தாழியுட சண்டைக்குச் சூரனானோன்
சம்போக மடிக்கடிக்குத் தானாம் வேண்டி
ஆழியுட பேரெல்லாங் கோழிக்காகும்
ஆராய்ந்து சொன்ன தெல்லாம் அறிந்துபாரே. 93

**கரடி- சங்கு- முத்துச்சிப்பி- முத்து- பவழம்- கோமேதகம்**

கரடியுட பேர்தனையே கருதக் கேளு
கானகத்தின் வெண்பல்லங் கவுனியமாகும்
திரட்டியாந்தின பல்லம் வல்லூகஞ் சொல்
திறமான பாதாள வேதியானோன்
விரட்டியாம் பாம்புண்ட சித்தனானோன்
வேதாள புத்தையெல்லா முறிஞ்சும் வேந்தன்
நரட்டியாமலை ராசனா தாளிமன்னை
நகண்ட கருங்கரடியுட நாமமாமே. 94

சங்கினுடபேர்தனையே சாற்றக் கேளு
தவள மாந்திசனாதம் வளையமாடும்
வங்கினிட வலம்புரியாமிடம் புரியுமாகும்
வாருதியி னாதந்தான் சின்னமாகும்
நங்கினிட சங்காகும் பணிலம் பாணி
நலமான சலம்புரியும் பட்சிகம்பு
சங்கினிட நீங்காத வோசை யோனாம்
சலஞ்சலமாஞ் சங்கினிட நாம மாமே. 95

முத்தினுடைய சிப்பிப் பேர் மொழியக் கேளு
மேகவர்ணத்தான் துள்ளி விந்துவாகுஞ்
சத்தினுட சந்திரன் தன் சிப்புமுமாகும்
தனித்து நின்ற சோதியாம் நிச்சோடமாகும்
மத்தினுட யந்திரமாம் வானந்தன்னில்
அழகியதோர் கெற்பத்தி யலங்கனாறி
பத்தினுடமுத்தான சிப்பிக்குத்தான்
பாடியதோர் நாமமெல்லாம் பண்பாய் பாரே. 96

முத்தினுடைய நாமத்தை மொழியக் கேளு
முறுவஞ்சி துலக்கமாஞ் சுக்கிரன்தான்
நித்திலமா முத்தாரந்தான் நாமமாகும்
நீங்காத வாருதிக்குள் சங்கீன்ற பிள்ளை

யத்தள மாதித்தன் சோதிதன்னுள்
ஆகியதோர் தனமணி யாமாழிவித்து
கத்தலமாம் நல்முத்து பேருதன்னைக்
கண்டபடி உரைத்தேனான் கருதிப் பாரே. 97

பவளத்தின் பேர்தனையே பகரக் கேளு
பாங்கான துகிரதுப்பு வித்துருபமாகும்
துவளத்தின் வாருதிக்குள் தண்டுமாகுஞ்
சுயம்பான செந்தண்டுக் கொடியுமாகும்
பவளத்தின் விற்பனைக் குளமர்ந்த கன்னி
அழகாக சாற்றியதோர் மாலையாகும்
குவளத்தின் பிரவாளம் விற்பவளமாகுங்
கூறியதோர் குணமெல்லாங் குடர்ந்துப் பாரே. 98

கோமேதகப் பேர்தனையே கூறக் கேளு
கோமியமாம் வாளமாம் ராகுமாகும்
தாமியமா மார்ச்சாலந் தன்னுடனேத்திரஞ்
சாரியாம் வியாக்கிரமாம் புலிகண்ணாகுங்
காமியமா மீயுகின்ற களிப்பாங்கல்லு
காதிலிடு ஆபரண மேன்கலாகு
மோமிய மாங்கதிர் விரியும் பணியுமாகி
முற்றதொரு நாமமெல்லாங் கோமேதகப் பேரே. 99

**புஷ்ப ராகம், வயிரம், பச்சை- நீலம்- மாணிக்கம்**

புஷ்ப ராகப் பேர் தனையே பொருந்தக் கேளு
பொது நில சுந்திரனா மாரத் தினமாகும்
கெர்ப்பமாங் கேதுவுக்குச் சீவாங்கனாகுங்
கெடியான நயனத்தோன் கெதுவசூரன்
மற்ப மாலுட கண்ட கனாகும்
மகத்தான தாதுகளைச் சலச்சீலன்தான்
யொற்பமா மெடுத்து முன்னுஞ் சுடர் விளக்குப் பணிதான்
யேற்ற மெல்லாம் புட்பராகப் பேரு மாமே. 100

வயிரத்தின் பேர் தனையே வழுத்தக் கேளு
வருணன் சிலையில் வளர்ந்த வயிரமாகும்
மயிரத்தின் நன்றாங் கதி ரோனோடு
மாதி நாராயணன் தான் தருணர விந்து
தயிரத்தின் தளுக்குருவான் சூரியனா குஞ்
சார்வான சிலை ராசன் கலதீப காந்தி
ஒயரத்திருனாளில் முக வழுத்துடைந் தொழுகு
மோங்கிய தோர் பேரெல்லாம் வயிர மாமே. 101

பச்சையின் பேர் தனையே பகரக் கேளு
பசுங்களையாம் பசளையாம் பழம் பச்சையாகும்
புச்சையாம் புந்தியின்றன் விந்துமாகும்
பேரான வாயுःவிட பேனையாகும்

கச்சையாம் காதியாங் கலைச்சியாகும்
கடிதான யிருளறுக்கு மொளி யாரமாகும்
செச்சையாம் மாலினுட மேனியாகும்
சீரான பச்சையுட நாமமாமே. 102

நீலமாம் பேர்தனையே நிசமாய்க் கேளு
நிலமாமிசை சந்தசனி விந்து வாகும்
யாலமாம் அந்திரக் கண்மணியுமாகும்
அரி நிறத்தின் கல்லுத் தனிந்திரமுமாகுந்
தாலமாந் தந்திரத்தின் மேக மாகுந் தனுமேகச்
சாய்க்கை தான் தரிக்குகின்ற நீலங்
காலமாங்கத்த முத்தக் கதிர் விரிக்கும் பணிதான்
கருதியதோர் பேரெல்லாம் நீலமாமே 103

## சிகப்பு

சிகப்பினுட பேர்தனையே செப்பக்கேளு
செப்பறிய மாணிக்கஞ் சொக்கந்தானாம்
முவப்ப மாஞ் செவ்வாய் ஒளி யோடும் ரத்தினம்
உதகமாம் பரங்கியாம் ஊழிக் கனல் நிறமா
மவப்ப மாம் ஊணியாம் வாணிச்சி மேனியாம்
ஆதித்தச் சிவப்பியா மருபியாகும்
கவப்ப மிரும் பருகுங்கற்றை வெய்யில் சிக்குங்
கருதிய தோர் பேரெல்லாஞ் சிவப்பு மாமே. 104

## வைடூரியம் கெண்டகச் சீலை, சூடாலைக் கல்- மாக்கல்

வைடூரியப் பேரை வழுத்தக் கேளு
மருவியதோர் காந்தியா மன்னிய சேலோளி
உயிடூரூ முயர்வான பாணக் கல்லு மாகு
முத்தக் கலை சாத்திகச் சூத்திரமு மாகுஞ்
சாதகமாகிய சீவன் சார்ந்த கல்லு
நீயிடூரி வெயில் வயிருவைக்கு மணியாரம்
நேசமாம் வைடூரியப் பேருமாமே. 105

கொண்டக மாஞ் சிலையுனுட பேரைக் கேளு
கெடியான கருஞ்சிலையாம் கூன்றமாகும்
வண்டக மாங்கவனியாம் வாண லிங்கம்
மாசற்ற லிங்க மாங் கருஞ்சிலைக் கல்
தண்டகமாஞ் சாதக நீர்ச் சிலையுமாகும்
சலாமேனி மாருதி கெங்கை தானாம்
முண்டக மாமுனி வர்கள் பூசித்த லிங்கம்
உயற்சியாங் கெண்டகச் சிலைப் பேருமாமே. 106

சூடாலைக் கல்லினுட பேரைக் கேளு
சூட்சமாம் மனோகந்துக் கல்லுத் தானா
மாடாலை மாந்தனதி தனுரத்தினமாகும்
மாட்சியாம் நிடாலை கோடுமாகும்

கோடாலைக் கல்லினார்ச் சியுமாகுங்
கொடிய சிலை நாகமாஞ் சக்கர மாகுஞ்
சூடாலை கல்லினுடனா மந்தானுஞ்
சுந்தரமா மணிச் சிகரப் பொருப்பு மாமே. 107

மாக்கல்லின் பேர்தனையே வழுத்தக் கேளு
வல்லமாக் கல்லு மாச்சிலை மாவாகும்
காக்கல்லு கலத்த மதிச் சீலையுமாகுங்
காரணமாஞ் செந்தூரச் சிலைமாவாகும்
பாக்கல்லு பலகைக்குளெழுதுங் கல்லு
பரிவான குப்பி மாக்கல்லாகும்
மூக்கல்லு மூதண்ட முகடு மோதி
மொழி பொருப்பு மாக்கல்லு நாமந்தானே. 108

தேக்கல்லின் பேர்தனையே செப்பக்கேளு
செம்பாரை செம்பொடி நீர்க் கல்லுமாகும்
வாக்கல்லு சிலாகையுஞ் சாரக்கல்லு
மருவியதோர் புறைக்கல்லு வம்புக்கல்லு
நாக்கல்லு நம்புறை போக்கல்லு
நலமான சாதக்கல் பிறையாங்கல்லு
ஊக்கல்லு புத்தொளிர் விருக்கைப்பொருப்பு
வுற்றதொரு நாமமெல்லாம் தேக்கல்லுக்காமே. 109

**மஞ்சக்கல்- தவளைக்கல்- சிலாவங்கம்- சிலா நாகம் -அன்ன பேதி**

மஞ்சக்கல் பேருடைய வகுப்புக் கேளு
மகத்தான குங்குமமாம் வறணியாகும்
குஞ்சக்கல் கொடுங் கோபிச் சீலையதுவுமாகுங்
கூறியதோர் பசுமையா மலையடி மண்ணதுதான்
தஞ்சக்கல் பொடிச் சீலைதான் சாதக மஞ்சக்கல்
தானான படவங்குஞ் சொரிப் புள்ளிக் கல்லு
பஞ்சக் கல்லெழுவாறி யெழுபொருப்புக் கல்லு
பாடியதோர் பேரெல்லாம் மஞ்சக்கல்லே. 110

தவளைக்கல் பேர்தனையே சாற்றக்கேளு
தனித்து நின்ற மண்டுகச் சீவனாகும்
திவளைக்கல் நிசிதனில் தத்துங்கல்லு
நேரான சொரிகல்லு மாசக்கல்லு
பவளக்கற் பரிவர்ன சித்தன் தானும்
பாவகத்தால் சாமக்கல் பகட்டுக் கல்லு
அவளக்கல் வெற்புக்குள் மூத்த கல்லு
அறிந்துரைத்த பேரெல்லாம் தவளைக்கல்லே. 111

சிலாவங்கப் பேர்தனையே செப்பக் கேளு
செயலான கடுவங்கத்தின் சிலையுமாகு
மலாவகம் வங்கத்தின் கல்லுமாகும்
காசுக்கான பர்வந்தான் வரையிற்குடிலமாம்

நலாவங்கம் நச்சு கல்லுமாகும்
நலங்க மேகச் சிலை தான் சுஞ்சுகந்தா
தலா வங்கக்க சிகாபு கரத்துச் சிப்பொருப்பு
அறிந்துரைத்த நாமமெல்லாம் சிலா வங்கமாமே. 112

சிலா நாகப் பேர் தனையே செப்பக் கேளு
செயலான நாகச் சிலை கல்லுமாகும்
புலா நாகம் பொறிக் கல்லு, பாக சிலைக்கல்லு
பேரான பஞ்ச நிறக் கல்லுமாகும்
வலா நாகம் வரதக் கருங் கல்லு மாகும்
மருவிய தோர் சித்தக்கல் நாகக்கல்லு
திலா நாகத்தின் சுரோதய மணிச் சிகரப் பொருப்பு
செப்பியதோர் பேரெல்லாம் சிலா நாகமாமே. 113

அன்ன பேதியை அறையக் கேளு
ஆதிக்கல் நாதமாம் அன்னக்காலன்
கன்னமாம் பேதியாங்கல் சவடுநாதங்
கனமான களிம்புதான் கல்லு வேகஞ்
சின்னமாம் பேதியாம்லை வீரியமாகும்
நிராவகத்துக் கடுங்காரி பேதியாகும்
மவ்வனமாம் பேதியா மலைருதுவுமாகு
மாசற்ற வன்னமென்ற பேதிதானே. 114

**அஸ்திபேதி- சொர்னபேதி- மாங்கிஷ பேதி- உவர்மண்- கருமண்**

அஸ்திபேதி பேரையறையக் கேளு
ஆகத்தை யுருக்கியே நீராக்கியாகும்
மெத்தியாமெலும் புருக்கி யெலும்பை நீராக்கி
யேற்றமாம நாகத்தை சொர்ணமாக்கி
பத்தியாம் பாசாணம் பவளமாக்கி
பரிந்த வச்சிரத்தைப் பார தோயமாக்கி
கத்தியாங் காயத்தை யுருக்குகின்ற
கனமான வஸ்தியுட நாமமாமே. 115

சொர்னமாம் பேதியுட பேரைக் கேளு
துலக்க மாங்கு வடுதனிலுதித் தோனாகும்
குள்ள மாங்கு வட்டுக்கு முலைச்சியாகுங்
குகைமேலே நாதகிரி குமரியாகும்
தன்ன மாந்தங்கத்தைச் சலமேயாக்கி
சாந்தல மஞ்சள் பொரி வாணி நிறத்தியாகும்
வன்னமா மகத்தான லோகியாள்
மாசற்ற சொர்னமாம் பேதிப் பேரே. 116

மாங்கிஷ பேதிப் பேர் வகுக்கக் கேளு
மாங்கிஷத்தை நீராக்கி மலைருதுச்சி
காங்கிஷ மாங்கலையில் கடுங் க்ாரியாகுங்
கல்லுதனை நீராக்கி காந்தாரியாகும்

மூங்கிசமாம் மூலையிற் பிணந்தின்னியாகும்
    மூத்த கடுவுப்பாகு முவட்டில் கூர்மை
கோங்கிசமாம் வெற்புக்குளுற் பத்தியான
    கொடிய மாங்கிஷ பேதி நாமமாமே. 11

## உவர்மண்

உவர்மண்ணின் பேர்தனையே யுரைக்கக் கேளு
    உற்றதொரு பூமிக்குள்ளே செருக்கமாகும்
மவர்மண்ணாம் மேதினியாஞ் சங்கினியுமாகு
    அழகான பூமாதா வசுந்திரியுமாகுங்
கவர்மண்ணாம் நாதமாங் காமியாகும்
    கடுந்தணலில் பூமியாங்களர் மண்ணாகு
துவர்தணலின் பூமியுட குருவுமாகுஞ்
    செப்பியதோர் நாமமெல்லாமுவர்- மண்ணின் பேரே. 118

கருமணலின் பேர்தனையே கருதக்கேளு
    கருந்திரையாஞ் சுருட்டு மணல் கரையரிக்கு மணலாம்
பருமணல் ஆற்றுக்கு பழகிய நேர் மணலாஞ்
    சங்காத மணல் குறை மருவி தானாம்
பருமணலாங் காவேரி பரந்த மணலாகும்
    பண்பான வப்பிரக மணலுமாகும்
ஒரு மணலாம் ஒளிமணல் நீல மணல்
    ஓங்கிய தோர் நாமமெல்லாங் கருமணலுமாமே. 119

## கற்கிட்டம், செம்மண், சுத்தமண், முடவாட்டுக்கல்

கற்கிட்டம் பேர்தனையே கருதக் கேளு
    கருதியதோர் கிட்ட சிலைக் கல்லுமாகும்
பறிக்கிட்டம் வரிக் கிட்டம் பாறையாகும்
    பாராமாஞ் செம்பு உரைக் கல்லுமாகும்
மலக்கிட்ட மறிக்கிட்ட மறையுமாகும்
    மகத்தான குமுளக்கல்லுயர் கட்டுக்கிட்டம்
நற்கிட்ட நகர்க்கிட்டம் நாறுங்கிட்டம்
    குபிள் கல்லாம் கல்கிட்ட நாமமாமே. 120

செம்மணலின் பேர்தனையே செப்பக்கேளு
    செப்புமண் ராகமண் காலிமண்ணாம்
பம்மணலாம் பாகுவணப்பூத்த மண்ணாம்
    பரிவான சித்திரங்க ளெழுது மண்ணாம்
கம்மணலாங் களிம்புமண் காந்த மண்ணாங்
    கருதியதோர் தாம்பரத்தின் மண்ணுமாமே
நம்மண்ணாம் நளிர மணம் நாட்டு மண்ணாம்
    நலமான செம்மண்ணின் நாமமாமே. 121

சுத்த மண்ணின் பேர்தனையே சொல்லக் கேளு
சும்மான புடமண்ணாங் குடோரி மண்ணாம்
புத்தமண் பூமிக்குள் வெளிறு மண்ணாம்
பேர சரமண்ணாம் பால் மண்ணாகும்
குத்தை மண்ணாம்மகுடை மண்ணாகும் பிக்கு மண்ணாம்
கூறான சலவை மண்ணாம் லோகந்தன்னை
கத்தை நாங் கசடறுக்கு மண்ணுமாகுங்
கருதியதோர் மண்ணெல்லாஞ் சுத்த மண்ணின் பேரே. 122

முடவாட்டுக் கல்லுப் பேர் மொழியக் கேளு
முத்தியா மலைக் காலாங் குலைக் காலாகும்
குடவாட்டுக்கு வட்டுக்கால் மேஷக் காலாங்
குணசலா முன்று மித்துருவாகும்
நடவாட்டுத் தன் மலையின் னோங்குங் காலாம்
நலமாகக் கருமேகத்தைக் கெற்ப காலாம்
திடவாட்டு முலைக்காலாந்தி கிரிக் காலாஞ்
செப்பியதோர் பேரெல்லாம் முடவாட்டுக்காலே. 123

## கருவண்டு

கருவண்டின் பேர்தனையே கருதக்கேளு
கம்பிச்ச வீணையாங் கானக்கீதம்
வரிவண்டு செம்பியாங் கருப்பியாகும்
மது விட்டெழுந்து விடாச் சுரும்புமாகும்
குருவண்டுக தண்டு தானது தும்பியாகுங்
கோழிக்குங் கடலுழியா மறுகால் வண்டு
திருதண்டு யறவங்கத்துங் களித்தேறல் வண்டு
செப்பறிய நாமமெல்லாங் கருவண்டாமே. 124

பன்றி முள்ளு பேர்தனையே பகரக் கேளு
பரிவான யேனந்தான் முள்ளுமாகும்
கண்ணி முள்ளுயேறி மூன்று வர்ணத்தியாகுங்
கானகத்திற் சிந்துகின்ற முட்பாஷாணம்
முண்ணி முள்ளு உதறுகின்ற வராகி
வேலர் முழிகுடைத்தலைத் தகேழலாகும்
நண்ணி முள்ளு நின்றெதிர் தருண் அறிவிற் கேழி
நலமான பண்ணியோட முள்ளுப் பேராமே. 125

எலிமுள்ளின் பேர்தனையே இயற்றக் கேளு
யேற்றமாங் கானகத்திற் சேவகங்காண
கலிமுள்ளுக் கடுவளையில் குடியோனா குங்
காஷரமாம் பூனைக்கு சத்துருவானோன்
துலிமுள்ள ஊனொற்ற முள்ளுமாகி
முற்று கிடைச் சுண்டெலியா மோட்டெலியுமாகும்
நளி முள்ளு முள்ளெலியாம் எலியுமாகும்
நாட்டிய தோர் பேரெல்லா மெலிமுள்ளுக்காமே. 126

கடல் நுரையின் பேர் தனையே கருதக்கேளு
காஷ்டமா மக்கினியின் சாலமாகும்
மிடனுரையாம் லோகத்தி நேயமாமக்கி னிகெற்ப
மிரளான அலைதனிலே திரண்ட தீபந்தான்
புடல் நுரையாம் வாருதியின் விந்து வாகும்
படர் நிரியா சம்பத்த வாக்கினி.....
பட வனுரையாஞ் சிந்துப் பில வமதிக சுவால
அறிந்துரைத்த பேரெல்லாங் கடல் நுரைக்காமே. 127

மீனெலும்பின் பேர்தனையே விளம்பக் கேளு
முழுமுதற் கோட்டு நீர் வாளையங்கம்
வானெலும் புமச் சத்தின் செல்லியாகும்
மகர மீனங்கம் மாந்தலை வாள் ஆகும்
மூனெலும்பு கச்சத்தின் அங்கமாமே
முற்ற அறல் எதிர்த்தேறும் வாளையாகும்
கானெலும்பு கமஞ்சூல வாளையாகுங்
கருதியதோர் பேரெல்லா மீனெலும்புமாமே. 128

**முள்சங்கு- பேரோசனை- நாகப்பச்சை**

முட்சங்கின் பேர் தனையே மொழியக்கேளு
முழக்கெடுக்கும் அது சூரச் சங்குமாகும்
களச்சங்கு கடுங்கண்ட கச்சங்கமாகும்
சுதித்த சங்கங்கவரேழு சங்கமாகும்
உளச்சங்கு உயன்றவேல் சங்கமாகும்
உரோமத்தின் சங்குமா மொற்றை வாகைக்
குளச்சங்கு குடவயிருடைந்து கூப்பிடுஞ் சங்கு
கூறியதோர் பேரெல்லாம் முள்ச் சங்கமாமே. 129

பேரோசனைப் பேர்தனையே புகலக்கேளு
பேரான வேதை தனைக் கொடுக்குங் கல்லு
மாரோசன் மாசித்தன் பிரட்டுங் கல்லு
மலைதனிலே யுற்பவித்த மாகுமோ சந்தான்
காரோசன் பசுமலைச் சரக்குழலூத்துக்
கைலகிரி பர்வதா ரோணமாகும்
நாரோசன் சிரிங்கி கோகிரியுமாகும்
நலமான பேரோசனையின் நாமமாமே. 130

**நாகப் பச்சையின் பெயர்**

நாகப் பச்சைப் பேர்தனையே நவிலக் கேளு
நாதாந்தி மாயியுட மேனியாகும்
பாக பரிசக் கிணறு பருஞ் செம்பு பச்சை
பரவிடவே அயத்தினுட செம்பு மாகும்
காகான கூபங் கடும் பச்சையாகும்
கதித்தொழு குந்தி தனிலே கதிக்கும் பச்சை
வேகமா மாத்துக்குள் மலையருவி தனக்குள்
விடுபட்ட நாகப்பச்சை பேருமாமே. 131

### மரகதப் பச்சை

மரகதப் பச்சையின் பேரை வகுக்கக் கேளு
மடும் பச்சை வண்ணம் வாள் மேகப் பச்சை
நரகதமா நடுப்பச்சைக் கல்லுமாகும்
நாயகி தன் மேனியாய் நலங்குங் கல்லு
கரகதமாங் கரும்பச்சை கானகத்தின் குவடு
காந்தமாம் கடும்பச்சை கதிக்கும் பச்சை
குரகத மாந்திகிரிக் குளடுக்கும் பச்சை
செப்பியதோர் மரகதமாம் பச்சையாமே. 132

### புத்தான் பழம்

புத்தான் பழத்தின் பேர் புகலக்கேளு
புத்துக்குள் குகைச்சியாங் கருப்பியாகும்
மத்தான வாள் மூலப் பாலியாகும்
மகத்தான கரடிக்கும் ஒரு மித்திரி
சித்தான திரண்டுருண்ட கொடிச்சியாகுஞ்
சிவப்பான வெள்ளச்சி விஷத்தில் வாசி
சித்தான மகரசேனை கூடிவாழுஞ்
சிறப்பான புத்தான் பழப் பேருமாமே. 133

### வெள்ளைச் சுக்கான்

வெள்ளைச் சுக்கான் பேரையே விளம்பக் கேளு
வெண்கலத்தின் கல்லு வெளுக்குங் கல்லு
வெள்ளையாம் வாய்க்கல்லு வாங்கக் கல்லு
வளமான நீரோட்டம் பாயுங்கல்லு
தின்ளையாம் சிறந்த ரவிக் கல்லுமாகும்
செயமாக வளையுங்கல் செழித்த கல்லு
பள்ளையாம் பொருமுக்கல் பூனீறுக் கல்லு
பேய்க்கல்லு வெண்சுக்கான் பேருமாமே. 134

### கதண்டின் பெயர்

கதண்டான பேர்தனையே கருதக் கேளு
கரிமுகனை யானை யாங்கான கத்தும்பி
வதண்டான வாகைப்பூதச் சியாகும்
வச்சிர மாந்தலைச் சியாங் குடிலைச்சி
புதண்டான பொற் புதையில் குடியிருப்பு
பேரான சித்தர் தம்மகிழ்சியாகும்
சுதண்டான தேனகத்தின் குடிச்சியாகுஞ்
செப்பியதோர் நாமமெல்லாம் கதண்டுமாமே. 135

### காகச் சிலையின் பெயர்

காகச்சிலையின் பேரைக் கருதக் கேளு
கருமுகிலின் தண்டுக்கல் காசிக் கல்லாம்
மாசிலா மாசிக்கால் வானகக் கல்லாம்
மருதா வர்ணக்கல் திரணிக் கல்லுமாகும்

தாகசிலை தாசிககல் சனிபகவான் கல்லாந்
    தயங்காத அடலூர் சிலைக் கல்லுமாகும்
பாகச்சிலை பலிபுத்தக் கல்லுமாகும்
    பாடினதோர் நாமமெல்லாங் காகச்சிலையு மாமே. 136

## காண்டா மிருகத்தின் பெயர்

காண்டாமிருகப் பேரை கருதக் கேளு
    காண்டகமாங் கொந்தளமாங் கருத்தைக் கொம்பன்
நீண்டகை யானையாங் கருஞ்சாளி தானாம்
    நேரான மருந்திடு விடங்கள் போக்கி
பூண்டகைப் பூயனாங் கண்டகனாக்கன்
    பெருமையுள்ள பிராக்கிரமான் பேருடையோனாம்
ஆண்ட கைஅர சனுடவுயிரைக் காத்தோன்
    அய்தியக் காண்டாமிருகம் பேருமாமே. 137

## கஸ்தூரி எலும்பின் பெயர்

கஸ்தூரி எலும்பின் பேர் கருதக் கேளு
    கஸ்தி புகழ் வரசச் செல்வி யாகும்
நஸ்தூரி வளையா மிருகந் தானாம்
    நலமான வுதிரத்தோன் மாங்கிஷ வாசத்தோன்
தஸ்தூரி சாரி சாதகனுமாகும்
    சாந்தமாஞ் சாதகனாம் பூதகனுமாகும்
துஸ்தூரி சுகந்தனாம் மாந்நில தனுமாகுஞ்
    சொல்லிய தோர் பேரெல்லாங் கஸ்தூரியாமே. 138

## மந்தாரச் சிலையின் பெயர்

மந்தார சிலையின் பேர் வகுக்கக் கேளு
    மந்தார மேகவர்ணக்கல்லு மாகும்
பந்தாரப் பல்வர்ணம் பாகக்கல்லு
    பரந்தனிலே கால்சிலையாம் பருதிக்கல்லு
விந்தாம் வார வருணஞ் சிவன் புட்பமாகும்
    வெரவான குலவரையின் மதிமேகக்கல்லு
நந்தாரமாருத மாங்கொண்டல் மேகம்
    நாமமெல்லாம் மந்தாரச் சிலையுமாகும். 139

## கடல் பாசியின் பெயர்

கடற்பாசிப் பேர் தனையே கருதக் கேளு
    கருவலைக் கந்தமாங் காருஞ் சீலை
மடப்பாசி வாருதியின் பாசியாகும்
    மருவியதோர் மன்னன் தான் கரை கல்லோன்
திடற்பாசி திரைப்பாசி திரைகடலினில் முழங்கும் பாசி
    திரை சுருட்டும் பாசியாஞ் சிறு நீர்பாசி
குடற்பாசி நீங்காத மலமுமாகுங்
    கூறியதோர் பேரெல்லாங் கடற்பாசியாமே. 140

### சாலக் கிராமத்தின் பெயர்

சாலக் கிராமத்தின் பேர்தனையே சாற்றக் கேளு
தானான மூவாக்கல் தாசி மாலைக் கல்லாம்
வான மாம்வன மலையில் தங்கமாகும்
மருவியதோர் கெற்பத்தில் மால்வீடுதானாம்
ஊலமாம் உள் மலையில் சக்கரமுமாகும்
உலக மெல்லாம் ஒரு புடைக்கித்து நின்ற திருமால்
வாலமாங் கோலமாங் கடவுளான்
அண்ணல் உறை சாலக்கிராமந் தாளுமே. 141

### மாங்கிஷச் சிலையின் பெயர்

மாங்கிஷச் சிலையின் பேர் வழுத்தக் கேளு
வகுத்தெடுத்து சதை நிறமாஞ் சென்னிறமுமாகும்
தாங்கிசமாம் சடநிறமாம் வெண்ணிறமும் ஆகுஞ்
சார்வான உத்நிறமாம் மாநிற முமாகுங்
காங்கி சமாங்கார் நிறமாம் மதனிற முமாகுங்
கசடற்ற பண்ணி நிறம் சிலை நிறமுமாகும்
பாங்கி சம்பரங்கி யுடசிலை நிறமுமாகும்
பண்பான மாங்கிஷச் சிலைப் பேருமாமே. 142

### மாந்துளிர்க்கல்லின் பெயர்

மாந்துளிர்க்கல் பேரினுட மார்க்கம் கேளு
மகத்தான ரவிநிறந் தேனிறமுமாகும்
தேன்துளிர்க்கல் தீபநிறஞ் சென்னிறமுமாகும்
செயலான கொக்குமா நிறமுமமாகும்
வான்றுளிர்க்கல் மாதளையின் பூவுநிறமாகும்
வலிநிறமாஞ் செவி நிறமாம் வம்பு நிறமுமாகும்
கான்துளிர்கத்தி கிரிக்குட் கலந்த சிலையாகுங்
கடியதோர் நாமமெல்லா மாந்துளிர்க்கல் பேரே. 143

### காஷ்மீரப் படிகக்கல்

காஷ்மீரப் படிகக்கல் பேர் சொல்லக்கேளு
கையிலையுறைச் சிவனுடைய தேகமாகும்
தேஷ்மீரந் தேவிக்கு முத்திரையுமாகுந்
திங்கள் மலைக்கடைக்கண் செஞ்சடை யோனோமே
பூஷ்மீக வச்சிரமாம் வேடமாகும்
பூமிக்கு நாயகன் தான் மதிக்காந்தியாகும்
ஆஸ்மீரம் அவனென்ன காந்தியாகும்
அறிந்துரைத்த காஷ்மீரப் படிகந்தானே. 144

### கற்காவிக்கல்

காற்காவிப் பேர்தனையே கருதக்கேளு
கனமர்ந்து ரவிச்சிலை யுமாகும்
கற்காலி மருவிய செஞ்சிலையுமாகும்
வளமான செந்தூர மண்சிலை செம்மண்ணாகும்

மற்காலி யாந்துயர்தாள காவியமாகும்
ஆதி ரவிச்சிலை காந்தி யதிகமேனி
நற்காலி நாதாந்தி தரிக்குங் காவி
நலமான நாற்காவிப் பேருமாமே. 145

## செம்புமணலின் பெயர்

செம்பு மணல் பேர்தனையே செப்பக் கேளு
செவந்திட்ட லோகமண்ணாஞ் செவ்வாய் மண்ணாங்
கம்பு மணற் கவ்வாய் தாம்பரமுமாகுங்
கம்மி லேச்ச மண்ணாகுங் குலப்பமாகும்
நம்பு மணல் நவ்வாய் செம்பொடியாகும்
நாட்டியதோர் செங்கோலமாமுது பரமனாகும்
வம்பு மணல் ரவிப்பிரிய மண்ணுமாகும்
மாசற்ற செம்பு மணல் பேருமாமே. 146

## நாகமணலின் பெயர்

நாகமண் பேரையே நயந்து கேளு
நலத்தஞ்சு வர்ணத்தான் ஏமவித்து
மீகமணல் மின்னலாந்தலுக்கு தானாம்
விளங்கிய தோர் சித்தான தாசிபுத்திரன்
நாகமணல் அஞ்சுவர்ணம் காமவதி அவனேஷம்
நாகர்குல மசக்கியனாகும்
யாகமணல் தராகத்தி மிருதுகிருஷ்ணமாகும்
பருவான சோரமாம் நாகமணற் பேரே. 147

வங்கமணற் பேர்தனையே வகுக்கக் கேளு
வடியினையின் வங்கமாம் மாருதியின் நாதந்தான்
கெங்கமாங் கெடுப்பிணையடிப் பிணையுமாகுங்
குடிலந்தான் சவளையாங் கோடி வங்கம்
நங்கமந்திரமாம் திறம்பு வளிநாக வங்கம்
நலமான மாயூஷம் பூதிலோகந்
தங்கமாம் ஆருப்பியங் கயப்பினை யுமாகும்
சாத்திய தோர் நாமமெல்லாம் வங்கமாமே. 148

## வெள்ளீய மணல்

வெள்ளீய மணல் பேரை விளம்பக் கேளு
மிருத்துவும் டதுமையாம் வேதைச் சத்துரு
கள்ளியாம் கானகத்தின் சத்துருவாகுங்
களங்கெல்லாம் கெடுக்கின்ற கன்னியாகும்
நள்ளிய மாத்துருவாணம் நாடியநாதம்
நலமான வெள்ளீயம் படில் நாறங்கி தாளாம்
தள்ளியாமயசுபடி தெண்ட வானாம்
சாற்றிய பேரெல்லாம் வெள்ளீய மணலுமாமே. 149

### வெள்ளி மணல்

வெள்ளியுட மணல் பேரை விளம்பக் கேளு
வெண்மணலாம் வெள்வாரி ரசிதமாகும்
புள்ளியாஞ் சோழமணல் பூரண மணலாகும்
புகழான மணி மணலாந் துய்யானாகும்
குள்ளியாமீன் மணலாங் கருமணலுமாகுங்
கங்களுக்கு மணல் தேராமணல் சூர்மை மணலாகும்
நுள்ளியாம் ரூபாயின் மணலுமாகும்
நோக்காக மணலெல்லாம் வெள்ளி மணலாமே. 150

### ஏம மணல்

ஏமமணலின் பேரை இயம்பக் கேளு
யேத்தமாம் மேரூவரை வாரியாகும்
தாம மணல் தாருவுடன் டாயந்தான்
தனக்காக நாவல் சாரத்தாள் தாண்டவந்தான்
வாம மாந்தலுக்குளை யுமதி செம்போற்றுளர்
மாசற்ற வர்ணத்தூள் காஞ்சனத் தாளாம்
பாம் பாஞ்சித் தாளுமாகும்
அறிந்துரைத்த நாமமெல்லாம் ஏமமணலாமே. 151

### உலோக மணல்

உலோக மணலின் பேரினை நாம் உரைக்கக் கேளு
நோக்கான கருமணலின் வாரியாகும்
லோகமாம் அயசான மணலுமாகும்
மாதமகா நாதமாமய சவிறதித்த
லோக மாமலையிரும்பு சாந்த
கருமணலாம் தளுக்கான கிருட்டிண வர்ண
லோகமாம் உருமலையின் வாரியாகும்
ஓங்கியதோர் மணலெல்லாம் லோக மணலாமே. 152

மயிலிறகின் பேர்தனையே மருவிக் கேளு
மயூரமிகில் மன்னாயிநிந் திராட்சந்தான்
கயிலிறகு மேகத்திற் களிக்குந்தான்
சிக்கதிர் வேலர் தானேறு வாகன முமாகுந்
தயிலிறகு யிமையாக் கழங்கருகட் டோகை
மயிலிறகு தோகை யெல்லாம் பாய் விரித்தாடும்
மயிலிறகு கருவின் மலர்க் கலாபமாம்
கருதியதோர் பேரெல்லா மயிலிறகின் பேரே. 153

### கருஞ்சுக்கான், கானக்கல், குருந்தக்கல்- ரசிதமலை, ஏமமலை

கருஞ்சுக்கான் பேர்தனையே கருதக்கேளு
கருமணலிற் சுக்கானாங் கரவானை சுக்கானாம்
தருஞ்சுக்கான் கருமணலிற் சுக்கானாகுந்
தனிக்காச்சுக்கானாம் கவளைச் சுக்கான்

மருஞ்சுக்கால் அனல் பொருக்குச் சுக்கானாகும்
மாசற்ற செந்தகரு மணற் பாவையாகு(ம்)
முருஞ்சுக் கானரு விக்கட் கறுத்தசுக்கான்
முத்தான கருஞ்சுக்கான் நாமமாமே. 154

கானக்கல் பேர்தனையே கருதக் கேளு
கரும்புள்ளிக் கல்லுத்தான் செம்பிறையுமாகும்
மானக்கற்பூ வைக்கப்பாக்குக் கல்லு
பாங்கான நரிக்கல்லு தேனக்கல்லு
தேனகக்கல்லுத்தானா மாகும் ஆடவிக்கல்
சேனக்கல் செம்மைக்கல் எனப் பலுவும்
செப்பியதோர் திரமெல்லாங் கானக்கல்லே. 155

குருந்தக்கல்லின் பேர்தனையே கூறக் கேளு
கொடுஞ்சாணைக் கல்லாகுங் கோளக வச்சிரம்
நெருந்தக்கல் நீள்வயிர நேரோத்துமம்
நிலையான வானகப்பூச்சி லையுமாகும்
அருந்தக்கல் மருவியதோர் அம்பரமாகும்
மகத்தான கூறியதோர் வாட்டக்கல்லாகுந்
திருந்தக்கல் தீயக்கல்லு சிறப்பாங்கல்லு
செப்பியதோர் பேரெல்லாங் குருந்தக்கல்லே. 156

ரசிதமலைப் பேர்தனையே இயம்பக் கேளு
நயங்குகின்ற யீசான மேருமாகுங்
குசிதமாஞ் சபாலதி வெள்ளைக்குன்று
கொடுமுடியின் உறவதமா மதிமலையுமாகும்
நசித மாந்தண் சோலைத்தண்மதியினாமம்
தருக்கான கயிலாயங் கண்ணுதலோன் வெற்பு
உசிதமா யெம்மிறைவன் கணத்தில் செய்தார்
உற்றதொரு நாமமெல்லாம் இரசிதமலைப் பெயரே. 157

ஏமமலையின் பேரை இயம்பக் கேளு
யேத்தமா மகாமேரு வெண்ணாவல் சார்
லாமமா வலையம் பொன் அசல்மேறு
வாமா காயவெல்லிட முண்டான கைவில்
தாமமாஞ் சாம்புளக்கரு சந்திரம் பொன்மலையாஞ்
ச்தர்சிவன் தர்ன்வாசமாம் புவிமைய மாகுஞ்
சேமமாங் கொடுவகையாம் தெருவணமாகுஞ்
செப்பியதோர் பேரெல்லாம் ஏமமலையாமே. 158

நாகமலை பேர் தனையே நவிலக்கேளு
நலமான மந்தாரமணி முடியின் சர்ப்பம்
வீகமான வித்தாரம் பூச்சாரமாகும்
மேவியதோர் வாசுகிதான் விடங்கடைவா யுடைக்கும்

மாகமாங் குலவரையாம் மந்தாரத்து
மாயிர்மாம் பணாமுடியழகு பெயிற்றாம்
மீகமின்னரைக் கேடி மணிச்சுட்டி கையாம்
விளங்கியதோர் பேரெல்லாம் நாகமலையாமே. 159

வங்கத்தின் ஷ்பயர் தனையே வகுக்கக்கேளு
மாருநிக் குடிலமா மாயியுடபீசஞ்
சிங்கத்தின் குவடுமாந் திருடகத்துங் குடிலம்
திறமான மாசற்ற மலையுமாகும்
பங்கத்தின் குவடுமாம் பானுவின் தன்மூலம்
பாசத்தை அடுக்குகின்ற பருமலையுமாகும்
தங்கத்தின் குலமாம் புசங்கமாகும்
சாற்றியதோர் பேரெல்லாம் வங்கமலையாமே. 160

காரீயமலைப் பேஷரைக் கருதக்கேளு
காரி கடுமலையாங் கானகத்தீயாம்
வாரியாம் நாரி பரிசனமுமாகும்
மகத்தான நமனாகும் பறிக்கும்தாணு
மாரீச்ச வளையாம் மறுபேதனுங்காரீய
மகத்தான பாரிய மலையுமாகும்
நாரீய கனகமாந் தாம்புரமாகும்
நாட்டியதோர் பேரெல்லாம் காரீயமலையே. 161

அயமலையின் பேர்தனையே அறியக்கேளு
ஆதியா மூவரசமாம் வாயுமாகும்
புயசிலையாம் புசுண்டத்தின் மலையுமாகும்
பேரான கருலோக மலையுமாகும்
கயசிலையாங் கருவயசு குண்டமாகுங்
காட்டிடவே ஆயுதத்தை இழுக்குமலையாம்
வயசிலையாம் வாந்தய லோகசிலையுமாகும்
வளர்சிவன் மலையாகும் அயமலையின் பேரே. 162

திரா மலையின் பேர் தனையே செப்பக்கேளு
செங்கொட்டத் திரச்சிய மாஞ் சிறிய செம்மலையாம்
அராவட்டக் குவடுமாம் மந்தான பீட மடிக்கவே
நொறுங்குகின்ற மலைதானாகும்
விரா வெட்டை லோகமாங் கலப்பு மலையாகும்
மெழுகு கட்டி வார்க்கின்ற ரோகமாகும்
முராமுட்ட முறியான மலையுமாகும்
முட்டியதோர் பேரெல்லாந் திரா மலையாமே. 163

**வெங்கல மலை- செம்பு மலை- பித்தளை மலை**

வெங்கலமாம் மலையின் பேர் விளம்பக் கேளு
வெகுகோடி கொடுமலைக் கோமாளியும் குறைகும்
கங்கலமாங் காச மாங் கஞ்சமாகுங்
கடுகு வாரைக் குறுங்கிண்ணித் தளுகையாகும்

கிண் கிலமாங் கெடியாரந் தராசு மாகும்
கிண்கிணியாதமாகி நாலுக்கு மாடு
முன்கலமா மோஷக புட் பகழகமாகும்
ஓங்கிய தோர் பேரெல்லாம் வெங்கலமுமாமே. 164

செம்பினுட மலைப் பெயரை செப்பக் கேளு
செம்பொன்னாம் ரவிகுலத்தின் குன்றுமாகும்
நம்புகின்ற காஷாயம் நாதாந்தியாகும்
நலங்கு செம் பாம்புலமாம் ரவியின்பேரு
திம்புகின்ற சூரியனாம் திரியம் பகமாகும்
செறுக்கின்ற மிலேச்சமுக மிரத்த மலையாகும்
உம்புகின்ற நாதாந்தக் குவடுமாகும்
கருதியதோர் நாமமெல்லாஞ் செம்புமலையாமே. 165

பித்தளையின் மலைப் பேரை புகலக்கேளு
பேரான குடவனென்ற பர்வதந்தான்
பத்தனைந்த நற்காளிக் கமிர்தியாகும்
பாங்கான வராகூடங் கொங்கு மலையாகும்
தத்தனை சரிகை மலையுமாகுந்
தலைவிரிச லூறலென்ற யேமமாகும்
நத்தனையின் மலையாகு நாறும் பொன்னாம்
நாட்டியதோர் பேரெல்லாம் பித்தளையுமாமே. 166

## உபரசங்கள்

ஆமப்பா உபரசங்கள் நூற்றிரண்டு பத்து
அறிந்த மட்டு மாராய்ந்து ஆயிழையைத் தான்கேட்டு
ஓமப்பா மூலத்தில் ஓங்கி நின்ற
உற்றதொரு பாட்டரைத்கான் கேட்டுக்கேட்டு
சோமப்பா காலாங்கி ஐயர் சொல்லக் கேட்டு
திறமான சித்தர்களைத் தொழுது கேட்டு
தாமப்பா நிகண்டுக்குள் கருவையெல்லாம்
நலமாகப் பார்த்தறிஞ்சு சொன்னேன் பாரே. 167

பாரப்பா உபசரங்கள் நூற்றிரண்டு பத்தும்
பண்பான பேரை யெல்லாம் சொல்லக்கேளு
நேரப்பா துருசியொடு பொன்னிமிளை கஞ்சம்
நேரான சீதமொடு லோகங் காதும்
சேரப்பா துருசுவகை நிமிளையாச்சு
சிறப்பாக வேமமென்ற அப்பிரகந்தானும்
காரப்பா சிகப்பு வர்ணங் கிருஷ்ண வர்ணங்
கனமான சுவேத வர்ண மப்பிரகந்தானே. 168

தானான ஊசியமென்ற காந்தத் தோடு
சார்வான அரக்கென்ற காந்தந்தானும்
ஊனான உருளையாங் காந்தத்தோடு
உயர்ந்து நின்ற கற்காந்த நாலுமாகும்

வானான கல்நாரு சாத்திர வேதி
மகத்தான சிலாசித்து கல்மதந்தான்
தேனான அஞ்சனக்கல் கருங்கல்லு படிகஞ்
சிறப்பான சுக்கான் கல்லீரக்கல்லே. 169

கல்லான வற்றக்கல் கெருடப் பட்சி
கனமான வோடு செங்கல் எலும்பு மயிர் நண்டு
நல்லான நாகரமாம் வண்டு நத்தை
நலமான கிளிஞ்சியொடு ஆமை முட்டை
வல்லான ஆனைக்கொம்பு பண்ணிக் கொம்பு
மாட்டினுட கொம்போடு கலங் கொம்பாகும்
சொல்லான பூநாகம் இந்திரமாங் கோபஞ்
சிறப்பான பல்லோடு செவ்வட்டை தானே. 170

தானென்ற தவளையோடு கரடி கோழி
சங்குடனே முத்தான சிப்பியாகும்
வேனென்ற முத்தோடு பவளங் கோமேதகம்
விளங்கியதோர் புட்பராகம் வயிரம் பச்சை
வானென்ற வைடூரியஞ் சிவப்பு நீலம்
மருவியதோர் கொண்டகச் சிலை சூடாலைக்கல்
ஊனென்ற மஞ்சக்கல் மாக்கல்லுத்த கல்லு
உறுதியாந் தனைக்கல் சிலா வங்கமாமே. 171

ஆமப்பா சிலாநாகம் அன்ன பேதி
அஸ்தியாம் பேதியோடு சொர்ண பேதி
வாமப்பா உவர்மண்ணு மாங்கிசப் பேதி
மகத்தான கல்க்கிட்டங் கருமணலுஞ் செம்மண்
நோமப்பா சுத்தமண் முடவாட்டுக் கல்லு
உகந்து நின்ற கருவண்டு பன்றி முள்ளு
ஓமப்பா எலிமுள்ளு கடல் நுரையினோடு
யேற்றமா மீனெலும்பு முள்ச்சங்கு மாமே. 172

ஆமே பேரோசனை தாளகப் பச்சை
அப்பனே மரகதமாம் பச்சையோடு
போமேதான் புத்தாம் பவளம் வெள்ளைச் சுக்கான்
பேரான கதண்டோடு காக சிலையுமாகும்
தாமேதான் கத்தூரி காண்டா மிருகங்
கல்பாசி மந்தார சிலையினோடு
வாமேதான் மாங்கிச்சசீலைச் சால கிராமம்
மாந்துளிர்க்கல் காஷ்மீரப் படிக்கல்லே. 173

கல்லோடு கற்காவி செம்பு மணலோடு
கனமான நாகமணல் வங்கமணல் தானும்
வல்லோடு வெள்ளீயம் மண்ணுமாகும்
வெள்ளி மணல் வேம மணல் லோக மணலாகும்

மல்லோடு மயிலிறகு கருஞ் சுக்கான் கல்லு
மகத்தான கானக்கல் குருந்தக் கல்லு
நல்லோடு ரசிதக்கலை யேம சிலையாகும்
நாக சிலையே வெள்ளீயச் சிலையே. 174

சிலையான ஆயச்சிலையும் திராவினுட சிலையுந்
திறமான வெண்கல மாமலையினோடு
நிலையான செம்புமலை பித்தளை மலையும்
நெரப்பான உபரசங்கள் நூற்றிரண்டு பத்து
மலையான உபரசத்தை வாதியெங்கே காண்பான்
வாய்ப்பேச்சால் சொன்னாக்கால் கிட்டாதப்பா
துலையான தேசத்தை திரிந்து சுற்றி
சூட்சமெல்லாம் அறிந்தால் கிட்டும் பாரே. 175

கிட்டுவது வெகு நாளிற் கிட்ட வேண்டும்
கெடியான மலைகளிலே சுற்றிப் பார்த்து
மட்டுவது புலிக்கரடி யேனம் புள்ளும்
மகத்தான நாகங்கள் மிருகமுண்டு
கட்டுவது மந்திரத்தால் வசியஞ் செய்து
தேசத்திற் சஞ்சரித்து கேட்டுக் கேட்டு
பட்டுவது பசியடக்கிக் கற்பமுண்டு
பாங்கான பிராணாயம் பண்ணிக் கொள்ளே. 176

பண்ணியபின் வெகு நூர்லை ஆராய்ந்து பார்த்து
பரிவான கருவை யெல்லாம் மனதிலெண்ணி
உண்ணுவதற் கிடந்தானும் பண்ணிக்கொண்டு
உறுதியாய் மனந்தன்னை யொக்கப் பண்ணி
கண்ணுவது சூதத்தை எளிதில் கட்டி
கரத்திலொன்றுவாயிலொன்று சிரசிலொன்று வைத்து
நண்ணுவது தேவியைத்ததான் மனதிலுண்ணி
நலமான மலைகளிலே திரிந்து பாரே. 177

### கருத்துரை- பாடல் 1 முதல் 177 வரை

*எழுதியவர் : மே சீ. சுப்ரமணியம்.*

பாடல் 1. காப்புச் செய்யுள் : அகண்ட பரிபூரணமான ஐயன் பாதங்களை வணங்கி, அடுத்து நிற்கும் மனோன்மணித் தாயின் பாதங்களையும் மற்றும் திருமூல நாயனார், குருவான காலாங்கி நாதர், சிறந்தவர்களான மற்ற சித்தர்கள், கலைமகளான வாணி, முதற்கடவுளாம் யானைமுகன் கணபதியையும் வணங்கி பூலோகம் மெச்சும்படியான இந்த நிகண்டைக் கூறுகிறேன் கேளுங்கள்.

**சவுக்காரசுண்ணம் : ( 2 முதல் 11 வரை)**

ஐந்து பலம் சவுக்காரத்தை துண்டு துண்டாக (பாக்கு அளவு) உடைத்துத் தொட்டியில் பரப்பவும் அது மூழ்கும் வரை மல்லிகைப் பூச்சாறு விட்டு நிரப்பி விட்டு வெயிலில் காய வைக்கவும்.

ஏழுநாள் சென்ற பின்பு காய்ந்தபின் மல்லிகை இலையைப் பரப்பி அதில் வைத்து அதன் மேலே மல்லிகை இலையை வைத்து மூடி அடுக்கவும். அதை துணியில் கட்டி நெல் அவிக்கும் பாத்திரத்தில் முடிச்சை தொட்டிலாக ( போலி) கட்டி வைக்கவும். மேல் பாத்திரத்தை மூடி நெல் அவியும் ஆவியால் வெந்த பின் எடுத்து வெயிலில் காயவைக்கவும்.

மறுபடியும் துணி முடிச்சைப் பிரித்து சுண்ணாம்பை துண்டு துண்டாக நறுக்கி மல்லிகை இலை பரப்பி முடிந்து நெல் அவியலில் வைத்து வேக வைக்கவும். இப்படி மொத்தம் மூன்று தடவை அவித்து எடுக்கவும்.

துணியில் கல் சுண்ணத்தைப் பரப்பி அதன்மேல் கட்டிச் சவுக்காரத்தை வைத்து முடிச்சாகக்கட்டவும். அதை சட்டியில் வைத்து மேலே மூடிசீலை செய்யவும். மேல் மூடியில் தொளை செய்து அதன் மேல் மல்லிகை இலையைப் பரப்பி அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். சுண்ணாம்பு கொதி வந்து குளம்பாகும் பக்குவத்தில் இறக்கி ஆற விடவும். நன்கு ஆறிய பிறகு சீலையை நீக்கி மெதுவாக முடிச்சை எடுத்துப் புது துணியில் முடிச்சுப் போடவும்.

புதிதாக கல்சுண்ணம் போட்டு சட்டியை மூடி மேல்சட்டியில் துளை போட்டு மல்லிகை இலை பரப்பவும். பெரிய சட்டியில் முன்செய்த சுண்ணாம்புக் குளம்பை விட்டு அதில் சட்டியை வைத்து வேகவைக்கவும். இப்படி மொத்தம் பதினாறு தடவை செய்து நீற்றிக் கொள்ளவும்.

மல்லிகை இலையையும் வேரையும் தனித்தனியாக அரைத்து ஒன்றாகச் சேர்த்து குகை ஒன்று செய்து காயவைக்கவும். அந்தக் குகையில் நீற்றிய சவுக்காரத்தை வைத்து மூடியிட்டு சீலை செய்து கிளிஞ்சல் சாம்பலில் வைத்து ஒரு சாம நேரம் எரிக்கவும். நன்றாக ஆறிய பிறகு எடுத்துக் கொள்ளவும்.

சவுக்காரத்தை கலவத்திலிட்டு கடுங்காரத் திராவகம் விட்டு இரண்டு சாமம் அரைக்கவும். அதை சிறு சிறு வில்லைகளாகத் தட்டவும். பின்னர் சட்டியில் வைத்து முட்டை ஓட்டால் மூடி மேல் சட்டி மூடி சுண்ணாம்பு சீலை செய்து பத்து எருவில் புடம் போடவும்.

புடம் போட்டு எடுத்தால் வெள்ளையாகும். அதை கடுங்காரச் செய நீர்விட்டு அரைத்து காசு அளவு வில்லை தட்டி காயவைக்கவும். கடுங்காரக் குகைக்குள் வைத்து மூடி சீலை செய்து பத்து எருவில் புடம் போட்டால் அதிக வெள்ளையாக ஆகிவிடும்.

இந்த சவுக்காரச் சுண்ணம் மிக உயர்ந்தது. இதனால் எல்லா சரக்குகளும் கட்டிவிடும். கல்லுப்பை மணி ஆக்கும். நவ[illegible]ங்க நிறம் போல சுண்ணாம்பாகும். உடம்பெங்கும் காயசித்தியாகும்.

**பெயர் அகராதி (11 முதல் 39 வரை)**

சவுக்காரத்தின் பெயர்கள் : சதாசிவம், வெண்சாரை, வண்ணான், சிற்பரை, குருமுறை, ஈசன், வாத ஆதி, கூர்மையாளன், சோமன், சுயம்பாகி, சூலானோன், சிருஷ்டியாளன், வாத முடிப்போன், காந்தன்மலர், பாதத்தோன், ஏமவேள், உவர்க் காரம், வழலை, உமையாள், அவக்காரம் ஆதியாங் குடியானோன், கவக்காரம், ரவிசன்னி, சுத்தியானோன், சுடலையாடி, வாதத்தின் தலைவன், அந்தகன், பவழம், முத்தி. மூர்க்கன்.

பூவழலை : மூர்க்கன், தரணிதாசன், பூநீறு, தீர்க்கன், ஊசரம், பூசாரம், அருக்கன், பூமிருது வண்ணாத்தி,குருச்சி, காயகல்பம், பூமிநாதன், ஒட்டச்சி, வெள்ளை, குசுத்தி வேகத்தி, சவுடு, ஆதி முதல், உரகன், இந்தப் பூவழலை தான் வாதத்திற்கு மிகவும் முக்கியமானது. எல்லாவகை சித்திகளும் பெற உதவக் கூடியது.

நவச்சாரம் : நவசித்தி சாரம், சலக்கூர்மை, வாருதிக்குள் கப்பல் வழங்கினோன். அசுரன், வாத ராசன், செயநீர்க்கர்த்தன், அக்கினித்தீ. விடுப்பட்ட நவச்சாரி, வாதத்தை சமக்கியுண்டோன், சத்தியுட்கூறாய் நின்றோன், நவஅமுரி, மேகநாதன், வாத சமானன், வாதசிரோமணி, தூசி மேல் குரு, கடுஞ்சாரி, சலக்குரு, கெங்காகுணன்.

சத்திச்சாரம் :- சவளச்சி, வாரச்சி, சூதகண்டகி பரச்சி, சாரோகி, கவர்ச்சாதி, சக்கிலிச்சி, கன்னத்தி, காந்தாரி, ஏதந்தி, அசச்ச காச்சாரி, ஏமனுட குணத்தி.

எவச்சாரம் :- கருப்பி, நவச்சி, எவச்சி, திரணச்சி, எவகோகி, புகை நீர்க்காதி, காரண சக்தி, சோவாரி, கவச்சி, சூடிச்சி, புவச்சி, பூதிச்சி, புலச்சி.

காசிச்சாரம் :- ஊஷரஉப்பில் வெடியுப்பும் நவச்சாரமும் சேர்த்து குப்பியில் செய்யப்படுவது, குப்பிச் சாரம், துரைச்சி, அனங்கன், பரங்கிக் கூர்மை,

ஏகம்பச்சாரம் :- ஏமத்தில் பிறந்தவள், ஏற்ற முள்ள கன்னி யோகபேதி, அதுகான துரைப்பெண், சிவப்பி, சூலினி, மால்தங்கை, தாது சத்துரு, இந்திரி,

சீனாக்காரம் :- எல்லா சுன்ன முறைகளிலும் இது சேர்க்கக் கூடியது வெண்காரி, சீனி, பாணிச்சி, உப்புச் சத்துரு, கடுஞ்சுன்னத்தி, படுகி, வெள்ளச்சி, குருச்சி, வெண்மீலி,

வெண்காரம் :- இது சரக்குகளை உருக்கும்போது புகையை அடக்கிவைக்கும் தன்மை உள்ளது. உருக்குணம், சந்தாணி, பொரிகாரி, குடோரி, ஆங்காரி, மணிக்காரி, டங்கணம், பொங்காரி, சரக்குமித்திரு.

சூடன் :- வெடியுப்பும் கருவாப்பட்டையும் சேர்த்து வைப்பாக, செய்யப்படுவது, சுடர்க்கொடி, தனிப் பண்ணை, மாடன், தீபக் கொடிச்சி, மாபக்தரூபி, தீய்க்கஞ்சி, மாசற்றசோதி, வேடன், அடன், ஆலாத்தி கற்பூரம், ஆப்தகேசரி, அதீதம்.

பச்சை கற்பூரம் :- பலகை, சந்திரன், உச்சை, தண்ணீராக்கி, ரவிக்கஞ்சி, கதளிப்பூ, மதிப்பூரம், மதனசாரி, குருவுக்காதி, முக்கண்ணில் ஒருகண், வடிசோமன், சீதளமானோன்.

அமுரிஉப்பு :- ஆதார மூலச்சாரம், உமுரிஉப்பு, மூலவன்னி, நீச்சலம், சடஉப்பு, முமுரியுப்பு, சலக்கூர்மை, வஸ்துஉப்பு, காயசித்தி உப்பு, நமுரிஉப்பு, சங்கார காலத்துப்பு, லவணக்கடுங் கூர்மை.

கல்லுப்பு :- கடல்குருவி, பர்றைஉப்பு, அன்னக் கூர்மை, அல்லுப்பு, அட்சயம், பிரோத்தம், அறுசுவை ஆதாரம், வெல்லுப்பு, சவர்ச்சலம், நல்லுப்பு, வேலை நீர், முனிமூத்ரம், மிருத்திய கெந்தம், தற்கால லவணம்.

பொட்டிலுப்பு :- படைராசன், இணங்கன், பூநாதன், பூமிக்கூர்மை, பட லவணம், கருவாம்முப்பு, ஊஷரத்தி லவணம், ஆண்மையுள்ளோன், புரங்கசத்துரு, நவச்சாரமித்ரு.

இந்துப்பு :- சிந்தூரத்தம், சைந்தவம், சந்திரஉப்பு, மதிக்கூர்மை, பனிக்கூர்மை, மதிஉப்பு, சிவாலம், மதிப்பூரமித்ரு, பாண்டத்தில் சமைத்த உப்பு.

வளையலுப்பு :- மணக்கூர்மை, குப்பிலவணம், காகசங்கம், கஞ்சயிறுசங்கம், காய்ச்சுமண்ணில் கஞ்சகம், வேஷ்ட்கரம், தெல்லுப்பு, உருப்பட்ட பலகை, கண்டகி, கடுப்பு, நிலயலுப்பு, நெருப்பு உப்பு.

சவுட்டுப்பு :- தர்ப்பரம், சலவணம், கார்முகம், அவுட்டுப்பு, மண்ணில் கூர்மை அக்கினியின் கூர்மை, ஊழரத்தின் சாரம், தவுட்டு உப்பு, ஊசார உப்பு, காய்ச்சுநீருப்பு, சரக்குகளின் சத்துரு.

திலாலவணம் :- சிவந்த நிறமாக இருக்கும், புலால் போல் நாற்றம் உடையது இதன் பெயர்கள்- போக்கான லவணம், திலாச்சாரம், தீக்கூர்மை, கார் உப்பு, கடுங்கூர்மை, கசக்கின்ற உப்பு, கறுப்பு உப்பு.

கெந்திலவணம் :- கல்லுப்பும் கெந்தகமும் சேர்த்து செய்யப்படும் உப்பு, உயர்ந்த வகை உப்பு. இதன் பெயர்கள்- பனியின் உப்பு, அழுகல் நாறி, கூர்மை நாறி.

பிடாலவணம் :- வெடியுப்பு, கல்லுப்பு, சீனாக்காரம் சேர்த்து செயற்கையாக செய்யப்பட்டது. ரசமணியை சாரணை செய்ய உபயோகமாகும். சந்தானக்கூர்மை, மந்தாரகாந்தி, வணங்காத லவணம்.

சிந்துலவணம் :- கடுங்கூர்மை, கற்பாரலவணம், சிறப்பாமுப்பு, சிந்துச்சாரம், பாறையில் பனியால் விளைந்த உப்பு, தற்பரத்தின் உப்பு.

காய்ச்சுலவணம் :- கார்மேச்சாரம், மாங்ஷசாரம், அவுப்பிக்காட்சி, அனித்திய உப்பு, தருவென்றசாரம், மேகத்தின் தோயம், அசங்காத சம்பூதம், காசிலவணம்.

பொன்னம்பர் :- பட்சி எச்சம், அட்சயராசன், மஷத்தில் செரிந்த மலக்கணம், சூதத்தை கத்தும் சூரன், கட்சயத்தின் வாசன், பறவை வச்ரம்.

மீனம்பர் :- மீன்வயிற்று வைரம், கானமலப்பட்சி, அகப்பளித்த மச்சை, கறுப்பு செம்மீனின் வயிரம், ஊன்மலம், வாசம்.

கடல்நுரை :- கடலுக்குள் அக்கினிச்சலம், வாருதியின் நஞ்சு, சலக்கனல், சமுத்திரத்தின் கோஷம், மக்கிய தீக்கட்டி, மீனஞ்சுவன்னி, மலசாகரம்.

**காரசாரத் தொகுப்பு ( 40 to 41)**

காரசாரங்களின் தொகுப்புகளின் பெயர்கள் சொல்லப்பட்டன. அவைகளின் பட்டியல் வருமாறு வழலை, பூநீறு, சத்திச்சாரம், எவச்சாரம், காசிச் சாரம், நவச்சாரம், சீனாக்காரம், வெண்காரம், பச்சைகற்பூரம். அமுரிஉப்பு, இந்துப்பு, வளையலுப்பு திலாலவணம், கெந்திலவணம், பிடாலவணம், சிந்து லவணம், காய்ச்சுலவணம், பொன்னம்பர், மீனம்பர், கடல்நுரை.

**கார்சார செயநீர் ( 42 முதல் 46 வரை)**

முன்சொன்ன காரசாரங்கள் இருபத்தைந்தையும் வகைக்கு ஒரு பலம் வீதம் எடுத்து பொடியாக்கவும்.

எலுமிச்சம்பழச்சாறு, மல்லிகைப்பூச்சாறு, சிவப்பு வெங்காயச்சாறு, முதலியன வகைக்கு ஒருபடி ஊற்றவும், குப்பைமேனிச்சாறு, புங்கம்பால், முதலியன அதே அளவு சேர்த்துக் கலக்கவும். அதில் பொடியைக் கலந்து கலக்கி மூன்றுநாள் ஊறவைக்கவும். அடுத்த நாள் அடுப்பேற்றி சுண்டிவிடாமல்- அடி பிடிக்காமல்- கரண்டியால் கிண்டிவரவும். மெழுகு பதம் வரும்போது இறக்கிவிடவும்.

நன்றாக அரைத்து வில்லைகளாகத் தட்டி வெயிலில் காயவைக்கவும், சட்டியிலிட்டு மேல்மூடி சீலை செய்து புடம் போட்டால் சுண்ணமாகும். பின்னர் கடுங்காரச் செயநீர் விட்டு கவனத்தோடு அரைத்து வில்லை தட்டிக் காயவைக்கவும். அதை கடுங்கார குகையில் வைத்து புடம்போட்டால் சிறந்த சுண்ணமாகும்.

இந்த சுண்ணத்தின் எடை அளவு நவச்சாரம் சேர்த்து அரைத்து மூன்றுநாள் வெயிலில் காயவைத்து மண்சட்டியில் வைத்து சீலை செய்து புடம் போட்டால் பூப்போல் வெள்ளையாகும். அதைப் பொடியாக்கி பீங்கான் பாத்திரத்தில் போட்டு பனியில் வைத்தால் செயநீராகும். இந்த செயநீரில் வீரம், பூரம், முதலியன பொடியாக்கி சேர்த்து வைத்துக் கொள்ளவும்.

இந்த செயநீரில் பாஷாணங்கள் கட்டிப்போகும். சூதம் கட்டிபோல திரளும். வங்கம் மடியும். உபசரங்கள் பற்பமாகும். காரசாரங்கள் எல்லாம் மணிபோல கெட்டியாகும், உப்புகள் எல்லாம் கரிபோல் ஆகும்.

**பாறை உப்புக்கட்டு ( 47 முதல் 53 வரை)**

பாறையுப்பு பத்துபலம் எடுத்து பாக்குபோல உடைக்கவும். செயநீரில் ஊறப்போட்டு ஏழு நாட்கள் வெயிலில் சுண்டவைக்கவும்.

பழையபுளி, கடல்நுரை, குப்பைமேனி இலை ஆகிய மூன்றையும் சமஅளவு எடுத்து நன்றாக அரைக்கவும். அரைத்ததை கூடுபோல தட்டிக்கொண்டு அதற்குள் பாறையுப்பை வைத்து மூடவும். அதைசீலை செய்து பத்து எருவில் புடம்போடவும். அதன்பின் சீலையை பிரித்து முன்செய்தது போலவே மூன்றையும் அரைத்து உள்ளே வைத்து சீலை செய்து புடம்போடவும். இப்படி ஐந்து புடம் போட்டால் மணிபோல் கட்டியாகும்.

இந்த மணியை கரி அடுப்பில் வைத்து உருக்கினால் சங்குபோல வெள்ளையாகும். படிகம்போல ஒளிவீசும் உப்பு நின்று உருகும்போது எடைக்கு எடை தாளகத்தைக் கொடுத்தால் மஞ்சள் நிறமான மணியாகும். எடைக்கு எடை லிங்கத்தைக் கொடுத்தால் சிகப்பான மணியாகும். துரிசைக் கொடுத்தால் பச்சை மணியாகும். சவுட்டுப்புக் கொடுத்தால் கருப்பு மணியாகும். வீரத்தைக் கொடுத்தால் வெள்ளையான மணியாகும்.

இந்த ஐந்து வகையான மணிகளையும் செய்து கொண்டு சேர்த்துக்கட்டி பூசை செய்தால் சிவன் நடனமாடுவார். தேவி பேசுவாள். எல்லா வித்தைகளும் கைகூடும். மஞ்சள்மணி என்றால் ஒரு பங்கு, சிகப்பு என்றால் இரண்டு பங்கு, கறுப்பு என்றால் நான்கு பங்கு, பச்சை என்றால் எட்டு பங்கு, வெள்ளை என்றால் பத்து பங்கு வீதம் பயன்படுத்துவது நல்லது. இந்த மணியை பணவெடை மட்டும் தேனில் சாப்பிட்டு வந்தால் அதே நிறம் உண்டாகும்.

நூற்றி இருபத்திரண்டு உபரசங்கள் பற்றி பல நூற்களை ஆராய்ந்து பார்த்து தெரியாததைஎல்லாம் வெட்டவெளியாக நிகண்டில் சொல்லியுள்ளோம் நூல்களில் இல்லாத புரியாதவைகள் எல்லாவற்றையும் வெளிப்படையாக சொல்லியுள்ளோம்.

பெயர் தொகுதி ( 54 முதல் 166 வரை)

துரிசு :- கல்லுப்பு, எலுமிச்சம் பழச்சாறு, தயிர் ஆகிய மூன்றையும் செம்பு பாத்திரத்தில் சேர்த்து வைத்தால் உண்டாவது துரிசாகும். இதன் பெயர்கள் சுடலையோன், நிஷ்களன், ஆடுங்கூத்தன், ஆதிகுருநாதன், மந்தார கெங்கையோன், கருமேகன், கடுங்கூத்தன், கூத்தன், குன்றைவில்லி, சூதச்சத்துரு, நிறமூத்தன், கங்காளன், நல்பச்சை, மால்மச்சினன், பாசுபாணி, பல்லுக்கேத்தான் காசாம்பு வர்ணத்தோன், குலையோன், கண்டர், கண்ணுக்கு ராசன்.

பொன்நிமிளை :- பொன் பிறந்த கருவில் உருவாவது. பெயர்கள் - சத்திநாதம், மாட்சிகம், கன்னியுட மாதநீர், பொன்னிற முதிர்ந்தோன், வெகுகாமி, பொன்னுசத்தி, சத்தியுட நாமமெல்லாம் சொல்லலாம்.

வெள்ளி நிமிளை :- முதல் தரமானது ரசிதம் எனப்படும், கஞ்சமென்ற நிமிளை, லோக நிமிளை, காக நிமிளை என நான்கு வகை உண்டு, செலகெந்தி தங்கத்தை நீற்றும், சத்துக்களை உருக்கும், சரக்குகளை சுண்ணம் செய்யும், லோகத்தை உடைக்கும். ரசத்தைக் கட்ட உதவியாக இருக்கும். இதன்பெயர்கள்- சடச்சி, சத்தி, வெள்ளச்சி, நாதாந்தி, சுக்கிரன், தூய்மையாளன், சிற்பரி, கருப்பி, துரைச்சி, சனி, மாருதி.

அப்பிரகம் :- சிகப்பு, சுவேதம், கிருஷ்ணம், ஏமம் என நான்கு நிறமாக இருக்கும், இதன் பெயர்- பூமி விந்து நாதம், மாவிந்து, அம்பரம், மகாப்பிரகாசி சேகரம், பரையின் நாதம்.

காந்தம் :- அரக்கு காந்தம், ஊசிக் காந்தம், உருளைக் காந்தம், கல்காந்தம் என நான்கு வகை உண்டு. உடலுக்கு வலிமையைக் கொடுக்கும் இந்த நான்கு வகைகளின் பெயர்கள் வருமாறு: காய சித்திக்கு பாத்திரவான், சிவலோகச் சேவகன், பராபரம், அயசிலிட ஈயமானோன், லோகசீவன், தரணி நாதன், சூதாங்குசம், நாதாந்தம், நவலோகதுரட்டி.

கற்பூரசிலாசத்து :- காயச்சித்திச் சுன்னம், சலப்பிரிதிவி, கல்குரு, குல சிலாமணி, கன்னத்தோன், ஆத்தினுட வித்து, காந்தியோன், உபரசத்திலாதி.

கல்நார் :- கல்லுக்குள் சவளை, அலநாரு, ஆற்றீகம், அரவிக்கல்லு, சிவப்புக்கல், சுன்னம், சிலை நாரு, சிலாவித்தம், கல்லின்காரம், சிறுநாறு, சத்து, உக்கிரம்.

சாத்திரவேதி :- சலத்தோடு, மலைநாதம், மலைக்கரு, சிலைக்கெந்தி, இமயமலைக் குறிப்பு, கல்லுயிர், கனல்வேதி, செஞ்சிலை, பொதியமலை விந்து.

கல்மதம் :- கல்திட்டு, மலைத்துடக்கு, மலைத் தூமை, மலைநஞ்சு, சிலைக்குள் தீட்டு, சிலையினுட சுரோணிதம், கல்லுக்குள் சோரம், கல்காமி, கல் நாதம், மலையின் மதம், மலை ...த்தம், சிலை ஒழுக்கு, செந்நீர்.

அஞ்சனம் :- கண்ணுக்குள் அஞ்சனம், சிலை சூதம், கல்லினீயம், லோகாஞ்சனம், சிலாஞ்சனம், சூத அஞ்சனம், வெற்பினஞ்சனம், செய் வீரஞ்சனம், குவட்டினியம், கிருஷ்ண வர்ண அஞ்சனம்.

கருங்கல் : விக்கிரமான கல், உருப்பட்ட சிலை, நீலம், இந்திரம், மேகத்தில் உற்பவிக்கும் கல், அந்தி மேத்திலிருள் சிலை மந்திமாம் கூடக்கல்லு, மாசித்தியான

படிகக்கல் :- படிகம், செம்படிகம், காஷ்மீரம், மாலைக்கல், நாதாந்தம, சத்தியுடன் கூறான கல், வளைய மென்றகல், நீரம், நீலம், சேலொத்த வெண்கல், ஒளி, மதிகாந்தி, வளர்ந்த கல், பாலை சிலைக் கல்.

சுக்கான் கல் :- சொரிக்கல், சுருஷரகல், தழல்கல், வங்கக்கல், பூச்சரக்கல், பேராங்கள், அமுக்கத்துங்கல், ஊர்க்கல், மரிக்கல், சுன்னக்கல், பொறிக்கல், பூமிக்குள் விளைந்த கல், நெறிக்கல், வெறிக்கல்.

ஈரக்கல் :- மந்தாரக்கல், விந்தாரக்கல், குறுஞ்சிலைக்கல், கொழுப்புக்கல், சித்தக்கல், மாங்கிஷத்தின் சிலை, கொழுப்புக்கல், சித்தக்கல், மாங்கிஷத்தின் சிலை, கோழிக்கல், கொந்தார கெத்தக்கல், சிவப்புக் கல்.

வத்தக்கல் :- ராசாவின் வத்தக்கல், மண்ணில் வத்தம், மழைமேகச் சொர்ணக்கல், சித்திரச வாத அவதீதக்கல், தீர்மைகல், வாதத்தின் பிரட்டுக்கல், நீலக்கல், நிறுமைக்கல்,

கெருட பட்சிக்கல் :- விஷத்திற்கு அரசன், வயின தேசக்கல், விஷராஜன், பட்சிராஜன், பால் போல சிரசோன், படத்துக்காருடன், கார்கோடன், கலுழனாங்கல்.

ஓடு :- பாண்டத்தின் சக்களத்தி, பாண்டத்தி, குசத்தி, குச சக்களத்தி, சில்லு, தேசாந்திரி, செயலற்ற மண்ணின் ஓடு, மண்கலம், அழகாம் பாண்டம், புதுக்கலசம், சக்கரம் புகையுஞ் சூளை.

செங்கல் :- செஞ்சிலைக்கல், சிறந்த கல், செம்பலகை உருக்கும் கல், கோபுரக்கல், மண்கல், செங்கல், மணக்கல்லு, மங்கலக்கல், காளவாய்க்கல், சூளைக்கல், ஈட்டுக்கல், அங்கல், சிலையாங்கல்.

எலும்பு :- சல்லியம், அங்கம், வச்சிரத்தண்டு, விலாக்கொடி, விலாத் தோரணம், அஸ்தி, உயிரின் குரடு, வரிச்சங்கம், உயிரின் சந்து.

மயிர் : - கேசரம், ரோமம், குகை, கதுப்பு, அளகம், அஸ்திவேடு, சிகை, குஞ்சி, மாசத்தின்கந்தம், கூந்தல், ஓதி, கொந்தளகம், மசகம், தேசாசாபம், கேதகை, கம்பிளி.

நண்டு :- நரியுண்ணி, தலையில்லாச் சேவசன், பத்துக்கால் மன்னன், பருந்தினுக்கு விருந்தானான் பரமயோகி, கொத்துகின்ற குரடு உள்ளோன், குளத்திற்கு குருவியானோன், அலவன்.

நத்தை :- ஊமச்சி, புமுரி, நீர்க்காயம், கல்லொட்டி, குளத்துக்குள் ருத்திராட்சம், செலக்கூபம், உள்உயிரானோன், நீர்க்குன்று, கொம்பூதி, மேல்மூடி, ஊர்ந்து நிற்போன்.

நாகர வண்டு :- பாம்பின் வாய்க்கிரையானோன், காட்டுக்குள் சங்கு, சங்கஞ் செடியில் குடி புகுந்தோன், சங்கின் காட்டுக்குள் அமுரி, பாம்புக்கு தண்ணீர் கொடுக்கும் மன்னன், கன்னத்தில் கூர்மை யானோன்.

கிளிஞ்சில் :- உடல் இரண்டு உயிர் ஒன்று, கடலுக்குள்பட்சி, ஓடம் உயிர், சிப்பி, சுண்ணத்தில் வலசாரி, குளத்துள் சிப்பி, மாசாளி, சித்த சிப்பி.

ஆமை :- அந்தரங்கத்தியானி, நீர்ப்பரிசை, தனித்தது, மோதிரன், அங்கமூடி, மௌனி, பஞ்சங்கம் கூர்மையுள்ளோன், கச்சன், கூர்மைராசன், மால் பிரதிஷ்டையுள்ளோன்.

முட்டை :- மும்மூர்த்தி, மஞ்சள் வெள்ளைக் கரு, கடுங்கார நீரானோன், நீத்துண்டை, ஊமை, உருளை, கன்னத்துக்கு உயிரானோன், மெழுகுக்கு கூர்மையானோன், அண்டம், சாரத்தின் சத்துரு, லோக பேதனம்.

யானைக் கொம்பு :- செகப்பிடி, கரியின் கொம்பு, வாரணத்தின் கோடு, ஒளிர் மருப்பு, கிம்புரிக் கோடு, எயிரு, தந்தம், மதங்கத்தின் ராவு, குஞ்சரத்தின் கோடு.

பன்றிக்கொம்பு :- மலைவாசி, வராகத்தந்தம், நிறமான கண்ணையுள்ளோன், தரணியைக் கிளையுங் கொம்பு, கருமா, கேழல், சூரன், எரி, போரம் போத்திரி, ஏறுழி, கானகத்தின் சேவகன், கிரிட்டி, கீடம், குரோட்டன், ஏனம்.

கலங்கொம்பு :- சாரங்கம், அருணம், புள்ளிநிற மிருகம், மாசிங்கம், ஆரைகடவிழி, சாதக வேடி, சாத்தம், கிருஷ்ண மிருகம், மணி ஒலியில் சாவு.

மாட்டுக் கொம்பு :- மயிடம், கருமேதை, கிடா, பசு, கோ, ஆ, சுரபி, விடை, எருது, ரிஷபக் கொம்பு, கிருமியுடம், கார் கவறிக்கொம்பு, திட்டு முரி, புங்கவச செவு, வெண்பசுவின் கொம்பு.

ஆட்டுக்கொம்பு :- அசர், தகர், சாகம், சாளகம், மேஷத்தின் கொம்பு, சிம்போத்து, விலனோச்சாகி, ஓமப்பசு, காரணமாம் உரு, பிரமம், கரிய குறும்பாடு, செம்பிலி, விரகச் சாகம்.

பல் :- கடைக்க வாதானம், தந்தம், தாள்வாய், சரக்கூடம், சாந்த பார்வை, தவளமுத்து, ஒலிக்கடல், சரமுல்லை, நகை, முறுவல், பல் எயிறு.

பூநாகம் :- மேகத்தின் விந்து, சஞ்சீவி, சோதி மயமான வேதி, மாங்குருந்தான், பூமிவேர், மாசிலாதான் ஆகாச தீபன், அமுதையூட்டும் சத்து.

இந்திர கோபபூச்சி :- கறுப்பு, வெளுப்பு, சிகப்பு என மூன்றுவிதமாக உள்ள இதன் பெயர்கள்- சந்திர பீசம், தனுபீசம், இடிபீசம், இந்திரனாம் பீசம், ரம்பையின் சுரோணிதம், நாகபேதி, சஞ்சீவி.

செவ்வட்டை :- வயிரமாங்கதலி, வரிச்சுருள், கானகத்தட்டான், குண்டலி, பண்திண்ணி, சத்துக்கானோன்.

தவளை :- காபேகன், கச்ச தூஷன், ராச மண்டுகம், தண்ணீர், தேத்தூரான், மேகத்தின் வார்த்தையறிபவன், முத்திய கோஷ்ட மூர்க்கன், சொரியோன்.

கோழி :- குக்கிடம், வாரணம், ஞானி, சேவல், பாவை அறிவோன், சண்முகக் கொடியோன், சண்டைக்கு சூரன், அடிக்கடி சம்போகிப்போன்.

கரடி :- வெண்பல்லம், கவுனியம், தினபல்லம், வல்லூகம், செங்கண், பாதாள வேதியானோன், பாம்புண்ட சித்தன், மலைராசன், புத்தை உருஞ்சும் வேந்தன், நாகநாதாளி மன்னன்.

சங்கு :- தவளம், திடைநாதம் வளை, வலம்புரி, இடம்புரி, வாருதி நாதம், சின்னம், மணியம், பாணி, சலம்புரி, பட்சி, கம்பு, நீங்காத ஒசையோன், சலஞ்சலம்.

முத்துச்சிப்பி :- மேகவர்ணத்தான், துள்ளி விந்து, சந்திரன் சீப்பு, நின்ற சோதி, நிச்சோமம் மத்தின் யந்திரன், வானத்தின் கெற்பம், அலங்க நாறி.

முத்து :- சுக்கிரன், நித்திலம், சங்கின் பிள்ளை, ஆதித்தன் சோதி, தனமணி, ஆழிவித்து.

பவளம் :- துகிர், துப்பு, வித்துருமம், வாருதி தண்டு, செந்தண்டுக்கொடி, உளமாந்த கன்னி, சாற்றிய மாலை, பிரவாளம்.

கோமேதகம் :- கோமியவர்ணம், ராகு, மார்சால நேத்திரம், புலிக்கண், களிப்பாங்கல், காதின் ஆபரணக்கல், கதிர்விரிவான்.

புஷ்பராகம் :- சந்திரனாம் ஆதித்தன், கேதுவுக்கு சிலாங்கன், நயனத்தோன், கேதுவசூரன், சலசீவன், சுடர் விளக்குப் பணி, மாலின் கண்டன்.

வயிரம் :- வருணன் சிலையில் வளர்ந்தோன், கதிரோன், ஆதி நாராயணன், தருணாவிந்து, தளுக் குருவான், சூரியன், சீலை ராசன், தீபக்காந்தி.

பச்சை :- பசும்களை, பசளை, பழம்பச்சை, கலைச்சி, இருள் அறுக்கும் ஒளி ஆரம், மாலின் மேனி.

நீலம் :- சனி விந்து, மந்திரக் கண்மணி, அரி நிறக்கல், இந்திரம், தந்திரத்தின் மேகம், மேகச் சாய்கை, முத்தக்கதிர்.

சிகப்பு :- மாணிக்கம், சொர்க்கம், செவ்வாய் ஒளி ரத்தினம், பரங்கி ஒளிக்கனல், வெப்பமாமணி, வாணிச்சிமேனி, ஆதித்தச் சிவப்பி, அருவி வெயில் சிக்கில்.

வைடூரியம் :- காந்தி, பாணக்கல், உத்தக்கலை சாத்திக சூத்திரம், சாதகச் சீவன், சார்ந்தகல், வெயில் வைக்கும் மணியாரம்.

கெண்டகச் சீலை :- கருஞ்சீலை, மாங்கனி, வானமங்கம், கருஞ் சீலைக்கல், சாதகச்சீலை, மாருதி கெங்கை, முனிவர்கள் பூசித்த லிங்கம்.

சூடாலைக்கல் :- மனோகந்தகக்கல், தனு ரத்தினம், நீடாலைக் கோடு, கல்நார் சீலை, சீலை நாகம் சக்கரம், மணிச் சிகரப் பொறுப்பு.

மாக்கல் :- மாக்கல், மேதிச்சீலை, செந்தூரத் சீலை, பலகை எழுதும்கல், குப்பிமாக்கல், மூதண்ட முகடு, மோதிப் பொருப்பு.

தேக்கல் :- செம்பாறை, செம்பொடி, சிலாகை நீர்க்கல், வம்பூரை, ஊஞ்சல்கல், புறைக்கல், வம்புக்கல், சாதகக்கல், புரைபோக்கும் கல், தளிர் இருக்கைப் பொருப்பு பிரையாங்கல்.

மஞ்சக்கல் :- குஞ்குமவர்ணி, கொடுங்கோபச்சீலை, பசுமை மலை, பொடிச் சீலை, சொறிப் புள்ளிக் கல், வாரி எழும் ஒறுப்புக்கல்.

தவளைக்கல் :- மண்டுகச் சீவன், இரவில் தத்தும் கல், சொரிக்கல், மாசக்கல், சாமக்கல், பகட்டுக்கல், வெள்புக்குள் முத்தகல்.

சிலாவங்கம் :- கருவங்கத்தின் சீலை, வங்கத்தின் கல், சுக்கான் பர்வதம், வரைக்குடிலம், நச்சுக்கல், மேகச்சிலை, கரத்தச்சிப் பொருப்பு.

சிலாநாகம் :- நாகசிலைக்கல், பொரிக்கல், பாக சிலைக்கல், பஞ்ச நிறக்கல், வாத கருங்கல், சித்தக்கல், தாக்கல், மனச் சிகரப் பொருப்பு.

அன்னபேதி :- கல்நாதம், அன்னகாலன், கல்சரடு நாதம், களிம்பு, கல்வேகம், மலை வீரியம், கடுங் காரபேதி, மலைருது.

அஸ்தி பேதி :- ஆகத்தை உருக்கி நீராக்கி, எலும்புருக்கி, எலும்பை நீராக்கி, நாகத்தை சொர்ணமாக்கி, பாஷாணத்தை பவளமாக்கி, வச்சிரத்தை தோயமாக்கி, காயத்தை உருக்கி.

சொர்ணபேதி :- குவடுதனில் உதித்தோன், குவட்டுக்குள் முலைக்குமரி, நாதகிரி குமரி, தங்கத்தை சலமாக்கி, மஞ்சள் நிறத்தி.

மாங்கிஷபேதி :- மாங்கிஷத்தை நீராக்கி, மலைருதுச்சி, கலைவங் கடுங்காரி, கல்லை நீராக்கி, காந்தாரி, கடுஉப்பு, உவட்டில் கூர்மை, வெயில், உற்பத்தி.

உவர்மண் :- பூமிச் சொர்க்கம், மேதினி, சங்கினி, பூமாதா, வசுந்தரி, நாதம், காமி, தணல் பூமி, களர்மண், பூமியுடன் குரு.

கருமணல் :- சுருட்டு மணல், கரையாக்கு மணல், ஆற்றுக்கு நேர் மணல், குன்ற மருவி, காவேரி பரந்த மணல், அப்பிரக மணல், நீல மணல், ஒளி மணல்.

கற்கிட்டம் :- கிட்ட சிலைக்கல், மவரிக்கிட்டம் பாறை, வம்பு, வாரக்கல், மறிக்கிட்டம், மழை குமுளக்கல், கட்டுதிட்டம், செம்பு மண்.

செம்மணல் :- செம்பு மண், காவிமண், பழுத்த மண், களிம்புமண், ராக மண், பாகுமண், சித்திர மெழுது மண், காந்த மண், தாம்பூரமண், நளிர்மண், நாட்டு மண்.

சுத்தமண் :- புடமண், குடோரிமண், பூமிக்குள் வெளிப்பு மண், உரமண், பாலமண், குந்தை மண், மடை மண், கும்பி மண், சலவை மண், லோகத்தின் கசடறுக்கு மண்.

முடவாட்டுக்கல் :- மலைக்கல், குலைக்கல் குவட்டுக்கல், மேஷக்கல், சலா மூன்றுக்குமித்திரு. மலையின் தொங்குகல், கருமேகக் கெற்பகாலம். ஆட்டு முலைக்கல், திரிக்கல்.

கருவண்டு :- கம்பிச்ச வீணை, வரி வண்டு, செம்பி, கருப்பி, விடாச் சுரும்பு, குருவண்டு, கதண்டு, தும்பி கடலூழி, அறுகால் வண்டு, திரு வண்டு, களித்தேற் வண்டு.

பன்றிமுள் ( முள்ளம் பன்றி) :- ஏனத்தின் முள், மூவர்ணத்தி, கானகத்தில் சிந்துகின்ற முட்பாஷாணம், வராகுவேல், குன்றினில் கேழல், நன்னிமுள்.

எலிமுள் (முள்எலி) :- கானகத்தில் சேவகன் வளையில் குடியிருப்போன், பூனைக்கு சத்துரு, ஊன் ஒத்தமுள், சுண்டெலி, மோட்டு எலி, முள்எலி.

கடல்நுரை :- காஷ்டம், அக்கினியின் சாலம், லோக்த்தி' நேயம், அக்கினி, கெற்பம், அலைதனில் திரண்ட தீபம், வாருதியின் விந்து, பத்தவாக்கினி, சிந்துப் பிலவம், அதிகசுவாலம்.

மீன் எலும்பு :- முழுமுதற் கோட்டு, நிர்வானை யங்கம், மச்சத்தின் செல்லி, மீன் அங்கம், தலைவாள், கச்சத்தின் அங்கம், கமஞ்சூல வாலை.

முள்சங்கு :- சூரச்சங்கு, களச் சங்கு, கண்டகச் சங்கு, கதித்தசங்கு, கவரெமுசங்கு, உயர் வேலச்சங்கு உரோமச்சங்கு, ஏற்றைவாகை, கூப்பிடுஞ்சங்கு.

பேரோசனை :- வேதை கொடுக்கும் கல், மாசித்தர் புரட்டும்கல், மலையில் உற்பவித்த மாகுமாசம், சுகமலை சகக்குழல் ஊத்து, சிரிங்குகோகிரி, பருவதா ரோஜை.

நாகப்பச்சை :- நாதாந்தி, மாயியுடமேனி, பரிசக்கிண்று, பருஞ்செம்பின் பச்சை, இரும்புச் செம்பு, கானகக்கூபம், கடும்பச்சை, நதிதனில் உதிக்கும் பச்சை, மலை அருவியில் விடுபட்டது.

மரகதப்பச்சை :- பச்சை வண்ணம், மேகப் பச்சை, நடுப்பச்சை, நாயகி, மேனிக்கல், கடும் பச்சை, கானகத்தின் குவடு, கதிர்பச்சை, திகிரிக்குள் அடுக்கும் பச்சை.

புத்தான் பழம் :- புத்துக்குள் குகைச்சி, கருப்பி, முறைப்பாலி, கரடி, மித்திரி, திரண்டு உருண்ட கொடிச்சி, வெள்ளச்சி, விஷத்துள் தூசி, மரசேனை கூடி வாழி.

வெள்ளைச்சுக்கான் :- வெண்கல், நுணக்கல், வெளுத்தகல், வயல்கல், வங்கக்கல், நீரோட்டம் பாயும்கல், ரவிக்கல், சுயமாக விளையும்கல், செழித்த கல், பொருமும்கல், பூநீறுக்கல், பேய்க்கல்.

கதண்டு :- கரிமுகன்,, கானகத்தும்பி, வானப் பூக்கச்சி, மாந்தலைச்சி, கூடிலைச்சி, பொற்புதையல், குடியிருப்பு, சித்திரங்கட்சி, தேனகத்தின் குடிச்சி.

காச்சிலை :- கருமுகிலின் தண்டுக்கல், வானக்கல், மாருத வர்ணக்கல், திரணிக்கல், தாகசிக்கல், சனிபகவான்கல், தடலூர் சிலைக்கல், பயிபுத்திக்கல்.

காண்டாமிருகம் :- காண்டகம், கொந்தளம், ஒற்றைக் கொம்பன், கையானை, கருஞ்சாளி, மருந்தீடு, விஷங்கன் டோக்கி, பூயன், கண்டகநாக்கன், பெயர்க்கிரமன், பேறுடையோன்.

கஸ்தூரி எலும்பு :- சுடு அஸ்தி, புகழ் வாசச் செல்லி, வீணையாம் மிருகம், நலமான உதிரத்தோன், மாங்கிழவாசத்தோன், சாரிசாதகன், சுகந்தன், பூதகன், திலதன்.

மந்தாரச்சிலை :- மேகவர்ணக்கல், பலவர்ணம், பாகக்கல், கால்சிலை, பருதிக்கல், வாரவருணம், சிவன்புட்பம், மதிமேகக்கல், மாருதம், மேகம்.

கடல்பாசி :- கருவேலைக் கந்தரம், காரும்சீவல், வாருதியின் பாசி, மன்னல், கரைக்கல்லோலம், கலையின் பாசி, திரைசுருட்டும் பாசி, சிறுநீர்ப்பாசி, செலமலம்.

சாலக்கிராமம் :- மூவர்கல், தாசிமலைக்கல், வனமலை தங்கம், கெற்பத்தில் மால்வீடு, மலைச்சக்கரம், மால்வாசம் செய்யும் சாலக் கிராமம்.

மாங்கிஷச் சிலை :- சதை நிறம், சென்னிறம், சமை நிறம், வெண்ணிறம், ஊதாநிறம், மாநிறம், கார்நிறம், மண்நிறம், மதநிறம், சிலை நிறம், பரங்கிச்சிலை நிறம்.

மாந்துளிர்க்கல் :- ரவிநிறம், தேனிறம், தேன் துளிக்கல், தீப்நிறம், கெந்நிறம், கொக்கு மாநிறம். மாதளம்பூ நிறம், செலிநிறம், வம்பு நிறம், திகிரிக்குள் கலந்த சிலை.

காஷ்மீரப் படிகம் :- சிவதேகம், தேவிக்கு முத்திரை, தீங்கண் மாலைக் கடைக்கண், செஞ்சடையோன், வச்சிரவேடம், பூமிக்கு நாயகன், மதிக்காந்தி.

கல்காவி :- துரவிச்சிலை, செஞ்சிலை, செந்தூர மண் சிலை, செம்மண், காவி, ஆதிரவிச் சிலை, காந்தி மேனி, நாதாந்தி தரிக்கும் காவி.

செம்பு மணல் :- லோகமண். செவ்வாய் மண் தாம்பிரமாகும், கம்மிலேச்சமண், துலப்பம் செம்பொடி. செங்கோலம், முதுப்ர்யன். பிப்பரியா மண்.

நாக மணல் :- அஞ்சு வர்ணத்தான், மின்னல், களுக்கு, ஏமவிந்து, சீராளத்தான், தாசிபுத்திரன், அசக்கியன், தாரா சுத்தி நிருஷ்ணம், சோரம்.

வங்க மணல் :- வடினி இணையின் வகை, மாருதி நாதம், கெடுப்பிணை, அடிப்பிணை, குடிலம், சவளை, கோஷ வங்கம், திராம்புவலி, நாகவங்கம், மாயூஷம், லோகம், அருப்பியம், கலப்பிணை

வெள்ளீய மணல் :- மிருத்துஷம், பதுமை, வேதச்சத்துரு, கானகத்தின், சத்துரு, களங்கு கெடுக்கும் கன்னி, மாத்துருவாணம், நாடியவாதம், நாரங்கிதான், தெண்டவான்.

வெள்ளிமணல் :- வெண் மணல், வெண்வாரி, ரசிதம், சோழ மணல், பூரண மணல், மணி மணல், துய்யான் மணல், மீன் மணல், கருமணல், ரூரா மணல், கூர்மை மணல், ரூபாயின் மணல்.

ஏம மணல் :- மேருவனின் வாரி, தாம மணல், உடன் சாயம் நாவல் நாரம், தாண்டவகம், உளையுமதி, மாசற்ற வர்ணத்தான், காஞ்சள் தூள், பாஞ்சித்தூள்.

உலோக மணல் :- கருமணலின் வாரி, அயசான மணல், மகாநாதம், மாமலை இரும்பு, சாந்த கருமணல், கிருட்டிண வர்ணம், மலையின் வாரி.

மயிலிறகு :- மயூரமிகில், மன்னுயிர் ராட்சம், மேகத்தின் காளி, கதிர் வேலர் வாகனம், இமையாக் கழல், கருவின் மலர்க்கலாபம்.

கருஞ்சுக்கான் :- கரும்புள்ளிக்கல், செம்பிறை கற்பூவை, பாக்குகல், நரிக்கல், தேனக்கல், அடவிக்கல், செம்மைக்கல்.

குருந்தக்கல் :- சாணக்கல், கோளக வச்சிரம், தெருந்தக்கல், வைரநேரோத்தம், வாகைப்பூச்சிலை, அம்பலம், வாட்டக்கல், தீய்ச்சல்.

ரசிதமலை :- ஈசானமேடு, சபாலதி, வெள்ளைக் குன்று, மாமதிமலை, தன்சோலை, தன்மதி, கண் நுதலோன் வெற்பு

ஏமமாலை :- வெண்நாவல் சார், மாமாலை, பொன் உலம், சாம்புளக்கரு. சந்திரப் பொன்மலை. சதாசிவன் வாசம், புவிமையம்.

நாகமலை :- மந்தாரமணி, முடியின் சர்ப்பம், பூச்சாரம், பாரமுடியழகு, மணிச் சுட்டிகை.

வங்கம் :- மாருதிக்குடிலம், மாமாயிடயும் பீசம் சிங்கக்குவடு. மாசற்ற மலை, பங்கத்தின் குவடு, பானுவின் மூலம், பாசப் பருமலை, மாம்புசங்கம்.

காரீய மலை :- கடு மலை கானகந்தி, நாரி, பரிசனம், வளையாம் அறுபேதம், பாரிய மலை, நாரிய கனகம், தாம்புரகும்

அய மலை :- மூவரக, புகண்ட மலை, கருலோக மலை, கருவயது குண்டம், ஆயுதத்தை பிடிக்கும் மலை, வாந்தய லோக சீலை, சிவனார் மலை, மயன் மலை.

திராமலை :- சிறிய செம்மலை, மந்தான பீடம், நொறுங்கு மலை, வெட்டை லோகம், கலப்பு மலை, முறியான மலை.

வெங்கல மலை :- கொடுமலை, கோமாளிக்குறை, மாங்கஞ்சம், குறுங்கிண்ணித் கடுகை, கொடியாந்தாரக, மோஷக புட்பராகம்.

செம்பு மலை :- ரவிகுலக் குன்று, காஷாயம் நாதாந்தி, செம்பாமடலம், சூரியன், திரியம்பகம், மிலேச்சமுக இரத்தமலை, நாதாந்த வடு.

பித்தளை மலை : - குடவன் பர்வதம் காளிக்க மிர்தி, வரா கூடங் கொங்கு மலை, சரிகை மலை.

**உபரசங்கள் ( 167 முதல் 177 வரை)**

உபரசங்கள் :- உபாசங்கள் நூற்றி பன்னிரண்டையும் தாயிடம் கேட்டு, குருநாதர் சொல்லக் கேட்டு, சித்தர்களைத் தொழுது கேட்டு நிகண்டில் கருவாகச் சொல்லியுள்ளேன்.

அதன் பெயர்கள் வருமாறு :- துருசு, பொன்னிமிளை, கஞ்சம், சீனம், லோகம், ரசித நிமிளை, அப்பிரகம் (சிகப்பு, கருப்பு, பென், நிலம்) ஊசிக் காந்தம், அரக்காந்தம், உருளைக் காந்தம், கற்காந்தம், படிகம், சுக்கான்கல், வற்றக்கல், கெருடப்பச்சிக்கல், ஓடு, செங்கல், எலும்பு, மயிர், நண்டு, நாகர வண்டு, நத்தை, கிளிஞ்சில், ஆமை, முட்டை, ஆனைக் கொம்பு, பன்றிக் கொம்பு, மாட்டுக் கொம்பு, கலங்கொம்பு, பூநாகம் இந்திர கோபம், பல், செவ்வட்டை, தவளை, கரடி, கோழி, சங்கு, முத்துச் சிப்பி முத்து, பவளம், கோமேதகம், புட்ப ராகம், வைரம், பச்சை, வைடூரியம், சிவப்பு நீலம், கெண்டகச்சீலை, சூடாலைக்கல்), மஞ்சக்கல், மாக்கல், தேக்கல், தவளைக்கல், சிலாவங்கம், அன்னபேதி, அஸ்திபேதி, சொர்ணபேதி.

உவர்மண், மாங்கிஷபேதி, கருமணல், செம்மணல், சுத்த மண், முடவாட்டுக்கல் கருவண்டு, பன்றிமுள், எலி முள், கடல் நுரை, மீன் எலும்பு, முள் சங்கு, கோரோசனை, நாகப் பச்சை, மரகதப் பச்சை, பவளப் புத்து, வெள்ளைச் சுக்கான், கதண்டு, காக சிலை, கஸ்தூரி, காண்டாமிருகம், கல்பாசி, மந்தாரச் சீலை, மாங்கிசச் சீலை, சாலக்கிராமம், மாந்துளிர்க் கல், காஷ்மீர்படிகக்கல், கற்காவி, செம்புமணல், நாக மணல், வங்க மணல், வெள்ளி மணல், வெள்ளீய மணல், ஏம மணல், லோக மணல், மயிலிறகு, கருஞ்சுக்கான்கல், கானக்கல், முகுந்தக்கல், ரசிதச் சிலை, ஏம சிலை, நாக சிலை வெள்ளியச் சிலை, அயச்சிலை, திராசிலை, வெண்கல மலை, செம்பு மலை பித்தளை மலை.

இவைகள் எல்லாம் வாய்ப் பேச்சில் கிடைக்கக் கூடியவையல்ல (கேட்டவுடன் கிடைக்காது) மலைகளில் சுற்றிப்பார்த்து தேட வேண்டும். புலி கரடி, பாம்பு முதலிய விலங்குகள் உண்டு. மந்திரத்தால் அவைகளை வசியஞ் செய்ய வேண்டும். பசியை அடக்கிக்கொள்ள கற்பம் உண்ண வேண்டும். பிராணாயாமம் செய்யவேண்டும்.

நூல்களை ஆராய்ந்து கருவை மனதில் பதிந்து கொண்டு, பாதரச - மணி கட்டிக் கொள்ளவேண்டும். கைகளில் ஒன்றையும் வாயில் ஒன்றையும் அடக்கிக் கொண்டு தேவியை மனதில் எண்ணி மலைகளில் திரியலாம். நூற்றிரண்டு பத்து உபரசங்களையும் விரிவாகச் சொன்னேன். வெறும் பேச்சாக இல்லாமல் உபாசங்களை சாரணை ஏற்றி உபயோகித்தால் பல விதமாக வாதம் செய்யலாம்.

**மலைகளில் சஞ்சரிக்க மணி ( 178 முதல் 184 வரை)**

சித்தர்களைக் காணவும் சிவனருள் பெறவும் உபாசத்தில் ஒரு வித்தை சொல்கிறேன். அயப்பொடி ( இரும்பை ராவிய தூள்) பத்து பலம் எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறப் போடவும். மூன்று நாட்கள் ஊறிய பிறகு கழுவி உலர வைக்கவும்.

ஐந்து பலம் வெண்காரத்தை கல்வத்தில் போட்டு செவ்வல்லிச் சார் விட்டு மூன்று நாள் நன்றாக அரைக்கவும். செவ்வல்லிக் கிழங்குச்சாறு எடுத்து ( சமஅளவு) கலந்து கொண்டு மூன்று நாட்கள் ஊற வைத்து எடுத்து காயவைக்கவும். அதை மூசையிலிட்டு உருக்கினால் மணி மணியாய் இறங்கும்.

முன செய்தபடி வெண்காரத்தை செவ்வல்லிச் சாறும், கிழங்குச்சாறும்விட்டு அரைத்து முன்போலவே உருக்கி சாய்க்கவும். ( ஊற்றவும்) இப்படி ஐந்து தடவை உருக்கி உருக்கி சத்துக்கள் எடுத்துக் கொள்ளவும்.

எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்துக்கொண்டு அதன் எடைக்கு சம எடை துருசு கட்டியாக எடுத்துக் கொள்ளவும். அரைத்ததை துருசுக்கட்டியின் மேல் பூசவும். நன்றாகக் காய்ந்த பின்பு அதன் ( மொத்த) எடையில் முக்கால் பங்கு எடை கெந்தகத்தை எடுத்துக்கொள்ளவும். பாதி அளவு சூடன். கால் பங்கு எடை வீரம் எடுத்துக்கொள்ளவும். இவைகளை உமிழ் நீர் விட்டு நன்றாக அரைக்கவும்.

இதை துருசுக்கட்டியின் மேல் கவசமாகக் கட்டி வெயிலில் காயவைக்கவும். கிளிஞ்சல் சுண்ணாம்பு எடுத்து விரல் கன அளவு உள்ளே வைத்து நடுவில் கட்டியை வைத்து சீலைமண் செய்யவும். காய்ந்த பிறகு காட்டு எருமை எருவில் ( வறட்டியில்) புடத்தைப் போட்டு எடுக்கவும்.

சுண்ணாம்பு பொடியை நீக்கி விட்டு மூடிச் சீலை செய்து போட்டு எடுத்தால் சூரியன் போல பிரகாசமாக இருக்கும். இருபதில் ஒரு பங்கு...... சேர்த்து உருக்கிக் கலந்தால் செம்பு மணி போல ஆகும்.

## நூல் தொடர்ச்சி

### மலைகளிலே சஞ்சரிக்க மணி - சுளுவு அய வேதை

பாரப்பா உபரசங்கள் நூற்றிரண்டு பத்து
பாங்காக ஒவ்வொன்றாய் விரித்துச்சொன்னேன்
வாரப்பா உபரசங்கள் வாதியெங்கே காண்பான்
வாய்ப் பேச்சால் சொன்னாக்கால் ஒன்றுமில்லை
ஓரப்பா உபரசங்கள் சாரணைக்கு ஆதி
உத்தமனே ஒவ்வொன்றின் பேரைக் கேளு
சேரப்பா சூத்திரத்தில் சாரணையைச் செய்து
சேர்ந்தோட வேணுமென்றால் உபரசத்தைத் தேடே. 178

தேடவே சிவன் இதுக்கிட மேயாகச்
சித்தருட மரபெல்லாம் கண்டு பேச
வாடவே அது உலகு முன்னே பாரு
மகத்தான உபரசத்தில் சுருகுவேதை
நாடவே அயப்பொடி தான் பலமும் பத்து
நலமான எலுமிச்சம் பழச்சாறு விட்டு
நீடவே மூன்று நாள் ஊறப் போட்டு
நொப்பாகக் கழுவி அதை உலரப் போடு 179

உலர்ந்தபின் வெண்காரம் பலந்தான் அஞ்சு
உத்தமனே கல்வத்திலிட்டு நீயும்
மலர்ந்து நின்று செவ்வல்லிப் பூச்சார் விட்டு
மாளவே மூன்றுநாள் நேர் அரைத்துக்
கலந்து நின்ற கிழங்குச் சாறு அதனில் விட்டுக் குழப்பி
கலறவிட்டு அரப்பொடியை ஒக்கத்தானும்
உலர்ந்து நின்ற மூனுநாள் பாங்கமே பண்ணி
மூசைக்கே யெடுத்திட்டு உருக்கிடாயே. 180

உருக்கிடவே மணி மணியாய் இறங்கும் பாரு
உத்தமனே முன்னுரைத்த காரங் கூட்டி
நிருக்கிடவே பூச்சாறு கிழங்குச்சார் கூட்டி
நெர வரைத்து முன்போல உருத்தித் தீரு
நருக்கிடவே அஞ்சு தரம் அப்படியே உருக்கி
நலமான சத்தெல்லாம் பொறுக்கிக் கொண்டு
அருக்கிடவே பூச்சாற்றில் மைப் போலாட்டி
அவ்விடைக்குத் துருசு ஒரு கட்டி வாங்கே. 181

துருசியின் மேல் சத்தர்ன அயத்தைத் தானும்
சுகமாக லேபித்துக் காய்ந்த பின்பு
துருசி நிறை அயத்து நிறை ரெண்டுக்கும் முக்கால்
தெளிவான கெந்தகத்தை நிறுத்திக் கொண்டு
துருசி நிறை அயத்து நிறை ரெண்டுக்கும் பாதி
சூடனைத் தான் நிறுத்துமே கூடப் போட்டு
துருசு நின்ற அயத்து நிறை இரண்டுக்குங்கால் தான்
சுயம்பான வீரத்தைக் கூடப்போடே. 182

போட்டெல்லாம் வாய்நீரை விட்டு ஆட்டி
பொலிவாகத் துருசுவின் மேல் கவசங்கட்டி
வாட்டெல்லாம் ரவிதனிலே உலரப் போட்டு
வளமான கிளிஞ்சியென்ற சுண்ணந்தானும்
நீட்டெல்லாம் விரற் பெருமண் கவசங்கட்டி
நேரான சீலை மண்தான் விலக்கச் செய்து
நாட்டெல்லாங் கான எருவில் புடத்தைப் போட்டுக்
கசகாமல் எடுத்து மேற்கவசம் வாங்கே. 183

வாங்கியயே சுண்ணாம்பை எடுத்துப் போட்டு
வகையாக மருந்தெல்லாம் குகையிலிட்டு
தேங்கியேச் சில்விட்டுச் சீலை செய்து
சிறப்பாக ஊதிடவே ரவியுமாகும்
ஓங்கியே இச்செம்பை மதியில்தானும்
உத்தமனே இருபதுக்கு ஒன்றை ஈய
வாங்கியே பார்த்தக்கால்.கோடி. காணும்
மகத்தோர்க்குத் தொண்டு பண்ணு முதற் சொல்வாரே. 184

### பெரியோரைக் காணல்

சொன்ன தொரு செம்புதனை செலவு செய்து கொண்டு
சுயம்பான மலைகளிலே உயரத்தேகு
கன்னதொரு காட்டினுள்ளே வேடர்களைக் கேளு
காட்டினுள்ளே கோபாலர் தன்னைக் கேளு
சின்ன தொரு மலைதனிலே சித்தர்களை வணங்கு
செப்புவார் உபரசங்களிருக்குத் தானம்
பன்னதொரு பாஷாண வகையுஞ் சொல்வார்
பரிவாகத் தொண்டு பண்ணி வணங்கிக் கேளே. 185

வணங்கியே நிற்கையிலே யாரென்று கேட்டால்
மகத்தான பெரியோர்க்கு தொண்டனென்று சொல்லு
இணங்கியே ஏன் வந்தாய் என்று கேட்டால்
எனை ஆண்ட மூர்த்தியே அடியேன் தானும்
பிணங்கியே வீடு விட்டுக் காடு வந்தேன்
பேரான பசியாலே இளைத்து ஏங்கி
துணங்கியே வழிதப்பி யிங்கே வந்தேன்
நோக்கமெல்லாம் பார்த்தறிந்து தொழுது நில்லே. 186

நிற்கையிலே கடுவிசேடஞ் சொன்னாராகில்
நேராகப் பிறம்பாக அப்பாற் செல்லு
தற்கையிலே நல்விசேடஞ் சொன்னாராகில்
தாட்சியில்லை வேலைசெய்து தயவு வரப்பண்ணு
மற்கயிலே மனதிறங்கப் பண்ணிக் கொண்டு
வாய்ப்பேச்சு சொல்லு முன்னே வேலை செய்து
விற்கையிலே அடிமை போல் காத்திருந்து
வேணுமென்ற பணிவிடைக்கு முன்னால் நில்லே. 187

முன்னாக நிற்கையிலே மனமகிழ்ந்து
மோசமில்லை என்றுசொல்லி மனதில் எண்ணி
பின்னாக வாதத்தை செய்யச் சொல்வார்
பேரான சரக்குகள் தான் இருக்கும்தானம்
கண்ணாகச் சொன்னறாக் கால்எடுத்து வந்து
கைக்கொடுத்தும் முன் வைத்த காரியங்கள் செய்வாய்
நண்ணாகக் கருவெல்லாம் அறிந்து கொண்டு
நலமான குளிகைகள் தான் செய்வார் பாரே. 188

### காயசித்தி- ஏமசித்தி- குளிகை சித்தி- பரிபாடை பேர் தெளிய

பாரப்பா சாரணைதான் செய்யு மார்க்கம்
பரிவாகக் கருவெல்லாம் மனதில் உண்ணி
நேரப்பா கருவ றிந்து கொண்டாயானால்
நினைவழிந்து மதத்தினால் கெற்சிக்காதே
சேரப்பா முன்போலத் தொண்டு பண்ணு
செய்தொழிலை மறவாதே சித்தி பண்ணு
காரப்பா நற்சிடனென்று சொல்லி
கடாட்சம் வரப்பண்ணியே காத்திடாயே. 189

காத்திட்டால் காயசித்தி ஏம சித்தியாகும்
கைமுறை தானறிந்தாக்கால் குளிகை சித்திக்குங்
காந்திட்டால் உபரசங்கள் நூற்றிரண்டு பத்தும்
காரசாரங்கள் முதலிருபத் தைந்தும்
காத்திட்டால் மலைகளிலே யிருக்குமிடமந்த
கடிசான பாசாணம் முதலாஞ் சூதம்
காத்திட்டால் கைக்குள்ளாய் சிக்குமப்பா
கடிசென்று விட்டாக்கால் எல்லாம் போச்சே. 190

போச்சப்பா முப்பத்திரெண்டு தாது
பேரான மலைகளிலே பிறக்கும் பாரு
பாச்சப்பா பரிபாடை நாமமாகப்
பாடினார் வரவுள்ளே சித்தரப்பா
தோச்சப்பா பாஷாணப் பிறப்பிதென்று சொல்லார்
சுருக்காகப் பாடியதால் பலந்தானேது
மாச்சப்பா பாஷாணப்பிறப்பை எல்லாம்
வரிசையா யினத்தோடே சொல்வேன் பாரே. 191

**பச்சை பாசாணத்தில் வேதையுண்டு**

பாரப்பா பாசாணப்பச்சை தன்னில்
பதுக்கினார் பறக்கிற பண்புமுண்டு
நேரப்பா நிகண்டுக்குள் திறந்து சொல்வேன்
நினைவெல்லாம் மனதிலே எண்ணிப் பாரு
சேரப்பா இனமுறைகள் பொய்யென்று எண்ணிற்
சிவமென்றும் பரமென்றும் சேரப் பொய்யாம்
காரப்பா அட்டகர்ம வித்தைக்குள்ளே
கைகண்ட வித்தை என்ன வாதந்தானே. 192

தானென்ற பாசாணத் தொகுப்பு கேளு
சாங்கமாய் முப்பத்திரண்டு தாதுங்
கானென்ற கற்கடகமுங் கோளகமும் சூதம்
காட்சியாம் அரிதாரம் கெந்தகமும் வீரம்
வானென்ற வைக்கிறந் தம்செப்பு முறதம்
வகையான சிரபந்தம் தொட்டி குதிரைப்பல்
ஓனென்ற சங்கமொடு கவுரி பாஷாணம்
உத்தமனே துத்தமென்ற பாஷாணமாமே. 193

ஆமென்ற பலன்றேகங் காந்தம் வங்கம்
மறமென்ற சாக்காண்டந் தாளமும் சிலையும்
காமென்ற அவுபலஞ் சாலாங்கமாகுங்
கற்பரியும் பல்லான பாஷாணத்தோடு
ஓமென்ற அஞ்சனமாம் பாஷாணத்தோடு
உத்தமனே செகச்சாலஞ் சீதங்கமாகும்
தேமென்ற சிலாமதமும் காரகியினோடு
சிறப்பான அப்பிரகம் வெள்ளையாமே 194

ஆமப்பா பாசாண முப்பத்திரெண்டு
அப்படியே மலைதோறும் பிறக்கும்பாரு
ஓமப்பா மலைப்பேரைச் சொல்லக் கேளு
உத்தமனே ருத்திரமென்ற கூடத்தோடு
காமப்பா கலியாணக் கெந்தமாகுங்
காரணமாமே மகூடாரமாம் கூடம்
போமப்பா களிகண்டம் பூதக்கூடம்
பேரான லட்சுமியின் விலாசந்தானே. 195

தானென்ற பத்திராலயங் கேதுமந்தம்
தயங்கியதோர் கொங்கணமும் வடக்கேயப்பா
வானென்ற காசிக்குத் தெற்கே கேளு
விந்தா ரணியமுஞ் சிந்து மேரு
கானென்ற கனசாலக் கிராமத்தோடு
கடியதோர் கிரவுஞ்சியென்ற மலையுங்கேளு
மானென்ற மல்லிகார்ச் சுனத்திலப்பா
மகத்தான சித்தருண்டு கோடிதானே. 196

தானான கொல்லிமலை கன்னிமலை யோடு
சதுமுகமாம் பர்வதமும் ஒடுக்கக்கேளு
வானான பொதிகையிலே அகத்தியற்கு வாசம்
மகத்தான சிவரூபரிஷி தானப்பா
கோனான வாகையிலே வேடங்காலி
கெண்டாக்காற் கவ்வனத் தெதிரிலாகும்
தேனான மேருவுனக்கு வடக்கே கேளு
தெட்சிணாமுர்த்தி கையிலை வேடந்தானே. 197

கைவேடங் காவி கொண்டால் உதிக்கும்- செல்லும்
கலந்து நின்ற சித்தண்டம் பேரண்டம் மட்டும்
கைவேடங் காவிகொண்டால் வாவா என்பார்
கருதியதோர் புவனத்தில் சித்தரெல்லாம்
கைவேடங்காவி கண்டார் வரிசைக்கேளு
கடுகியே சிற்சில வைப்பார் சின்மயத்தின் காவி
கைவேடங்காவி கண்டால் ரிஷியுடைய காவி
கருதியதோர் இடையினுக்குள் சுத்துவாரே. 198

வாரப்பா அறுபத்துநாலு மரபுள்ளே
மகத்தான சீடவர்க்கம் நவகோடியாச்சு
சீரப்பா சீடர்வர்க்கச் சீடர்கள் செல்ல
சித்தண்டம் பேரண்டம் பரவிச்சப்பா
தாரப்பா தமருக்குள் அடங்கினோர் கோடி
சமாதியிலே இருந்துரைத்த சித்தர்கோடி
பூரப்பா பூரணத்திலிருப்போர் கோடி
பேரான நாதாக்களாடும் ஆட்டே. 199

நாதாக்கள் பொதிகை விட்டு அப்பாற் கேளு
    நலமான தாடகையாம்மலை தான்ஒன்று
மாதான மையேந்திர சலந்தான் ஒன்று
    மலைதனக்கு இடைதனிலே குட்டிமலை கோடி
மூதானமலை தோறும் பாஷாணம் உண்டு
    மூலிகையோ வெகுகோடி உதகம் உண்டு
சூதான காருலவும் சூதம் உண்டு
    சூட்சமெல்லாங் குளிகையிட்டுப் பார்த்திடாயே. 200

**வநாமப்பட்டணத்தில், நவலோகங்களுற்பத்தி இமோரப் பர்வதம்**

பார்த்திட்ட மயேந்திர சாலத்துக்குமப்பால்
    பரிவான பொதிகைக்கு வாயுமுலை
ஆர்த்திட்ட லட்சம் யோசனைக்கப்பால்
    அழகான தேவனாம்பட்டணந்தான் ஒன்று
நீற்றிட்ட நீளாது அகலங்கேளு
    நேரான ஆயிரந்தான் காதமாகும்
நாத்திட்டப் பட்டணத்தே நவலோகங்கள்
    நலங்கியோ மலைமலையாய் நிற்குங்காணே. 201

காணப்பா அம்மலையின் கீழேதானும்
    கடிசான பாஷாண முப்பத்திரண்டு
ஊணப்பா மலைசுத்திக் கவித்தாப்போலே
    உத்தமனே பிறந்திருக்குந் தாதுதானும்
தோணப்பா பட்டணத்துக் கப்பால் தானும்
    தூரமாய் ஐந்நூறு காதஞ்சென்றால்
வானப்பா சிமோர பர்வதந்தா னொன்று
    அதிகமென்ன வாயிரத்தின் காதமாமே. 202

ஆமென்ற மலையினுட நீளங்கேளு
    அலைந்துருண்டு கிழ்கடலின் முக்காதம் புக்கும்
வேமென்ற மேற்கடலின் முக்காதம் புக்கும்
    விடுபவட்டந்தியிலே கோடாகோடி
காமென்ற மலையடிக் கிழக்கின்றோரடி
    கலந்துநின்ற கிணர் கலங்காணக் கேளு
காமென்ற நாற்காதம் நாலுதிக்குங் கிணறு
    நலமான வாதமென்ன சேடனுடமுடியே. 203

முடியளவும் சூதமது தொட்டு நிற்கும்
    மூவுலகுந் தீயெரித்த ஈசனுட விந்து
நெடியளவுந் தொட்டவுடன் துரத்திக் கொல்லும்
    நேராச குளிகை யிட்டுக் கெவுனமாகிக்
கெடியளவு தேங்காயின் குடுக்கைக்குள்ளே
    கெவுனிகள் தானெடுப்பார்கள் துரத்தும் போது
துடியளவும் ரவிதனிலே சொக்கிப் போவார்
    சூட்சமிதை அறியாட்டால் துரத்தும் பாரே 204

துரத்தியே உள்ளுக்குள் சுழற்றிக் கொல்லும்
திறமையாய்க் கொண்டு வந்தால் சரூபசித்தி
மரத்தியே பாஷண வர்க்கமெல்லாம்
மறவாம லெடுத்துமே மானதோர் விரகமிட்டு
விரத்தியே வெவ்வேறாய் எடுத்துக்கட்டு
விரவினால் ஒன்றோடே ஒன்று சேர்த்து
இரத்தியே இளகியெல்லாங் கெட்டுப் போகும்
ஏத்தமாம் அவற்றுடைய பேரைக் கேளே. 205

**கற்கடக பாசாணம்- கோளகப் பாசாணம்**

கற்கடக பாசாணப் பேரைக் கேளு
கந்தமாங் கவிந்தமாங் கல்லடி மூலம்
விற்கடமாம் விந்தமாங் கஞ்சமாகும்
மெலிமையானது அது தாதுவாமேம்பேதி
பற்கடகமாம் பரணியாம் பார்மூலக்காணி
பந்தாரிம் லோகத்திற் பரிசபேதி
நிற்கடமாம் கற்கடகப் பாசாணந்தானும்
நிச்சயமாம் வெற்பிளிலும் உற்பத்திதானே. 206

கோளகப் பாசாணப் பேர்தனையே கூறக்கேளு
கொங்குமாய் கூலிகளமாங் குவந்தமாகும்
காளகமாங் கவந்தமாங் கங்காரங்
கடியதொரு ஊடகமாங் கோரந்தானாம்
ஆளகமா மணக்கமாம் அகிலவேதை
ஆணிப் பாஷாணந்தான் அங்கமாகும்
நாளகமா மங்கமா நளினமாகும்
நாட்டினோம் கோளகப் பாசாணப் பேரே. 207

**சூத பாஷாணம் அரிதாரம், கெந்தகம்**

சூதமென்ற பாஷாணஞ் சொல்லக் கேளு
சுந்தரமாம் சொற்குறியாம் தூமமாகும்
மாதமென்ற வாதி விராட்டியனாங் கேந்த
மந்தரமாம் கரமாம் ரத்தி கன்தானாம்
வாதமென்ற மாறு தப்பி மன்றாகும்
மந்திர களஞ்சியமாம் வங்கவேதி
வீரமென்ற விந்தமாம் வெறிப்பாய் நின்றோன்
விளங்கினேரஞ் சூத பாஷாணப் பேரே. 208

ஆதியா மால்பாகம் மருவும் லட்சுமி
அரிதான கோணத்தி பீத கந்தா
பிஞ்சா மாசிற கெந்தமுமாகும்
பெரிதான நடமண்டனம் பிடர் லகமு மாகுஞ்
செல்லக்களனி சிறிய மூக் குச்சியாகும்
பெரிதான யறவக் கோடிச்சி யாதித்தன் சத்தி
வரிதான ஆல்கொடிச்சி யரிதன்சத்தி
வளமான கெவுரீமா ரிதாரப் பேரே. 209

கெந்தகத்தின் பேர்தனையே கூறக் கேளு
செந்தகோ கெந்தமா தனமுமாகும்
கந்தி பொன் வறணியாங் காரிழை காதங்
கவி குருத்தஞ் சவுகந்தி ராக சுரோணிதங்
களி சத்தி தன் மாதக்குண சலாகுந்
தமளியமாம் நாறும் பூ பட்சமாகும்
செந்தியாஞ் செந்தூரத் தாதியாகுஞ்
செப்பியதோர் பேரெல்லாங் கெந்தகமுமாமே. 210

## வீரம்

வீரத்தின் பேர்தனையே விளம்பக்கேளு
விளங்கியதோர் திறவு திறனுமாகும்
மாரமாமதி வெள்ளை செந்தூரமாகும்
மாகான வாதிகளுக் கெற்பமாகும்
வாரமாம் வகாரத்தின் தலைவனாகும்
மன்னியதோர் பூவிந்து வுத்தம் சேவகனாம்
தூரமா மலைகளிலே உற்பவித்த
சுயம்பான வீரத்தின் பேருமாமே. 211

## வைகிராந்தம் தாலம்பம்

வைகிராந்தப் பாஷாணப் பேரு கேளு
வைகமாங் குமுதமா முகிற் கும்பமாகும்
கைகமாம் வெகு கொடுமை கானிற்குன்று
கருநாகந் தன்னுக்குள் வேதியாகி
மைகன்ற பூமியா மலைதன் நாதம்
மாரு தத்தி லுற்பவித்த வையாகும்
நைகமாங் குவடதனி லுற்பவித்த
நலமான வைகிராந்தப் பொருளுமாமே. 212

தாலம்பப் பேர்தனையே சாற்றக்கேளு
தாலமாங் குந்தமாஞ் சாத கலம்ப
மூலமாங் கடுங்கும்ப மும்மதக்கோடு
முயற்சியாங் கோலமாம் பனங்காய்ப் பாசாணம்
நாலமாம் தற்சீரகங் கொடும் கொம்புதந்தான்
நலமான குன்றத்தின் நயந்த சித்தி
யாலமாந் தாலம்பமா சித்தி யமர்ந்ததெல்லாந்
தாலமப் பாஷாணம் பேருமாமே. 213

## மூத்தப் பாசாணம்- சீர்பந்தம்

மூத்த பாசாணம் பேர் மொழியக் கேளு
மூர்த்தியாம் புங்க வனங்கவனுமாகு
மோதனா மாதியா மனந்தனாகு
மங்கண்ணார் மழுக்குள் மாந்தோனாகும்

காதனாங் காலாங்கன கத்தியாகுங்
காரணன் பூரணன் பேதிகண்ணன் வேந்தன்
பாதனா முத்தென்ற பாஷாணத்தைப்
பாடியதோர் பாடலெல்லாம் மூத்தனாமே. 214

சீர்பந்தப் பாஷாணம் செப்பக் கேளு
தில்லையில் நடம்புரிவான் திரிய மகனாகும்
கார்பந்தன் கந்தன் கபால மேகச்
சாய்கையெனக் கங்கனாகும்
மார்பந்தனம் பதன் சம்புதானாம்
மந்தனாஞ்சீர் சேர்ந்தானாம் பந்தனாகும்
பார்பந்தன் பரமன் பாயுறு கோபத்தோன்
பாரமாஞ் சீர்பந்தப் பாஷாணப் பேரே. 215

## தொட்டிப் பாசாணம்

தொட்டிப் பாசாணப் பேர் சொல்லக் கேளு
தோத்திரமாம் பலகையாந் துலங்கு பூவோடு
திட்டியென்ற சலாகை மந்தார வேரு
சிறப்பான லோகங்கள் வேதியாக்கி
குட்டி யென்ற தோத்திரமாங் குறிஞ்சிலாகும்
வெட்டிலே யுற்பவித்த கூர்மையாகும்
தொட்டியென்ற கும்பகமு மின்பகமுமாகும்
சிறப்பான பேரெல்லாந் தொட்டிப்பாரே. 216

## குதிரைப்பல் பாசாணம்

குதிரைப்பல் பாசாணங் கூர்ந்து கேளு
குரகதமாம் வாசி துரகமாகும்
விதியுற வுந்தக்க வுணி விளங்கிய குதிரைப் பல்லு
மிகுந்த சுவரசா முறு வாசியானோம்
பதிரையந்த நாதமாங் கத்து ரூபமாகும்
பல்லு செங்களையாகும் வரிசையாகும்
மதிரையந்தக் குதிரைப்பல் பாசாணமாகும்
மலைதனிலே யுற்பவித்த தாதுதானே. 217

## சங்க பாஷாணம்

சங்கமாம் பாஷர்ணப் பேரைக் கேளு
சஞ்சலமாம் தவளமாம் சாங்கமாகும்
கொங்கமாம் குவடுதான் கோஷமாகும்
கூறியதோர் வெண்ணி மாஞ்சவளமாகும்
பொங்கமாம் புவனமாம் புனிதறாகும்
பொங்கியதோர் வளமாங் கட்சமாகும்
நங்கமாஞ் சங்க பாசனத்துக்கு
நாட்டியதோர் பேரெல்லாம் நன்றாய்ப்பாரே. 218

### கெவுரி பாசாணம்

கெவுரி பாசாணப் பேரைக் கேளு
    கேகயமாம் பூகமாங் கெந்தமாகும்
அவரியுட பந்தமா மாகியமாகும்
    ஆதியாங் குமரிதான் அழகா மாஞ்சில்
பவுரியிட பாகமா மிந்து வாடும்
    பரிவான குறுக்கந்தான் பாகியமாகும்
புவரியா மேழிற்குமரி நீலியாகு
    முத்தமாங் கெவுரியுட பாஷாணப் பேரே. 219

### துத்தப் பாஷாணம்

துத்தப் பாசாணம் பேர் சொல்லக் கேளு
    தாம்புசுமாம் சுந்தரமாந் தாதுவாகும்
மத்தமாங் கோபமாம் வாம்புரமாகும்
    வறளகலா நுகந்தான் மகத்தாம் வேதை
தத்தமாஞ் சயிலாதி தனிலுதித்த
    தாம்புரக் கெற்பந்தான் ரசிதமாகும்
வத்தமாம் லோகத்திற் சார்ந்த தாது
    மருவிய தோர்துத்த பாஷாணப் பேரே. 220

### பலண்டுருகல் பாஷாணம்

பலண்டுருகல் பாஷாணப் பேரைக் கேளு
    பரிவாகும் பங்கமாம் பாகம் போகம்
வலண்டுருக மதுரமாம் வாகந்தாக மாந்தமாம்
    வேகவின்பம் வாணிக்குரு குலமாம்
வெலண்டுறுகம் வேதைக்குக் குருவுமானோன்
    வெற்புதனி லுற்பவித்த வெண்சாயற்றான்
நலண்டுறுக மலோகத்தை நயத்து வேகன்
    நாட்டிய பேரெல்லாந்தான் பலண்டுறுகமாமே. 221

### காந்த பாஷாணம்

காந்தப் பாஷாணப் பேர் கருதக் கேளு
    கருநிறமாம் வாயுவாம் காலனாகும்
சாந்தமாஞ் சனியனாம் தருநிற் பஞ்சாஞ்
    சாதகமாம் சடச்சியாஞ் சிற்சிவந்தான்
நுருந்தமா மோங்கியதோர் வன்னிதானா
    மோங்கல் தனிலுற்பவித்த உத்தமன்தான்
நைந்தமா நயசுக்குள் குருவாய் நின்றோன்
    நாடியதோர் பேரெல்லாங் காந்தமாகும். 222

### இலிங்க பாசாணம்

இலிங்க பாசாணம் பேரியற்றக் கேளு
    பேற்று..ஈஞ் சலாட்ட கனமான வன்னி கெற்பந்
தலிங்கம் பஞ்சரவான் சிந்தையான் ( சிந்தான்)
    தான்றன் நன்னியதோர் மாசமாரிலே - சாதுங்

கலிங்கமாங் காரணமா மிலங்கமாகும்
காராஞ் சானியம் மலபவுளுசமாகு
மலிங்க மாமணி நாகர மென்று சொல்லு
மருவிய தோர் பேரெல்லா மலிங்கம் பாரே. 223

### சரகண்டப் பாசாணம்

சரகண்டப் பாசாணப் பேரைக் கேளு
சாம்பரமாமம் புறாத்தோணியாகும்
குரசண்டங் சூர்கழி பல்லம் பாணங்
கோபக்கங் கரண்பம் அம்புக்கணையாகும்
நரக்கண்ட மதிக்குந்தனு பாணமாகும்
நலமான காண்டீபங் கருமந்திரமாகும்
திரக்கண்ட சித்திரபுங்கஞ் சில்முகமாகும்
செப்பியதோர் நாமமெல்லாம் சரகண்டமாமே 224

### தாளகம்

தாளகத்தின் பேர்தனையே சாற்றக்கேளு
தாமரையாள் செந்திருவுக்குரியவரின் தேவி
மாளகமாம் மால்பாக மகத்தாள் லெட்சுமி
மாமலராளிந்திரை மஞ்சள் வர்ணி
கோளகமாங் குரங்குட்டியாள் குணசாலியாளாகுங்
குணமான பாற்கடலி னாழிதர்னாம்
பாள்கமா மாவலுடன் தாளகமு மாகு
மதிகமா மவனிதனி லுற்பவித்ததாமே. 225

### மனோ சிலை

மனோசிலையின் பேர் தனையே வகுக்கக் கேளு
மனோகுவிதாக்கி குவிசையவு பாலி
நனோ சீலை நான் முகன் தேவியாகும்
நாமகன் பர்ரதி வாணி கலைமகளுமாகும்
தனோ சிலை கரசோதி தாமுகவாக்கி
தாமரை வாசனையாள் தயங்கும் வாணி
கனோசிலை பூமகன்றன் தேவியாகுங்
கண்டுரைத்த நாமமெல்லாம் மனோசிலைக்காமே. 226

### அவுபலப் பாசாணம்

அவுபலப் பாஷாணப் பேர்தனையே யறியக்கேளு
அவலமனோ வலமா மங்கமுமாகும்
உவபலமா முருண்டுகமா முத்தம சத்தாகும்
முரோணத்திலுற் பவித்த மமுதமாகும்
சவலமாம் குவல்மாஞ் சராசரப்பாஷாணஞ்
சாதகமரம் சுத்தமாஞ் சாபமாகும்
சுபலமாம் வல்லமாம் சிவல்மாமே
சொன்னதெல்லாம் அவுபலப் பாஷாணமாமே. 227

### சாலாங்கப் பாசாணம்

சாலாங்கப் பாஷாணஞ் சாற்றக்கேளு
தாரத்தில் வேதையாகுந் தாம்பரஞ் சத்துருவாங்
காலாங்கம் பஞ்சாதகக் கும்பமாகுங்
கம்பமாஞ் சம்பமாம் நதகவம்பம்
மாலாங்கம் வழங்கிய பூசாரமுமாகும்
மகத்தான வாரொனாற் பத்தியாகும்
நாலாங்க மரம் போம் நலங்கமாகும்
நாமமெல்லாஞ் சாலாங்க பாஷாணமாமே. 228

### கற்பரி பாசாணம்

கற்பரி பாஷாணம் பேர் கருதக் கேளு
கதம்பமாங் கருமமாங் கானகத்தின் தூமம்
கிற்பரிநி தம்பமாந் தம்பமாகும்
நெடுங்குலி சராசந்தம் நிதம்பமாகும்
சிற்பரியாம் செம்புக்குள் வேதையாகி
செயலாநற் சித்சத்ரு திகிரியிலுற்பத்தி
யற்பரி யதபமாங் கதம்பவாசி
யாட்டெல்லாம் கற்பரி பாஷாணமாமே. 229

கற்பரி பாஷாணத்தின் பேர் கருதக்கேளு
கருத்தறியக் காரியக்கட்டி சுண்டாகி
குற்பமாங் கோசமாங் குமுதமாகுங்
கூவிளமாம்- பூவிளமாங் கரசமாகும்
அற்பமா மாசமாமந்தரம் சிந்து
அழகியதோர் குந்தமாஞ் சலவுற்பத்தி
சுற்பமாஞ் சூட்சமாம் பாறையாகுஞ்
சொன்னதொரு நாமமெல்லாங் கற்பரி பாஷாணமாமே. 230

### அஞ்சனப் பாசாணம்

அஞ்சனப் பாஷாணப் பேரைக் கருதக் கேளு
யாறமாஞ் சீலைக்காறி அயத்துக் கெந்தகனாம்
திஞ்சன மாந்தூரமாந் தூளியாகும்
சொற்சிலையின் வங்கந்தான் சொற்பேதி
குஞ்சனமாங் கூறமாங் கொல்லன் பாகைசாரி
கொடியதொரு உருக்கினமாம் பாரமாகுஞ்சம்
வஞ்சனமா மயின்மாம் நீலமாகும்
வகுத்துரைத்த அஞ்சனப் பாஷாணமாமே. 231

### கச்சாலப் பாசாணம்

கச்சால்ப் பாஷாணங் கருதிக் கேளு
காயாம்பூ வர்ணந்தான் கரிய மால்த்தான்
அச்சமாமனந்தன் தான் அதி வார்தன்
ஆதிநாராயணன் தான் ஆலிலையில் துயின்றோன்

மச்சமா.. பந்தாமரையுகு கோலத்தோன்
மாருதியினுற்ப வித்தச் சமச்சந்தான்
நிச்சமா நெடியமால் கூர்மமாகும்
நேரான பேரெல்லாங் கச்சாலமாமே. 232

## சீதாங்கப் பாசாணம்

சீதாங்கப் பாசாணம் செப்பக் கேளு
சீதமா மாங்கிஷமாஞ் சிறப்புமாகும்
வாதமாம் வளையமாம் வசியமாகும்
மகத்தானப் பரிசனமாம் பன்னகமு மாகுங்
கோதமாங் குஞ்சரமாங் கவடுமாகுங்
குளுந்ததோர் பரிமளமாங் கொடிய விடமாகும்
நீதமாம் நிட்களமாங் கல்லுமாகும்
நேரான சீதாங்கப் பாஷாணமுமாமே. 233

## கார்முகில் பாசாணம்

கார்முகில் பாஷாணங் கருத்தைக் கேளு
கனலோடு வாயுவாங் கலந்திடுஞ்சூதம்
மார்முகின் நயனலோடு வேந்தனாகும்
அரசனாம் ஆதி மகாவிந்து வாகும்
பார்முகின் பனலோடு போகமாகும்
பரிந்திட்டக் காறையாம் பாறையி னுற்பத்தி
ஊர்முகியாம் ரசிதத்தை கறுப்பாக்கும் வேந்தன்
உரைத்திட்ட நாமமெல்லாங் கார் முகியாமே. 234

## சிலாமதப் பாசாணம்

சிலாமதப் பாஷாணப் பேர் செப்பக் கேளு
சிலைகனவின் தூமையாஞ் சிறந்த தாது
மலா மதமா மந்திரமா முதிரமாகும்
மருவியதோர் கற்குறியா மயக்குந்தாது
உலா மதமாங் காந்தியாவி யோனி தானாம்
உதரத்தில் விளங்கிய கற்கனலு மாகும்
திலா மதமாஞ் சிலைச் சென்னீர் திரண்ட தாது
செப்பியதோர் சிலாமதப் பாஷாணமாமே. 235

## அப்பிரகப் பாசாணம்

அப்பிரகப் ப்ாஷாணப் பேர் அறியக் கேளு
அதியமாஞ் சுரவல்லி யேமசத்தி
புப்பிரகம் பூமியினில் கல்லுமாகும்
புகழ்ந்த மலைப் பாதமாம் ரோக மோகினியாம்
வப்பிரகம் வழிக்காந்தி வாமி திட்ட
மருவியதோர் சமாதாரப் பிரிதியாகுங்
கப்பிரகம் கந்தாரத்தின் பறச்சியாகுங்
கருதிய தோரப்பிரகப் பாஷாண மாமே. 236

### வெள்ளைப் பாசாணம்

வெள்ளைப் பாஷாணப் பேர் விளம்பக்கேளு
வெள்ளையாம் வேடமாம் மேவிய சங்கந்
தள்ளையாஞ் சமரசத்தின் பாகந்தானாந்
தவளமாம் ரசிதவித்தை யடங்குஞ் சோதி
வுள்ளையாம் வுறுளையாம் படிகமாகும்
ஓங்கியதோர் குமுதமாம் ஒயத்தியாகும்
கள்ளையாங் கந்தரத்தின் காஷ்ட மாகுங்
கருதியதோர் பேரெல்லாம் வெள்ளைப் பாஷாணமு மாமே. 237

### பறங்கி வைப்பு

ஆகவே முப்பத்தி ரெண்டு தாதும்
அப்பனே பிறந்திட்ட மலையைச் சொன்னேன்
ஏகவே பேர் மறப்பை எடுத்துச் சொன்னேன்
ஏங்கியதோர் வாதிக்கு ஏத்தஞ் சொன்னேன்
போகவே மலைதனிலே போக்குச் சொன்னேன்
பேரான சீவனத்துக் கிடமே சொன்னேன்
சாகவே புலிக்கரடி சர்ப்பத்துக்கும்
தந்திரமாய் குளிகையொன்று செப்புகின்றேனே. 238

செப்புறேன் பறங்கி வைப்பு முப்பத்தி ரெண்டுஞ்
சீரான பேர்பிறப்பை தெளிவாய்க் கேளு
வொப்புறேன் பொற் தொட்டிச் செம்புத் தொட்டி
உயர்ந்து நின்ற அயத்தொட்டி தொட்டித் தொட்டி
நப்புறேன் ரத்த சிங்கி யேம சிங்கி
நலமான ரசித சிங்கி தீமுறுகலோடு
கப்புறேன் கார்முகியும் லிங்கம் வெள்ளை
கனமான கெவுரியொடு வீரந்தானே. 239

### பாசரணப் பெயர்கள் தொகுப்பு

வீரமாங் குக்கிடத்தின் தலையாங் கெந்தி
விளங்கியதோர் சுரைக்கெந்தி பவளப்புத்து
ஆரமா மரிதாரங் கோடா சொரி
அழகான பஞ்சபட்சி குங்குமப் பாஷாணம்
தோரமாம் ரெத்த வர்ணப் பாஷாணந் தானுங்
கோமுகமாம் பாஷாணம் துரிசி துத்தம்
நாரமாம் ரசித மென்றப் பாஷாணத்தோடு
நலமான சூதமென்றப் பாஷாணந்தானே 240

சூதமொடு கெந்தமென்றப் பாஷாணந்தான்
துடங்காத நீலவர்ணப் பாஷாணமாகுங்
காதமென்றக் கார்முகிப் பாஷாணந்தான்
கறையற்ற கோரமென்றப் பாஷாணந்தான்

நாதமென்ற லவணமுகிப் பாஷாணந்தான்
நாகமாம் பாஷாண முப்பத்தி ரெண்டும்
வாதமொடு வசியமாம் வயத்தப்பமாகும்.
மகத்தான வேதையுமா மாட்டியாடே. 241

## தொட்டிப் பாஷாணம் நாலுக்கும் பேர் அறிய

தொட்டிப் பாஷாணப் பேர் சொல்லக் கேளு
சொல்லரிய மாற்கமாஞ் சறுவதாது
பட்டியென்றப் பாதரசமுங் கெந்தகமுங் கூட்டிப்
பாண்டத்திற் சமைத்திடவுந் தொட்டியாச்சு
கட்டியென்ற தனாட்டியமுமாகுங்
கடிதான விஷ வேகிச்சறு வேஷகாரி
யொட்டி யென்றப்புத்தோடு யுருவாகும் பலகை
யுசந்திட்ட வேதையா முறுதியாமே. 242

உருவான அயத்தொட்டி செம்புத் தொட்டி
யுகந்த நல்லெருமை நாத் தொட்டியாகும்
புருவான பொற்றொட்டி யெறிச்சியாகும்
பொற்புள்ளிப் பெரிசானப் பாண்டத்தி யாகுங்
கருவானக் கறுப்பியாஞ் செகப்பியாகும்
கடிதான ஏமத்தி செம்பத்தியாகும்
வெருவான வெள்ளச்சி அயத்தியாகும்
மிடுக்கான நால்வகையின் தொட்டிப் பேரே 243

## சிங்கிப் பாசாணம்

சிங்கிப் பாஷாணப் பேர் செப்பக்கேளு
செயமான மிருதாரு ரெத்த சங்கி
யெங்கியமிர்த சிங்கி யேம சிங்கி
யேத்தமாம் பொன் வர்ணச்சிங்கிதானும்
மங்கியமாம் ரசித வர்ண மீயந்தானும்
வங்கமாமிருது வாங்கிளங்கு தானும்
மங்கியா முபரசத்தின் சத்துருவாகும்
மடுக்கான மிருதாரு சிங்கிப் பேரே. 244

## தீ முறுகல் பாசாணம்

தீ முறுகல் பாஷாண்ப் பேர்தனையே செப்பக் கேளு
செயமா்க வடிப்பட்ட காந்தி தானுந்
தூய்முறு கல்சூதம் ஆனையுமாகுஞ்
சுகமான வலு கெற்பம கேஸ்வரியுமாகும்
மாய் முறுகல் பரமருட முகிலின் வர்ணம்
மகத்தான சமைத்திடு கந்தகமுமாகும்
ஆயமுறு அலடிப்பட்டி முறுகலாகும்
அறைந்திட்ட நாமமெல்லாந் தீ முறுகலலமே. 245

### கருமுகில் பாசாணம்

கருமுகில் பாசாணப் பேர் கருதக்கேளு
காக்காயின் மூக்கனாம் காரண்ட வைப்பு
வருமுகிலின் நிறமதாம் வககண்மூக்கும்
மகத்தான பதங்கத்திற்கு சமையுற்றனாரி
குருமுகிலி னிறமதாம் தாம்பரம் பேதிக்
கூறான சயனத்திலுள்ள மனுமாகும்
அருமுகிலின் தீமுருகன் மேல் நின்ற
அழகான கருமுகிலின் பாஷாணமாமே. 246

### சாதிலிங்கம்

சாதிலிங்கப் பேர்தனையே சாற்றக்கேளு
சண்டமதிர் தஞ்சாதிப் பதங்கமாகும்
மீதிலிங்க மிங்கிலியாஞ் சிவசத்தியாகும்
மியலான பற்பரமா மாத்தகமு மாகும்
வாதிலிங்கம் வன்னி கெற்பங் குருவிந்த மாகும்
மணிராசர் சொற் பவனாம் வாசு கந்தஞ்
சாதிலிங்கம் மிங்கிலிக் கஞ்சாஞ் சனாகுங்
கருதியதோர் பேரெல்லாஞ் சாதிலிங்கமாமே. 247

### வெள்ளைப் பாசாணம்

வெள்ளைப் பாஷாணப் பேர் விளம்பக் கேளு
மிடுக்கான யெலிக்கு நல்ல காலனாகும்
வில்ளையாம் விஷராசன் கொடு விஷமுமாகும்
வெற்பான குடோரியாம் மன்னுயிரின் காலன்
முள்ளையா முஷப் பாஷாணமாகும்
மூர்க்கனாங் கற்பானா மாகும் பாஷாண
முள்ளையா முலோகங் கற்காரனாகு
முரைத்த வெள்ளைப் பாஷாணப் பேருமாமே. 248

### கெவுரிப் பாசாணம்

கெவுரிப் பாஷாணப் பேர் கூறக் கேளு
கெடியான ரசவீரிச் சூரண ரஞ்சனி
தவுரி நிறப் பொன்னிச்சி சங்கரன் பெண்டி
சார்வான தாரத்திற் தயக்குஞ் சோதி
அவுரி அயங்கரண மாயி யானந்த வாதி
அண்டமுக டனைத்துக்கு மருளுஞ் சோதி
உவரி ஒங்காரவுரு வொளி விளங்கு மேனி
யுரைத்ததொரு நாம மெல்லாங் கெவுரிப் பேரே. 249

### சவ்வீரம்

சவ்வீரம் பேர்தானுஞ் சாற்றக்கேளு
தளவாய்யஞ் சரக்குக்குச் சுன்னமானோன்
நெவ்வீரம் எழுவருடன் கூடினோம் நாம்
மேத்தமாம் விற்பன்னன் சேவுகனுமாகு

மவ்வீரமதி வெள்ளைச் செந்தூரத்தான்
அடங்காதச் சோரத்தின் சத்துருவுமாகும்
நவ்வீரம் பரியினிட மித்துருவுமாகும்
நாட்டியதோர் பேரெல்லாம் செவ்வீரமாமே. 250

## கோழித்தலை கெந்தி

கோழித்தலைக் கெந்தியோட பேரைக் கேளு
குக்குடத்தின் சூடாகுஞ் சுகதுண்டக் கெந்தி
தாழியாஞ் சிகப்பான கெந்தியாகுந்
தயங்காதே லோக சித்தி க்ஷணத்திற் சித்தி
சேழியாகுஞ் செம்பான சாத கார சித்திச்
செகப்பான வானந்த வல்லியாகு
மாழியாங் கற்பகம் பொற் காமமீயு
மடங்காத கோழித்தலைக் கெந்தியாமே. 251

## வாணக் கெந்தி

வாணக் கெந்தியின் பேரை வகுக்கக் கேளு
மகத்தான சண்டைக்கு அரசனாகும்
பாணமாம் படை தனக்கு மூர்க்கனாகும்
பாங்கான சுரைக் கெந்திப் பத்தலாகும்
ஊணலாம் வேந்தனுக்குத் தாரமாகும்
முருந்தான் முனைக் குலையப் பண்ணுஞ் சூரன்
தாணமாஞ் சத்தனாம் நாத்தமாகுஞ்
சொல்லியதோர் பேரெல்லாம் சுரைக் கெந்தி யாமோ. 252

## வைப்பரிதாரம்

வைப்பரி தாரத்தினுடைய வண்மை கேளு
வண்டொழுகும் அம்புயத்தில் வாழ்மடந்தை யாகும்
கொப்பானக் கொச்சியினிற் குழந்தையாகுங்
குமிழ் கமலக்கொரு வீற்றிரு மடந்தையாகும்
அப்பான அரியினுட தார்த்தியாகும்
அழகான நடையுடைய பிரமாணப் பெண்
கைப்பான தனத்தியாங் கனத்தியாகுங்
கருதியதோர் பேரெல்லாம் அரிதாரப் பேரே. 253

## பவளப் புத்து

பவளப் புத்துப் பேரைப் பகரக் கேளு
பாங்கான லோகத்தை பறியாக்கியாகும்
புவனமாம் புத்தாகுங் குழவியாகும்
பேரான கற்பகமாங் கொடிச்சியாகும்
துவளமாஞ் சுணச்சியாஞ் சுகந்தியாகுந்
துயயானை ரவியாக்கி சொர்ணமாக்கி
பவளமா மடுக்கானக் கன்னியாகும்
அறிந்துரைத்தப் பவளபுத்துப் பாஷாண மாமே. 254

### கோடா சூரி

கோடா சூரிப் பேரைக் குறியாய்க் கேளு
கொடியதோர் மன்னனாகுங் குரு முறையுமாங்
காடாமாங் களிம்பகத்தும் வண்ணானாகுங்
கருச் சேமந் தவளமாங் காட்டும் வேந்தன்
தூடமாஞ் சோரனாந் திருடனாகுந்
தூத்தமாம் நஞ்சான வாதராசன்
வேடனாம் வெண்டாளன் வெள்ளி மித்துரு
விளங்கியதோர் கோடொ சூரி நாமமாமே. 255

### பஞ்சபட்சி பாசாணம்

பஞ்ச பட்சி பாசாணம் பகரக் கேளு
பரவிய தோரைம் புலனாம் பஞ்ச தாது
நெஞ்சமாஞ் சித்திரத்தின் பட்சியாகுந்
திறந்திட்ட அஞ்சு வர்ணத் தாதுவாகு
மஞ்ச நிறமாய்ப் பறங்கிப் பாவை
மகத்தான குப்பிக்குள் சமைந்த கன்னி
குஞ்சனித்த விதனத்துட் கூர்ந்த யேமங்
கொடியான நாமமெல்லாம் பட்சியாமே. 256

### குங்குமப் பாசாணம்

குங்குமப் பாஷாணப் பேர் கூர்ந்து கேளு
கூடியதோர் நவலோக மேமமாக்கி
மங்கி நிற மஞ்சளென்ற விரும்பியாகு
மாதுக்கு மாதுதான் மகத்தாங் கன்னி
பொங்கிநிறப் பொற்கொங்கைக் குளச்சியாகும்
பீதம் பொன்னாண்டிச்சிப் பினாகப் பாணி
தங்கு நிற தங்கத்தி யாட கத்தியாகுஞ்
சாற்றியதோர் குங்குமப் பாஷாணமாமே. 257

### இரத்தப் பாசாணம்

இரத்தப் பாஷாணப் பேர் இயம்பக் கேளு
நால்வேதி நாதாந்தி நலங்கும் பொன்னி
பத்தமாம் பாங்கிச்சிப் பராபரக் கன்னி
பரியுடைய கெற்பத்தி பரிந்த தாது
அத்தியறங்கக் கொடிச்சி யாண்டிச்சிப் பொன்னிச்சி
ஆல காலத்தை யுண்ட அரண் பாகத்தி
சித்தியாஞ் சிகப்பி சாத வர்த்தி
செப்பியதோர் ரத்தப் பாஷாணப் பேரே. 258

### துத்தம்

துத்தத்தின் பேர்தனையே சொல்லக் கேளு
தூபுரமாஞ்சிப் பிச்சி கபரியாகு
மத்தமாங் கற்பறியா ரசித்மாகு
மாகியதோர் செயனாகஞ் சொரியோனாகும்

நித்தமா நேத்திரத்திற் நிர்மலமுமாகும்
நேரான இரசகவேர் புடமுமாகும்
நித்தமா நாகராஞ்சகமு மாகும்
நாட்டியதோர் பேரெல்லாம் துத்தமாமே. 259

## துரிசியின் பேர்

துரிசியின் பேர்தனைத் தானுஞ் சொல்லக் கேளு
சுடலையின் சிவகத்திச் சுருபமாகுந்
தரிசியாந் தாம்பிரத்தின் கெற்பமாகுந்
தயங்காத கண்டர்தான் நீல நிறக்காளி
வரிசையா மால் பச்சை மேனியாகும்
வத்தாத மேனியான் மணி மிடத்தா ளாகுந்
துரிசியாங் குருவாகுங் சூரியதாமல் வணங்
கோலமார் கடவுளான் கொழுஞ் சுடருமாமே. 260

சுடராகும் பரிசுத்தப் பாணியாகுஞ்
சிறுபிறையை யணிந்த செஞ்சடைக் கடவுளர்க்கு
மடராகு மானி முழு நீலமாகும்
மாதிமகா குருவாகுஞ் சதா சிவன்தான்
மிடராகும் வேதாந்தி வாதி தானாம்
விடையேறி விடமுண்டோன் மேதினியோனாகும்
மடராகும் வாளெயிற்றுக் கண்ணனாகும்
வகுத்த தெல்லாம் துரிசியிடப் பேருமாமே. 261

## இரசிதப் பாசாணம்

இரசிதப் பாசாணப் பேர் நவிலக் கேளு
நலமான வரண்டி மதிக்குலமுமாகும்
விசிதமா மினிச்சி வெள்ளையாகும்
வேடரள மேனியாம் வெண்பூதச்சி
கசிதமாங் கரண்டில் வெள்ளை கடுங் காந்தியாகுங்
கருதியதோர் தாம்பிரத்தைத் தாரமாக்கித்
துசிதமாஞ் சூதந்தைப் பேதமாக்கிச்
சொல்லியதோர் ரசிதப் ப்ாஷாணமாமே. 262

## சூதப் பாசாணம்

சூதப் பாஷாணம் பேர் சொல்லக் கேளு
சிலையான சூதமாஞ் சேர்ந்த தாது
வாதமா மலைக்குறவன் வாசுகி நாதன் தான்
மகத்தான காந்தனாம் காமக்குடியோனாம்
காதமாம் லோகச்சித்தி காயசித்தியாளோன்
கருவதைப் படுமுன்னே யேம மானோன்
நாதமாங் குப்பியிலே நுணுக்கமானோன்
நோக்கியதோர் சூதப்பாஷாணப் பேருமாமே. 263

### நீலப் பாசாணம்

நீலப்பாசாணப் பேர் நிமையக் கேளு
நீதை தான் வைப்பான கறுப்பியாகும்
காலனாங் காங்கையானாஞ் சோமனாகுங்
கடிய விளங் குழலிய மதியமாகுந்
தாலனாந் தனஞ் செயனாஞ் சித்தி மவுலி
தாரத்திற் சேர்ந்தவுடன் பசுமையூானோன்
வீலனாம் வெண்ணிலா வொழுகுந்தண் மதிய
மிடுக்கான நீலப் பாஷாண மாமே. 264

### கெந்தகப் பாசாணம்

கெந்தகப் பாஷாணப் பேர் கூறக்கேளு
கெடியான நாத்தனாஞ் சடக்கனாகும்
பந்தனாம் நாதனாம் பாத்தனாகும்
பாங்கான விசையன் புங்கவனுமாகும்
முந்தனாம் முத்தனாம் முயலகனு மாகும்
மூதண்டச் சத்திதான் முரசனாகும்
நந்தனாம் நாயகனாம் நவலோகப் பேதி
நாட்டியதோர் கெந்தகப் பாஷாணமாமே. 265

### சோரப் பாசாணம்

சோரப் பாஷாணப் பேர் சொல்லக் கேளு
சுய்மான நவலோக மாரணனாகுங்
காரனாங் கார்முகக் கள்ளன் தானாங்
காந்தனாங் கடுவேகி கைப்பு மானோன்
நாரனாமள வனா மனந்தன் தானாம்
ஆதி விராட்டியனாகும் அழகனாகுந்
தீரனாந்திருடனாம் செம்பில் வேதை
செப்பியதோர் சோரப் பாஷாணப் பேரே. 266

### காகப் பாசாணம்

காகப் பாஷாணப் கருதக் கேளு
கருமுகிலாம் நாதனாங் களங்கனாகும்
வாகமாம் வாசகனாம் கொடியுமாகும்
வாருதியின் வாசகனர் மாசி குருக்கன்றான்
பாகமாம் பலிபுத்தி புலூர் சிதுவாகும்
பாங்கான தாரத்தைக் கறுக்கப்பண்ணிச்
சாகனாஞ் சனியினுட வாகன முமாகுஞ்
சாற்றரியக்காகப் பாஷாணப் பேரே. 267

### லவணப் பாசாணம்

லவணப் பாஷாணத்தின் நாமங் கேளு
லவணத்தின் கூர்மையானாம் நாத வேதி
யவணத்தி நாதித்தன் கூர்மையாகும்
அடங்காத நவலோகம் ஏடமாக்கித்

துவணத்தின் சூதத்தைத் தோசை போலச்
சுயம்பான சரக்குகளைச் சுன்னமாக்கிக்
கவளத்தின் கம்பியாங் கடும் பதங்கனாகுங்
கருதியதோர் லவணப் பாஷாணப் பேரே. 268

## நாகப் பாசாணம்

நாகப் பாசாணப பேர் நவிலக் கேளு
நாககடைப்புரட்டி செய்தியப்படவே யெரிப்போன்
சிகமாஞ் சீறலாம் பெருமலாகும்
திரண்ட சற்பத்தி பதங்கியாகுங்
சூகமாங்குலிசமாங் கொடிய குடிலந்தனக்கு
குறிப்பான நாகத்தைக் குந்தளமாக்கி
பூகமாஞ் சூதத்தைப் பொன்னுமாக்கிப்
புகழ்ந்திட்ட நாகப் பாஷாணப் பேரே. 269

## இந்திரக் கோபப் பாசாணம்

இந்திரமாம் பாசாணம் இயம்பக் கேளு
இயலான மகரக்கன்னி இந்திரச் சத்தி
மந்திரத்தின் அரூபியாம் வானவர்கள் போற்றி
அமரர்கோன் வணங்குகின்ற மகத்தாங்கன்னி
அந்திரமாம் பதங்கச்சியழகு துரைப் பெண்தான்
ஆயிரமாங் கண்ணுள்ள அதிஷ்டச் செல்வி
தந்திரமாஞ் சாதக ஏமத்தியாகுந்
தளுக்கான இந்திர பாசாணப் பேரே. 270

பாரப்பா பாஷாண முப்பத்தி ரெண்டும்
பரிவாக வெகு நூலை ஆராய்ந்துப் பார்த்துப்
பாரப்பா ஒவ்வென்றாய் பிரிச்சு ஆடிப்
பலன்கண்ட படியெல்லாம் பார்த்துச் சொன்னேன்
பாரப்பா பச்சைதன்னில் வேதை சொன்னேன்
பரிவாக வைப்பு முறையேழாயிரத்தில் சொன்னேன்
பாரப்பா குளிகைக்கு சத்தெடுத்துப்
பாச்சுகிற முறையெல்லாம் சொன்னேன் பாரே. 271

## பறங்கி வைப்பு

பாரப்பா தந்திரமாய் பறங்கி வைப்புப்
பாசாண முப்பத்திரெண்டு தாதுஞ்
சேரப்பா சித்தரிட்ட மறப்பை யெல்லாந்
தெளிவாகப் பலநீறு முறைகள் காண
வேரப்பா வெட்ட வெளியாகச் சொன்னேன்
வேதை யொன்றுந் தாதுவென்று அறியக் காணும்
தாரப்பா சித்தர் சொன்னக் கரு வைப்புச்
சூக்ஷமெல்லாம் நிகண்டுக்குள்ளே திறந்திட்டேனே. 272

திறந்திட்டேன் உபரசமுஞ்சார சூநுஞ்
செயலானப் பாசாணப் பிறப்பு வையுந்
திறந்திட்டேன் சாத்திரத்தை ஆராய்ந்து பார்த்து
திறமாக மாலையைப் போல் நிகண்டாய் கோத்தேன்
திறந்திட்டேன் கருவையெல்லாம் வெட்ட வெளியாக
செயலான சரக்கினுட பேருதன்னைத்
திறந்திட்டேன் குருவுக்கு தத்தமென்று
சீரான வாதமெல்லாம் நிகண்டிலாச்சே. 273

### பொன்னுக்குப் பெயர்

பொன்னினுடப் பேர் தனையே புகலக் கேளு
பேரான சொர்ணமாம் கனகமாகும்
வண்ணமாம் மருக்குமந்தான் சாதகும்பி
மகத்தான தாண்டவமாங் காஞ்சனமுமாகுந்
தன்னமாஞ் சம்புநிதஞ் சாதரூபந்
தாக்கான ஆடகமாம் ஏமமாகும்
பண்ணமாம் பசுங்குருவு இரணியமுமாகும்
பாங்கான சாமி காஞ்சா ரத்தினமாமே. 274

ஆமென்ற தமனியமாம் பூஷணமுமாகும்
அடங்காத பீதகமாம் பரியுமாகுந்
தாமென்ற ஆதிச்சிய நாகமாகுந்
தயங்காத ஆதியதித்தனுமாகும்
வாமென்ற மேருவாம் பெருந்தாயாகும்
மகத்தான ஆணியா முத்த பூசந்
தேமென்ற ஆதித்தன் வித்துமாகுஞ்
செயலான குந்தளமாம் தகடுமாமே. 275

### வெள்ளிப் பேர்

வெள்ளியின் பேர்தனைத் தானும் விளம்பக்கேளு
வெளுப்பான சுப்பிரகம் ரசிதந் துய்யான்
குள்ளியதோர் சவுத்தியமாந் தடித்த ரூபங்
குணமுள்ள வசுசிரேஷ்ட மதியென்பார்கள்
வள்ளியதோர் மரப்பாச்சி மகாசுரமாம்
வான்மீனாம் எருமையுட நாக்குமாகுந்
தள்ளியதோர் தனிக்கெரட்டைக் காசுமாகுந்
தளுக்குற்றச் சீனியாஞ் சந்திர வாய்வே. 276

சந்திரனின் பூதியாஞ் சந்திரவாசான்
தளுக்கானச் சுவேத காஞ்சனமு மாகும்
ருந்திரனாங் குணுக்குறுத்துந் துத்தமாகுந்
தூறியதோர் வஸ்துவாம் ரூபாய்தானும்
மந்திரனாங் காஞ்சிய மீரஞ்சு பிறப்பீ
மகத்தான ருசிகரமது ரசமுமாகுந்
தந்திரனாம் தாரமா மிரத்தமுமாகுஞ்
சாற்றியதோர் பேரெல்லாம் வெள்ளியாமே. 277

### செம்பின் பேர்

செம்பின் பேரினைத்தானுஞ் செப்பக் கேளு
சிறந்த ரவி செந்தலை ராகியென்பார்
கம்பியென்ற தாம்பிர மிலேச்ச முகஞ் சுலபங்
சுனமான ரத்ததாதுகமு மாகும்
பம்பியென்ற பழுப்பினமாங் காளிக்கம் பருதி
பஞ்சனா கமென்றுந் திறியம்பக மாகுஞ்
தும்பியாந் தூம்புறமும் அதுவும் பரமாகுஞ்
சொல்லியதோர் பேரெல்லாஞ் செம்புமாமே. 278

### காரீயப் பேர்

காரீயப் பேர்தனையே கருதக் கேளு
களங்குக் கவ்வுங் கிறாவணமுமாகும்
பாரீயாம் பலதோஷம் போக்கியாகும்
பண்பானக் களங்குக்கு ஆதியானோன்
வாரீயாங கருனாகங் காரீயமாகும்
மன்னியதோர் சவளையாங் கள்ளம் போக்கி
நாரீயாங் காரீயப் பேருதன்னை
நாட்டினோம் நிகண்டுக்குள் நன்றாய்ப் பாரே. 279

### வெள்ளீயம்

வெள்ளீயப் பேர்தனையே விளம்பக்கேளு
வெண்ணாகம் புசங்கமா முறகமாகும்
வள்ளியாம் வங்கமாங் குடிலமாகு
மாசத்த யொன்னெஷ்டந் தன்னுவ நெஷ்ட்டந்
தெள்ளிசிங்கமாம் பறக்குத் தானுஞ்
செயரசத்தின் சேவகனாம் நவலோகத்தை
துள்ளியாய்ந் தூள் படுத்துஞ் சூரனாகும்
சொல்லியதோர் பேரெல்லாம் வெள்ளீயமாமே. 280

### நாகத்தின் பேர்

நாகத்தின் பேர்தனையே நவிலக் கேளு
நற்சோரம் வெண்ணாகஞ் சீறலாகும்
போகத்தின் பொருமலாம் பொங்கற்றானாம்
புகையான அஞ்சுவர்ண நிறத்தோனாகும்
நீகத்தினிரைச்ச லொடு மஞ்சளானோன்
நெளிசானத் தாம்பரத்தின் வேதையானோன்
பாகத்தின் வாதத்துக்கு இரும்பானோன்
பாடியதோர் பேரெல்லாம் நாகத்தின் நாமமாமே. 281

### பித்தளைப் பேர்

பித்தளையின் பேர்தனையே புகலக்கேளு
பேரான யார் கடத்தோடிரத்தியாகு
முத்தான வூத்தலென்ற பரிதாவாகு
முடசலா முபுங்குரைதான் குடவனாகுந்

நத்தானக் காளிக்கம் நாத்தப்பகம் பொன்னாகும்
நலங்கிய தோர் சேருவைத் தானுறவாகும்
மகத்தான செம்புரெண்டு நாகமொன்று
வகுத்தரைத்தப் பேரெல்லாம் பித்தளையுமாமே. 282

## வெங்கலத்தின் பேர்

வெங்கலத்தின் பேர்தனையே விளம்பக்கேளு
மிரளுகின்ற தோஷமாங் கஞ்சமாகும்
பங்கலத்தின் ஓடையாங் கலங்கிண்ணியாகும்
பார்க்கின்ற கண்ணாட்டி மணியுமாகும்
மங்கலத்தின் மாருதமாம் பிரகாசமாகும்
வலிகஞ்சம் வாசகப் பீனிசமுமாகும்
செங்கலத்தின் செப்புரெண்டு வெள்ளீயம் ஒன்று
சேர்த்திடவே வெங்கலத்தின் செயலுதானே. 283

## திராவின் பேர்

திராவினுட வேர் தனையே செப்பக் கேளு
சிவட்டுமாங் கொட்டுமாங் கருலோகமாகும்
முராவினுட மொட்டச்சி முறிசல் மந்த
மூகையிலே யுருக்கியே வார்க்கும் லோகம்
நராவிட முறியதோர் லோகமாகும்
நலமான செம்புகளுள் காரிக்கூட்டி
கராவினுட கடிசான லோகமாகுங்
கனமான திராவினுட நாமமாமே. 284

## இரும்பின் பேர்

இரும்பினுட பேர் தனையே இயற்றக் கேளு
இயேசுவுட செயமாகுஞ் சத்துமாகும்
மரும்பான அயசாகுங் கறுப்பியாகு
மாதியா வாழ்பூமி னாதமாகுங்
கரும்பியென்றும் லோகமென்றும் பிண்டதுத்த மென்றும்
கயசுச்ச ரோச ரமாணக்காரி நெகிளந்தான்
திரும்பினும் கிட்டமாங் கிருஷ்ண அயமாகும்
செப்பியதோர் பேரெல்லா மிரும்புக்காமே. 285

## உருக்கின் பேர்

உருக்கினுட பேர்தன்னை ஊரைக்கக் கேளு
ஓங்கு மணி பாளாகு மொழு கரையாகும்
முருக்கான தீக்ஷண மாம் அயக்கடிய மாகும்
முத்தமாம் விதனதடுக்குக் குடோரியாகும்
மருக்கான அரமாகும் வத்த லோகம்
மகத்தான துத்தலோகம் கிட லோகந்தான்
நருக்கான உருக்கு என்றும் எஃகு என்றும் பேர்
நாட்டினேன் உருக்கினிட நாமமாமே. 286

## லோக தொகுப்பு

தானென்ற பதினொன்றுந் தொகுப்புக்கேளு
தங்கமொடு வெள்ளி செம்புக் காரீயந்தான்
வேனென்ற வெள்ளீயம் துத்தநாகம்
விளங்கியதோர் பித்தளையும் வெண்கலத்தோடு
ஊனென்ற திராயொடு இரும்பு உருக்கு
உத்தமனே பதினொன்றுக்கும் லோகமாச்சு
மானென்ற லோகமிது பதினொன்றும்
பரிபாஷை நாமமெல்லாம் பாடினேனே. 287

பாடினதோர் லோகத்தின் பேரைக் கண்டு
பஞ்சபூதத்தினுட வடிவுங் கண்டு
நாடினதோர் இனங் கண்டு சேர்வைகண்டு
நாட்டியதோர் களங்கு சுன்னம் செந்தூரங்கள்
மூடினதோர் மூட்டறிந்து தொடுத் தாயானால்
மோசமில்லை சாத்திரங்கள் என்றும் பொய்யா
ஊடினதோர் நிகண்டை விட்டுவாதம் பார்த்தால்
ஒன்றுமில்லை வாதமெல்லாம் பொய்யாய்ப் போமே. 288

## உப்புக்கெதை

போமென்ற வுப்பினுடக் கெதையக்கேளு
போக்கான கல்லுப்புப்படி தான் ரெண்டு
காமென்ற அடிகனத்தச் சட்டியிலே போட்டுக்
கடல் தண்ணீர் நாலுபடியதிலே வாரு
ஆமென்ற அடுப்பேத்தி எரிக்கும் போது
அப்பனே உப்பெல்லாங் கரைந்து போகும்
வாமென்ற சீலையிலே வடிகட்டிக் கொண்டு
மறவாமல் சட்டியின் மேல் சீலைக்கட்டே. 289

சீலைக்கட்டி எரித்திடுவாய் தீபம் போலத்
திறமாகத் தண்ணியெல்லாம் வற்றமட்டும்
ஆலைகட்டி ஆறவிட்டு எடுத்து வாங்கி
அடிகனத்த சட்டியிலே உப்பைப் போட்டு
வேலையுட நீர்விட்டு நாலுபடி தானும்
விளங்கவே கொதியிட்டுக் கலந்தபின்பு
மாலையுடச் சீலையிலே வடிகட்டிக் கொண்டு
மறவாமல் சீலைகட்டி எரித்திடாயே. 290

எரித்திட்டு வற்றியபின் ஆற விட்டு
இதமாக உப்பை யெல்லாம் சீவி வாங்கி
மரித்திட்டு மறுசட்டிக்குள்ளே போட்டு
வளமாக நாலுபடிக்கடல் தண்ணீர்விட்டு
கரித்திட்டுக் கொதிக்க வைத்துக் கரைத்த பின்பு
கலங்காமற் சீலை வடி கட்டிக் கொண்டு
பரித்திட்டுச் சீலைக்கட்டி அடுப்பிலேத்தி
பக்குவமா எரியிட்டு வற்றினபின் வாங்கே. 291

வாங்கியே இப்படித்தான் முப்பத்தி ரெண்டு
வளமாக முன்சொன்ன படியே காச்சு
தாங்கியே எடுத்துப்பார் தவளம் போலச்
சாற்றிய வயிரம் போல் இறுகிக் காணும்
ஓங்கியே கரியில் வைத்து உருக்கும் போது
உத்தமனே பொன்போலக் கண்விட்டாடும்
தேங்கியே மெழுகாலே கெதை போல் பண்ணி
சிறப்பாக அஞ்சுப்பட்டை வைத்திடாயே. 292

வைத்திட்டு மண்கட்டி காயப்போட்டு
வளமாக காய்ச்சியே மெழுக்கத்திப் போட்டு
உய்த்திட்டு உப்பை எல்லாம் குகையிலிட்டு உருக்கி
உறுதியாய் வார்த்திடவே கெதையுமாகும்
நைத்திட்டுக் கதை நடுவே சீலைசுத்தி
நலமான கக்கத்தில் வைத்துக்கொண்டு
மைத்திட்ட மலைகளிலே உபரசம் பாஷாணம்
மகத்தான மூலிகை தான் உகந்து தேடே. 293

தேடயிலே புலிக்கரடி ஏனம் பாம்பு
சிவகெதையை கண்டவுடன் தெண்டன் பண்ணுந்
தேடயிலே சித்தரெல்லாம் வா வா வென்பார்
சிவகெதையை கேட்டவுடன் கொடுக்க வேண்டாம்
தேடயிலே சீவனத்துக் கில்லா விட்டால்
செம்புருக்கிச் சிவகெதையைச் சீவிப்போடு
தேடயிலே ஆறுமே மாத்தங் காணும்
சிலவழித்துச் சிவசொத்தை வறுமை போலுண்னே. 294

**வேதை பெரியோரிடத்தில் கேட்க**

வறுமை போலுண்டுடுத்து உபரசத்தைத் தேடு
மகத்தான யோகிகளைக் கண்டு பேசு
நிறுமையாய் அவருடனே வார்த்தை பேசு
நினைவழிந்து போகாமல் உபரசத்தைக் கேளு
வெறுமைபோற் சீவனத்துக்கு இடத்தைக் கேளு
வேதாந்த நுட்பத்தின் விபரங் கேளு
திறமையாய் மலைதனிலே சஞ்சரித்து
சூதத்தின் சாரணைக்கு விபரங் கேளே. 295

**'ரசகுரு- உப்புகெந்தக்கு பஞ்சவர்ணம்**

கேளப்பா செந்தூரமென்ற குருவைத்தானுங்
கெடியான மெழுகாலே மேரு பண்ணி
வாளப்பா மண்தட்டி உப்பு உருக்கிவார்த்து
மகத்தான உப்பான மேருதண்ணீர்
தாளப்பா சீலைசெய்து அடியில்தானும்
சூதத்தைச் சுத்திபண்ணிக் கல்வத்திட்டு
வாளப்பா போனமத்தைச் சாறுதன்னால்
வளமாக எண்சாமம் அரைத்திடாயே. 296

அரைத்திட்டு முளகு போலுண்டை பண்ணி
அரைவாசி உப்பான மேருக்குள் போட்டு
நிரைத்திட்டு வாலுகையின் மேலே வைத்து
நேற்பாகத் தீயெரிப்பாய் ஆறு சாமந்தான்
பரைத்திட்டு ஆறவிட்டு எடுத்துக் கொண்டு
பக்குவமாய் இரும்பான கதிரால் வாங்கு
தரைத்திட்ட தவளம்போல் குருவுமாகுஞ்
சாங்கமாய் நவலோகம் நூற்றுக்கொண்ணே. 297

ஒண்ணான யேமமது பத்தரையே காணும்
உகந்துமே பணவிடைதான் பாலிலுண்ணு
கண்ணான மேனியது கதிர் போலாகுங்
காயசித்தி யோகசித்திக் கடிசிலாகுந்
தண்ணான சிவகெதையைக் கையில் வைத்து
சஞ்சரித்து மலைதனிலே சார்வுபார்த்து
திண்ணான மகாமூலித் தேடி யுண்ணு
சீக்கிரத்தில் சித்தியுமாந் தெளிஞ்சு பாரே. 298

பாரப்பா உப்பான கெதையைத் தானும்
பஞ்சவர்ண மாகுதற்குப் பண்பு கேளு
தேரப்பா தாளகத்தைப் பழச்சாறுவிட்டு
நேரவைத்து நெடும்பட்டை தன்னில்பூசி
தாரப்பா ரவிதனிலே உலரவைத்து
சாங்கமாய்மண்பூசி நாலுபட்டை தன்னை
சேரப்பா சீலைசுத்தி மண்ணுக்குள்ளே
தீர்க்கமாய்ப் புதைச்சு வைச்சுப் புடத்தைப் போடே. 299

### உப்புக்கெதை- குங்குமநிறம்- கறுப்பு நிறம்

புடம்போடு அஞ்செருவைத் தூளாய்ப் பண்ணி
பேராக மருத்திட்ட பட்டை தன்னை
விடம்போடு வெளியில் வைத்துத் தீயைப் போடு
வெந்து நன்றாய் ஆறியபின் எடுத்துப்பாரு
குடம் போடு குங்குமத்தின்நிறம் போலாகுங்
கொடிய நலலோகத்தில் ஆயிரத்துக் கோடும்
மடம் போடு மறுபட்டை தன்னில்கேளு
மகத்தான கார்முகியை அரைத்துப் பூசே. 300

பூசியே முன்போலப் புடத்தைப் போடு
பெருங்கறுப்புக் கருங்காலி வயிரம் போலாகும்
தேசியே ரெண்டான சகதிரத்துக் கோடுஞ்
செபமாய் பாலிலுண்ணச் சிதையா தேகம்
வாசியே உள்ளிறுகும் மேலோடாது
மகத்தானக் கோடிவரை இருத்துந் தேகம்
மாசியே சத்தித்த மூலத்தூணி
அங்கென்று வாசியைத்தான் கும்பித்தாட்டே. 301

ஆடவே மறுபட்டை தன்னில் கேளு
ஆதியாந்துரிசி ஒரு பலமும் வாங்கி
நாடவே கல்வத்திற் பழச்சார் விட்டு
நலக்கரைத்து மறுபட்டை தன்னிற் பூசி
வாடவே மண்செய்து மறுபுடத்தில்
மகத்தான சீலை செய்து மண்ணுக்குள் வைத்து
தேடவே அஞ்செருவிர் புடத்தைப் போடு
சிறப்பாக ஆறிய பின் எடுத்துப் பாரே. 302

**பச்சை நிறம் மாதுளம்பூ நிறம் படிகநிறம்**

பார்த்தவுடன் பச்சைமால் மேனியாகும்
பகுந்த நவலோக மூவாயிரத்திலோடும்
மாத்தவுடன் மறுபட்டை தன்னில் கேளு
வன்னி கெற்பம் பலம்ஒன்று கல்வத்திட்டு
யேத்தவுடன் எலுமிச்சம் பழச்சாறு விட்டு
யிழுத்தரைத்து நால்சாமம் பட்டை தனில் பூசி
தேத்தவுடன் மண்செய்து சிலைச்சுத்திச்
சிறப்பாகப் புதைத்து மேற் புடத்தைப் போடே. 303

புடம் போட்டு எடுத்து விட்டால் மாதுளம்பூ போலாகும்
பேராக நாலு சகஸ்திரத்துக் கோடும்
படம்போட்டப் பணவிடைத்தான் பாலில் உண்ணப்
பாங்கான காயமது செவ்வலரிப் போல
மடம்போட்ட மறுபட்டை தன்னிற் கேளு
மாசத்த வீரமது கல்வத்திட்டு
நடம்போட்டப் பழச்சாற்றில் நலக்கரைத்து
நலமானப் பட்டையின் மேல் பூசிப் போடே. 304

பூசியே மண்செய்து சிலை சுற்றிப்
புதைத்துமே மண்தன்னிற் புடத்தைப் போடு
தாசியே தவளம்போல் படிகமாகுஞ்
சாற்றரிது அஞ்சு சகஸ் திரத்துக்கோடும்
மாசியே கெதை தன்னை வைத்துக் கொண்டு
மகத்தோற்குத் தொண்டு பண்ணி மூலி தேடு
பாசியே பர்ஷாண உபரசங்கள் தேடிப்
பரிவாகக் கெவுனசித்திப் பண்ணிக் கொள்ளே. 305

கொள்ளென்று சாத்திரத்தில் நாதாக்கள் சொன்னார்
கூறியதோர் படியேதான் உப்பைக்கட்டி
வள்ளென்ற வாதத்தைச் செய்யச் சொன்னார்
வாய் வீணர் வரிசையாய் செய்ய மாட்டார்
புள்ளென்ற பொன்தனையே கைக்குடுக்கிற்
பேர்பெரிய முத்தூள்தான் முகத்தில் நின்று
தளஎன்ற யேமமது செம்பாய் போகுஞ்
சாற்றரிது உப்பினுட மார்க்கந்தானே. 306

பெரியோரைக் காணல் ( 185 முதல் 205 வரை)

இந்த மணியைச் செய்து கொண்டு மலைகளில் உயரத்தில் உள்ளகாடுகளுக்குச் செல்லலாம். காட்டில் உள்ள வேடர்களையோ, மாடு மேய்க்கும் இடையர்களையோ கேட்டால் சித்தர்கள் உள்ள இடங்களைக் காட்டுவார்கள். அவர்கள் மூலம் உபரசங்கள் பாஷாண வகைகள் முதலியன தெரிந்து கொள்ளலாம்.

சித்தர்களைக் கண்டு வணங்கி நின்றால் யார் நீ? என்ன செய்தி என்று விசாரிப்பார்கள். ஊரில் இருந்து மலைக்கு வந்தபோது வழி தவறி விட்டதாகச் சொல்லவும். கோபமாகப் பேசினால் விலகி விடவும். சந்தோஷமாகப் பேசினால் தயவாகப் பேசி கருணை வரும்படி செய்யவும். காத்திருந்து பணிவிடை செய்யவும். செய்யும் பணிவிடையைக் கண்டு மனமகிழ்ந்து பிறகு வழிவகைகள் சொல்வார். அது முதல் தொட்ட காரியம் யாவும் துலங்கும்.

சாரணைகள் செய்யும் வழிமுறைகள் தெரிந்து விட்டதே என்று கர்வம் கொண்டு விடாதே. முன் போலவே தொண்டு செய்வதை விட்டு விடாதே. நல்ல சீடன் என்று பெயர் எடுத்து ஆசியைப் பெறு. காய சித்தியோடு ஏமசித்தியும் கிடைக்கக்கூடிய குளிகை தயாரிக்க முடியும். உபரசங்கள் நூற்றிப் பன்னிரண்டும், கார சாரங்கள் இருபத்தைந்து, பாஷாணம்முதல் பாதரசம் வரை மலைகளில் கிடைக்கும். முப்பத் திரண்டு வகை தாதுக்களும் மலைகளில் உண்டாகின்றன. சித்தர்கள் பரிபாஷையில் அவைகளைப் பாடியுள்ளனர். அதனால் என்ன பயன் இல்லை.

பாஷாணப் பிறப்பை எல்லாம் வரிசையாகச் சொல்கிறேன். பச்சைப் பாஷாணத்தில் ஒருவித சிறப்பு உண்டு. ( இயற்கையான பாஷாணம்) அதை இந்த நிகண்டில் விவரமாகச் சொல்கிறேன். முறையாகத் தெரிந்து கொண்டால் அட்டகர்ம வித்தைகள் செய்யலாம். வாதம் கூட செய்யலாம். முப்பத்திரண்டு வகை தாதுக்களின் பெயர்கள் வருமாறு :-

கற்கடக பாஷாணம், கோளக பாஷாணம், சூத பாசாணம், அரிதாரம், கெந்தகம், வீரம், வைக்கிராந்தம், அமிர்த பாசாணம், சிரபந்தம், தொட்டி பாசாணம், குதிரைப்பல் பாசாணம், சங்கு பாசாணம், கௌரி, துத்தம், காந்த பாசாணம், கமுஞ்சிலை, அவுபல பாசாணம், காளாங்கம், கற்பரி, பலண்டுக பாசாணம், அஞ்சன பாசாணம், கச்சாலம், சீதங்கம், சிலாமதம், காரகி, அப்பிரகம், வெள்ளை பாசாணம், தாலம்பம், (மிருதார்) சிங்கி, இலிங்கம், சரகாண்டம், கல்.

இந்த முப்பத்திரண்டு வகைகளும் மலைகளில் உள்ளன. அவைகளின் பெயர்களைச் சொல்கிறேன். ருத்திரகூடம், கெந்த மாதங்கூடம், மாம்கூடம், களிகண்டம் முதலிய எல்லாம் லட்சுமி, விலாசம் போல் செழிப்பாக உள்ளவைகளாகும்.

பத்திராலயம், கொங்கணம் முதலியன வடக்கே உள்ளன. காசிக்கு தெற்கே விந்தாரணியம், சிந்து மலை, சலாக்கிரமம், கிரௌஞ்சம், மல்லிகார்ச்சுன மலைகள், உள்ளன. அவைகளின் எல்லாம் சித்தர்கள் உள்ளனர், கொல்லிமலை, கன்னி மலை, சதுர்முக மலையும் உண்டு.

அகத்தியர் பொதிகையில் வாசம் செய்கிறார். சிவ பேரிஷி ஆவார். காவி வேடம் கட்டி இருப்பார். அதற்கு எதிரில் மேருவுக்கு வடக்கே தெட்சிணா மூர்த்தி இருப்பார்.

நான்கு திக்கிலும் உள்ள இடங்களில் சென்று விட்டு வருகின்ற சித்தர்கள். காவி கட்டிய முனிவர்கள் போல இருப்பர். சித்தர் மரபு நான்கில் சீடவர்க்கம் எண்ணிக்கை அறுபத்தி நான்கு மரபாகி சீடர்கள் எண்ணிக்கை கோடிக்கணக்கில் பெருகியுள்ளது.

பொதிகை மலைக்கு அப்பால் தாடகை மலை, மையேந்திர சாலம் என்னும் அநேக சிறு மலைகள் உள்ளன. அவைகளில் எல்லாம் பாசாணங்கள் உண்டு. உதகநீர் உண்டு. பாதரசம் முதலிய உபரசங்கள் உண்டு. குளிகை போட்டுச் சென்றால் இவைகளைக் காணலாம்.

பொதிகைக்கு வாயு மூலையில் லட்சம் யோசனை தூரத்திற்கு அப்பால் தேவனாம் பட்டாணம் என்று ஒன்று உண்டு. ஆயிரம் காத தூர அகலம் உள்ளது. நலலோகங்கள் உள்ள மலைகள் சுற்றி உள்ளன. அந்த மலைகளின் கீழே முப்பத்திரண்டு வகை பாசாணங்களும் விளைந்திருக்கும். பட்டணத்திலிருந்து எண்ணூறு காத தூரம் சென்றால் இன்னொரு மலை உண்டு. ஆயிரம் காத தூரம் சென்றால் பெரிய மலை ஒன்று உண்டு.

**சூதக்கிணறு :-**

கீழைக்கடலில் இருந்து மூன்று காதம். மேலைக் கடலில் இருந்து மூன்று காதம் கோடானு கோடி அளவுள்ள வட்டத்தில் மலையடியின் கிழக்கு பக்கம் நான்கு காதம் போனால் கிணறு ஒன்று உண்டு.

அந்தக்கிணற்றின் விளிம்பு வரை பாதரசம் நிற்கும். மூவுலகும் எரித்த சிவனாரின் விந்து இது. இதைத் தொட்டால் துரத்திக்கொல்ல வரும். குளிகையை (வாயில்) போட்டுப் பறந்து (ககன மார்க்கமாக) சென்று தேங்காய் குடுவையில் எடுக்க வேண்டும். கவனமாக இருக்காவிட்டால் வெப்பத்தில் மயங்கி வீழ்ந்து விடநேரிடும். இல்லை என்றால் துரத்தி உள்ளுக்குள்ளேயே சுழற்றி இழுத்துக்கொள்ளும். திறமையாகக் கொண்டு வந்தால் சொரூப சித்தி கிடைக்கும். பாசாண வகைகளை எல்லாம் தனித்தனியாக கட்டலாம். உலோகங்களை ஒன்றோ டொன்று கட்டலாம்.

**பெயர்கள் ( 206 முதல் 273 வரை)**

கற்கடக பாசாணம் :- கவுந்தம், கல்லடிமூலம், விந்தமாங்கம், தாது, வர்மபேதி, பற்கடகம், பரணி, பார்மூலம், லோகத்திற்கு பரிச வேதி.

கோளக பாசாணம் :- மாங்கூலி, மாங்குவந்தம், மாங்காங்காரம், மாங்கோரம், மகிலவேதை, ஆணிப் பாசாணம், மாமங்கம்.

சூத பாசாணம் :- சுந்தரம், சொற்குறிதூமம், வாதிவிரட்டி மந்தரம், ரத்திகன், மந்திரகளஞ்சியம், வங்கவேதி, வீத வித்தம், வெளிப்பாய் நின்றோன்.

அரிதாரம் :- மால்தேவி, கோணத்த பீதகந்தம், மாகிறகெந்தம், நடமுண்டனம், பிடாலகம், மூக்குத்தி, அரவக்கொடிச்சி, ஆதித்தன் சுற்றி, ஆலம்பி.

கெந்தகம் :- கெந்த மாதனம், கந்தி, பொன்வர்ணி, காரிழை காதம், குருந்தம், ரசகுரோணிதம், சக்தியின் பீஜம், குந்தமணி, பீதகெந்தம், செந்தூரத்தி, நாதம்.

வீரம் :- வெள்ளைச் செந்தூரம், வாதிக் கெற்பம், வகாரத் தலை, பூவிந்து, உத்தம சேவகன், மலையில் பிறப்பவன்.

வைகிராந்தம் :- குமுதம் முகிற்கும்பம், காணில் குன்று, கருநாக வேதி, அகன்ற பூமி, மாருத உற்பவி.

தாலம்பம் :- குந்தம், காத கலம்ப மூலம், கும்ப மதக்கோடு, முயற்சிக் தோலம், பனங்க பாசாணம், மாதற்சிரகம், குன்றத்தின் சித்தி, மாசித்தி.

மூத்தப் பாசாணம் :- மூர்த்தி, புங்கவனத்தவள், ஆதி, மாந்தோன், காலாங்களத்தி, காரணன், பூரணன், வேந்தன், பேதி கண்ணன்.

சீர்பந்தம் :- தில்லையில் நடம் புரிவான், திரியா மகன், கார்பந்தன், கந்தன், கபாலமேகம், பந்தனம், பதனசம்பு, சீர் செந்தான், பரமன், பாயுறு கோபம்,

தொட்டிப் பாசாணம் - பலகை, துலங்கு, சலாகை, மந்தார வேர், லோகவேதி, குறிஞ்சி, கூர்மை, கும்பகம்.

குதிரைப்பல் பாசாணம் :- குரகதம், வாசிதுரகம், கவுந்தகம், வரிசை, வாசியானான், கத்துருபம், செங்களை, மலையில் உற்பவித்த தாது.

சங்க பாசாணம் :- சஞ்சலம், தவளம், மாங்கு வடு, மாஞ்சவனம், மாபுவனம், புனிதன், மாங்கட்சம்.

கெவுரி பாசாணம் :- கேகயம், மாங்கெந்தம், அவரியுட- பந்தம், ஆதிகுமரி, கவுரிமாக விந்து, எழிற் குமரி, நீலி, தாளகத்தின் சத்து.

துத்த பாசாணம் :- சுந்தர தாது, மாங்கோபம், கலாலுகம், மகத்தான வேதை, தாமிரக்கெற்பம், லோக தாது.

பலண்டுருகல் பாஷாணம் :- கும்பங்கம், மாம் பாகம், தாகமாந்தம், இன்பவாணி, குருகுலம், வேதைக்கு குரு, வெண்சாயத்தான்.

காந்த பாஷாணம் :- கருநிறத்தோன். வாயுக் காலன், சாந்தச்சனி, பஞ்சசாதகம், உடச்சி, சிவம், வன்னி, குடகுரு.

இலிங்க பாஷாணம் :- வன்னி கற்பம், பஞ்சரவான் சிந்தான், கலிங்கம், மாமணி, நாதகரம், ஆண் குறி, மணிராகம், மிலேச்சம்.

காக்கரண்ட பாஷாணம் :- காமம், கண்டங்கூர், கழிபல்லம், கரண்டம், அம்புக்களை, மதிக்கு அனுபானம், காண்டீபம், கருமந்திரம், காண்டசித்திரம், கஞ்சமுகம்.

தாளகம் :- சரசுவதி, மஞ்சள்வர்ணி, குணசாலி, அரிதள்ம், பாற்கடலின் வாழி.

மனோசிலை :- நான்முகன் தேவி, நாமகள், பாரதி, வாணி, கலைமகள், கரசோதி, பூமகன், தேவி.

அவுபல பாஷாணம் :- அவலம், மனோவலம், உருண்டுகம், மாமங்கம், உத்தமசந்து உரோணத்தில் உற்பவித்த அமுதம் சராசரப் பாஷாணம், சுத்தமாஞ் சாபம்

சாலாங்க பாஷாணம் :- தாரத்தில் வேதை, தாம்பரச்சத்து, காளாங்கம், சாதகக்கும்பம், மாஞ்சம்பம், பூசாரம்.

கற்பரி பாஷாணம் :- கதம்பம், கருமம், கானகத்தின் சாமம், சராசந்தம், நிதம்பம், செம்புவேதை.

கற்பாஷாணம் :- காரீயக்கட்டி, மாங்கோசம், குமுதம், கூவிளம், பூவிளம், மந்தாச்சிந்து, சூட்ச பாளை.

அஞ்சனப் பாஷாணம் :- சீலைக்காரி, மாந்தூளி, பொற்சிலை, வங்கபேதி, குஞ்சனம், கூரம், கொல்லன் பாகை, உருக்கினம்.

கச்சால பாஷாணம் :- காசாம்பூ வர்ணத்தான், கரியமால் ஆலிலையில்துயின்றோன், மந்தாரகோலத்தோன், கூர்மம்.

சீதாங்க பாஷாணம் :- மாங்கிஷச் சிறப்பு, வாதவசியம், பரிசனம், பன்னருமாகம், குஞ்சரம், குருந்த பரிமளம், கொடிய விஷம், மாங்கல்.

கார்முகில் பாஷாணம் :- நயனவேந்தன், மகா விந்து, பனபோகம், ரசிதக்கறுப்பு, பாறைப்பத்தி.

சிலாமத பாஷாணம் :- கனவின் தூமை, மதமா மந்திரம், உதிரம், ஆண்குறி, மயக்குந்தாது, காந்தி யோனி, கற்கனல், செந்நீர், திரண்டதாது.

சவ்வீரம் :- சரக்குக்கு சுன்னமானோன், எழுவருடன் கூடினோன், விற்பன்னன், சேவுகன், வீரமதி, வெள்ளை செந்தூரம், அடங்காச்சோரத்தின் சத்துரு, நவவீரம், பரியின் மித்திரு.

கோழித்தலை கெந்தி :- குக்குடத்தின் சூடு, சுகதுண்டம், சிகப்புகெந்தி, க்ஷணத்தில் சித்தி, யோக சித்தி தருவோன், சாதகாரத்தி, ஆனந்தவல்லி, கற்பகம், பொற்காமி.

வானக்கெந்தி :- சண்டைக்கு அரசன், பாணம், மூர்க்கன். சுரக்கெந்தி, வேந்தன்தாரம், முறையை குலையாக்கும் சூரன், மாஞ்சத்தன்.

அப்பிரக பாசாணம் :- சுரவல்லி, ஓமசத்தி, பூமிக்கல், மலைப்பாதம், ரோகமோகினி, தாரப்பிரிதி, காந்தாரப் பறச்சி.

வெள்ளைப் பாஷாணம் :- வெள்ளை, வேடம், சங்கத்தள்ளை, சமரசபாகம், ரசிதவித்தை, தாரப் பிரிதி, காந்தாரப் பறச்சி.

பாஷாணங்கள் :- முப்பத்திரண்டு தாதுக்களும் பிறந்த மலைகளைச் சொன்னேன். மறைந்த பெயர்களை எல்லாம் எடுத்துச் சொன்னேன். புலி, கரடி, பாம்பு முதலியவைகள் வசமாக்க குளிகையும் சொல்கின்றேன். முப்பத்திரண்டு வகையான வைப்பு பாஷாணங்களை ( செயற்கை பாஷாணங்கள்) தெளிவாகக் கேள்.

பொற்தொட்டி, செம்புதொட்டி, அயத்தொட்டி, எருமைத் தொட்டி, ரத்தசிங்கி, ஏமசிங்கி, ரசிதசிங்கி, தீமுருகல், கார்முகில், லிங்கம், வெள்ளை, கெவுரி, வீரம், கோழிததலைகெந்தகம், சுரைக்கெந்தி, பவளப் புற்று, அரிதாரம், கோடாசூரி, பஞ்சட்டி, குங்குமப் பாசாணம், ரத்த பாசாணம், கோமுகப் பாசாணம், துரிசி, துத்தம், ரசித பாசாணம், சூதபாசாணம், கெந்த பாசாணம், நீலபாசாணம், கார்முகில் பாசாணம், கோரப்பாசாணம், லவணமுகிப் பாசாணம், நாகப்பாசாணம் ஆகியவை எல்லாம் வாதம், வசிய முதலியவைக்கு உபயோகமாகும்.

தொட்டிப் பாசாணம் :- இது நான்கு வகையாகும். பாதரசமும் கெந்தமும் சேர்த்துப் பாத்திரத்தில் கலக்கும் போது உண்டானது. தராட்டியம், விஷவேஷி, வேஷகாரி எனப்படும். அயத்தொட்டி, செம்பு தொடடி, எருமை நாத்தொட்டி,

பொன்தொட்டி என நான்கு வகை உண்டு, பாண்டத்தி, அறுப்படியாழ் செகப்பிச்சி வெள்ளச்சி, அயத்தி.

சிங்கி பாசாணம் :- மிறுகுதாரு, ரத்தசிங்கி, அமிர்தசிங்கி, ஏமசிங்கி, பொன்வர்ணசிங்கி, ரசிதவர்ண மீயந்தான். மிருதுவாங்கி, உபரச சத்துரு.

தீமுருகல் பாசாணம் :- வடிபட்ட காந்தி, சூத மாளை, கெற்பமகேஸ்வரி, மால்முறுகல், முகியின் வர்ணம், இடுகந்தகம் பட்டி.

கருமுகில் பாசாணம் :- தீருமுருகலின்மீது உண்டாகின்ற பாசாணம் காக்கையைப்போல் நிறமுள்ளது. வசுகண்மூக்கு, தாம்பரபேதி, சயனமறு என்பது இதன் பெயர்கள்.

சாதிலிங்கம் :- லிங்கத்தின் பதங்கமாகும், லிங்க மிங்கிலி, சிவசக்தி, பற்பரம், மாத்தகம், வாதிலிங்கம், வாசுகந்தம், கஞ்சாஞ்சன்.

வெள்ளைப்பாசாணம் :- எலிக்கு காலன், விஷராசன், கொடிய விஷம், குடோரி, உமிரிக்காலன், முள்ளை, முடிப்பாசாணம், கற்பாரம், கற்காரன்.

கெவுரிப் பாசாணம் :- ரசவிரிச்சூரணம், ரஞ்சனி, பொன்னிச்சி, சங்கரன்பெண்டி, தலங்கும் சோதி, அயன்கரணமாயி, ஆனந்தவாதி, அண்டமுதசோதி, உவரி, ஓங்கார உருவொளி.

வைப்பு அரிதாரம் : அம்புசத்தில் வாழ்மடந்தை, கொச்சியின் குழந்தை, அரியின் தாரத்தி, பிராமணப் பெண், தனத்தி, கனத்தி.

பவளப்புத்து பாஷாணம் :- லோகத்தைப் பறியாக்கி, புற்றின் குழவி, கற்பகக் கொடிச்சி, சுணக்கி, சுகந்தி, வெள்ளியை சூரியனாக்கி, சொர்ணமாக்கி, பவளக்கன்னி.

கோடாசூரி பாஷாணம் :- கொடிய மன்னன், குருமுறை, களிம்பகற்றும் வண்ணான், வளம் காட்டும் வேந்தன், திருடன், நஞ்சான வாதராசன், வேடன், வெண்டாளன், வெள்ளிமித்திரு.

பஞ்சபட்சிபாசாணம் :- பஞ்சதாது, சித்திரப்பட்சி, அஞ்சுவர்ணதாது, மஞ்சள் பரங்கிப்பாலைக் குப்பிக்கன்னி, குடஏமம்.

குங்கும பாசாணம் :- நவலோகமாக்கி, அரும்பி, மகத்தான கன்னி, பொற்கொங்கைக் குளச்சி, பொன் ஆண்டிச்சி, பினாகப்பாணி, ஆடகத்தி.

ரத்தபாசாணம் :- நாதாந்தி, பாங்கிச்சி, பராபரக்கன்னி, பறிகெற்பதாது, உங்கக்கொடிச்சி, ஆண்டிச்சி, பொன்னிச்சி, ஆலகால அரனின் பாகத்தி, சிகப்பி,

துத்தம் தூபுரமர்ஞ்சி, பிச்சிகபரி .கறபரி, ஏகிதம், செயநாகம்; சொறியோன், நேத்திர நிர்மலம், இரசக வேர்புடம், நாகரஞ்சகம்.

துரிசி :- சுடலையின் சீவகத்தி, தாம்பரத்தின் கெற்பம், நீலநிறக்காளி, பால்பச்சை மேனி, வத்தாத மேனி, மணியிடம், குரு, கொழுஞ்சுடர், பரிசுத்த பாணி, செஞ்சுடானின் மடர், ஆதிமகாகுரு, சதாசிவன்மிடர், வேதாந்திசாதி, விடமுண்டோன் மடர், வாளேந்திய கண்ணன்.

இரசிதப்பாசாணம் - மதிக்குலம், மினிச்சி வெள்ளை, அரளமேனி, வெண்பூதச்சி, கண்டில் வெள்ளை, கடுங்காந்தி, தாம்பிரத்தை·தாரமாக்கி, சூதத்தை பேதமாக்கி.

சூதப்பாசாணம் :- மலைக்குறவன், வாசுகிநாதன், காந்தன், காமக்குடியோன், யோகசித்தி, காயசித்தி ஆனோன், நாதக்குப்பியில் நுணுக்கமானோன்.

நீலப்பாசாணம் :- கறுப்பி, காலன், காங்கையான், சோமன், மதியமான், தனஞ்சயன், பசுமையானோன், வியன், வெண்ணிலா ஒடுக்கன்.

கெந்தகப் பாசாணம் :- நாதச்சடக்கன், பந்தநாதன், பார்த்தன், விசயன், முத்தன், முயலகன், மூதண்டச்சத்தி, முரசநந்தன், நாயகன், நவலோகப்பேதி.

சோரப் பாசாணம் :- நவலோக மாரணகாரன், கார்முகக் கள்ளன், கடுவேகி, கைப்புமானோன், அழகன். தீரன், திருடன், செம்பின்வேதை.

காகப்பாசாணம் :- கருமுகில்நாதன் களங்கு, வாசுகிக்கொடி, வாருதியின் வாசகன், மாசிகுருக்கன், பசி, புத்தி, புலூர்சிதம், தாரத்தை கறுப்பாகினோன், சனியின் வாகனம்.

லவணப் பாஷாணம் :- லவணத்தின் கூர்மை, நாதவேதி, ஆதிக்கண் கூர்மை, நவலோக ஏமமாக்கி, சரக்குகளை சுன்னமாக்கி, கவளத்தின் கம்பி, சுடும் பதங்கன்.

நாகப் பாசாணம் :- நாகக் கடை புரட்டி, எதிர்பட எரிப்போன், சீசம், சீறல், திரண்டகற்ப பதங்கி, குடிலம், நாதக்குந்தளமாக்கி, சூதத்தை பொன்னாக்கி.

இந்திர கோப பாசாணம் :- மகரக்கன்னி, இந்திரசக்தி, மந்திரரூபி, வானவர் போற்றி, மகத்தான கன்னி, பதங்கிச்சி, அழகு துரைப்பெண், ஆயிரங்கண்ணுள்ள அதிர்ஷ்டச் செல்வி, சாதக ஏமத்தி.

பாசாணம் முப்பத்திரண்டையும் பல நூல்களை ஆராய்ந்து நன்றாக பிரித்துப் பார்த்து பழகித் தெரிந்து சொல்லி இருக்கிறேன். பச்சையின் வேதை, வைப்பு முறைகள், குளிகைக்கு சத்து எடுக்கும் முறை முதலியன சொல்லியுள்ளேன். பறங்கி வைப்பு பாசாணம் (செயற்கை முறை பாசாணம்) முப்பத்திரண்டும் தாதுக்கள் சேர்த்துச் செய்வதற்குச் சித்தர்கள் சொன்ன முறைகள் எல்லாம் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். பல நூறுமுறைகள் தெளிவாகத் தெரியும்படி சொல்லி இருக்கிறேன், வேதை, தாது முதலிய வகைகளின் வைப்பு முறைகள் எல்லாம் நிகண்டில் சொல்லியுள்ளேன் உபரசம், சாரம், காரம், பாசாண வைப்பு, முதலியவைகளை மாலை போல கோர்த்து கொடுத்துள்ளேன், (அடிப்படையை) கருவை எல்லாம் வெட்ட வெளியாகச் சொன்னேன். குருவிற்கு அர்ப்பணம் செய்தது போல சரக்குகளின் பெயர்களை எல்லாம் நிகண்டில் சொல்லியுள்ளேன்.

**உலோகங்களின் பெயர்கள் (274 முதல் 288 வரை)**

பொன்னின் பெயர் : சொர்ணம், கனகம், வள்ளம், அருக்குமம், சாதகும்பம், காஞ்சனம், சம்பு நிதம், சாதரூபம், ஆடகம், ரமம், பசுங்குரு, இரணியம், காஞ்சாரத்தினம், தமனியம், பூஷணம், மத்கப்பரி, ஆதிச்சிய நாகம், ஆதி ஆதித்தன், மேரு, பெருந்தாய், ஆணிமுத்து, ஆதித்தன் விந்து, குந்தளத் தகடு.

வெள்ளி : சுப்பிரிகம், ரசிதம், துய்யான், சவுத்தியம், வசு, சிரேட்டமதி, மரப்பாச்சி, மகாசுரம், வான்மின், எருமை நாக்கு, கொட்டைக்காசு, சந்திரவாய், சந்திரஆதி, சந்திரவாசன், சுவேத காஞ்சனம், ரூபாய், ஈரைஞ்சு பிறப்பி, மதுரசம், தந்திரத்தாரம்.

செம்பு : ரவி, செந்தலைராகி, கம்பி, தாம்பிரம், மிலேச்சமுகம், ரத்ததாது, பழுப்பின் மாங்காளி, பஞ்சன், திரியம்பகம், தும்பம், தூம்புறம், உம்பரம், விடம்.

காரீயம் : களங்குக்கல், கிராவண்ம், பாரி, பலதோசம் போக்கி, களங்குக்ரு ஆதி, கருநாகம், சவளை, கள்ளம்போக்கி, நாரி.

வெள்ளீயம் : வெண்நாகம், புசங்கம், முறகம், வள்ளி, மாங்குழல், சீங்கம், செயரசத்தின் சேவகன், நவலோகச் சூரன்.

நாகம் : நற்சோரம், போகத்தின் பொருமல், பொங்குவோன், அஞ்சுவர்ண நிறத்தோன். மஞ்சளானோன், தாம்பரவேதை, வாத இரும்பு,

பித்தளை : கூத்தோடி, ஊத்தபரி, முழுக்கு, குடவன், காளிக்கம், நாற்றப்பொன், சேரு, முதலிய பெயர்கள் எல்லாம் செம்பும் நாகமும் சேர்த்து உண்டான பித்தளைக்காகும்.

வெண்கலம் : மிரளும் தோஷம், கஞ்சம், மங்கல ஓசை, கலங்கிண்ணி, கண்ணாட்டி மணி, மங்கல மாருதம், கஞ்சவாசகம், பீனிசம் முதலிய பெயர்கள் எல்லாம் செம்பும் வெள்ளீயமும் சேர்த்து செய்யப்படும் வெண்கலத்திற்காகும்.

திரா : செம்பும் காரீயமும் கூட்டி செய்யும் இதன் பெயர்கள் மாங்கொட்டு, கருலோகம், மொட்டச்சி, முறிசல்.

இரும்பு : செயமாகும் சத்து, அயம், கறுப்பி, மதியின் வாழ், பூமிநாதம், கருப்பி, லோகம், பிண்ட துத்தம், ரோசமானக்காரி, ரெகிளம், இரும்பின் கிட்டம், கிருஷ்ண அயம்.

உருக்கு : சங்குமணி, ஏழுகரை, தீட்சணம், அயக்கடியம், விதனக்குடோரி, அரம், அத்தலோகம், துத்த லோகம், கிடலோகம், எஃகு.

உலோகத் தொகுப்பு : தங்கம், வெள்ளி, செம்பு, காரீயம், வெள்ளீயம், துத்தநாகம், பித்தளை, வெண்கலம், திரா, இரும்பு, உருக்கு முதலிய பதினொன்றும் உலோகங்களாகும்.

உலோகங்களை நன்றாகத் தெரிந்து கொண்டு செய்யும் முறையையும் தெரிந்து கொண்டு களங்கு, சுண்ணம், செந்தூரம் முதலியன தெளிவாகச் செய்து கொடுத்தால் மோசமில்லை. சாத்திரங்கள் பொய்யாகாது. நிகண்டில் சொன்ன (மருந்துகளை விட்டு விட்டு) வாதம் மட்டும் செய்து பார்த்தால் பலன் அளிக்காது.

**உப்பு கெதை (289 முதல் 298வரை)**

இரண்டு படி கல்லுப்பை அடிகனமுள்ள சட்டியில் போட்டு நான்குபடி கடல்நீர் விடவும். அந்த அடுப்பில் ஏற்றி எரித்தால் உப்பு கரைந்து போய் விடும். துணியில் வடிகட்டிக் கொண்ட பின் அதை (வடிகட்டிய) சட்டியின் மேலே சீலை கட்டிக் கொட்டிக் கொள்ளவும். அந்த அடுப்பில் ஏற்றி தீபம் போல எரிக்கவும். தண்ணீர் வற்றியவுடன் இறக்கி ஆறவைக்கவும்.

ஆறிய பிறகு அடியில் உள்ள உப்பை மட்டும் எடுத்து பாத்திரத்தில் போடவும். நான்குபடி கடல் நீர்விட்டு காய்ச்சவும். உப்பு கரைந்த பிறகு இறக்கி ஆறவைக்கவும். துணியில் வடிகட்டிக் கொண்டு சட்டியை துணியால் மூடி அடுப்பேற்றி காய்ச்சவும். தண்ணீர் வற்றியபின் இறக்கி ஆற வைக்கவும். அடியில் உள்ள உப்பை எடுத்து புதுசட்டியல் போட்டு நான்குபடி கடல்நீர் விடவும். காய்ந்த பின்பு இறக்கி வடிகட்டிக் கொண்டு வேறு துணி கட்டி காய்ச்சினால் தண்ணீர் சுண்டியபின்பு உப்பு இருக்கும்.

இப்படியே மாறிமாறி முப்பத்திரண்டு தடவை செய்தால் கெட்டியான உப்பு கிடைக்கும். வைரம் போல இறுகிக் கொள்ளக் கூடியது. கரி அடுப்பில் உருக்கிப் பார்த்தால் தங்கம் போல ஒளி வீசக்கூடியது.

மெழுகில் கெதை (கதை) போலச் செய்து ஐந்து பட்டை போல வரிக்கோடுகள் வைக்கவும். மண்கட்டியை காயப்போட்டு மெழுகு கதையை வைத்து (அச்சுப்போல செய்து கொண்டபின்) எடுத்து விடவும்.

காய்ச்சி எடுத்து வைத்துள்ள உப்பை குகையிலிட்டு உருக்கிக்கொண்டு வார்த்தால் கதையாகி விடும், கதை நடுவில் சீலையை சுத்தி கக்கத்தில் வைத்துக்கொண்டு மலைகளில் ஏறலாம். பாசாணங்களையும், அரிய மூலிகைகளையும் தேடலாம். புலி, கரடி,இனங்கள், பாம்பு முதலியன சிவகெதையைக் கண்ட உடன் வணங்கும் (பணியும்) சித்தர்கள் எல்லாம் வா வா என்று வரவேற்பர், யாராவது சிவகெதையை கேட்டால் கொடுத்து விடக்கூடாது, செலவுக்கு இல்லை என்றால் - வருவாய் இல்லாத போது - செம்பை உருக்கிக் கொண்டு சிவகெதை சீவி (நறுக்கி) அதில் போட்டால் ஆறுமாத்துப் பொன் கிடைக்கும். அதை வைத்து சங்கடத்தைப் போக்கிக் கொள்ளலாம்.

சங்கடம் நீங்கிய பிறகு உபரசங்களைத் தேடு. யோகியர்களைக் கண்டு பேசலாம். எல்லோருடனும் பேசும் போதும் வாழும் வழியைத் தேடு. சத்தான செய்திகளை அறிந்துகொள். வேதாந்த நுட்பங்களை தெரிந்துகொள். மலைகளில் திரிந்து கொண்டே பாதரசத்தை சாரணை செய்யும் விபரத்தைக் கேட்க மறக்காதே. செந்தூரம் செய்வதற்கான குரு மருந்து முறையைத் தெரிந்து கொள்.

மெழுகால் : "மேரு" செய்து மண்ணில் அச்சு செய்து உப்பை உருக்கி வார்த்துக் கொள்ளவும். அந்த மேருவை தண்ணீர் விட்டு காய்ச்சி அடியில் உள்ள உப்பை எடுத்துக் கொள்ளவும்.

பாதரசத்தை சுத்தி செய்த பின்பு கல்வத்திலிட்டு ஊமத்தைச்சாறு விட்டு எட்டு சாமம் அரைக்கவும், அரைத்ததை மிளகுபோல உருண்டை செய்து மேரு செய்த உப்புக்குள் போட்டு வாலுகையில் (மணல் புடத்தில்) வைத்து நெருப்பு எரிக்கவும். ஆறு சாமம் எரித்துவிட்டு ஆறவிட்டு எடுக்கவும். இரும்பு பாத்திரத்தில் போட்டு நன்றாக அரைத்தால் குருமருந்தாகும்.

நவலோகங்களில் இந்த குருவை நூற்றுக்கு ஒன்றாகச் சேர்த்தால் பத்தரைமாற்று போல தெரியும். இதை பணவெடை அளவு எடுத்து பாலில் சாப்பிட்டு வரவும். உடம்பு சூரியகதிர்போல ஒளியுண்டாகும். காயசித்தி, யோகசித்தி. சீக்கிரம் உண்டாகும். சிவகெதையை கையில் வைத்து மலைதனில் சுற்றிப் பார்த்து அரியமூலிகைகளைத் தேடி உண்டால் விரைவில் சித்தியாக முடியும்.

**உப்புகெதையை பஞ்சவர்ணமாக்குதல் (299 முதல் 306)**

உப்புகெதையை ஐந்து வர்ணமான நிறமாக்கும் முறையைத் தெரிந்துகொள். தாளகத்தை எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்கு அரைக்கவும். கெதையில் பெரிய பட்டையில் அதைப் பூசி வெயிலில் காய வைக்கவும். மேலே மண்ணைப் பூசவும். மற்ற நான்கு பட்டைகளையும் சீலை செய்து மறைத்துப்பின் மண்ணுக்குள் புதைத்து வைக்கவும்.

ஐந்து எருவை எடுத்து துண்டாக ஒடித்து வர்ணம் பூசிய இடத்தைச் சுற்றிவைத்து புடம்போடு. நன்றாக வெந்து ஆறியபின் எடுத்துப் பார்த்தால் குங்கும நிறம் உண்டாகி இருக்கும்.

இன்னொரு பட்டையில் கருப்புநிறம் ஏற்ற வழி சொல்கிறேன். கார்முகிலை எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்துப் பூசவும். முன்பு செய்ததுபோல் சீலை மண்செய்து புடம் போடவும். கருங்காலி வைரம்போல கருப்பான நிறம் உண்டாகும். இதை உரசிப் பாலில் கலந்து சாப்பிட்டால் உடல் சிதையாது. மூச்சு உள்ளேயே இருகும். மூலத்தில் இருந்து உச்சிவரை மூச்சு சீராகப் பரவும்.

இன்னொரு பட்டையைப் பற்றி கேள். ஒருபலம் துரிசி வாங்கி வந்து கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்துக் கொண்டு பட்டையில் பூசி முன்போலவே புடம்போட்டு எடுக்கவும். அஞ்செருவில் புடம் போட்டு எடுத்துப் பார்த்தால் பச்சை நிறம் உண்டாகும்.

ஒருபலம் வன்னிகற்பம் (மூங்கில்) எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து ஒரு பட்டையில் பூசி முன் போலவே சீலை மண்செய்து ஐந்தெருவில் புடம் போடவும். எடுத்துப் பார்த்தால் மாதுளம்பூ நிறம் உண்டாகும். இதைப் பணஎடை எடுத்துப் பாலில் உண்டு வந்தால் உடம்பு சிகப்பு அலரிப் போல நிறமாகும்.

வீரத்தை எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து இன்னொரு பட்டையின் மேல் தடவி சீலை மண் செய்து புடம் போட்டு எடுக்கவும். படிகம் போன்ற நிறமுண்டாகும்.

இந்த கெதையை வைத்துக் கொண்டு பெரியவர்களுக்கு தொண்டு செய்து மூலிகையைத் தேடு. பாசாண உபரசங்களைத் தேடி எடுத்து சித்தி செய்து கொள்ளவும். உப்பைக் கட்டினால்தான் வாதத்தை செய்யமுடியும். வாய்ப்பேச்சு வீரர்கள் ஒழுங்காக செய்யமாட்டார்கள். பொன்னை செம்பாக மாற்றுகின்ற முறையும் இந்த உப்புக் கட்டு முறையில் உள்ளது.

### வாருதியின் பெயர்

வாருதியின் பேர்தனையே வகுக்கக்கேளு
வருதிரை முழங்கு நீர் கடலுமாகும்
வார்வமாம் பவமாம் வேலை முன்னீர்
வரிவாரி கடல் காராழிச் சிரைஞாலையாகும்
நிரவமாம் நீர்ப்புணரி நெமிவிலாவளையம்
நெடிசான வார்கலியா மத்தியாகும்
முரவமா முனி முத்திர முத்தங்கள் கொழிக்கு
மூட்டியமகா வேருழக்குங் கடற்பேரே. 307

### கெந்தகச் செம்பு

பேரான கெந்தகத்தின் செம்பு கேளு
பிறிவான கெந்தகத்தைச் சுத்திப் பண்ணி
காரான மூணுபத்துப் பலந்தான் கெந்தி
கல்வத்திற் பொடி பண்ணி அரைத்து மாப்போல்

வேரான வெடியுப்பு நீரைவாத்து
விளங்கரைத்து மூனுநாள் காயப்போடு
பாரான பசுவின் பால் அரைச்சட்டி வார்த்துப்
பரிவாக அதன்மேலே சீலைகட்டே. 308

சீலையின் மேல் கெந்தகத்தைத் திரமாகப் பரப்பிச்
செப்பமாய் சட்டிகொண்டு மேலே மூடி
பானையின் மேல் மண்செய்து உலர்ந்த பின்பு
வளமாகக் குழிவெட்டிச் சக்கரம் போல
ஆலையின் மேல் அடிச் சட்டிப் புதைத்துப் போட்டு
ஆதரவாய் மேற்சட்டித் தெரிய விட்டுப்
பூலையனாலெரு வடுக்கிப் புடத்தைப் போடு
பேரான மணி மணியாய் இறங்கும் பாரே. 309

இறங்காமல் கடிச்சுக் கொண்டிருந்து தானால்
யேத்தமாஞ் சீலை கட்டிப் பாலும் விட்டு
முறங்காமல் முன்போலப் புடத்தை போடு
முயற்சியாய் ஆற விட்டுக் கழுவி வாங்கி
கறங்காமல் கல்வத்திற் போட்டரைத்துக்
காரியமாய் வெடியுப்பு நீரா லாட்டித்
தறங்காமல் முன்போலப் புடத்தைப் போடு
சாங்கமாய் ஆறியப்பின் எடுத்து வாங்கே. 310

வாங்கியே கல்வத்தில் நீராட்டி
வளமாக முன்போலப் புடத்தைப்போடு
தேங்கியே மும்முறைதான் கழுவிப் போட்டு
சுத்தியாய்த் தண்ணீரில் கழுவிப் போட்டு
ஓங்கியே கல்வத்தில் பொடியாய்ப் பண்ணி
உத்தமனே மாந்துளிரின் சாறு வார்த்து
நீங்கியே நால் சாமமாட்டிப் பின்பு
நேர்பாக முன்போல புடத்தைப் போடே. 311

போட்ட பின்பு செங்கீரைச் சாறு தன்னில்
பேசாமல் நால்சாமம் அரைத்துக் கொண்டு
மூட்டபின்பு முன்போல் புடத்தைப் போடு
முயற்சியாய்ச் சானாங்கிச் சாத்தறைத்து
நாட்ட பின்ப்புப் புடம்போடு நலமாய் வாங்கி
நலமான உத்தா மணியின் சாத்தரைத்து
நீட்ட பின்புப் புடம்போட்டு எடுத்தக் கொண்டு
நேராகச் சூதத்தைச் செய்து கொள்ளே. 312

சேர்த்துமே முலைப் பாலாறு சாமமாட்டித்
திறமாக உண்டைப் பண்ணு முளகு போலக்
கோத்துமே நவலோக மிடைக்கிடையே - யிய
கொள்கிறதோர் லோகமெல்லாம் செம்பாய்ப்போகும்

பாத்துமே பரிதானுஞ் செம்புமாகும்
பண்பான் ரசிதமது செம்புமாகும்
நாத்துமே நாகமது செம்புமாகும்
நலமான காரீயம் செம்புமாமே. 313

காரீயம் சுத்தி பண்ணிக் குகையிலிட்டு உருக்கிக்
கிராசமாய்ப் போட்டு வர இடைக்கிடைதான்
சாரீயா வாரிய மயணம் போல் தூளாய் போகும்
மருவவே ஒட்டிலிட்டு ஊதிப் போடு
நாரீயம் நலமான செம்புவாகும்
நாலுக்குப் பரியொன்று துட்டுஉருக்கிக்
கூரீயங் கிண்ணிபோல் கொட்டிக் கொண்டு
குறிப்பாகச் சில்லென்று கொட்டிக் கொள்ளே. 314

கொள்ளென்ற கிண்ணியிலே கருமத்தஞ் சாறு
குறிப்பாக விட்டதுக்குள் சுத்தித்த சூத
மள்ளென்ற யிருபலந்தான் கூடவிட்டு
மண்செய்து வாலுகையின் மேலே வைத்து
நள்ளென்ற நால்சாமந் தீயைப் போடு
நலமாகச் சாறெல்லாஞ் சுண்டிப் போனால்
சுள்ளென்ற அயத்தாலே கிண்டி விட்டு
அப்பனே மேற்சில்லு மூடிப்போடே. 315

## இரசமணி குளிகை

போட்டுமே ஒரு சாமம் எரித்த பின்புப்
புகழாக ஆறவிட்டு அடுத்து வாங்கி
வேட்டுமே வெண்ணை போலிருகிக் காணும்
மெய்யான வெண்ணையெல்லாம் வழித்து வாங்கி
கூட்டுமே குளுந் தண்ணீர்க் குள்ளே போட்டு
குறிப்பாகக் கட்டியது மணிப் போலாகும்
வாட்டுமே மத்தங்காய்க்குள்ளே வைத்து
வரிசையாய் மூவாதப் புடத்தைப் போடே. 316

புடம் போட்டுச் சூடனுடத் தீயில் வாட்டி
பேரான யெண்ணைக் குத்தி கரண்டிதனிலுருக்கி
நிடம் போட்டு ரெண்டாகப் பண்ணிக் கொண்டு
நேராகக் கரத்திலொன்று வாயிலொன்று
தடம்போட்டு மலைதனிலே சஞ்சரித்துச்
சாந்தமாய் சித்தரை நீ கண்டு பேசி
வடம் போட்ட மகாமூலிகையுந் தேடி
மகத்தான உபரசங்கள் பாஷாணந் தேடே. 317

தேடியே ஒவ்வொன்றாய் சம்பாதித்து
திரமானக் குளிகைகட்டி கெவன வழியோடு
நாடியே காரீயம் செம்பு ஒன்று
நற்தங்கம் நூற்றுக்கு ஒன்றே ஈய

காடியே கனகமது செம்பாப் போகும்
கைவளையல் மோதிரங்கள் குண்டலங்கள் பண்ணு
சீடியே சிவ வேடந் தரித்துக் கொள்ளு
சிகாரமாம் அக்ஷரத்தை மனதில் உண்ணே. 318

## தங்கச் செம்பு

உண்ணவே நவலோகம் செம்புமாகும்
உத்தமனே ஒவ்வொன்றிற் கோடி வேதை
பண்ணவே பறியிட்டுச் சூதமிட்டு
பண்பான கெந்தியிட்டு செந்தூரித் துண்ணு
தண்ணவே மணியதுவுந் தங்கம் போலாஞ்
சார்வான நவலோகம் ஆயிரத்துக்கு ஓடும்
எண்ணவே ஏமத்தால் கெர்ச்சிக் காதே
மனமடங்கி ஊமையைப் போல் மவுனமாமே. 319

## காரசார வல்லமை சமுதாயம்

மவுனமாஞ் சவுக்காரம் சுன்னமானால்
வாதமுமாம் வசியமுமாம் அயம்தங்கமாகும்
புவனமாம் பூனீறு சாரத்தைக் கொல்லும்
போக்கானச் சாரம் விட்டால் செயனீரில்லை
தவனமாஞ் சத்தியது சூதஅமுக்கு அகற்றிச்
சாதமா யெவச்சாரந்திரா வகத்துக் காதி
கவனமாம் காசியென்றச் சாரந்தானுங்
கருதியதோர் குயிலாங்கைக் காதியாமே. 320

## காரசாரத்தில் நிற்குறது

ஆமென்ற ஏகம்பச் சாரந்தானும்
அணுகினால் நவலோகம் ஏமமாகும்
வாமென்றச் சீனமது குருவுக்காகும்
மகத்தானக் காரந்தான் உருக்கினமாகும்
நாமென்றச் சூடனது நீரைக்கட்டுங்
கற்பூரம் லோகத்தைத் திண்ணு போடும்
வேமென்ற அமுரியுப்புச் சுன்னந்தனில்
விளங்கியதோர் நீரெல்லாம் விடுவிக்கும் பாரே. 321

பாரப்பா கல்லுப்புச் சுன்னந்தானும்
படுமுன்னே சரக்கெல்லாங் கட்டிப் போகும்
வேரப்பா வெடியுப்பு வாதத்துக்கு
வேரைவிட்டாற் காயுமில்லை பூவுமில்லை
ஈரப்பா இந்துப்பில் பூரமுப்பாம்
இயலான வளையலுப்புப் புடத்துக்காதி
தாரப்பா சவுட்டுப்பிற் சூதம் நீறுந்
தயங்காதத்திலால வணச் சார்வு கேளே. 322

சார்வான வங்கமது நீறிப்போகும்
தயங்காத லவணமென்ற கெந்திதானும்
சோர்வான செம்புதனை நீறப்பண்ணுஞ்
செயமானப் பிடாலவணம் நாகம்நீறும்
பார்வான சிந்துவென்ற லவணந்தானும்
படுமுன்னே வெண்காரங் கட்டிப் போகும்
கார்வான காச்சுவென்ற லவணத்துக்குக்
கண்டரது குருவான கணக்குமாமே. 323

ஆமென்ற பொன்னம்பர் சூதந்தன்னில்
அணைந்தாக்காள் கஞ்சமாந் தோஷம் போகும்
வேமென்ற மீனம்பர் சீனத்தை கட்டும்
விளங்கியதோர் கடல்நுரைதான் கல்லுப்புக்காதி
வோமென்ற யிருபத்து அஞ்சு தன்னிற்
வுத்தமமாம் வெகு பேர்க்கு ஊணிப்பாரு
நாமிந்தப்படி பார்த்துச் சொன்ன மார்க்கம்
நாதாக் களிப்படியே பார்த்திடாதே. 324

### உபரசச் சமுதாயம்

பார்த்திட்ட உபரசத்தின் குணத்தைக் கேளு
பாங்கானத் துரிசியது சூதத்தைக் கொல்லும்
தேர்த்திட்டப் பொன்னி மிளைச் சத்து தன்னில்
சொர்ணமது குருவாகிச் சுன்னமாகும்
நார்த்திட்ட ரசிதநிமிளைச் சத்து தன்னில்
நலங்காத ரசிதமது குருவுமாகுங்
கார்த்திட்டக் கஞ்சமா நிமிளை தன்னில்
கடிசான வெண்கலந்தான் சுன்னமாமே. 325

சுன்னமாம் லோகமென்ற நிமிளை தன்னில்
சூக்ஷமாய்க் குருவாகும் இரும்பு தானும்
கன்னமாகுங் காகமென்ற நிமிளை தன்னில்
கடியதிறாச் சுன்னமுமாம் கருதிப்பாரு
அன்னமாம் அப்பிரகச் சத்துனாலே
ஆதியாம் சூதமது கட்டிப் போகும்
சின்னமாங் காந்தத்தின் சத்து தன்னால்
தேகசித்தி சீக்கிரத்தி லாகும் பாரே. 326

சீக்கிரத்தில் கற்பூரச் சிலையினாலே
செயமான உபரசங்கள் சுன்னமாகும்
ஆக்கிறத்திற் கல்நாறுச் சத்துனாலே
ஆகாகா குளிகையிலே சத்துயீந்தால்
பாக்கிறதிக்கினிலே வெகுதூரங்கள்
டாகான கண்ணுக்கு ஒளியோ மீறும்
சாக்கரத்தில் சாத்திர வேதியின் சத்தால்
சார்வான சோரமது கட்டிப் போமே. 327

கட்டுக்கல் மத்திற்சரக் கெல்லாந் தான்
கண்ணினுட அஞ்சனத்தின் சத்து தன்னால்
இட்டுமே உபரசங்கள் ஈயமாகும்
இசைந்தாருங் கலசத்தால் சகலசித்தி
பட்டுமே படிகக்கல் சத்தினாலே
பால்கொள்ள காயசித்தி பரிவா மெத்த
கட்டுமே சுக்கான் கல்சத்தினாலே
சுழன்றுருகிக் காயசுத்தி சுறுக்கிலாமே. 328

ஆமப்பா வயிரக்கல் சத்தினாலே
யாச்சரியம் சாரத்தில் அனல் விக்கும்
நாமப்பா வாதத்தின் சத்து தன்னால்
நவலோகம் வேதையாம் நாட்டிப் பாரு
போமப்பா கெருடபட்சி சத்தினாலே
பொதி யரவங் கடித்த விஷம் உள்கொள்ளாது
வோமப்பா ஒட்டினிட சத்துனாலே
உயர்கின்ற குளிகையுட தோஷம் போமே. 329

போமென்ற செங்கல்லுச் சத்து தன்னால்
பொன்குளிகைக்குத் துலக்கங் காணு
போமென்ற எலும்பினுட சத்துனாலே
இடும்பாகும் சரீரத்துக்கு உறுதிமெத்த
வாமென்ற மயிருடைய சத்தினாலே
மகாவேக முண்டாக்கும் குளிகை தன்னிற்
நாமென்ற நத்தையுடச் சத்துக்குத்தான்
நாக்குதான் மெதுவாகி நற்கீதமாமே. 330

கீதமாம் நண்டினுட சத்துனாலே
கெட்டியாய் சூதமது கட்டிப்போகும்
நாதமாம் நாகரத்தின் வண்டுச் சாற்றால்
நாட்டியே ஓடயிலே தாகமில்லை
சூதமாஞ் சிப்பியுட சத்தினாலே
சோரமொடு காரீயஞ் சுழன்று சாகும்
மாதமாம் ஆமை யோட்டுச் சத்தினாலே
யாச்சரியம் பூமியிலே கால்படாதெண்ணே. 331

எண்ணவே முட்டையுட சத்தினாலே
யேதமாம் வெள்ளீயம் நீரை வாங்குந்
தண்ணவே தந்தத்தின் சத்தினாலே
தயங்காமல் வெடியுப்புக் கம்பியாய்க் கட்டும்
மண்ணவே வராகத்தின் கொம்புச் சத்தால்
வளமான் வீரமது குருவுமாகும்
பண்ணவே மாட்டுக் கொம்பு சத்தினாலே
பாஷாணஞ் சிவப்பாகும் பண்பாய்ப் பாரே. 332

பாரப்பா ஆட்டிஹுட கொம்புச் சத்தால்
பரிவான உப்பெல்லாஞ் சுன்னமாகுந்
தாரப்பா பல்லினுட சத்து தன்னால்
தயங்காமல் வெகுதூரம் பார்க்கப் பண்ணும்
பூரப்பா பூனாகச் சத்துதன்னாற்
புகழ்ந்து நின்ற குளிகைக்கு தீபனமாகும்
வேரப்பா இந்திர கோபச் சத்தினாலே
விண்தனிலே யாடயிலே தரிக்கலாமே. 333

தரிக்கலாஞ் செவ்வட்டைச் சத்துதன்னால்
தயங்கியே நடக்கலாங் கெவனந்தன்னில்
மரிக்கலா மண்டுகச் சத்துனாலே
வார்த்தைகள் தான் சொல்லலாம் கெவனந் தன்னில்
குறிக்கலாங் கோழியுடச் சத்தினாலே
கொடியயிருட் டோடயிலே தீபதிங் காணும்
வரிக்கலாங் கரடியுட சத்தினாலே
வயத்தம்ப மாகுமப்பா மார்க்கந்தானே. 334

மார்க்கமாஞ் சங்கினுட சத்தினாலே
மணிகனக்கும் கானாத மருவிப்பாரு
மூர்க்கமாம் முத்தினுடச் சிப்பிச்சத்து
மூலமாம் எவச்சாரம் முத்துப் போலாம்
மார்க்கமாம் முத்தினுட சத்து தன்னால்
ஆணையாஞ் சூதமது மணியுமாகும்
பாற்கமென்றப் பவளமது சத்தேயானால்
பரிவான சூதமது யேமமாமே. 335

ஏமமாங் கோமேதகச் சத்தினாலே
இந்திர சாலவித்தை யெல்லாம் அறியலாகும்
பூமமாம் புஷ்பராகச் சத்தினாலே
பூமிக்குள் அடக்கமெல்லாந் தெளிவாய் போகும்
வாமமாம் வயிரத்தின் சத்துதன்னால்
வழங்கியதோர் சுன்னமெல்லாம் வரிசையாகும்
பாமமாம் பச்சையுட சத்தினாலே
பருதியுட கிரண மெல்லாம் பனிப் போலாமே. 336

பனியான நீலத்தின் சத்துனாலே
பச்சையென்ற கண்டருமோ குருவுமாகும்
தினியான சிவப்பினுட. சத்துனாலே
செயலான தாதுவெல்லாம் செம்பேயாகும்
மணியான வைடூரிய சத்துனாலே
மகாநாகம் வணங்கியே வசனம் கேட்கும்
கெனியானக் கெண்டகச் சிலை சத்துனாலே
செட்டியான நாகமது செமபுமாமே. 337

செம்பான சூடாலைக் கல்லினாலே
  சேர்ந்த நவலோகங்கள் செந்தூரமாகும்
வம்பான மாக்கல்லுச் சத்துனாலே
  மருவியதோர் தாளகந்தா னீயமாகும்
செம்பான தேக்கல்லுச் சத்துனாலே
  சிலைதானுஞ் செம்பாகுந் திறமை மெத்த
நம்பான மஞ்சக்கல் சத்துனாலே
  நாரும்பூ செம்பாகும் நயந்து பாரே. 338

நயந்துபார் தவளைக்கற் சத்துனாலே
  நலமான குளிகைதனைத் தரையில் வைத்தால்
தயந்துபார் தத்தியே குதிக்கும் ஊறும்
  தயவானச் சிலாவங்கச் சத்தினாலே
பயந்துபார் பாசாணம் பற்பமாகும்
  பரிவான சிலாநாகச் சத்துனாலே
வியந்துபார் வெடியுப்புச் செந்தூரமாகும்
  விடுஅன்ன பேதியென்ற சத்துகேளே. 339

பேதியென்ற சத்தினாலே லிங்கமது மெழுகாம்
  பேதியென்ற அங்கியென்ற சத்தினாலே
சாதியென்ற நவரத்தினந் தண்ணீராகுந்
  தனித்துச் சொன்ன பேதியுடச் சத்தினாலே
நாதியென்ற நவலோகம் தண்ணீராகும்
  நலமான மாங்கிச பேதி சத்தினாலே
ஓகியென்ற உபரசங்கள் தண்ணீராகும்
  உவர்மண்ணின் சத்தினாலும் உபரசங்கள் நீரே. 340

நீரான கற்கிட்ட ஞ்சத்தினாலே
  நிலைத்து நிற்குங் காரமது கல்தானாகுங்
காரான கருமணலின் சத்தினால் அயந்தானு செம்பாங்
  கலந்துநின்ற சொர்ணமது குருவுமாகுந்
தேரான செம்மணலின் சத்தினாலே
  திகழான காரீயஞ் செம்புமாகும்
மாரான சுத்தமணல் சத்துனாலே
  அயந்தானுஞ் செம்பர்கும் அறிந்துபாரே. 341

அறிந்துபார் முடவாட்டுச் சத்தினாலே
  அழகான ரசிதமது செம்புமாகும்
பிரிந்துபார் கருவண்டு சத்துதன்னால்
  பேணியதோர் குளிகைக்குக் கீதமுண்டாம்
டறிந்துபார் பண்ணிமுள்ளு சத்து தன்னால்
  பண்பான சூதமது பாலையாகும்
யெறிந்து பார் எலிமுள்ளு சத்து தன்னால்
  ஏத்தமாம் வீரமது செம்புமாமே. 342

ஒற்றமாங் கடல்ஏ சையின் சத்துதன்னால்
எளிதிலே கட்டிப்போம் கல்லுப்புதானும்
நாற்றமாம் மீனெலும்புச் சத்துதன்னால்
நல்கெவுரி கட்டியது ஈயமாகும்
முற்றமாம் முள்சங்கு சத்துனாலே
மூர்க்கமாம் வெள்ளையது ஈயமாகும்
பேற்றமாம் பேரோசனைச் சத்துதன்னால்
பிரளாமல் கெவனத்தி லோடலாமே. 343

ஓடலாம் நாகப்பச்சை சத்துதன்னால்
உருக்குவது வுசத்தியாம் செம்புமாகும்
மாடலாம் மரகதப்பச்சை சத்துதன்னால்
மாசத்த இரும்பதுவும் செம்புமாகும்
பூடலாம் புத்தாம்பழச் சத்துதன்னால்
பொங்குகின்ற வெங்காரஞ் சுன்னமாகும்
வீடலாம் வெண்சுக்கான் சத்துனாலே
வெள்ளீயம் வெள்ளியாய் விளங்கும் பாரே. 344

விளங்கவே கதண்டுடை சத்துனாலே
வேண்டியதோர் பாதாள நிதிகள் காணும்
வழங்கவே காகச்சிலை சத்துனாலே
மகத்தான காந்தமது செம்புமாகும்
களங்கவே காண்டாமிருகச் சத்துனாலே
கடிசான பாம்புவிஷம் கழன்று போகும்
நலங்கவே கஸ்தூரி யெலும்பின் சத்தில்
நாறியதோர் உடம்புக்குள் நாற்றம்போகும். 345

போகுமே மந்தாரச் சீலையின் சத்தில்
பேரான சூடனது செம்புமாகும்
வாகுமே கடற்பாசி சத்து தன்னால்
வாங்காத ரோமமது வண்டு போலாந்
தாக்குமே சாளக் கிராமத்தின் சத்து தன்னால்
தங்கமது செம்பாகுந் தாக்கிப் பாரு
யேகுமே மாங்கிசச் சிலை சத்துனாலே
யெடுத்தோடுங் குளிகைக்கு மிடுக்குண்டாமே. 346

ஆமப்பா மாநதுள்ளிர்க்கல் சத்துனாலே
அடங்காத பேதியது செம்புமாகுங்
காமப்பா காஷ்மீரப் படிகச்சத்து
கயிலையுரை சிவன் வந்து நிர்த்தஞ் செய்வார்
வேமப்பா கற்காவிச் சத்துனாலே
வெள்ளியுஞ் செம்பாகும் விளங்கிப்பாரு
சேமப்பா செம்புமணற் சத்துனாலே
நிறமான சவ்வீரஞ் செம்புமாமே. 347

ஆமென்ற நாகமென்ற சத்துனாலே
ஆதியென்ற சூதமது செம்புமாகும்
காமென்ற காரீய மணலின் சத்தால்
காஷியாம் லிங்கமது செம்புமாகும்
வேமென்ற வெள்ளீய மணலின் சத்தால்
வெண்காரஞ் செம்புமாகும் வெகு தூரமோடும்
நா்மென்ற ரசித மணல் சத்துனாலே
நற்கெவுரி செம்பாகும் நயந்து பாரே. 348

பாரப்பா ஈயம் என்ற சத்துனாலே
பாங்கானத் தாளகமுஞ் செம்புமாகும்
யேரப்பா லோக மணற் சத்துனாலே
யேத்தமாஞ் சிலையதுவுஞ் செம்புமாகும்
மாரப்பா மயிலிறகுச் சத்தினாலே
மாசற்ற குளிகையிட்டு ஒடும் போது
தாரப்பா சந்திரனில் நடுக்கம் காணும்
தயங்காத சத்தினால் குளிர்ச்சி போமே. 349

## மலைகள் சத்து

குளிர்ச்சியாங் கருஞ்சுக்கான் சத்துனாலே
குதிரைப் பல் பாஷாணஞ் செம்பு மாகுங்
குளிர்ச்சியாங் கானகத்தின் சத்துனாலே
கடுகவே ஓடயிலே நில்லென்றால் நிற்கும்
முளிர்ச்சியாங் குருந்தக்கல் சத்துனாலே
முனையான ஆயுதங்கள் தைத்திடாது
துளிர்ச்சியா மாங்கிஷச்சிலை சத்தினாலே
துரிசியந் தார மாயாகும் பாரே. 350

பாருமே யேமமலைச் சத்துனாலே
பாஷாண வேகமெல்லாஞ் செந்தூரமாகும்
நாருமே நாகமலை கடல் சத்துனாலே
நவலோகஞ் செந்தூரமாகும் பாரு
வேருமே வெள்ளீய மலையின் சத்தால்
வெட்டுக் குத்தேறாது காயந்தன்னில்
காருமே காரீய மலையின் சத்தாம்
கரும்பச்சை பூரமது செம்புமாமே. 351

## தாது அறுபத்து நாலுக்கும்

ஆமென்ற அய்மலையின் சத்துனாலே
அசங்காது காயமது இரும்புத் தூணாந்
தேமென்றத் திராமலையின் சத்துனாலே
சீனமது திறமையாஞ் செம்புமாகும்
வேமென்ற வெங்கல மலையின் சத்துனாலே
வெடியுப்பு செம்பாகும் வெகு தூரமோடும்
ஆமென்ற செம்புமலைச் சத்துனாலே
ஆதியாங் கல்லுப்புச் செம்புமாமே. 352

ஆமெனவே பித்தளை மலைய்யின் சத்துனாலே
அழகான வெடியுப்பு செம்புமாகும்
வோமெனவே உபரசங்கள் நூற்றிரண்டு பத்தும்
ஒவ்வொன்றாய் குணா குணத்தின் உற்பனங்கள் சொன்னேன்
நாமெனவே நாதாக்கள் சொல்லக் கேட்டு
நன்னூலை ஆராய்ந்து தெரிந்த மட்டும்
மாமெனவே மாயி சொன்ன சொல்லைக் கேட்டு
மனசொன்றி மறப்பை யெல்லா மாட்டினேனே. 353

மாட்டினேன் அறுபத்து நாலாய் நின்ற
மகத்தானத் தாதுவுட குணத்தைக் கேளு
காட்டினேன் கற்கடகப் பாஷாணந் தன்னிற்
கருநாகம் செந்தூரமாகும் பாரு
கூட்டினேன் கோளகப் பாஷாணந் தன்னாற்
குளியான வெள்ளீயஞ் செந்தூரமாகும்
சூட்டினேன் சூதப் பாஷாணந் தன்னாற்
சொர்ணமாம் நாகமது சூட்டிப் பாரே. 354

சூட்டிப் பாரரிதாரம் வங்கம் நீறும்
சொற்பெரிய கெந்தியினால் சூதஞ் சொக்கும்
வாட்டிப்பார் வீரந்தான் நவலோகம் நீறும்
விளங்கியதோர் வைக்கிராந்தம் நாகம் நீறுங்
காட்டிப் பார் தாலம் பாஷாணத்துக்குத்
தாரமது தளுக்குக்கும் வெள்ளியாகும் பாரு
மூட்டியதோர் முறகப் பாஷாணந் தன்னால்
முயற்சியாய் நாகமது ஏமமாமே. 355

யேமமாஞ் சிரபந்த பாஷாணந் தன்னால்
எடுத்தோடுங் குளிகைக்கு இயல்பு மெத்த
தூமமாந் தொட்டி பாஷாணந் தன்னால்
துலங்கியதோர் குதிரைப்பல் சறுக்கா வோடுஞ்
சாமமாம் சங்கப் பாஷாணந் தன்னால்
தாம் பிரந்தான் துய்யானாந் தாக்கிப் பாரு
கேமமாங் கெவுரியுடப் பாசாணந் தன்னாற்
கெட்டியான சூதமது செம்புமாமே. 356

செம்பான துத்தப் பாசாணந் தன்னால்
செப்பியதோர் நாகமது செம்பாய் போகும்
பாம்பானப் பலண்டுறுகம் பரிசை வேதை
படுமுன்னே லோகமது யேமமாகுங்
காம்பான காந்தப் பாசாணந் தன்னால்
காயமது சாமத்தில் சித்தியாகும்
நீம்பான லிங்கப் பாசாணந் தன்னாற்
நேரான காரீயஞ் செம்புமாமே. 357

நேரான சரகண்டப் பாசாணந்தான்
நோக்கான துரிசியது குருவுமாகுந்
தாரானத் தாளகத்தால் ஈயங் கட்டுந்
தாக்கான சிலையதுவும் செந்தூரத்தாதி
ஆரான அவுபலப் பாசாணத்துக்கு
அஷ்டமா சித்தியது கைக்குள்ளாகும்
வாரான சாலாங் கந்தார வேதை
படுமுன்னே தாரமது தங்கமாமே. 358

தங்கமாய் கல்லினுடப் பாஷாணத்துக்கு
சார்வான காரீயங் கட்டிப் போகுங்
கங்கமாங் கற்பரி பாஷாணத்துக்குக்
கடிசான செம்பதுவும் ஏமமாகும்
மங்கமா மஞ்சனப் பாஷாணத்துக்கு
அயந்தானும் காரீயமாகும் பாரு
துங்கமாங் கச்சாலப் பாஷாணத்துக்குச்
சுக்கான செம்பாகும் சூட்டிப்பாரே. 359

சூட்டியதோர் சீதாரங்கபங் பாஷாணத்துக்குத்
துரிசியது சுத்த வெளுப்பாகும் பாரு
காட்டிய தோர் கார்முகிர் பாஷாணத்துக்கு
கறுப்பாகுந்தான் கருவாய்ப்பாரு பாரு
தீட்டியதோர் சிலாமதமாம் பாஷாணத்துக்குச்
செயலான காந்தமது ஈயமாகும்
மாட்டியதோர் பீர்க்கப் பாஷாணத்துக்கு
ஆதியாஞ் சூதமது கட்டிப்போமே. 360

கட்டிப்போம் வெள்ளையென்ற பாஷாணத்திற்கு
கடிசான உருக்கதுவும் ஈயமாகும்
முட்டியே முப்பத்தி ரெண்டு தாது
முளைத் தெழுந்த மலைதனிலே உற்பத்தியாகும்
பட்டியாம் பறங்கிவைப்பு முப்பத்தி ரெண்டும்
பாங்காகக் குணமெல்லாம் பகரக் கேளு
தொட்டியென்ற புத்தோடு பச்சையிலே வேதை
தொடுமுன்னே நவலோகம் ஏம மாமே. 361

யேமமாம் பொற் தொட்டி சூதங் கட்டும்
எருமை நாத் தொட்டிதான் கெவுரிகட்டும்
சேமமாச் செம்பானத் தொட்டி யென்றால்
செயலான செந்தூரம் தன்னில் வேதை
ஆமமாம் அயத் தொட்டி களங்குக் காதி
அழகான மிருதாரு சிங்கியென்றால்
பாமமாம் பறங்கிக்கு மாசத்துக்காதி
பண்பான ரத்தசிங்கி சகலமுஞ் செம்பாமே. 362

ஆகுமே ரசித சிங்கித் தாரமாகும்
அழுக்கான யேமசிங்கி பச்சையிலே வேதை
தேகுமே நீமுறுவல் உருக்கினத்தால் வேதை
சூதமது மாரணமாம் சுறுக்கிற் றானும்
காகுமே கருமமுகிலின் பாஷாணந்தாள்
கனமான தாரமது கறுப்பாகில் வேதை
சாகுமே சாதிலிங்கக் கட்டினத்தால்
தங்கமதிற் கூட்டிடவே தங்கமாமே. 363

தங்கமாம் வெள்ளை பாஷாணத்துக்கு
சார்வான வெள்ளீயஞ் சுன்னமாகும்
பங்கமாங் கெவுரியென்ற பாஷாணத்துக்கு
பரிவான காரீயஞ் சுன்னமாகும்
பொங்கமாஞ் சவ்வீரப் பாஷாணத்துக்கு
பொருமியது நவலோகச் சுன்னமாகும்
கொந்தமாங் கோழிகெந்தி யென்ற பாஷாணத்துக்கு
கொடும்பச்சை காட்டுமுன்னே கொடிக்குப் போமே. 364

போமென்ற வாணத்தின் கெந்தி தானும்
பூட்டுமுன்னே களங்க மெல்லாங் கறுத்துப் போகும்
வாமென்ற வைப்பரி தாரத்துக்குதான்
மகத்தான அயந்தானும் உருக்கேயாகும்
பாமென்ற பவளப்புத்துப் பாஷாணத்துக்கு
படுமுன்னே பரியதுவுஞ் செந்தூரமாகும்
கோமென்ற கோடா சொரிப் பாஷாணத்துக்குக்
குருவாகுந் துரிசியது கூர்ந்து பாரே. 365

கூர்ந்துபார் பஞ்சபட்சி பாஷாணத்துக்குக்
குறிப்பான லோகங்கள் ரவிதனிலே யேமம்
ஆர்ந்துபார் குங்குமப் பாஷாணந்தானும்
ஆயிரத்துக் கொன்றிடவே யதிகவேதை
நார்ந்துபார் யிந்தப் பாஷாணந்தானும்
நவலோகங் காணு முன்னே யேமமாகும்
தூர்ந்துபார் துத்தமது தாரம் நீறுந்
துரிசியென்றால் சூதத்தைக் கட்டுந்தானே 366

கட்டுமே ரசிதப் பாஷாணந்தான்
கரையத்த நவலோகம் வெள்ளியாகும்
மட்டுமே சூதமென்றப் பாஷாணந்தான்
மகத்தான காயசித்தி லோக சித்தியாகுந்
தொட்டுமே நீல பாஷாணத்துக்குத்
துய்யானில் சேர்ந்தவுடன் பசுமையாகும்
கிட்டுமே கெந்திப் பாஷாணத்துக்குக்
கெடியான சூதமது செந்தூரமாமே. 367

### நவலோக சமுதாயம்

தூரமாஞ் சோரப் பாஷாணந் தன்னால்
செம்புதனிற் பச்சையின் வேதையாகும்
காரமாங் காகப் பாஷாணந் தன்னாற்
கடிசான தாரமது கறுப்பாய்ப் போகும்
பாரமாம் லவணப் பாஷாணந் தன்னால்
பாங்கான சூதமது கட்டிப் போகும்
நாரமாம் நாகப் பாஷாணந் தன்னால்
நாகத்தி லீய்ந்தவுடன் சொர்ணமாமே. 368

சொர்ணமாம் இந்திரப் பாஷாணத்துக்கு
சூக்ஷத்திற் பச்சையிலே வேதையாகும்
வர்ணமாம் பாஷாண முப்பத்தி ரெண்டின்
வகையதின் குணங்களெல்லாஞ் சொல்லிப் போட்டேன்
தர்மமாய் நிகண்டுக்குள் வெளியில் சொன்னேன்
சாத்திரத்திற் சொன்னபடி சரக்கை வைத்து
சர்ணமா யெடுத்தாடு யேது பொய்யா
ஈசானம் பூசைபண்ணி மதுவை யுண்ணே. 369

உண்ணவே தங்கத்தை நீறுபண்ணு
உறவான காயசித்தியேம சித்தியாகுந்
தண்ணவே தாகத்தின் நீறுனாலே
சகலமெல்லாங் கட்டுண்டு திறமதாகும்
திண்ணவே செம்பதுவும் நீறினாக்கால்
செகத்குரு நாயனென்ற பேருமாகும்
வெண்ணவே வெங்கலத்தின் நீறினாலே
வெள்ளிவித்தை வெகுதூரம் ஓடுந்தானே. 370

தானென்ற வெள்ளீய நீறினாலே
சூதமது கட்டியே தந்தமாகும்
வானென்ற வங்கத்தின் நீறினாலே
வளமான தாளகந்தான் குருவுமாகும்
தேனென்ற திராவினுட நீறுனாலே
சிலை........ யதுவுஞ் செந்தூரமாகும் பாரு
ஆனென்ற பித்தளையின் நீறுனாலே
யடங்க நவலோக மெல்லாம் ஏமமாமே. 371

### சூதத்தின் பெயர்

ஏமமாம் அயத்தினுட நீரினாலே
யெளிசிலே காயசித்தி யாகும் பாரு
யேமமா முருக்கினுட நீறுனாலே
உபசரங்கள் சத்தாகு மூணிப்பாரு
நாமமாம் நாகத்தின் நீறுனாலே
நலமான செம்பதுவு மேமமாகும்
பாமமாம் பதினொன்றும் பத்துஞ் சொன்னேன்
பார்த்தப்படி சொன்னதிந்தப் பரிசிதானே. 372

சூதத்தின் பேர்தனையே சொல்லக்கேளு
சிவமான அரன் பீசஞ் சல சூக்ஷமாகும்
வாதத்தின் பேருடையான் மகா வன்னியாகும்
மகத்தான பாரதனாம் பிசேந்திரனாகும்
மோதத்தின் ரசசெந்திரனாம் லோகுக்கனாகும்
உண்மையாஞ் சவுபாக்கிய பரமாமிருதனாகும்
நாதத்தின் ரசநாதன் ரசராசனாகும்
நலமான மகா தேக ரசு தாதுவாமே. 373

ஆமேதான் ரசானந்தன் னிமை சீவசித்தன்
அழகான வர்ணத்தோன் ஆகாச கெவுனி
பாமேதான் பராபரமாம் வாய்வு தூமம்
பண்பான சரக்கு ஒளிர் பாவசீவன்
தேமேதான் சீவனாஞ் சிவனுமாகும்
சிறந்திட்ட விந்துவாம் தெளிமுத்தாகும்
வேமேதான் வேந்தனா மின்னாலாகும்
விளங்கியதோர் பேரெல்லாஞ் சூதமாமே. 374

சூதந்தான் வகாரத்தில் தாயுமாச்சு
துள்ளிய தோர் ஆட்டெல்லாஞ் சூதத்தாலே
நீதந்தான் பூரணமுஞ் சூதத்தாலே
வழங்கியதோர் செந்தூரஞ் சூதத்தாலே
காதந்தான் காயசித்தி சூதத்தாலே
கலந்தோடுங் கெவுனமெல்லாஞ் சூதத்தாலே
நீதந்தான் பூரணமுஞ் சூதத்தாலே
நிலையான யோகமென்ன சூதந்தானே! 375

## மலையின் பேர்

மலையின் பேர்தனையே வழுத்தக்கேளு
மலையாகும் பர்வதமாஞ் சிகிரியாகுங்
கிலையான கிரியாகும் கோத்திரமாகுங்
கொடியானச் சிறிங்கியாஞ் சயிலமாகுந்
தலையான தரோப்பர மஞ் சலக்கிறிமான
தாஞ்சலங் குன்றம் வரை ஓங்கலாகு
அலையான பருவதா ரோணமாகும்
அழுக்கலாங் குவடாகும் வெற்புமாமே. 376

வெற்பாகும் விளங்கலாஞ் சிலையாகும் சோலையாகும்
கனமான வளையம் பொன்னசலமேரு
மற்பான மகிமேரு காசிகியாகும்
மகத்தான ருத்திரன்தன் வில்லுமாகும்
பற்மான ஆலவிஷ முண்டான் வீடு
பரிந்துரைத்த நாமமெல்லாம் மலைப் பேராமே. 377

### பூமிப் பேர்

பூமியுடப் பேர் தனையே பொருத்தக்கேளு
பூமாதர் வசுந்தரி மேதினியாகும்
நேமியா முலகு மண் சிங்கிணியாகும்
நிலமாகும் லச்மதி சாந்தையாகு
மும்யா னுறவில்லான் விழலாந் நதியகமாம்
செகமாகுந் தாத்திரி யாகுங்
காரியாங் காந்தாவாம் சலமாகும்
கருதியதோர் பேரெல்லாம் பூமியாமே. 378

### தண்ணீர்ப் பேர்

தண்ணீயுட பேர்தனையே சாற்றக்கேளு
சலமாகுஞ் சயில மாந் தோயமாகும்
பண்ணியாம் பரணியாம் மூர்த்தமாகும்
மழக்குமா பரமாம் அப்புவாகும்
வண்ணியாம் வாருணமாம் வாரியமாகும்
வழங்குகின்ற உதகமா மயமுமாகும்
புண்ணியமாம் பரணியாம் - புனலுமாகும்
புட்கர சிவனுமாகுந் தண்ணீர் பேரே. 379

### மூத்திரப் பேர்

மூத்திரத்தின் பேர்தனையே மொழியக்கேளு
மூலத்தி லக்கினியாம் முதிர்ந்த நீரா
மாத்திரத்தின மூரியா மக்கினியாகு
மடங்காத வாருதியாம் லவணமாகும்
மூத்திரத்தி னூரினீர் வீரநீரா
முடலுக்குள் செயநீராம் சடலநீராம்
காத்திரத்தின் கழுநீராம் முரதநீராகும்
கருதியதோர் மூத்திரத்தின் பேருமாமே. 380

### முலைப்பால் பேர்

முலைப்பாலின் பேர்தனையே மொழியக் கேளு
மீறுகின்ற மிறுத சஞ்சீவியாகும்
அலைப்பாலாகு மமுர்தத்தின் கலசமாகும்
அழகான கொங்கையினிற் செயனீராகுங்
மலைப்பாலாம் அடங்காத பச்சைதானாம்
மகத்தான சரீரத்தின் பானமாகுந்
திலைப்பாலாந் தன்னியத்தின் க்ஷீரமாகுஞ்
சாத்தியதோர் முலைப்பாலின் நாமந்தானே. 381

### மாதவிடாயின் பேர்

மாதவிடாய் பேர்தனையே வகுக்கக் கேளு
மாதாந்த வெள்ளமாஞ் சென்னீராகுந்
தோதாந்தந் துடக்கைத்து தீட்டமாகுஞ்
சுரோணிதமா மிரத்தமாந் தூய்மையாகும்

நீதாந்த மடக்கூத்துச் சோரமாகுஞ்
சொறிவானக் காஷாயந் திருட்டமாகும்
நாதாந்த நாரியுட மருந்துமாகும்
நலமான சக்தியின்ற நாதமாமே. 382

நாதமாஞ் சரீரமாம் நயப்புமாகும்
நலமான வன்னீராம் திரோபவமுமாகும்
மோதமா மொழுக்கமாங் கரையுமாகு
மோங்கிய தோர் பருவமா முழுக்கமாகும்
போதமாம் புத்தியினில் வெள்ளமாகும்
பெருக்கான ஆறாகும் விரகமாகும்
வேதமாஞ் சோரக்குரு விழுக்குள்ளாகும்
விளங்கியதோர் மாதவிடாய்ப் பேருமாமே. 383

### சுக்கிலப் பேர்

சுக்கிலத்தின் பேர்தனையே சொல்லக்கேளு
சூதமாம் பாரதமாம் விந்துவாகும்
மக்குலமா மக்கியதோர் காமநீராம்
மாரமாஞ் சோரதமா மாய்கை யாகும்
குக்குலமாங் கொடியதோர் சிகரமாங்
கூறான காமமாஞ் சரீரமுள்ளும்
நெக்கருவாம் மூணாகி வுயிராய் நின்ற
நேயமாஞ் சிவமான நீண்ட வித்தே. 384

வித்தாகி விண்ணாகி மேலுமாகி
விளைந்திட்ட அமுர்தமாய் விளங்குகின்ற
மத்தாகி வானாகி வடிவமாகி
வழங்கியதோர் தாபரத்தின் லிங்கமாகிச்
சித்தாகி சின்மயமாய் செகச்சாலமாகி
திரோதாயி மயக்கத்திற் சிக்கிதானாய்
பத்தாகி கோளாகி பரந்து நின்ற
பகரறிய சுக்கிலத்தின் பேருமாமே. 385

### பெண்காமக்களை நீர்

பெண்ணுடைய காமக்களை பெயரைக் கேளு
புகலரிய சுரதனீர் திரிதிகளையாகு
குண்ணுடைய காமநீர் குழையாள் யோனி
கூறியதோர் விந்துவாங் குளிர்ச்சியாகும்
விண்ணுடைய விளைவான பூமியாகும்
வெதும்பியதோர் காமமாம் விரிசமாகும்
முன்னுடைய ஊணீரோ முத்து நீரா
பொங்கியதோர் பெண் காமக்களையின் பேரே. 386

### பாலின் பேர்

பாலினுடைய பேர்தனையே பகரக்கேளு
பயவாகும் க்ஷீரத் துத்தமாகும்
வாலாகும் வாது ரசாயந்தமாகும்
மாசத்த யமாசிரைய மனாதி யந்தமாகும்
பூவினுடைப் புரத்தவனம் தன்னியமாமே
புகழான புரத்தவனம் வாரி சாங்கியாகும்
வேலினிட சீவன் மாமத்தியந்தமாகும்
வேரான பாலினுட நாமமாமே. 387

### நெய்யின் பேர்

நெய்யினுடைய பேர்தனையே நிகழ்த்தக்கேளு
நேயமா மாச்சிய மாங்கிருத மாகும்
நய்யினுட சற்பியாம் பளித்தமு மாகும்
நவநீத மமுர்தமாஞ் நிரியமாகும்
வெய்யினுட விஷநாசம் பிற்கிற் நிதமுமாகும்
மேலான பாப னாசனியுமாகும்
அய்யினுடத் திரிதோஷ மதமுமாகும்
அடங்காத நெய்யினுட நாமந்தானே. 388

### தயிரின் பேர்

தயிரினுடப் பேர்தனையே சாத்தக் கேளு
சங்கொலங் கெவ்வியமாம் பயோதித பூமாகுங்
கயிரினுடத் தாகத்தான் சாந்திரமாகுங்
கார்கால் சேயமதமாகுங் பூதோயமாகும்
வயிரினுட தக்கிறமாங் காஷாயமாகு
மதுரமாம் அம்மிலெச்சம் பரிகிறதமாகு
முயரினுட வாத அரந் திரிதோஷ
மனமோங்கிய தோர் தயிரினுடப் பேருமாமே. 389

### தேனின் பெயர்

தேனுடைய பேர்தனையே செப்பக்கேளு
செகப்பான மதுவாகும் ஷவுத்திடமாகும்
மானிநிற மாட்சிதமாஞ் சப்பிரஷமுமாகும்
மாக்குசுமா சனமாகும் புஷ்பரசமாகுந்
தானினுடத் தயிலவர்ண மதுப்புமாகு
க்ஷபிவுத்திறந்து சுபிலங்கமிறுத வர்ணமாகுங்
ஊணிலிட உருக்கினமாம் மெழுகுமாகு
ஓதியதோர் தேனினுட நாமமாமே. 390

### காடிப்பேர்

காடியுடப் பேர்தனையே கருதக்கேளு
காஞ்சியாங் கஞ்ஜை வங்குல் மாஷமாகும்
நீடியாஞ் சைவீரந்தா் னியமலமாகும்
நேரான சூரனாள் மகா ரசமுமாகும்

ஆடியாம் அவனிதியா மஷிராமலமாகும்
அவர்கிரசம் தொந்தந்து சோதமுமாகுந்
தாடியாங் கமலமாய் கோமயமுமாகுந்
தனித்துநின்ற பேரெல்லாங் காடியாமே. 391

## வெடியுப்பு செயநீர்

ஆமப்பா வெடியுப்பு செயநீர் கேளு
அப்பனே கல்லுப்பு பலந்தான் ரெண்டு
வோமப்பா பழம்புளிதான் பலந்தான் ரெண்டு
ஒசக்க நன்றாயரைத் ததனை வில்லையாக்கித்
தாமப்பா அகலிட்டு சீலைமண் செய்து
சார்வாக புடம்போட்டு எடுத்துக்கொண்டு
நாமப்பா அப்புறத்தே வைத்துக்கொண்டு
நலமான கடல்நுரைதான் பலமும்ரெண்டே. 392

## சீலைச் சுன்னம்

ரெண்டோடு துரிசியது பலமும் ரெண்டு
நேராகக் காய்ச்சரக்கு யலைச்சாறு விட்டு
இண்டோடே இருசாமம் அரைத்துப்பின்பு
இயலான அகலிட்டுச் சீலைமண் செய்து
பண்போடே பத்தெருவில் புடத்தைப் போட்டு
பதராமலாற விட்டுஎடுத்து வைத்துத்
துண்டோடே சீனமது பலந்தான் ரெண்டுத்
துடியான சூடனது பலமும் ரெண்டே. 393

பலமாக நாலையுந்தான் கல்வத்திலிட்டுப்
பண்பானப் பிளியறணைச் சாறுவிட்டுப்
பெலமாக இருசாமம் அரைத்துப் பின்பு
பேசாதே அகலிலிட்டுப் புடத்தைப் போடு
நலமாகப் பிறம்பாக எடுத்துவைத்து
நவச்சாரம் பலம் ரெண்டு கலுவத்திலிட்டு
அலமாக அண்டனீர் பலந்தான் ரெண்டு
அழகாகுங் கலுவத்தின் கூடப்போடே. 394

போட்டுமே புளிமாங்காய் சாறுவிட்டு
பேசாதே இருசாமம் அரைத்துப்பின்பு
நாட்டுமே அகலிலிட்டுப் புடத்தைப்போடு
நலமாக ஆறவிட்டு எடுத்துக்கொண்டு
ஆட்டுமே அப்பிரகம் பலந்தான் ரெண்டு
அடுக்கு வெள்ளைப் பாசாணம் பலந்தான் ரெண்டு
ஒட்டுமே கலுவத்திற் கூடப்போட்டு
மாதுளையின் புளிச்சாத்தாலிரு சாமமாட்டே. 395

ஆட்டியேமுன் போலப் புடத்தைப் போட்டு
அப்புறமே யெடுத்து வைத்து ஆண்மைக் கேளு
ஈட்டியே இந்துப்பு பலன்தான் ரெண்டு
எழிலான பூரமது பலந்தான்ரெண்டு
நாட்டியே நாரத்தம்பழச் சாறுவிட்டு
நலமாக இருசாம மாட்டிப் பின்பு
மாட்டியே அகலிலிட்டுச் சீலை செய்து
மணல் மறைவில் புடம்போட்டு எடுத்துவையே. 396

வையப்பா சவ்வீரம் பலந்தான் ரெண்டு
மகத்தான சத்தியென்ற சாரம் ரெண்டு
பொய்யப்பா புளியாரைச் சாறுவிட்டுப்
பொருந்தவே இருசாம மாட்டிப் பின்பு
அய்யப்பா அகலிலிட்டுச் சீலைசெய்து
அலறவிட்டு மணல்மறவில் புடத்தைப் போடு
மெய்யப்பா எடுத்துவைத்துப் பின்பு கேளு
மேலான வெண்காரம் பலந்தான் ரெண்டே. 397

ரெண்டானப் பூனீறு பலந்தான் ரெண்டு
நேற்பானச் சீயக்கா இலைச்சாறுவிட்டு
இரண்டான இருசாம மரைத்த பின்பு
எழிலான அகலிலிட்டுப் புடத்தைப் போடு
வண்டான தெடுத்துவைத்து மறுக்காற் கேளு
மகத்தான அன்னமென்ற பேதிபலம் ரெண்டு
கண்டானக் காந்தமது பலமும் ரெண்டு
கருகிஅறைப் புளியம்பூச் சாத்திற்றானே. 398

தானென்ற அகலிலிட்டுப் புடத்தை போடு
சமத்தாக ஆறவிட்டு எடுத்துவைத்து
வானென்ற சீலையினுடச் சுண்ணம் ஒன்று
மகத்தானவை ஏழு பலமாச்சு
வேனென்ற வெடியுப்பு நாலாங்காச்சல்
மிடுக்கான ஏழு பலமுந்துந் தூக்கி
தானென்ற கல்வத்திற் பொடியாய்ப் பண்ணி
தளரவே பழச்சாத்தா லரைத்திடாயே. 399

**செயநீரில் போட - சரக்குகள் கட்ட - சூத சுத்தி**

அரைத்திடடு மூணுநாள் ஆனபின்பு
அலறவே ரவிதனிலே காயப்போட்டு
தரைத்திட்டு இரும்பானச் சட்டியிலே வைத்துச்
சாமந்தான் எரியிட்டுத் தளறவிட்டுக்
கரைத்திட்டுக் கல்வத்திற் போட்டுக்கொண்டு
கல்கடுங்காரா நீர்விட்டு நாலு சாமமாட்டி
புரைத்திட்டுக் கலையத்தில் வைத்துமூடி
பிலக்கவே மண்செய்து பெரும்புடமாய் போடே. 400

புடம்போட்டு ஆறவிட்டுப் பொடியாய் பண்ணிப்
பேரானப் ப்னியில் வைக்கச் செயநீராகும்
நடம்போட்ட நீர்தனிலே போடக் கேளு
நல்லலிங்கம் சவ்வீரம் பூரம் மூன்றும்
வடம்போட்ட வகைக்கு இருகாசிடைதான் தூக்கி
மகிட்சியாய் செயநீரில் கலக்கிக் கொண்டு
திடம்போட்ட உபரசங்கள் பாஷாணங்கள்
சிறப்பாக லோகத்திற் சுறுக்குப் போடே. 401

**வாருதியின் பெயர் (307)**

திரை, முழங்கு, நீர், கடல், வேலை, முந்நீர், வரிவாரி, காராழி, சிரை, திரவம், புணரி, விலாவளையம், முனி மூத்திரம்.

**கெந்தகச் செம்பு (308 - 313)**

கெந்தகத்தை சுத்தி செய்து முப்பது பலம் எடுத்து மாவு போல பொடியாக்கவும். வெடியுப்பு நீரை வார்த்து நன்றாக அரைத்து மூன்று நாட்கள் காய வைக்கவும். சட்டியில் பசும் பால் விட்டு அதன் மேலே சீலை (துணி) யைக் கட்டவும்.

அதன் மீது கந்தகத்தைப் பரப்பி மேல் சட்டியை மூடி சீலை மண் செய்யவும். நன்றாக உலர்ந்த பின்பு பூமியில் குழிவெட்டி நடுவில் சக்கரம் போல குச்சியை வைத்து அதன் மேல் ஒரு சட்டியை வைக்கவும். அதன் மேல் கந்தகம் உள்ள சட்டி வெளியே தெளிவு தரும்படியாக வைத்து சுற்றிலும் எரு வரட்டிகளை அடுக்கி புடம் போடவும். பால் ஆவியால் கெந்தகம் மணி மணியாய் இறங்கும்.

ஆறியபின் பிரித்து எடுத்து கெந்தகத்தை கழுவி எடுத்து கல்வத்தில் போட்டு தூளாக்கி வெடியுப்பு நீர்விட்டுக் கலந்து முன்போலவே செய்து புடம் போடவும்.

பிறகு மீண்டும் புடம் போடவும். இப்படி மூன்று தடவை புடம் போட்டு எடுத்த பிறகு கல்வத்திலிட்டு பொடியாக்கவும். துளிரான மாவிலைச் சாறு விட்டு நான்கு சாமம் அரைத்து முன் போல புடம் போடவும்.

எடுத்த பின்பு செங்கிரைச் சாறுவிட்டு நான்கு சாமம் அரைத்துக் கொண்டு முன்போல புடம் போடவும். பிறகு குறிஞ்சான் இலை சாறு விட்டு நான்கு சாமம் அரைத்து முன்போல புடம் போடவும். பிறகு உத்தாமணி (வேலிப்பருத்தி) சாறு விட்டு அரைத்து புடம் போட்டு எடுத்துக் கொள்ளவும்.

அத்துடன் சூதம் சேர்த்து தாய்ப்பாலில் ஆறு சாமம் அரைத்து மிளகு போல உருண்டை செய்யவும். எடைக்கு எடை நவலோகம் சேர்த்தால் உலோகமெல்லாம் செம்பாகிவிடும். பரியும் செம்பாகும். வெள்ளியும் செம்பாகும். நாகம், காரீயமும் செம்பாகும்.

**ரசமணி செய்தல் (314 - 319)**

காரியத்தை சுத்தி செய்து குகையில் போட்டு (முன் செய்த செம்பை) எடைக்கு கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து உருக்கி வந்தால் தூளாகி விடும் ஓட்டில் இட்டு ஊதினால் நல்ல செம்பாகி விடும்.

நான்கில் ஒரு பங்கு தங்கக்காசு எடுத்து உருக்கி ஈயக்கிண்ணியில் சேர்த்துக் கொள்ளவும். கிண்ணியில் கருஊமத்தஞ் சாறு விடவும். இரண்டு பலம் பாதரசம் விட்டு வாலுகையந்திர முறையில் வைத்து நான்கு சாமம் எரிக்கவும். சாறு எல்லாம் சுண்டிய பிறகு இரும்புக் கிண்ணியில் இட்டு மேல் மூடி வைத்து (சீலை செய்து) ஒரு சாமம் எரித்த பிறகு இறக்கி ஆற விடவும்.

வெண்ணெய் போல உருகி - இறுகி - இருப்பதை வழித்து எடுத்து ஊமத்தங்காயில் வைத்து மூன்று புடம் போடவும். புடம் போட்டு எடுத்ததை சூடன் (கற்பூரத்) தீ நெருப்பில் வாட்டி எண்ணெய் தடவிய கரண்டியில் உருக்கி இரண்டு மணிகளாகச் செய்து கொள்ளவும்.

அந்த மணிகளை கையில் ஒன்றும் வாயில் ஒன்றுமாக எடுத்துக் கொண்டு மலைகளில் நடந்து சென்று சித்தர்களைக் கண்டு பேசலாம். சிறந்த மூலிகைகள், உபரசங்கள், பாஷாணங்கள் தேடலாம். ஒவ்வொன்றாய் தேடி எடுத்துக் கொள்ளவும். குளிகையைக் கட்டிக் கொண்டு உயரே உயரே செல்லலாம்.

காரீயச் செம்பு ஒரு பங்கு அதன் அளவில் நூற்றில் ஒரு பங்கு தங்கம் சேர்த்தால் நல்ல செம்பாகிவிடும். கைவளையல், மோதிரங்கள், குண்டலங்கள் செய்யலாம். நமசிவய மந்திரத்தை மனதில் சொல்லவும்.

இந்த நவலோகச் செம்பு வாதத்திற்குச் சிறந்தது. கோடி வேதை அதனுடன் உண்டு தங்கம், சூதம், கெந்தகம் முதலியவைகளைச் சேர்த்து செந்தூரம் செய்து சாப்பிட்டால் உடல் பொன் போலாகும். மணி தங்கம் போலாகும். ஆயிரத்திற்கு ஒரு பங்கு நவலோகம் கொடுத்தால் நல்ல தங்கமாகும், மனதை அடக்கி மௌனமாக இரு. கர்வம் கொள்ள வேண்டாம்.

**320 - கார சார வல்லமை சமுதாயம்**

சவுக்காரம் சுன்னமானால் வாதம் செய்யலாம். வசியம் செய்யலாம். வாயு ஸ்தம்பனமும் செய்யலாம். பூனீறானது சாரத்தைக் கொல்லும் தன்மையுடையது. ஆனால் சாரம்தான் செயநீர் கிடையாது. வெங்காரமே திராவகத்துக்கு ஆதியாகும். காசிச் சாரமே குளிகைகளுக்கு ஆதியாகும்.

(321 - 322) ஏகம்பச் சாரத்தால் நவலோகம் ஏமமாகும். சீனம் குருவுக்காகும். காரம் உருக்கினமாகும். சூடன் நீரைக்கட்டும். கற்பூரம் உலோகத்தைத் தின்னும். கல்லுப்புச் சுன்னத்தால் சரக்கு எல்லாம் கட்டிவிடும். அமுரி உப்புச் சுன்னத்தில் இருக்கும் நீரையெல்லாம் வெளியேற்றும்.

வேரில்லை என்றால் காயும் இல்லை. பழமும் இல்லை, என்பது போல் வெடியுப்பு இல்லாவிட்டால் வாதமும் இல்லை. இந்துப்புத்தான் பூரம் வளையலுப்பு முதலியவற்றின் புடத்துக்கு ஆதியாகும். சவுட்டுப்பினால் சூதம் நீராகும்.

(323) திலா லவணத்தால் வங்கம் நீறாகும். கெந்தி உப்பு செம்பை நீறாகச் செய்யும். பிடாலவணம் நாகத்தை நீறு ஆக்கும். சிந்து உப்பானது வெண்காரத்தைக் கட்டும். காச்சுலவணங் கண்டரைக் குருவாகச் செய்யும்.

(324) பொன்னம்பர் பாதரசத்தோடு சேர்ந்தால் கஞ்சம் என்ற தோஷம் போகும். மீனம்பர் சீனத்தைக் கட்டும். கடல் நுரைதான் கல்லுப்புக்கு ஆதியாகும் இவ்விருப தைந்தும் நாதாக்களாகிய சித்தர்கள் எண்ணித் துணிந்த யார்க்கமாகும்.

உபரச சமுதாயம்

(325) இனி உபரசங்களின் குணத்தைச் சொல்வோம் - தூரிசு சூதத்தைச் சொல்லும். பொன்னிமிளைச் சத்தினால் தங்கம் சுண்ணமாகி குருவுமாகும். ரசித நிமிளைச் சத்தினால் ரசிதம் குருவாகும், கஞ்ச நிமிளையினால் வெண்கலம் சுன்னமாகும்.

(326) லோக நிமிளையினால் இரும்பு குருவாகும். காகூ நிமிளையினால் திரா என்ற லோகம் சுன்னமாகும். அப்பிரகச் சத்தினால் பாதரசம் (சூதம்) இறுகிக் கட்டியாகி விடும். காந்தத்தின் சத்தினால் தேக சித்தி விரைவில் கிட்டும்.

(327) கற்பூரச் சிலையினாலே உபரசங்கள் சுன்னமாகும். கல் நாரின் சத்தைக் குளிகையிலே கொடுத்தால் கண்களுக்கு ஒளியுண்டாகி வெகு தூரம் காணமுடியும். சாத்திர வேதியின் சத்தினால் நவச்சாரம் கட்டியாகும்.

(328) கல் மதத்தின் சத்தினால் சரக்குகள் எல்லாமே கட்டு ஆகும், கஞ்சனத்தின் சக்தியால் உபரசங்கள் ஈயமாகும். படிகக் கலசத்திலே பால் உண்ணக் காயசித்தி உண்டாகும். சுக்கான் கலசத்தில் பால் கொள்ள காயசித்தி சுறுக்காக உண்டாகும்.

(329) வயிரக்கல்லின் சத்தினால் சாரத்தின் உஷ்ணத் தன்மை குறையும், வாதத்தின் சத்தினால் நவலோகங்களும் வேதையாகும். கருடப்பட்சி சத்து விஷத்தை முறிக்கும். பாம்பு கடித்தாலும் விஷம் ஏறாது. ஓட்டின் சத்தினால் குளிகையின் தோஷம் போகும்.

(330) செங்கல்லின் சத்தினால் பொன் குளிகை அழுக்கு நீங்கிப் பிரதாசிக்கும். எலும்பின் சத்தால் இந்த தேகம் இரும்பு போல் உறுதி மிக உடையதாகும். மயிரின் சத்து குளிகைக்கு அதிகமான வேகத்தை உண்டாக்கும். நத்தையின் சத்தால் நாக்கு மென்மையடைந்து கீதம் இசைக்கும்.

(331) நண்டின் சத்தால் சூதம் (பாதரசம்) கெட்டியாகும். நாக வண்டின் சத்து தாகத்தைப் போக்கும். எவ்வளவு வேகமாக ஓடினாலும் நா வறளாது. சிப்பியின் சத்தினால் காரியம் கழன்று மடியும். ஆமை ஓட்டின் சத்தினால் கீழே தரையில் கால் வைக்காமல் ஓடலாம்.

(332) முட்டையின் சத்தினால் வெள்ளியம் நீரை உறிஞ்சிக் கொள்ளும்படியாகச் செய்யலாம். தந்தத்தின் சத்தினால் வெடியுப்பு கம்பியாய்க் கட்டும்.

பன்றிக் கொம்பின் சத்தால் வீரம் குருவாகும். மாட்டுக் கொம்பின் சத்தால் பாஷாணம் சிவப்பாக மாறும்.

(333) ஆட்டுக் கொம்புச் சத்தால் உப்புக்கள் சுன்னமாகும். பல்லின் சத்து வெகுதூரம் பார்க்கக்கூடிய சக்தியை உண்டாக்கும். பூநாகச் சத்து குளிகைக்கு தீபமாகி அதிக சக்தியைக் கொடுக்கும். இந்திர கோபத்தின் சத்தால் கால் பூமியில் படாமல் ஆகாயத்தில் ஆடலாம்.

(334) செவ்வட்டைச் சத்தினால் காற்றில் நடக்கலாம். தவளைச் சத்தினால் வெகுதூரத்தில் உள்ளவர்களோடு பேசலாம். (வெகுதொலைவில் உள்ளவர்களுக்கு) விஷயத்தைச் சொல்லலாம்.

கோழியின் சத்தினால் கொடிய இருட்டிலும் கண் தெரியும். கரடியின் சத்தினால் இரும்புத் தூண்போல் வலிமை பெறலாம்.

(335) சங்கின் சத்தினால் மணியின் கனம் மிக அதிகமாகும். முத்துச் சிப்பியின் சத்து எவச்சாரத்தை முத்துப்போல் ஆக்கும். முத்தின் சத்து பாதரசத்தை மணியாக்கும். பவளத்தின் சத்தால் பாதரசம் தங்கமாகும்.

(336) கோமேதகத்தின் சத்தினால் இந்திர சால வித்தைகளை அறியலாம். புஷ்பராகத்தின் சத்தினால் பூமிக்குள் புதையுண்டு கிடக்கும் பொருள் எல்லாம் கண்ணுக்குத் தெரியும்.

வைரத்தின் சத்தினால் சுன்னங்கள் எல்லாமே வரிசையாகும். பச்சையின் சத்தினால் சூரிய கிரணங்கள் சுடாமல் பனிப்போல் குளிர்ச்சியாய் இருக்கக் காணலாம்.

(337) நீலத்தின் சத்தினால் பச்சை என்ற கண்டர் குருவாகும். சிவப்புக் கல் சத்தினால் தாதுக்கள் செம்பாய் மாறும்.

வைடூரியத்தின் சத்து நல்ல பாம்பை வணங்கி நாம் சொன்னபடி கேட்கச் செய்யும். கொண்டகச் சில்லயின் சத்து நாகம் என்ற உலோகத்தைச் செம்பாக்கும்.

(338) சூடாலைக் கல்லினால் நவலோகங்கள் செந்தூரமாகும். மாக்கல்லின் சத்தினால் தாளகம் ஈயமாகும். தேக்கல் சத்தினால் மனோசிலை செம்பாகும். மஞ்சக் கல் சத்தினால் பூநாகம் செம்பாகும்.

(339) தவளைக்கல் சத்தினால் குளிகையைக் கீழே வைத்தால் தத்திக் குதிக்கும்.

சிலாவங்கச் சத்தினால் பாஷாணம் பற்பமாகும். சிலாநாகச் சத்தினால் வெடியுப்பு செந்தூரமாகும்.

(340) அன்னபேதியின் சத்தினால் லிங்கம் மெழுகாகும். அஸ்தியின் சத்து நவரத்தினங்களையும் நீறாக்கும் தன்மையுடையது. தனியாகச் சொல்லப்படும் பேதியின் சத்தினால் நவலோகங்களும் தண்ணீராகிவிடும். மாங்கிஷ பேதியின் சத்தினால் உபரசங்கள் எல்லாமே தண்ணீராகும். உவர்மண்ணின் சத்தினாலும் உபரசங்கள் தண்ணீராகும்.

(341) கல்கிட்டத்தின் சத்தினால் காரம் கல் ஆகும். கருமணலின் சத்தினால் இரும்பு செம்பாகும். அதில் கலந்து நின்ற தங்கம் குருவாகும். செம்மணலின் சத்தினால் காரீயம் செம்பாகும். சுத்தமணலின் சத்தினால் இரும்பு செம்பாகும்.

(342) முடவாட்டுக்கல் சத்தினால் ரசிதம் செம்பாகும். கருவண்டுச் சத்தினால் குளிகைக்கு கீதம் (ஒலி) உண்டாகும்.

பன்றிமுள்ளின் சத்தினால் சூதம் என்ற பாதரசம் பாலாகும். எலிமுள்ளின் சத்தினால் வீரம் செம்பாகும்.

(343) கடல்நுரையின் சத்தினால் கல்லுப்புக் கட்டு ஆகி விடும். மீன் எலும்பின் சத்தினால் கெவுரிக் கட்டி ஈயமாகும்.

முள்சங்குச் சத்தினால் வெள்ளைப் பாஷாணம் ஈயமாகும். பேரோசனைச் சத்தினால் ஆகாயத்தில் சஞ்சரிக்கலாம்.

(344) நாகப்பச்சையின் சத்தினால் உருக்கு நல்ல உயர்த்தியான செம்பாகும். மரகதப் பச்சையின் சத்தினால் இரும்பு செம்பாகும். புத்தெரும்பின் சத்தினால்

வெங்காரம் சுன்னமாகும். வேதைமார்க்கத்தில் தூய செம்பும் ஆகும். வெண்சுக்கான் சத்தினால் வெள்ளியம் வெள்ளியாகும்.

(345) சுதண்டு என்ற பெரிய வண்டினுடைய சத்தினால் பூமியில் புதைந்து கிடக்கும் நிதிகளை அறியலாம். (புதையல் மட்டுமல்லாமல் இரும்பு செம்பு தாதுக்கள் இருப்பதையும் அறியலாம்.)

காகச்சிலைச் சத்தினால் காந்தம் செம்பாகும். காண்டாமிருகத்தின் சத்தினால் கொடிய பாம்புகளின் விஷம் சுழன்று போகும். கஸ்தூரி எலும்பின் சத்தினால் உடல் நாற்றம் போகும்.

(346) மந்தாரச் சிலையின் சத்தினால்சூடன் செம்பாகும். கடற்பாசியின் சத்தினால் ரோமம் வண்டுபோல் கருப்பாகும்.

சாலக்கிராமத்தின் சத்தினால் தங்கம் செம்பாகும். மாங்கிஷச் சிலையின் சத்தினால் ககனகுளிகைக்கு வலுவுண்டாகும்.

(347) மாந்துளிர்க்கல் சத்தினால் கெந்தி செம்பாகும். காஷ்மீரப் படிகச் சத்தினால் சிவபெருமான் எதிரில் வந்து நடனமாடச் செய்யலாம். கற்காவியின் சத்தினால் வெள்ளி செம்பாகும். செம்பு மணல் சத்தினால் சவ்வீரம் செம்பாகும்.

(348) நாகத்தின் சத்தினால் சூதம் செம்பாகும். காரீய மணலின் சத்தினால் லிங்கம் செம்பாகும். வெள்ளீய மணலின் சத்தினால் வெண்காரம் செம்பாகும். ரசித மணல் சத்தினால் கெவுரி செம்பாகும்.

(349) ஈயத்தின் சத்தினால் தாளகம் செம்பாகும். லோகமணல் சத்தினால் மனோசிலை செம்பாகும். மயிலிறகுச் சத்தினால் ககன குளிகைபோட்டுக் கொண்டு ஆகாயமார்க்கமாகச் செல்லும்போது சந்திரனில் நடுக்கம் உண்டாகும். குளிர்ச்சியும் போய்விடும்.

**போகர் நிகண்டு**
**கருத்துரை எழுதியவர் - கோவிந்தராஜன்**

(350) கருப்பு சுக்கான் சத்தால் குதிரைப்பல் பாஷாணம் செம்பாகும். கானக சத்தால் வேகமாக ஓடும்பொருள் நில் என்றால் நிற்கும். குருந்தக்கல் சத்தால் ஆயுதங்கள் உடலில் தைக்காது (குத்தாது)

(351) ஏமமலைச் சத்தால் பாஷாணங்கள் எல்லாம் செந்தூரமாகும். வெள்ளியம்லை சத்தால் தேகத்தில் வெட்டுவிழாது. காரியமலை சத்தால் பச்சை கற்பூரம் செம்பாகும்.

(352) அயமலை சத்தால் காயம் (உடல்) இரும்புத் தூணாகும். தராமலை சத்தால் சினம் செம்பாகும். வெங்கார மலை சத்தால் வெடியுப்பு செம்பாகும். செம்பு மலை சத்தால் கல்லுப்பு செம்பாகும்.

(353) பித்தளைமலையின் சத்தால் வெடிஉப்பு செம்பாகும். நூற்று இருபது உப்பாச சரக்குகளின் குணத்தை குரு மூலமாகவும், நல்ல நூலை ஆராய்ந்தும், பார்வதி தேவியின் மூலமாகவும் அறிந்து சொன்னேன்.

(354) அறுபத்து நாலு தாதுவுட குணத்தை கூறுகிறேன் கேள். கற்கடகப் பாஷாணத்தால் கருநாகம் செந்தூரமாகும். கோளகப் பாஷாணத்தால் வெள்ளீயம் செந்தூரமாகும். சூதப்பாஷாணத்தால் நாகம் தங்கமாகும்.

(355) அரிதாரத்தால் வங்கம் நீறும். கெந்தியில் சூதம் சொக்கும் (குழையும்). வீரத்தால் நவலோகம் நீறும். வைக்கிறாந்தத்தால் நாகம் நீறும். தாலபாஷாணத்தால் தாரம் வெள்ளியாகும். அமிர்த பாஷாணத்தால் நாகம் ஏமம் ஆகும். (தங்கமாகும்)

(356) சிரபந்த பாஷாணம் ரசக் குளிகைக்கு பயன்படும். தொட்டி பாஷாணத்தால் குதிரைப்பல் என்ற பாஷாணம் வேதையாகும். சங்கப் பாஷாணத்தால் தாம்பிரம் வெள்ளியாகும். கௌரி பாஷாணத்தால் சூதம் செம்பாகும்.

(357) துத்தபாஷாணத்தால் நாகம் செம்பாகும். பலண்டுறுக பாசாணத்தால் லோகம் எல்லாம் தங்கமாகும். காந்த பாஷாணத்தால் ஒரு சாமத்தில் காயசித்தி கிட்டும். லிங்கபாஷாணத்தால் காரீயம் செம்பாகும்.

(358) சரகண்ட பாசாணத்தால் துரிசுகுருவாகும். தாளகத்தால் ஈயம்கட்டும், மனோசிலை என்ற பாசாணம் செந்தூரத்திற்கு ஆதியாகும். அவுபல பாசாணத்தால் அஷ்டமாசித்தி கிட்டும். சாலாங்க பாசாணத்தால் தாரம் தங்கமாகும்.

(359) கல் (கற்) பாசாணத்தால் காரீயம் கட்டிப்போகும். கற்பரி பாசாணத்தால் செம்பு தங்கமாகும். அஞ்சனக்கல் பாஷாணத்தால் அயம் காரீயமாகும். கச்சால பாசாணத்தால் சுக்கான் செம்பாகும்.

(360) சீதாங்க பாஷாணத்தால் துரிசு வெளுப்பாகும். கார்முகில் பாஷாணத்தால் நாகம் கருப்பாகும். சிலாமதப் பாஷாணத்தால் காந்தம் ஈயமாகும். அப்ரக பாஷாணத்தால் சூதம் கட்டியாகும்.

(361) வெள்ளை பாஷாணத்தால் உருக்கு ஈயமாகும். இந்த முப்பத்திரண்டு தாதுக்களும் மலைகளில் உற்பத்தியாவதாகும். அதற்கடுத்து வைப்பு சரக்கு முப்பத்திரண்டு வகையான சரக்கின் குணத்தை கூறுகிறேன் கேள். புத்தொட்டி பாஷாணத்தால் பச்சைவேதையாகும். நவலோகங்கள் அனைத்தும் ஏமமாகும்.

(362) பொற்தொட்டியால் சூதம்கட்டும். எருமை நாத்தொட்டியால் கெவுரிக்கட்டும். செப்பு தொட்டியால் செந்தூரம் பண்ணினால் எல்லாம் வேதையாகும். அயத்தொட்டி பாஷாணம் களங்குக்கு ஆதியாகும். மிறுதார் சிங்கிபாஷாணம் சத்துக்கு ஆதியாகும். ரத்த சிங்கியால் சகலமும் செம்பாகும்.

(363) ரசிதசிங்கி தாரமாக மாறும் (முதல் அடி முழுமையாகவில்லை) ஏமசிங்கி பச்சையுடன் சேர்ந்து தங்கமாகும். தீமுருகல் உருக்கினத்தில் வேதையாகும் சூதமும் மாரணமாகும். கார்முகில் பாஷாணம் தாரத்தில் வேதையாகும். சாதிலிங்கம் என்ற பாஷாணத்தை கட்டி தங்கத்துடன் சேர்த்தால் தங்கமாகும்.

(364) வெள்ளை பாஷாணத்தால் வெள்ளீயம் சுன்னமாகும். கெவுரி பாஷாணத்தால் காரீயம் சுன்னமாகும். சவ்வீர பாஷாணத்தால் நவலோகம் சுன்னமாகும். கோழித்தலை பாஷாணத்தை பச்சை கட்டி வேதையாகும்.

(365) வா.னகெந்தியால் களங்கு எல்லாம் கறுப்பாகும். வைபபு அரிதாரத்தால் அயம் உருக்காகும் பவளபுத்து பாஷாணத்தால் தங்கம் செந்தூரமாகும். கோடாசூரி பாஷாணத்தால் தூரிசு தருவாதும்.

(366) பஞ்சபட்சி பாஷாணத்தால் லோகம் எல்லாம் சூரியபுடத்தில் தங்கமாகும். குங்கும பாசாணத்தால் லோகங்களில் ஆயிரத்துக்கு ஒன்று இட தங்கமாகும். இந்திர பாசாணத்தால் நவலோகமும் தங்கமாகும். துத்த பாசாணத்தால் தாரம் நீறும். துரிசால் சூதம் கட்டும்.

(367) ரசித பாசாணத்தால் நவலோகம் வெள்ளியாகும். சூதபாசாணத்தால் காயசித்தி யோகசித்தி உண்டாகும். நீலப்பாசாணம் வெள்ளியுடன் சேர்ந்து பசுமை நிறமாகும். கெந்தி பாசாணத்தால் சூதம் செந்தூரமாகும்.

(368) சோர பாசாணத்தால் செம்பு தங்கமாகும். காக பாசாணத்தால் தாரம் கறுப்பாய் போகும். லவணபாசாணத்தால் சூதம் கட்டிப்போகும். நாக பாசாணத்தால் நாகம் தங்கமாகும்.

(369) இந்திர பாசாணத்தால் பச்சையில் வேதையாகும். முப்பத்திரண்டு பாசாணத்தின் குணத்தை யெல்லாம் இந்த நிகண்டில் சொன்னேன். முறைப்படி கண்டு செய்தால் வாதவித்தை பலிக்கும். சிவபெருமானுக்கு பூசை செய்து மதி அமுதம் உண்ணு.

**நவலோகத்தின் குணம்**

(370) தங்கம் நீறினால் காயசித்தியும் ஏமசித்தியும் உண்டாகும். வெள்ளியின் நீற்றினால் சகலசரக்கும் கட்டி திடமாகும். செம்பு நீற்றினால் செகத்குரு என்ற பேருண்டாகும். வெங்கலத்தின் நீற்றினால் வெள்ளி வித்தை கைக்குள்ளாகும்.

(371) வெள்ளீயத்தின் நீற்றினால்... வங்கத்தின் நீற்றினால் தாளகம் குருவாகும். திராவின் நீற்றினால் மனோ சிலை செந்தூரமாகும். பித்தளை நீற்றினால் நவலோகம் தங்கமாகும்.

(372) அயத்தின் நீற்றினால் காயசித்தி எளிதாகும். உருக்கின் நீற்றினால் உபரசங்கள் எல்லாம் சத்தாகும். நாகத்தின் நீற்றினால் செம்பு தங்கமாகும். பதினொன்று வகையான உலோக வர்க்கத்தின் பெருமை சொன்னேன். இதை எனக்கு சொன்னது என் தாயாகும்.

**சூதத்தின் பெயர்**

(373-374) சிவன் பீசம் (அரன் பீசம்) மகாவன்னி, பீசேந்திரன், இரசேந்திரன், சவுபாக்கியன், பரமாமிறுதன், இரசநாதன், இரசராசன், மகாதேசு, இரசதாது, சீவசித்தன், அழகானவர்ணன், ஆகாச கெவுனி, பராபரம், வாய்வுதூமம், சீவன், சிவன், விந்து தெளிமுத்து, வேந்தன், மின்னாயன் போன்ற பேர் எல்லாம் சூதத்தின் பெயராகும்.

(375) சூதமே வகாரத்தின் தாய், சகலவிதமான ஒட்டங்கள் எல்லாம் சூதத்தாலே, பூரணமும் சூதத்தாலே, செந்தூரங்கள் எல்லாம் சூதத்தாலே. காய்சித்தியும் சூதத்தாலே, கெவுனம் என்ற சித்தியும் சூதத்தாலே. யோகமும் சூதத்தாலே (மேலே கூறப்பட்டவை எல்லாம் சூதத்தின் தொழிலாகும்.)

**மலையின் பெயர்**

(376-377) பர்வதம், சிகிரி, கிரி, மகேந்திரம் சிறிங்கி, சயிலம், ஓங்கல், பருவதாரோணம், குவடு, வெற்பு, குன்று, சிலை, சோலை, வளையம்பொன், சலமேரு, மகாமேரு, காசிகி, ருத்திரன்வில் (ருத்திரதனுசு), ஆலமுண்டான் வீடு இவை எல்லாம் மலையின் வேறு பெயாகும்.

**பூமியின் பேர்**

(378) பூமா (பூமாதா) வசந்தா, மேதினி, உலகுமண், சிங்கிணி, வசுமதி, சாந்தை. (சாந்தா) உறவில்லாள், நிதியுகம், செகம், தாத்தரி, காந்தா, (காந்தாசலம்) இவை எல்லாம் பூமியின் பேராகும்.

**தண்ணீரின் பேர்**

(379) சலம், சலிலம், மாந்தோயம், அப்பு, வாருணம், வுதகம், பரணி, புனல், புட்கரம் இவை எல்லாம் நீரின் பெயராகும்.

**மூத்திரத்தின் பேர்**

(380) மூலத்தின் அக்கினி, முதிர்ந்த நீர், அமுரி, அக்கினி வாருதி, லவணம், ஊணிந்நீர், வீரநீர், செயநீர், சடநீர், கமுநீர், முரதநீர் இவை எல்லாம் மூத்திரத்தின் பெயராகும்.

**முலைப்பாலின் பேர்**

(381) மிருதசஞ்சீவினி, அமுர்தகலசபால், கொங்கை செயநீர், சரீரத்தின் பானம். தன்னியத்தின் ட்சிராமம், இவை எல்லாம் முலைப்பாலின் பெயராகும்.

**மாதவிடாயின் பேர்**

(382) மாதாந்த வெள்ளம், சென்னீர், சுரோணிதம் தூய்மை, ரெத்தம், காஷாயர் திருட்டு, நாரியின் மருந்து, சத்தியநாதம், வன்னீர் திரோபவம், ஒழுக்கு, கரை, பருவமுழுக்கு, ஆற்றுபெருக்கு, விரகம், சோரகுரு இவை எல்லாம் மாதவிடாயின் பேராகும்.

**சுக்கிலத்தின் பேர்**

(383-384) சூதம், பாரதம், விந்து காமநீர், சோரத மாய்கை, சிகாரம், ஊனின் உயிர், சிவன் விந்து இவை எல்லாம் தோன்றுவதற்கு ஆதிகாரணமாகவும் விண்ணாகவும் அமுர்தமாகவும், வடிவமாகவும் லிங்கமாகவும் சித்தாகவும் உடலாகவும் உயிராகவும்.

(385) சின்மயமாகவும், செக்கச்சால்மாகவும், மாயையின் மயக்கத்தில் அகப்பட்டுக் கொண்டு பத்துருபமாகி, குருவுமாகி பரந்து நின்கின்ற விந்துவின் (சுக்கிலத்தின்) பெயராகும்.

**பெண் காமகளை நீர்**

(386) சுரதநீர், திரிதிகளை, காமநீர், குழையாள் யோனி, விந்துவின் குளிர்ச்சி, விளைபூமி, காமவிரசம், ஊநீர், முத்துநீர் இவை எல்லாம் பெண்ணின் காமகளை நீரின் பெயராகும்.

**பாலின் பெயர்**

(387) பயவம், க்ஷீரம், துத்தம், வாது ரசாய்ந்தம், சத்திசிரை, அனாசுசந்தம், புரத்தவனம், வாரிசங்கி யாதம், சீவன்மாமத்தியந்தம் இவை எல்லாம் பாலின் பெயராகும்.

**நெய்யின் பெயர்**

(388) ஆச்சியம், கிருதம், சற்பி, பவித்தம், நவநீத அமுர்தம், சிவநிரியம், விஷநாசம், பிற்கிற்நிதம், போன்றவை நெய்யினுட வேறு பெயர்களாகும்.

**தயிரின் பெயர்**

(389). கெவ்வியமலம், பயோதிதபூமம், தாகத்தான், சாந்திரம், கால்சேயமதம், பூதோயம், மதுரம், அம்மிளச்சம், பரிகிறதம், வாதஅரன், திரிதோஷம் இவை எல்லாம் தயிரின் பெயராகும்.

**தேனின் பெயர்**

(390) செகப்பு மது, ஷவுத்திடம், மாநிற மாஷிதம், சப்பிரஷம, அமாசனம், புஷ்பரசம், தூனித்தயிலம், வர்ணந்துப்பு, கபிலங்கம், மிறுதவர்ணம், ஊணின் உருக்கினம், மெழுகு இவை எல்லாம் தேனின் பெயராகும

**காடியின் பெயர்**

(391) கஞ்ஜை, அங்குங்மாஷம், சைவீரம், தானியமலம், ஆரருள், மகாரசம், அவனிதி, அஷிராமலம், கிரசம், தொந்தத்துசோதம், கசலம், கோமயம் இவை எல்லாம் காடியின் பெயராகும்.

**வெடியுப்பு செயநீர்**

(392-401) வெடிஉப்பு செயநீர் சொல்வேன் கேள். கல்லுப்பு இரண்டு பலம் எடுத்துக் கொண்டு அதனுடன் பழம் புளி இரண்டு பலம் சேர்த்து நன்றாக அரைத்து வில்லை செய்து புடம் போட்டு ஆறவிட்டு எடுத்துக்கொண்டு அதனுடன் கடல்நுரையும் தூரிசும் இரண்டு இரண்டு பலம் எடுத்து அதனுடன் புளியிலைச் சாற விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து அகலில் இட்டு சீலை மண் செய்து பத்தெருவில் புடம் போட்டு. ஆறவிட்டு எடுத்து வைத்துக்கொண்டு அதனுடன் சீனம் ரெண்டு பலம், சூடன் ரெண்டு பலம் சேர்த்து கல்வத்தில் இட்டு புளியரனைசாறு விட்டு, இரண்டு சாமம் அரைத்து முன்போல் புடம்போட்டு எடுத்துக்கொண்டு அதனுடன் நவச்சாரம் பலம்ரெண்டு, அண்டநீர் பலம்ரெண்டும் சேர்த்து புளிமாங்காய்சாறு விட்டு இருசாமம் அரைத்து பின்பு அகலில் இட்டு முன் போல்புடத்தை போட்டு ஆறவிட்டு எடுத்துக்கொண்டு இதனுடன் அப்ரகம் ரெண்டு பலம் வெள்ளைப் பாஷாணம் பலம் ரெண்டும் சேர்த்து புளிப்பு மாதுளையின் சாற்றில் அரைத்து (இருசாமம்) பின்பு முன் போல் புடம் போட்டு ஆறவிட்டு எடுத்துக் கொண்டு அதனுடன் இந்துப்பு பலம் ரெண்டு பூரம் பலம் ரெண்டும் சேர்த்து நாறத்தம் பழச்சாற்றில் இரு சாமம் அரைத்து அகலில் இட்டு மணல் மறைவில் புடம் போட்டு வைத்துக் கொண்டு அதனுடன் சவ்வீரம் ரெண்டுபலம், சத்தி சாரம் ரெண்டு பலம் கூட்டி, புளியாரை சாறுவிட்டு இருசாமம் அரைத்து அகலில் இட்டு சீலைமண் செய்து மணல் மறைவில் புடம்போட்டு எடுத்துக் கொண்டு இதனுடன் வெண்காரம் ரெண்டுபலம்,

பூநீறு ரெண்டு பலமும் கூட்டி சிக்காய்யிலைசாறுவிட்டு இருசாமம் அரைத்து முன்போல் புடம் போட்டு எடுத்துக் கொண்டு அதனுடன் அன்னபேதி, காந்தம் தனித்தனியே இரண்டு பலம் எடுத்து ஒன்றாக கல்வத்தில் இட்டு புளியம் பூச்சாறு விட்டு இருசாமம் அரைத்து வில்லை செய்து அகலில் இட்டு சீலைமண் செய்து புடம் போ , சிலை என்ற சுண்ணமாகும். சுண்ணம் எழுபலம் இருக்கும். இதனுடன் நாலாங் காய்ச்சால் வெடிஉப்பை எழுபலம் எடுத்து பொடி பண்ணி பழச்சாறு விட்டு (எலுமிச்சம்பழம்) மூன்று நாள் அரைத்து ரவியில் காயப்போட்டு உலர்ந்த பின்பு

(அயச சட்டி) இரும்பாலான சட்டியில் இட்டு அடுப்பேற்றி உருக்கிக்கொண்டு அதை கல்வத்தில் போட்டு கடுங்கார நீர்விட்டு நான்கு சாமம் அரைத்து ஒரு சின்ன மண்பானையில் வைத்து மூடி பெரும்புடம் போட்டு ஆறவிட்டு எடுத்து பொடிபண்ணி, பனியில் வைத்தால் செயநீராகும். இந்த நீரில், லிங்கம், சவ்வீரம், பூரம் இவை மூன்றையும் வகைக்கு இரு காசு எடை எடுத்து செயநீரில் கலக்கி கொண்டு உபரசம் பாஷாணம், லோகம் இவற்றில் சுருக்கு போட சரக்கெல்லாம் சுருண்டு போகும்.

சுறுக்கிடவே சரக்கெல்லாஞ் சுருண்டு போகுந்
திடமாக வெகுதூரம் ஓடிப் போகும்
முறுக்கிடவே காயசித்தாம் லோக சித்துமாகும்
உற்பனமாஞ் சூதமொரு கெரு வாங்கி
கறுத்திடவே கலுவத்திற் போட்டு
கலங்காதே வெடியுப்பு செய நீரலாட்டு
மறுக்கிடவே யேழுநாள் நாட்டியாட்டு
மாசத்த ரவிதனிலே காயப்போடே. 402

### தூரிசி சுத்தி - வெடியுப்புத் திராவகம், தூரிசிச் செந்தூரம்

காய்ந்த பின்புக் காடிதனிற் கழுவி வாங்கி
கடுகவே பீங்கானில் வைத்துக் கொண்டு
தோய்ந்த பின்பு துரிசியொரு சேரை வாங்கி
சுகமாக வங்கத்தில் ஏழு தரம்முக்கி
பாய்ந்த பின்பு வெடியுப்பு செயநீர் தோய்த்துப்
பருவமாய் பத்துனாள் ரவிதனிலே போட்டு
வாய்த்த பின்பு அற்புறமாய் வைத்துக் கொண்டு
அரைப்பதற்குத் திராவகத்தின் ஆண்மைகேளே. 403

ஆண்மையாம் வெடியுப்பு பல மொன்றப்பா
ஆச்சில்லா சினமது நூற்றுப் பத்து
காண்மையாய் கழுதையுட கத்தத் தாட்டிக்
காரியமாஞ் சக்கரத்தின் பாலையிலே போட்டுத்
திண்மையாய் திராவகத்தை வாங்கி வாங்கி
சிறப்பான குப்பியிலே அடைத்து வைத்து
தன்மையாய் சூதமது கலுவத்திட்டுச்
சம பாகந்துரிசியைத் தான் தன்னிற் போடே. 404

தன்னிற் போட்ட பின் புத்திராவகத்தை வார்த்து
தயங்காமல் மூணு நாள் ஆட்டிப் பின்பு
நண்ணியிலே ரவியிலிட்டுக் காயப் போட்டு
நலமான பரும் பீங்கான் தன்னில் வாங்கி
மண்ணிலே யுமி நெருப்பில் வறுத்துப் போட்டு
மயங்காமல் காசியென்ற குப்பிக் கேத்தி
துன்னியே வாலுகையின் மேலே வைத்துத்
துருசாகப் பனிரெண்டு சாமந்தீயே. 405

தீயிட்டு கமலம் போலாறாமல் போட்டு
சிறப்பாக பனிரெண்டு கடந்த பின்பு
காயிடவே ஆறவிட்டுக் கருத்தாய் வாங்கி
கல்வத்திற் போட்டு மெத நீராலாட்டு
வேயிடவே மூனு நாள் ஆட்டிப் பின்பு
மீளாதே பீங்கானில் வழித்துப் போடு
தாயிடவே காசியென்ற மெருக்குள் போட்டுத்
தரிக்குகின்ற வாலுகையில் வைத்திடாயே. 406

## வேதை நாக செந்தூரம்

வைத்திட்டு தீயெரிப்பாய் கமலம் போல
மாறாமற் பனிரெண்டு சாமந்தானும்
மைத்திடவே ரசத்திலு மப்படியே செய்தால்
அருணனைப் போற் சிவந்திருக்கும் துரிசிதானும்
நைத்திட்டு நவலோகம் நூத்துக் கொன்று
நலமான மாத்தென்னப் பனிரெண்டாகுங்
கைத்திட்டக் காவிக்கு உப்புக் கோ
காயசித்தாங் கெவுன சித்தாங் கருதிப்பாரே. 407

கருதியதோர் நாகமது பலந்தான் பத்து
கனமான குகைதனிலே வைத்துருக்கி
இருத்தியதோர் இலுப்பை நெய்யில் ஏழுதிரமுருக்கி
இதமாக சாய்த்த பின்பு கரண்டி தனில் வைத்து
மருத்திய தோர் வெடியுப்பு நீருக்குள்ளே
மகத்தான கெந்தியுடன் அபினி சூடன்
வொருத்திய தோர் வகைக்கு ஒரு பலமே போட்டுப்
பேரான வெடியுப்பு நீராலாட்டே. 408

## காய கற்பம், செந்தூர வேதை

ஆட்டியே மூன்று நாள் வெடியுப்பு நீரால்
ஆண்மையா யொரு சேரில் கலந்து கொண்டு
பூட்டியே உருக்கையிலே சுறுக்குப் போடு
உறவான நாகமது அங்கே கட்டிப் போகும்
மூட்டியே லேசாகத் தகடு தட்டி
மூதண்ட ஓரிலைத் தாமரை யினோடு
நாட்டியே அவுரியொடு ஆடு தின்னாப் பாளை
நல்லமணித் தக்காளிச் சாணாங்கியாமே. 409

ஆமப்பா இது வைந்தும் அரைத்துக் கொண்டு
அடை தட்டி ரெண்டாக அப்பால் வைச்சு
வாமப்பா அபினியொடு சூடன் கெந்தி
வகைக்கு ரெண்டு பலங் கூட்டி நீராலாட்டி
தாமப்பா தகட்டுக்குப் பூசிப்பூசி
தளமான அடைதன்னாற் கவச மூடி
சேமப்பா சீலை செய்து உலர விட்டு
சிறப்பாக பத்தெருவில் புடத் தைப் போடே. 410

புடம்போட்டு இப்படிதான் ஏழு விசைய்னால்
பேரான நாகமது செம்புவாகும்
கிடம் போட்டு கிண்ணிபோல வாத்துக்கொண்டு
கிண்ணி நிறை சமனாகச் சூதம் விட்டு
நடம் போட்ட நாறும்பூ நாலதொன்று
நலமான பொற்றலையின் சாற்றினாலே
வடம் போட்டு அரைத்துமே கிண்ணிக்குள்ளே பூசி
வாலுகையில் வைத்தெரிக்கச் சிந்தூரமாமே. 411

செந்தூரம் பணவிடை தான் தேனிலுண்ணு
சிறுகதிர் போல் மேனியாம் சாவேயில்லை
நந்தூரம் நவலோகம் ஆயிரத்துக் கொன்று
நாட்டிடவே பனிரெண்டு மாத்துமாகும்
மெந்தூர மலைதனக்குள்ளே சஞ்சரிக்கலாகு
மேத்தமா நாதாக்கள் பதத்தைப் போற்றி
குந்தூரம் குளிகைக்கு வழியைக் கேளு
குறியாறு தலங்கள் எல்லாஞ் சோதித்தேறே. 412

### கற்பமுண்ண காந்தக்கிண்ணம்

ஏறவே கற்பமுண்ணப் பாத்திரத்தைக் கேளு
ஏத்தமாய் ஊசியொட்டு இடிக்குங் காந்தம்
ஆறவே அந்த பத்துப் பலமெடுத்து
அப்பனே குண்ணியாலே உடைத்துக் கொண்டு
தேறவே சீலைதனிற் தோளிகட்டிச்
சிறப்பான கொள்ளிலைச் சார்சுவேதம் பண்ணி
நாறவே நால் சாமமான பின்பு
நல்வேளை சாற்றினால் நால் சாமந்தானே. 413

தானென்றக் குண்டு மணிச் சாற்றினாலே
தயங்காமல் நால் சாமஞ் சுறுக்குப் போட்டு
கானென்ற கல்லுருவி சாணங்கி தன்னால்
கலங்காதே நால் சாமஞ் சுறுக்குப் போடு
வேனென்ற ரவிதனிலே காயப் போட்டு
வீரமது பலமஞ்சு வெங்கார மஞ்சு
கோனென்ற குண்டுமணி குக்கிலோர்டு
கொம்புத்தேன் வெண்ணையோடு வெல்லங் கூட்டே. 414

கூட்டியெல்லாம் வெடியுப்பு நீரினாலே
குமுறவே மூன்று நாளாட்டிப் பின்பு
காட்டியே காந்தத்தி லொக்கக் கூட்டி
கழகியரைத் தொரு சாமம் வில்லைகட்டி
மூடடியே யுலறவிட்டுச் சரவுலையிலூது
முத்துபோல் மணிமணியா யிறங்கிப் போகும்
நாட்டியே கறடெல்லாம் பொறுக்கிக் கொண்டு
நலமாக முன்போல அரைத்துக் கட்டே. 415

கட்டியே முன்போல அஞ்சுதிரமூது
　　கசடத்து மணி மணியா யிறங்கிப் போகும்
புட்டியே மணியெல்லாம் பொறிக்கிக் கொண்டு
　　பொரிச் செடுத்த வெண்காரம் பலந்தான் கூட்டி
உட்டியே உருக்கி யெல்லாந் தெளிந்த பின்பு
　　யுகுந்தஞ்சு மித்திரத்திற் சிதறாமல் சாய்த்து
கட்டியே கமலம் போல் வார்த்துக் கொண்டு
　　காயசித்தி பண்ணுகிற கருமங் கேளே. 416

**கற்பமுண்ணக் கனகமாகும் அப்பிரகச் சத்து**

கேளப்பா கற்பமெல்லா மிதிலேயுண்ணு
　　கெடியான வஸ்து வுண்ணு பால் தானுண்ணு
வாளப்பா மருந்துகளின் விஷத்தை நீக்கி
　　மகாசித்தி யாக்கியே மாளொட்டாது
காளப்பா சூதமிட்டு கெந்தியிட்டு
　　சுத்தமாந் தாயிட்டு செந்தூரித்துண்ணு
காளப்பா கற்பாந்தக் காலந்தானுங்
　　காயமது அழியாது கனகமாமே. 417

கனகத்தை கண்டவுடன் கெற்சிக்காதே
　　கன்னியின் மேலாசை யுற்று இச்சிக்காதே
மனமைத்த துன்பத்தில் இருந்திடாதே
　　மாயமாம் வாசனையை மனதால் தள்ளு
இனங்கைத்து ஆறுதலம் ஏத்தம்பாரு
　　எழிலான குருபதத்தை மனசிலூணு
தினக்கத்தைத் தீயினில் ருசியை விட்டுச்
　　செயமாக வுடல் தன்னையே சித்திபண்ணே. 418

சித்தியாம் அப்பிரகந்தான் நூறு திரமாக
　　திறமாக நலம்தேடி பண்ணிக் கொண்டு
வெத்தியாம் மெருகினிடக் கிளங்கு சாத்தில்
　　மிடுக்காக நாலு நாளரைத்துக் கொண்டு
பத்தியாம் வில்லைப் பண்ணிக் காயப்போட்டு
　　பெரும்புடமாய் போட்டெடுத்து கலுவத்திட்டு
முத்தியா முள்ளங்கிச் சாற்றால் தானும்
　　மூணு நாளரைத்து முன்போல் புடத்தை போடே. 419

போடவே புடி கறணைக்கிழங்குச் சாற்றில்
　　போட்டரைத்து இரண்டாம் நாள் வில்லை பண்ணி
மூடவே முன் போலே புடத்தை போடு
　　முயற்சியாய் சானாங்கி சாத்தி லோர்நாள்தான்
கூடவே கொள்ளியின் சாத்தி லோர்னாள்தான்
　　கொடிக் கள்ளி சாத்திலோர் னாளரைத்துப் போடு
வாடவே வாழையுடக்கிழங்குச் சரரொருநாள்
　　மகத்தான அகத்தியுடப் பழச்சாறே. 420

சாத்திலேயரைத் தொருனாள் புடத்தைப் போடு
தயங்காதே குண்டுமணிச் சாத்திலோர்னாள்
சேத்திலே செங்கழனீர் கிழங்குச் சாரோர்னாள்
செயமான புடம் போட்டு யெடுத்து வைத்து
வேத்திலே வீரமொரு பலந்தானஞ்சு
வெண்காரம் பல மஞ்சு சாரமஞ்சு
தேத்திலே தென்குன்றி வெல்லம் வெண்ணை
சிறப்பான பலமஞ்சு கூடப் போடே. 421

கூட்டியெல்லாம் வெடியுப்பு நீரிலாட்டி
குறிப்பாக மூணு பங்கு பண்ணி வைத்து
ஒட்டியே வொரு பங்கு அப்பிரகங் கூட
வொண்ணாக மத்திச்சு வில்லை செய்து
தாட்டியே உலரவிட்டுச் சரவுலை ஊது
தவளம் போல் மணிமணியாய் சத்து வீழும்
பூட்டியே கறடெல்லாம் பொறுக்கிக் கொண்டு
பேரான முன் மருந்தோ டொக்கச் சேரே. 422

ஒக்கவே சேத்தரைத்து வில்லை கட்டி
ஓட்டிலிட்டுச் சரவுலையில் ஊது ஊது
மிக்கவே சத்தெல்லாம் உருகி வீழும்
வெளுப்பான சத்தெல்லாம் பொறிக்கிக் கொண்டு
சிக்கவே கறடோட முன்மருந்து போட்டுச்
சிறப்பாக வில்லைக்கட்டி தேற விட்டு
பொக்கவே பின் பொருக்காலூதிப் பின்பு
பொறிக்கியெல்லா மொண்ணாக சேர்த்துக் கொள்ளே. 423

ஒண்ணாகச் சேர்த்துமே குகையிலிட்டு
ஒரு பலந்தான் வெண்காரம் பொரித்துப் போடு
நண்ணாக உருக்கியே மித்திரத்திற் சாத்து
நலமானச் சத்தெல்லாம் எடுத்துக் கொள்ளு
கண்ணாக மித்திரந்தான் ஏதென்றாக்கால்
கனமாகத் தேங்காய்ப் பால் வெள்ளாட்டுப் பாலுந்
திண்ணாகத் தேனோடு இலுப்பைப் பூச்சாத்தில்
திறமாக் நெய்யோடு சமனாய்ச் சேரே. 424

சமனாகச் சதிரக்கள்ளிச் சாறுதானுஞ்
சாரமொடு கருவளையல் பலந்தான் ரெண்டு
புமனாகப் பொடி செய்து கலக்கிக் கொண்டு
போக்கானச் சத்தெல்லாம் உருக்கிச் சாய்க்க
கமனாகக் கல்மசங்களத்துப் போகுங்
காரணமாஞ் சத்தோடு செப்பு வகைகளெல்லாம்
முமனாக மூணுதிர முருக்கிச் சாய்க்க
முத்து போல் வெளுப்பாகும் மேனியாமே. 425

### அப்பிரகக் கிண்ணம், இரசமணி

மேனியாம் அப்பிரகச் சத்தெடுத்து
விளங்கியதோர் நாலுக்கு தங்கமொன்று சேர்த்து
சீனியா மெழுகு கட்டி கிண்ணி வார்த்து
சிறப்பாக வடித்தூதிச் சீலை செய்து
வாணியாம் வாலுகையின் மேலே வைத்து
மயங்காதே சுத்தித்தச் சூதந்தானும்
பாணியாம் பலமிரண்டு யதிலே விட்டு
பக்குவமாய் கருவூமத்தஞ் சாறுவாரே. 426

வார்த்துமே தீயெரிப்பாய் கமலம் போல
வத்தவத்த மறுகாலுஞ் சாறுவாரு
போர்த்துமே அறுசாமந்தீயை மூட்டுப்
பேரானச் சூதமது வெண்ணை யாகுங்
கோர்த்துமே ரெண்டாகக் குளிகைப் பண்ணு
குளுந்த நீர்தனில் விட்டு மூடிவைத்து
மார்த்துமே மறுனாள் தானெடுத்து ருட்டி
மத்தங்காய்க்குள் வைத்துப் புடத்தைப் போடே. 427

போடப்பா மத்தங்காய்க்குள்ளே பத்து
பேரான ஆரையிலைக்குள்ளே பத்து
வீடப்பா விராலி யிலைக்குள்ளே பத்து
வெடிப்பான பிராயினிலைக்குள்ளே பத்து
ஆடப்பா அரசனிலைக்குள்ளே பத்துபோடு
அப்புறந்தான் சூடனுட தீயில் வாட்டி
ஊடப்பா யெண்ணைகுத்தி யுருக்கிப் போடு
வுற்பனமாஞ் சூதமது மணியுமாமே. 428

### சூதமணிக்கு ஆடுகிறது பூனாகச் சத்து

சூதமது மணியினால் செந்தூரமாகும்
சுப்பிரமாய்க் குருவாகுங் களங்கமாகும்
வாதந்தான் கைகட்டி யேவல் கேட்கும்
மகத்தான காயமது சித்தியாகும்
நீதந்தான் யோகமது சித்தியாகும்
நிராதாரக் குறிகளெல்லாம் நிசமாய்க்காணும்
பாதந்தான் பூமியிலே நடவாமற் பண்ண
பரிசிதுக்குள் சொல்கின்றேன் பண்பாய்ப்பாரே. 429

பண்பானப் பூனாகம் பதக்குவாரிப்
பாலிலே யூறவைச்சிக் காடிவிட்டுக் கழுவி
நண்பான ரவிதனிலே யுலற வைத்து
நலமான வெண்காரஞ் சேரிரண்டு
அண்பான அவரியெலைச்சாறு பனிரெண்டு
அளந்துகொண்டு வெண்காரங் கூடப்போட்டு
மண்பானை தன்னிலே கொதிக்கவைத்து
வகையான வெண்காரர் கரைந்து போமே. 430

போனபின்பு பூனாகந் தன்னில் தெளித்து
பிறட்டியே காயவைத்து பானையிலே ரெப்பி
மானபின்பு மறுசட்டி மேலே மூடி
மண்செய்து காய்ந்தபின்பு அடுப்பில்வைத்து
ஆனபின்பு கமலம் போலறு சாமமெரித்துக்
கசகாமலாறவிட்டு மண்ணை வாங்கி
தானபின்பு சாம்பலெல்லாஞ் சட்டியிலே கொட்டி
சாம்பல் நின்ற பாதிக்கும் சூதம்விட்டுத் தேயே. 431

தேய்த்தவுடன் சூதமது அட்டை போலாஞ்
செகப்பான குண்டுமணிச் சாரங்காரங்
சாய்த்தவுடன் சவ்வீர மேரண்டவித்து
தருக்கான நெய்யொடு வெல்லங் குக்கில்
மீய்த்தவுடன் வெடியுப்பு நீராலாட்டி
மிடுக்கான சூத அட்டைதனில் மத்திச்சு
கோய்த்தவுடன் குகையிலிட்ட உருக்கிச் சாய்க்க
கொடிதானப் பூனாகச் சத்துமாமே. 432

### சிவவாலைக்கி ரசமணி - சருபமணி - ஸ்தம்பனமணி கெவுன குளிகை

ஆமேதான் சிபம் பண்ணி நிரையை கேளு
அரியதோர் பணவிடைதான் பதினொன்றாகும்
சேமேதான் சிபம் பண்ண நூத்தெட்டாகுந்
திரளவே உருக்கியே சேம்பட்டில் கோர்த்து
ஏமேதான் அஞ்செழுத்து மெட்டெழுத்து மோது
எளிதிலே சிவன் வந்து எல்லாஞ் சொல்வார்
பேமேதான் சிவகாமி புத்தி சொல்வாளே. 433

சொல்லுவாள் சுரபிக்கு விராகனிடை யேழில்
சுத்தித்த சூதத்தில் குளிகை பண்ணு
சொல்லுவாள் ஸ்தம்பனைக்கு மூவஞ்சு நிறையில்
சூட்டியே பால் வகையிலூட்டினாக்கால்
சொல்லுவாள் கெவுனத்துக் கன்பத்தொன்று
சூக்ஷமாய்ச் சாறணையை யூட்டித் தீரு
சொல்லுவாள் ரெண்டாக்கிக் குளிகை கட்டுச்
சுகமாக கரத்திலொன்று வாயிலொன்று வையே. 434

### பொன்சங்கிலி கெவுனத்திலோட

வைக்கவே பொன்னாலே சிமிளைப் போல்பண்ணி
வரிசையாங் குளிகைக்கு கமருமிட்டு
தைக்கவே பொன்னாலே தங்கிலியில் மாட்டிச்
சறப்பணிபோல் மாரிலே போட்டுக்கொண்டு
உய்க்கவே வாயிலொன்று கரத்திலொன்று
வைத்துவிடு நீ கெவுனத்தில் தவறினாக்கால்
ஒய்க்கவே வொன்றுவிட்டா லொன்று உதவுமப்பா
ஓடுகிற வேகத்திலுண்மை தானே. 435

உண்மையாய் வைத்தடக்கி யோடிப்பாரு
ஓகோகோ கேசரத்தே யெழும்பி நின்று
வண்மையாய் வாய்மூடும்போது மக்காள்
மகத்தானக் குளிகையது நாதஞ் செய்யுந்
தன்மையாய் தயங்காதே வாசி நீராட்டு
தளரவிட்டால் கெவுன வழிச்சுறுக் கோடாது
கெண்மையாய் குளிகையுட நீருண்டாக்கால்
கெடியிலே காயசித்தியாகுங் கேளே. 436

கேளு நீ வாசிவிட்டால் சித்தனல்ல
கெட்டியாய் மனந்தன்னை நாசியிலேயூணு
பாருநீ பழகமட்டுஞ் சங்கிலியோடு
பழக்கமேயான பின்பு சங்கிலியை நீக்கி
தாளுநீ வெறுங்குளிகை தன்னிலோடு
துப்புரவாய் மனமதுவுஞ் செம்மையாகும்
வேறா நீ மலை தனக்குள் சஞ்சரிக்க
வேணுமென்ற வுபரசங்கள் கிடைக்கமட்டுங் கேளே. 437

கேளப்பா கிடைத்தமட்டுங் குளிகைப் பண்ணிக்
கேசரத்தி லோடாமல் மலைதனிலேயோடு
நாளப்பா லகுவாகச் சொல்லக்கேளு
நேரான குளிகை தன்னை வச்சிரத்தின் குகையிற்
தூளப்பா சூதமணி யுருகும் போது
துரிசறவே யிடைக்கிடைதான் பூனாகசத்து
வாளப்பா குடுக்கையிலே வுடக்கொண்டு கலக்கு
மகத்தான சாரணையில் சாய்த்திடாயே. 438

## மலையேறக் குளிகை

சாய்க்குமுன்னே வச்சிரமாங் குகையில் தானும்
சாங்கமாய் குகைக்குள்ளே மருந்துபூசி
வாய்க்குமுன்னே யிடைக்கிடைதான் சத்தேயீந்து
மணிபோல நின்றாடும் பருவம் பார்த்து
பொய்க்கு முன்னேபுட தயிலம் மடத்துக் கொன்று
பேரான குளிகை நிறைச்சத்து நிறைப் பார்த்து
நியக்குமுன்னே தயிலத்தை நீட்டினாக்கால்
நேரான சத்தையெல்லாந் தின்னுப்போமே. 439

தின்னுபோய் சூதயிடைச் சரியாய் நிற்குஞ்
சிங்கமாஞ் சூரன்போல் தீபனமுமாகும்
முன்னுமாங் குகைக்குள்ளே மருந்து பூசி
முற்பனமாய் சூதத்தை யுருக்கிக் கொண்டு
நன்னுப்பொம் நாறும் பூச்சத்தையூட்டு
நலத்தபின்பு அப்பிர்கச் சத்தையூட்டு
கணக்கறிந்து யுருகையிலே புடத்தயிலம் நீட்டே 440

நீட்டிய பின் சூதத்தை யெடுத்துப் பார்த்தால்
நிலவரமாய் முன்னிருந்த இடைதான் நிற்கும்
மாட்டியப் பின் புடத்தயிலம் குகைக்குப் பூச்சு
மருந்து வச்சிரமாங் குகையிற்றானுஞ் சத்துப் பார்க்க
ஈட்டிய பின் எழு நூத்தில் திறந்து சொன்னேன்
இதுக்குயில்லை யென்று நீயேங்க வேண்டாம்
மூட்டிய பின்னெழுணூத்தைப் பார்த்துக் கொண்டு
மோசங்கள் வாராமல் செய்திடாயே. 441

**போகர் எழுநூறு பார்க்க, சாரணைக்கி உபரச சத்து**

செய்திடவே திருவியொரு குகைவேறே யெடுத்துச்
சிறப்பாகக் கரிஓட்டில் வாட்டிக் கொண்டு
குய்திடவே குகைக்குள்ளே மருந்து பூசிக்கொண்டு
சூதமிதில் வைத்துருக்கி கொண்டு
நெய்திடவே நிமிளையுடச்சத்தை ஈந்து
நேர்ந்தபின்பு வைக்கிறாந்தச் சத்தை ஈவாய்
உய்திடவே சாஸ்திர வேதியின் சத்து
சார்ந்தபின்பு புடம்போட்டு எடுத்துக் கொள்ளே. 442

எடுத்துமே வேறொரு குகைக்குள் இட்டு
இதமாக சூதம் நின்று உருகும் போது
கருத்துமே சிலாசித்துச் சத்தை யூட்டு
கல்னாரின் சத்தூட்டிக் கல்மதத்தை யூட்டு
பிடித்துமே புடமிட்டு யெடுத்துக் கொண்டு
பேரான குகை யொன்றுப் புதுசாய் வைத்து
மடுத்துமே குகைக்குள்ளே மருந்து பூசி
மாசத்த சூதத்தை வைத்துருக்கி
அடுத்துமே யஞ்சனத்தின் சத்தை ஈந்து
யான பின்பு கருங்கல்லு சத்தை தாக்கே. 443

தாக்கியே படிக்கலசத்தை யீந்துச்
சார்வான புடமிட்டு எடுத்துக் கொண்டு
போக்கியே புது குகைக்குள் மருந்து பூசி
பேரானச் சூதம்நின்று யுருகும் போது
நாக்கியே ராச வற்தஞ் சத்து யீந்து
நலந்தபின்பு கெருட பட்சி சத்தையீவாய்
மூக்கியே சங்குனுட சத்தையீந்து
முன்போல புடமிட்டு யெடுத்துக் கொள்ளே. 444

**நவபாஷாண சத்து குளிகைக்கி யூட்ட**

எடுத்தபின்புப் பிறப்பான பாஷாணத்தை
யிதமாக கிடைக்கு மட்டுஞ் சத்து வாங்கி
சுடுத்த பின்புச் சூதமது உருக்கையிலே ஈந்துச்
சுருக்காகப் புடம் போட்டு எடுத்துக் கொண்டு

மடுத்த பின்பு பாஷாண வைப்புத் தன்னை
வரிசையாய் செய் தெடுத்து வைத்துக் கொண்டு
கடுத்த பின்பு கட்டியே சத்தை வாங்கி
கைமுறையாய் சோதித்து எடுத்துக் கொள்ளே. 445

கொள்ளவே சூதம் நின்று வுருகும் போது
குறிப்பாக பாஷாணச் சத்தை யீந்து
கள்ளவே கணக்காக புடத்தை தாக்கிக்
கருதியே நிறுத்துப்பார் சூதம் நிறை நிற்கும்
நள்ளவே கார சாரங்களெல்லாம்
நயக்கவே கட்டியே யெடுத்து வாங்கு
சுள்ளவே சூதத்திற் கொடுத்த பின்புச்
சுகமாக புடத்தையிட்டு நிறுத்துப் பாரே. 446

நிறுத்த பின்பு சூதத்திலதிக நிறை நின்றால்
நீட்டு நீரின் பொருக்காற் புடத்தை நீயும்
மறுத்த பின்பு சூதத்தைக் குகையிலிட்டு ருக்கி
மாசத்த நவரத்தின சத்தை யூட்டு
ஒறுத்த பின்பு நவலோகத்தை யூட்டு
ஓசத்தியாய் மூலிகையின் சத்தை யூட்டு
பொறுத்த பின்புப் புடமிட்டுத் தமருமிட்டு
பூட்டிச் சங்கிலியில் சிமிளை வையே. 447

**நவரத்னச்சத்து - நவலோக சத்து மூலிகைச் சத்து மலையேற**

வைத்துமே வாயிலொன்று கரத்தி லொன்று
வாசியோடி ருத்தியங்கே வைத்துக் கொண்டு
மைத்துமே மலைதனக்கு ளோட லாகு
மகத்தான ரிஷி சித்தர் நாதாக்களோட
கைத்துமே தற்காரம் பேச வேண்டாம்
தாஷணைகள் சொல்லியே சஞ்சரித்து
அய்த்துமே பாஷாண முபரசங்கள்
ஆதியாஞ் சூதமது மூலிகையுந் தேடே. 448

தேடியே முபரசங்கள் சவதரித்து
சிறப்பாகச் சொருபமெனக் குளிகை பண்ணி
ஓடியே சித்தருடன் வாது பேசி
யுகந்துமே யேழுவரை சோதித்தேறி
தேடியே பேரண்டஞ் சித்தண்டம் பார்த்துச்
சிறப்பானச் சமாதியுத்துச் சிவத்துள் புக்கி
நீடியே கற்பூர தேகமாகி
நிச்சயமாகுஞ் சீடரைத்தான் சேர்த்துக் கொள்ளே. 449

கொள்ளவே உபரசத்தைச் சத்துப் பண்ணக்
கூறுகின்றேன் நாதாக்கள் கூறாத தெல்லாம்
விள்ளவே உபரசத்தின் சத்து கேளு
வெடியுப்புச் சீனமொடு கல்லுப்பு இந்து

கள்ளென்ற காடியோடு பூசணிக்காய் சாறு
கழுதையிட மூத்திர மனுஷனுடவமுரி
சள்ளென்ற சமபாக ... மாகக் கூட்டிச்
சட்டியிலே விட்டு வைத்து கலக்கிடாயே. 450

## உபரசச் சத்து பண்ண

கலக்கியே உபரசத்தை பொடியாக்கிக் கொண்டு
கடிசான சீலையில் தளக்கக் கட்டி
துலக்கியே டோளையிலே தொங்க விட்டுத்
துரிசாக எரித்திடுவாய் வற்றமட்டும்
மலக்கியே காடியினால் கழுவிப் போட்டு
மாசத்த ரவிதனிலே உலற வைத்து
நிலக்கியே பலம் பத்து உபரசத்தைத் தூக்கி
நேரான வெடியுப்பு நீரில் தோச்சே. 451

தோச்செடுத்து ரவிதனிலே உலற வைத்து
சுறுக்காகும் பூனீறு வெங்காரஞ் சாரம்
வேச்செடுத்து வீரமொடு குன்றிமணி வெல்லம்
வெண்ணையொடு ஆமணக்கு வித்துத் தேனும்
மாச்செடுத்து வகைக்கி யிருபலந்தான் கூட்டி
வாதமென்றக் குடோரியொரு பலமும் போட்டு
பாச்செடுத்து வெடியுப்பு நீராலாட்டி
பக்குவமாய் மூணு பங்காய் பண்ணி வையே. 452

பண்ணியொரு பங்கெடுத்து வுபரசத்தில் கூட்டிப்
பக்குவமாய்ச் சரவுலையி லூதித் திரு
கண்ணியே சத்தெல்லாம் பொறுக்கிக் கொண்டு
கரடெடுத்துப் பின்னையொரு பங்கு கூட்டி
நண்ணியே சரவுலையி லூதிப் பின்பு
சத்தல்லாம் பொருக்கி யெடுத்துக் கொண்டு
ஒண்ணியே ஒருபங்கில் கரடு கட்டி
ஊதியே முன்போலே எடுத்துக் கொள்ளே. 453

எடுத்துமே சத்தெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து
இதமான வெண்காரம் பொறித் துருக்கி
மடுத்துமே மித்திரத்தில் சாய்த்துக் கொண்டு
மாசற்ற குளிகைக்குச் சாரணை யீவாய்
உடுத்துமே உபரசங்கள் நூற்றிரண்டு பத்தும்
உத்தமனே இப்படித்தான் சத்து வாங்கு
தடுத்துமே சூதமிட்டுத் தங்கமிட்டுச்
சரியாக கெந்தியிட்டுச் செந்தூரித் துண்ணே. 454

**செந்தூரம் - பாஷாணச் சத்து - பாஷாணச் சுத்தி**

உண்ணவே காயமது சித்தியாகும்
உற்ற நவலோகத்தின் நூற்றுக் கோடுங்
கண்ணவே காவிக்கு உப்புக்கு மேகா
கனமான உபரசத்தின் செந்தூரந்தான்
திண்ணவே புளியுப்பை யளந்து போடு
திறந்திட்ட ஆதார மேறிப் பாரு
பண்ணவே பராபறையை நித்தம் பூசி
பானத்தால் மயங்காத பக்குவமாய் நில்லே. 455

நில்லென்ற பாஷாணச் சத்து கேளு
நெற்பான வெடியுப்பு செயநீர்க் குள்ளே
கல்லென்றக் கல்லுப்புச் சுன்னத்தோடு
கடிசானச் சவுக்கார சுன்னம் வீரம்
தில்லென்ற வகைக்கி அரைப் பலந்தான் ரெண்டும்
செய நீரில் கலக்கியே வைத்துக் கொண்டு
பல்லென்றப் பாஷாணக் கட்டி வைத்துப்
பக்குவமாய் நால் சாமஞ் சுறுக்குப் போடே. 456

**பாஷாணம் அறுபத்துனாலும் சுத்தி செய்ய**

சுறுக்குக்கு முன்பேதான் சுத்தி பண்ணிக் கொள்ளு
சுத்தியது என்னவென்று சொல்லக் கேளு
முறுக்குக்கு முருக்கிலைச் சார் படிதானொன்று
முயற்சியாய் சிறுகீரைச் சாறு படிதானொன்று
குறுக்குக்கு கொள்ளிலைச் சாறு படிதானொன்று
குப்பை மேனிச்சாறு படிதானொன்று
விறுக்குக்கு வெள்ளிச் சாரனையின் சாறு
வேளையொடு தும்பைச் சாறு படியும் வாரே. 457

படிவாரு பாகலிலைச் சாறுதானும்
பாரிச்சாற் நொச்சியொரு குன்றிச் சாறும்
படிவாரு பூசணிக்காயின் சாறும்
பகர்கின்ற மனுஷனொடு கழுதை ஆடு
படிவாரு காடியொடு கள்ளுத்தானும்
பாங்கான கற்சுன்னம் படிதான் போடு
படிவாரு பூநீறு சங்கு நீறு
பண்பாகக் கலக்கியெல்லாம் பாண்டத்தில் போடே. 458

போட்டுமே நடுவையொரு விட்டம் போட்டு
பேரானப் பாஷாணம் அறுபத்தினாலும்
தீட்டுமே சீலையிலே தளரக் கட்டி
சிறப்பாக தொளை போற்றொலி விட்டு
ஆட்டுமே யடுப்பில் வைத்து வற்ற மட்டும்
ஆறிய பின்னெடுத்துமே கிட்டி விட்டுக் (கழுவி)
சூடட்டுமே உலர்விட்டு வெடியுப்பு நீரால்
சுறுக்கிட்டு நால்சாமஞ் சூட்சங் கேளே. 459

### பாசாணங்கள் சத்தெடுக்க

கேளப்பா துரிசியொடு பூனீறு இந்து
கெடியான கற்சுன்னம் சவிடு சுன்னம்
வேளப்பா வெடியுப்புச் செயநீராலாட்டி
விளங்கியே மெழுகான பதத்தில் வாங்கி
பாளப்பா பாஷாணம் மேலேதானும்
பக்குவமாய் கவசம்போற் பண்ணிக்கொண்டு
நீளப்பா சீலைசெய்து புடத்தைப் போடு
நேரானப் பாஷாணச் சத்துமாமே. 460

சத்தான இடைக்கிடைதான் பொரிகாரமிட்டு
சார்வாக வச்சிரமாங் குகையில் வைத்து
சித்தானச் சில்லிட்டுச் சீலைசெய்து
சிறப்பாக உருக்கிடவே சத்துமாகும்
பத்தானப் பாஷாண மறுபத்துனாலும்
பருக்கியே இம்முறை போற்செய்து கொள்ளு
சத்தான சூதத்திலிட்டு உருக்கி
தனுசரமாய்ப் புடமிட்டு யெடுத்துக் கொள்ளே. 461

### லவணம், இருபத்தஞ்சும், சத்தெடுக்க

கொள்ளென்ற சத்துக்கு தங்கமிட்டுக்
குறிப்பாகச் சூதமிட்டு கெந்தியிட்டு
வள்ளென்ற வாலுகையிற் செந்தூரிதன்னா
மாசத்தத் தங்கமா மொளிதானும்
அள்ளென்ற நவலோக மாயிரத்துக் கோடும்
ஆணியில்லை பாசாண மேமத்துக்கு
பொள்ளென்ற யிருபத்து அஞ்சு மாத்து
போக்கிலே மெத்தவுண்டு புகட்டியாமே. 462

ஆடவே லவணமொடு காரசாரம்
அறிவாக இருபத்து அஞ்சுதன்னை
ஓடவே வெடியுப்புச் செயநீரில் தோச்சு
யுகந்துமே ரவியிலிட்டு பட்சமொன்று
தேடவே சவுக்காரச் சுன்னம்வீரத்
திறமையாய் நாலுக்கு ஒன்றுபூசி
வாடவே பூனீரின் நடுவே வைத்து
வகை வகையா யிருசாம மெரித்திடாயே. 463.

எரித்திட்டு ஆறியப் பின்னெடுத்துக் கொண்டு
யிதமான பஞ்சசுண்ணக் குகையில் வைத்து
புரித்திட்டுப் புடம்போட்டு எடுத்துக் கொண்டு
பேரான வச்சிரமாங் குகைக்குள் தானும்
மாத்திரமே சுண்ணாம்பு உள்ளே பூசி
வளமாக மருந்தை வைத்து மண்ணைப்பூசு
தரித்திட்டுச் சத்தாக,வுருகிநிற்கும்
தயங்காத பொரிகளை மிட்டிருக்கே. 464

### செந்தூரம், வேதை, நவலோகச் சத்து

உருக்கியே சூதத்திற் சாரணையாய் ஈந்து
உத்தமனே புடம்போட்டு எடுத்துக் கொண்டு
மருக்கியே உப்பானச் சத்துதன்னை
மருவியதோர் திராவகத்திலரைத்துக் கட்டி
பருக்கியே கெசப்புடந்தான் போட்டாயானால்
பாங்கான அருணன்போற் செந்தூரமாகுத்
தருக்கியே உட்கொள்ள காயசித்தியாகுந்
தவறாமல் நவலோக மாயிரத்துக்காமே. 465

ஆமப்பா நவலோகச் சத்துகேளு
ஆதியாம் வெடியுப்புச் செயனீர்க்குள்ளே
ஓமப்பா தூரிசியுடன் கெவுரிரெண்டும்
ஊறவைச்சு இடைக்கிடைத்தானொக்கக் கூட்டி
யேமப்பா யேழுனாளான பின்பு
யெடுத்தரைத்து வெடியுப்பு செயநீர்தன்னில்
நாமப்பா வில்லைகட்டி ரவியிலிட்டு
நலமாக உலந்தபின்பு எரித்திடாயே. 466

### நவலோகச் சத்துச் சேர தூர வேதை

எரித்திடவே கிளிஞ்சினீர்க்குள்ளே வைத்து
இதமாக சாமமொன்று ஆனபின்பு
அரித்திடவே கடுங்காரக் குகையிலிட்டு மூடி
அப்பனே பத்தெருவில் புடத்தைப் போடு
விரித்திடவே வெண்ணீறாய் பொருமிப் போகும்
மிரளாதே நவலோகத் தகடு வாங்கித்
திரித்திடவே செயனீரில் கொழப்பிக் கொண்டு
செப்பமாய் இடைக்கிடைதான் பூசிடாயே. 467

பூசியே உலறவைத்த பின்பு கேளு
பேரான நிமிளை தன்னைப் பொடியாய்ப் பண்ணி
தாசியே தடுக்கு கீழ் மேலும் வைத்து
சாங்கமாயன்ப தெருவடுக்கிப் போடு
கூசியே யாறவிட்டு யெடுத்துப் பாரு
குறிப்பானக் காரியம் போலேயாகுந்
தேசியாஞ் சூதத்திற் சாரணையே செய்து
சிறப்பாகப் புடம்போட்டு யெடுத்து கொள்ளே. 468

எடுத்ததொரு சத்துதனிற் தங்கமிட்டு
யெளிசாக சூதமிட்டு கெந்தியிட்டு
மடுத்ததொரு வாலுகையிற் செந்தூரித்துண்ணு
மருவியதோர் சட்டை கக்கிவாலை யாகும்
மடுத்ததொரு நவலோகஞ் சகஸ்திரத்துக் கொன்று
பிணைத்தாக்காற் பதினாறு மாத்துங்காணும்
கடுத்ததொரு புடத்துக்குங காவிக்கும் போகா
கனமரன நவலோகஞ் செந்தூரந்தானே. 469

### நவரத்தினச் சத்து

தானென்ற நவரத்தினச் சத்து கேளு
சாதகமாய் கழுதையொடு குதிரை யானை
பானென்றப் பசுவோடு வெள்ளாடு அஞ்சும்
பரவியதோர் அமுரிதன்னைப் பாண்டத்தில் விட்டு
தேனென்ற நவரத்னமொன்பதும் வெவ்வேறாய்
சிறப்பாக டோலை கட்டி எரித்துவாங்கி
கோனென்ற இரவிதனிலே புடம்போட்டு
கூட்டுநீ வெண்காரக் குடோரிதானே! 470

குடோரியொடு குண்டுமணி குக்கில்புங்கு
கொளஞ்சிவேர், பிரண்டையொடு, ஆமணக்கு வித்து
திடொரியாம் வொளிக்காட்டாமணக்கம் வித்து
தேனொடு வெல்லம் பழமும் போடு
தடொரியாம் சமபாகம் நிறுத்துக் கொண்டு
சானாங்கிச் சாறுவிட்டு சாமமாட்டிச்
நடொரியாம் நவரத்தினம் பிசறிக்கொண்டு
நலமான குகையில் வைத்து ஊதிடாயே. 471

ஊதிடவே நவரத்தின சத்துமாகும்
உத்தமனே கறடெடுத்து முன்போலூது
நாதிடவே மூணுதிர மூதிப்பின்பு
நலமாக சோதிச்சு சத்தெல்லா மெடுத்து
வாதிடவே மித்திரத்தில் உருக்கிச் சாய்த்து
மகத்தானச் சூதத்திற் சாரணை செய்து
போதிடவே புடமிட்டு யெடுத்துக் கொள்ளு
பேய்மக்காள் பேரண்டபதமும் நிமைக்குள் போமே. 472

### மூலிகைச் செம்புச் செந்தூரம்

போமென்ற சத்திலே தங்கமிட்டுப்
பேரானச் சூதமிட்டு கெந்தியிட்டு
வாமென்ற வாலுகையிற் சிந்தூரித் துண்ணு
வயிரத்தினொளி போல திரேகமாகுஞ்
சாதிமன்றச் சாவு பொய்யாங் கற்பகோடிச்
சமாதியிலே யிருந்துரைத்துச் சஞ்சரிக்கலாகும்
போமென்ற நவலோகங் கோடிக் கோடும்
கொடி முகத்தியா மாத்தாவுமிருபதாமே. 473

ஆமென்ற மூவகைக்குள் செம்புகேளு
அவரியொடு ஓரிலைத் தாமரை செவ்வல்லி
போமென்ற பிளியறனை அமுரிக்கோவை
பிடர்முக்கிக் கொடி யொளிச் சிகப்புமாகும்
மேமென்ற செந்திராய்க் கரியசாலைச்
சிறுகீரைப் பதினொன்று ந்திரமாய் வாங்கி
வேமென்ற வெவ்வேறாய்ச் சாறுவாங்கி
விரவியே பாண்டத்தின் மூன்றுநாள் கேளே. 474

கேளப்பா வெண்கருவுங் குன்றி சீனங்
கெடியாகப் பொடி பண்ணிக்கூடப் போட்டு
வாளப்பா பாண்டத்திற் காச்சும் போது
வகை நாலு மித்திரத்தை மருவிக் கேளு
தாளப்பா தாரமொடு இந்துப்பு மெழுகுச்
சார்வான வெண்ணை யொடு கூட விட்டு
காளப்பா சட்டி கவிழ்த்து மூடி
கசகாமற் சீலைசெய்து எரித்திடாயே. 475

எரித்திட்டுச் சாம்பலாய் எடுத்துக் கொண்டு
இதமான சாம்பலுக்கு எட்டி லொன்று
அரித்திட்டு அயமித்தரம் வெருவக் கேளு
ஆவின் நெய் வெண்காரம் வெல்லங்
குறித்திட்டக் குன்றியொடு கூட இட்டுப் பிசைந்து
குடோரிதான் பத்துக்கு ஒன்று போட்டு
தரித்திட்டு மூன்று நாளரைத்த பின்னர்
சார்வான ரவிதனிலே காயப் போடே. 476

## மூலிகையில் ஈயம்

போட்டுமே வில்லை கட்டிச் சரவுலையிலூதி
பேரான மூலிகைதான் செம்புமாகும்
மாட்டுமே மித்திரத்திற் சாய்த்துக் கொண்டு
மருவுகின்ற சூதத்திற் சாரணையே செய்வாய்
காட்டுமே இச்செம்பு தங்கமிட்டுக்
கனமான சூதமிட்டுக் கெந்தியிட்டு
வாட்டுமே வாலுகையின் செந்தூரத்து
மருவியதோர் நவலோகம் ஆயிரத்துக்கு ஒன்றே. 477

ஒண்ணான மூலிகையில் ஈயங் கேளு
உத்தமமாம் பொன்னாங்கண்ணி சுரையொடு சீந்தில்
தண்ணானச் செருப்படையுஞ் சிறுபூளை விழுதி
செப்பரிய மூக்கறட்டையொடு முத்தெருக்கன் செவிதான்
விண்ணான வெள்ளைச் சாரணையுடன் வெள்ளருகு
விளங்குகின்ற முத்தா மணிதா னொன்றுங் கேளு
நண்ணாக முன்போலே பாவகமே செய்து
சத்தெடுத்து சூத்திரத்தில் தாக்கிடாயே. 478

தாக்கிட்டு இப்படித்தான் வரிசையாக
சமத்தாகச் சாரணை தான் செய்து கொண்டு
போக்கிட்டுப் புடமிட்டு எடுத்தாயானால்
பேரான முன்னிருந்த யிடைதானிருக்கும்
சூக்கிட்டு இப்படிதான் இருபத் தொன்று
சுத்தமாய் சத்துகளை யெடுத்துத் தாக்கில்
நோக்கிட்ட சுருபமென்ற குளிகையாகுந்
நொடிக்குள்ளே மூன்று லகுஞ் சுத்தலாமே. 479

## எழுபது யுகம் வாதம் - காலாங்கி உபதேசம்

சுத்தியே மூன்றுலகும் பாட்டர் தானுஞ்
சோதித்து ஆயிரத் தெட்டண்ட மெல்லாம்
மத்தியே அதி செயங்களெல்லாம் பார்த்தும்
அகத்தியர் தானிருக்கின்ற மலைக்குமிப்பால்
நத்தியே அரசடியில் வீற்றிருந்து
நலமான பிள்ளைகளுக்கு உபதேசித்து
முத்தியே மூன்றுலகுங் கீர்த்தி பெற்று
மூச்சடா சமாதியிலே யுரைத்தார் தானே. 480

உரைத்திட்டு யெழுபது யுகம் உபதேசித்தார்
உத்தமராங் காலாங்கி அய்யர் அப்பா
நிரைத்திட்ட காலாங்கி அய்யர் தாமும்
நேருகின்ற பக்குவத்தில் எனை அழைத்து
மரைத்திட்டக் குளிகையொடு வாதங் காட்டி
மாசற்ற நிற்குணத்தில் வழியுஞ் சொன்னார்
பரைந்திட்டப் பாதியுந்தான் பண்ணிக்காட்டிப்
பசுபத மறிவித்துப் பாரென்றாரே. 481

பாரென்று யெனையழைத்துக் காலாங்கி தாமும்
பக்குவத்திலறிவித்தார் பண்புள்ளா னென்று
நேரென்று எழுபது யுகம் வாதம் பார்த்து
நிலையாத கருவெல்லாம் நிலைக்கப் பண்ணார்
பேரென்ற யேழு காண்ட முன்னே சொன்னேன்
யேத்தமா மெழு நூற்றுள் மருந்தும் சொன்னேன்
நீரென்ற நிகண்டில் நம்முடைய மரபில்
நிலையாது சாஸ்திரங்கள் நிர்மூடமாமே. 482

நிர் மூடமாமென்று சாஸ்திரங்கள் எல்லாம்
நிலைக்கவே நிகண்டொன்று செய்தேனப்பா
வர்மமெல்லாம் வெளியாகத் திறந்து சொன்னேன்
வாதத்தினுற் பனங்கள் வழங்கச் சொன்னேன்
தர்மமாயுள்ளபடி திறந்து சொன்னேன்
சார்வான நிகண்டினுக்கு ஒப்புக் காணேன்
கர்மமெல்லாந்தனை யகற்றி கற்பஞ் சொன்னேன்
காயசித்தும் யோக சித்துங் கருவாய்ப் பாரே. 483

## திரேகம் பஞ்சபூதக் குறிப்பு

பாரப்பா நிகண்டதுவும் பதினெழு நூறு
பரிபாஷைக் கருவுக்கு திறவு கோலாகு
நேரப்பா:அகண்டத்திற் சாத்திரங்களெல்லாம்
நிறை நிறையாய்ச் சோதிச்சுக் கருவையுண்ணி
சேரப்பா சிவகாமி சொல்லக் கேட்டு
சித்தம் மகிழ்ந்தய்யர் சொல்லத் திறமாய்க் கேட்டு
கோரப்பா ஆயிரத்து யெழுனூறு
கொடடினேன் குறிப்பெல்லாங் கூர்ந்து பாரே. 484

கூர்ந்து பஞ்ச பூதத்தின் குறிப்பு கேளு
கூரான வேதைக்கு பஞ்ச பூதம்
நேர்ந்து நின்ற சிருட்டிக்கும் பஞ்சகர்தான்
செயலான மனுஷருக்கு மஞ்சுபூதம்
ஆர்ந்து நின்ற பறவைக்கு மஞ்சு பூதம்
அப்பனே யோனி யெல்லா மஞ்சு பூதம்
வார்ந்து நின்ற வாதத்திலஞ்சு பூதம்
வகையெல்லாம் மார்க்கமாய் மருவக்காணே. 485

காணப்பா பிரிதிவி தான் மண்ணுமாச்சு
கலந்து நின்ற அப்புவது தண்ணீராச்சு
தோணப்பா தேயுவது நெருப்புமாச்சு
சுத்தமாம் வாயுவது காற்றுமாச்சு
ஆணப்பா ஆகாசம் விண்ணு மாச்சு
அறிந்து கேள் பிருதி நிறம் பொன்னுமாச்சு
வீணப்பா அப்பு நிறம் பளிங்குமாச்சு
மீளாதே தேயு நிறம் செகப்புமாச்சே. 486

## பஞ்சபூத நிறம் - பஞ்ச பூதக்கூறு

ஆச்சப்பா வாயு நிறங் கறுப்பு மாச்சு
ஆகாச நிறமென்ன புகையுமாச்சு
போச்சப்பா பிரிதிவியின் கூறே தென்னில்
பேரான மயிரெலும்பு தோலு தசையாகும்
நாச்சப்பா நரம்போடு வஞ்சுமாகும்
நலமான அப்புவின்றன் கூறேதென்னில்
வேச்சப்பா வெள்ளை நீர் இரத்தம் மூளை
வெண் சதையா மச்சையொடு மஞ்சுமாமே. 487

அஞ்சான தேயுவுட கூறே தென்னில்
ஆகாரந்துஞ்சல், பயஞ், சோம்பு, போகம்
மஞ்சான வாயுவுடன் கூறே தென்னில்
ஓடலோடு கிடத்தலா மிருக்கையாகும்
மொஞ்சான நடத்தலாம் நிறுத்தலாகும்
உயர்கின்ற ஆகாசக் கூறே தென்னில்
கஞ்சான காமமொடு குரோத லோபங்
காரணமா மத்ததொரு மாச்சரியமாமே. 488

## வஸ்து பஞ்சபூதம் - லோக பஞ்சபூதம்

ஆமென்ற மலக்கூறு பிரிதிவியாகும்
அப்புவிடக் கூறே தென்னில் அமுரியாகுந்
தேமென்ற தேயுவுடக் கூறே தென்னில்
சென்னீராம் நாதமாம் வாயுக்கூறு
மூமென்ற முலைப்பாலும் வானீராகும்
மூற்கமாம் விந்ததுவுமா கரசக்கூறு
வர்மென்ற வஸ்து வென்றேயிது வைந்து மாகு
மகத்தான குருவாத மருவிப்பாரே. 489

மருவுகின்ற தங்கமது பிரிதிவியாகும்
மகத்தானக் காரீய மப்பு வாகுந்
தருவுகின்ற தேயுவது செம்புமாகுஞ்
சிறப்பான யிரும்பதுவும் வாயுவாகும்
நருவுகின்ற நாகமது வாகாச மாகும்
நலமான லோகமிது பஞ்சபூதம்
மருவுகின்ற லோகமிது வஞ்சுங் கூடில்
அவஸ்தைக் காவிக்கு மேகா தென்னே. 490

ஏகாமற் சிந்தூரங் களங்கமெல்லாம்
எளிசாக வேத்த மொன்று சொல்லக்கேளு
தாகாமற் தங்கத்தைத் தகடு தட்டித்
தனியான காவிதனை பழச்சாற்றாலரைத்து
வாகாகத் தங்கத்தின் மேலே பூசி
வளமாக நாலுதரம் காச்சிப் போடு
தேகாமற் செம்புதனைத் தகடு தட்டி
சிறப்பான குண்டுமணி வெடியுப்புச் சேரே. 491

சேரிதிலே சமனாகச் சீனந்தன்னை
சிறப்பான செம்புக்கு மூணிடையே யேகுங்
காரிதிலே கழுதையுட கத்தத் தாட்டி
கசகாமற் பூசியே காய வைத்து
பாரிதிலே பரியோட்டில் பழுக்கக் காச்சிப்
பருவான கழுதையுட களத்திற் றோச்சு
யேரிதிலே யேழுதிரங் காச்சிக் கொண்டு
யெளிதாகத் தங்கத்தில் சமனாகச் சேரே. 492

**பஞ்சலோகம் சேர்மானம் - இடைவிபரம் - அறிதல்**

சேத்ததனை யிரும்பினுட் அரப்பொடி பலந்தான்
திறமாகப் பழச்சாற்றில் ஊற வைத்து
மூத்ததனை மூணானாள் கழுவி வாய்த்து
முற்காரமாம் வெண்காரம் சமனாய் சேர்த்து
ஆத்ததனைச் செவ்வல்லிக் கிழங்கு சாற்றில்
அரைத்துமே குகையில் வைத்து உருக்கிப் போடு
சாத்ததனைத் தங்கத்திற் சமனாய் சேர்த்து
தனிப் பின்பு காரீயம் பலத்தை வாங்கே. 493

வாங்கியே குகையிலிட்டு உருக்கிக் கொண்டு
வளமாகச் சாய்த்துவா கற்றாழஞ் சாற்றில்
ஏங்கியே ஏழுதர முருக்கிச் சாய்த்து
இதமான தங்கத்தினிடை தான் சேர்ப்பாய்
ஓங்கியே நாகமொரு பலத்தை வாங்கி
உற்பனமா யிலுப்பை நெய்யிலேழுதரஞ் சாய்த்து
சாங்கியே தங்கத்திற் சமனாய்ச் சேர்த்து
சாரித்து வைந்தையுந்தான் உருக்கிடாயே. 494

உருக்கிய தோரிடை யெல்லாம் நிறுத்துப் பார்த்து
உணர்வாக அஞ்சிடைக்கும் வெள்ளிசமன் சேர்த்து
செருக்கியதோர் செந்தூரங் களங்கு சுன்னந்
திரமான மெழுகோடு தயில வகையெல்லாம்
பருக்கியே பாச்சினாலுட் கொண்டு பழுக்கும்
பரிவாகப் புடஞ் செயத்தானாகும் பாரு
கருக்கியே காவிக்கும் உப்புக்கேகா
கனமான பஞ்சலோகக் கருத்து தானே. 495

## லவண வகை - பஞ்சபூதம்

கருத்தாகச் செந்தூரக் களங்கு தன்னை
கனமான நவலோகத் தியச் சொல்லி
சுருக்காகச் சூத்திரத்திற் சுருக்கிச் சொன்னேன்
சூட்சமெல்லாம் நிகண்டுக்குள் திறந்து விட்டேன்
அருத்தாக பிண்டமது மஞ்சு பூதம்
அண்டமெல்லாம் மஞ்சாச்சு யோனியெல்லாம்
மருத்தாக வஞ்சாச்சு காரசாரங்களெல்லாம்
பாரஞ்சு பூதமென்று பகுத்துப் பாரே. 496

பகுத்துப் பாரஞ்சாலே உருவுமாச்சு
பகருகின்ற தத்துவமும் அஞ்சாலாச்சு
தொகுத்துப் பார் வாதமது அஞ்சாலாச்சு
சூட்சத்தை யறியாட்டால் வாதம் போச்சு
வகுத்துப் பாரஞ்சானால் வாதமாகும்
மருவியந்த அஞ்சுவிட்டால் எல்லாம் பாழாந்
தகுத்துப் பார் சரக்குகளில் அஞ்சாக
சாத்துகிறேன் லவணமாக சார்ந்து பாரே. 497

சார்ந்து பார் கல்லுப்பு இந்துப்போடு
சமரசமாய்ப் பிரிதிவியின் கூறதாகுங்
கூர்ந்துப் பார் சத்தியொடு நவச்சாரம் இரண்டுங்
குறிப்பான அப்புவுடக் கூறதாகும்
தேர்ந்துபார் சவுட்டுப்பு வெடியுப்பு ரெண்டுந்
தேயுவுடக் கூறென்றே செப்பலாகும்
வேர்ந்து பார் வெண்காரம் துரிசி ரெண்டும்
வெளுப்பான வாயுவுடக் கூறதாமே. 498

## பஞ்சபூத வொடுக்கம் - பஞ்சபூத பாசாணம்

தாமென்ற பூரமொடு வழலை ரெண்டுந்
தனித்ததொரு ஆகாசக் கூறுமாகும்
மாமென்ற ஐம்புலனாய் பிறிக்கச் சேர்ந்து
அறிந்தெடுத்தால் வாதமிதிலடங்கிப் போகுந்
தோமென்ற குருவுக்கும் அஞ்சு வேணுஞ்
செந்தூரக் குருவுக்கும் அஞ்சு வேணும்
காமென்ற கட்டினத்துக்கு அஞ்சுவேணும்
களங்குக்கு மெழுக்குக்கும் அஞ்சு தானே. 499

அஞ்சாவதே தென்று மயங்க வேண்டாம்
மருளான பஞ்ச கர்த்தாளாடுங் கூத்து
மஞ்சாவ பிரிதிவிதான் அப்புவினி லொடுங்கும்
பேரான அப்பு வந்து தேயுவினி லொடுங்குந்
திஞ்சாத தேயுவது வாயுவினி லொடுங்குஞ்
சிறப்பான வாயுவது விண்தனிலே யொடுங்கும்
அஞ்சால் தானா காயஞ் சிவன் தனக்கு ளொடுங்கும்
வாதமது யிம்முறை போல் வழக்கமாமே. 500

வழக்கமாம் பாஷாணம் பஞ்சபூதம்
வகை சொல்வேன் மண்கூறு தொட்டியொடு சிங்கி
வழக்கமாம் கரகமுகியும் பவளப்புத்து
கடுந்தீ முறுகலொடு பிருதிவியின் கூறு
தழக்கமாங் கெவுரியோடு சங்கப் பாஷாணந்
தனித்ததொரு குதிரைப்பல் வெள்ளைப் பாஷாணம்
பழக்கமாங் குக்குடத்தில் சூடு கெந்திப்
பாரிதுக்குள் அப்புவுடக் கூறுமாமே. 501

## உபரச பஞ்சபூதம்

ஆமென்ற தாளகமும் வீரங்கெந்தி
அரிதார மனோ சிலையுந் தேய்வு கூறு
போமென்ற புத்தோடு பஞ்சபட்சிப்
பெரிதானச் சரக்கண்ட மிறுதகப் பாஷாணந்
தாமென்ற லிங்கமொடு அஞ்சு தானுந்
தனித்து நின்று வாயுவுடக் கூற தாகுங்
காமென்றப் பாஷாணஞ் சூதத்தோடு
கடிதான வாகாயக் கூறுமாமே. 502

கூறான ஐஞ்சால் ஒடுங்குகின்ற சரக்கிற்
கூட்டினால் வாதமது கோடிக்கோடும்
காறாகப் பட்டத்துக்கு கயிறு தப்பில்
கசக்கியே யெழும்பாமல் சாடிப் போகும்
வாறாக வாதத்துக் கொடுக் கந்தப்பில்
வரிசையாய் வாராமல் மண்ணாய்ப் போகும்
நீறாக செந்தூரங் களங்கமாக
நிலவரமா யொண்ணுக் குள்ளொடுங்கும் பாரே. 503

பாரென்ற வுபரசத்திற் பஞ்சபூதம்
பகரவே சிலாசித்து அப்பிரகங் காந்தம்.
பேரென்றப் பூனாகம் ராசவத்தம்
பிரிதிவியின் கூரென்றே பேசலாகுந்
தாரென்ற சங்கோடு கோழி முட்டை
தனித்த நாகர வண்டு கிளிஞ்சி நண்டு
வாரென்ற வப்பினுடக் கூறதாகும்
அஸ்தியென்ற யெலும்பு யிந்திர கோபமாமே. 504

### சரக்குகள் ஒன்றுக்கொன்று வொடுக்க மறிய காப்பேடுங் கடையேடும் பார்க்க

கோபமா மயிலிறகு நிமிளை வெண்கலங்
கூறாகத் தேயுவுடக் கூறுமாகுந்
தாபமாஞ் சாஸ்திர பேதியோடு கல்னார்
தளுக்கான கல்மதமும் அன்னபேதி
வாபமா மயிரொடு வாய்வுக்கூறு
வாட்டமாம் வைக்கிறாந் தந்துத்தத்தோடு
வாபமா மலைருதுவு மிருசிதப் பாசாணம்
மழகானச் சுக்கிரனு மாகாஷக் கூரே. 505

கூறாகக் காரத்திலஞ்சு பூதம்
குறிப்பாக வொடுங்குகின்ற குணத்தைப் பாரு
வாறாக பாசாணம் பஞ்ச பூதம்
வகையாக வொடுங்குகின்ற வண்மை பாரு
வீறாக வுபரசத்திற் பஞ்சபூதம்
விபரமதாய்ச் சேருகிற விளக்கம் பாரு
தாறாகச் செந்தூரங் களங்கு செய்து
திறமையா பஞ்சலோகத்திற் செய்து பாரே. 506

பாரென்ற பூதத்தி லொன்று தப்பில்
பலபல வாங்குணா குணமாகில் வாதந்தானும்
நேரென்ற வூனுக்குள் பஞ்சபூதம்
நிலை தப்பிற் காயமது நிக்கமாட்டா
தூரென்ற சாத்திரத்தி லுண்ணிப் பாரு
துசரமாய்க் காப்பேடுங் கடையேடும் பாரு
நூரமென்ற வாதமெல்லாம் நொடிக்குள்ளாகும்
நுட்பமெல்லாம் நிகண்டுக்குள் நுழைந்து பாரே. 507

நுழைஞ்சிப் பார் அண்டத்திற் குவடு தன்னில்
நோக்கானச் சித்தர்கள்தான் மெத்தவுண்டு
வளைஞ்சுப்பார் அவரவர்கள் வணக்க மெத்த
மகத்தான வித்தையுண்டு வாய் திறக்கார்
குளைஞ்சு பார் வஸ்து சுத்தி கற்ப மீய்ந்தால்
கொடிகானச் சந்தோஷங் குறிப்பாய்ப் பாரு
வளைஞ்சு பார் அருகிருந்த வஸ்து சுத்தியீய்ந்து
ஆனந்தமான பின்பு ஆண்மை கேளே. 508

### காயகற்பம் பூரணாதி லேகியம்

ஆண்மையாங் கற்ப மொன்று சொல்லக் கேளு
அப்பனே கடைக்கஞ்சா பலந்தான் நூறு
நாண்மையாம் நல்ல தண்ணிக்குள்ளே போட்டு
நலமாக வூறவைச்சு மறுநாள் தானும்

மூண்மையாய் முன்தண்ணி யிறுத்துப் போட்டு
முத்துபோல் தண்ணீர் விட்டு மூணுதரங் கழுவி
பாண்மையாய்ப் பசுவின் பால் படிதானொன்று
பதறாமல் நல்லதண்ணீ ரெண்டுபடி வாரே. 509

வாத்துமே அடுப்பேற்றி எரிக்கும் போது
வளமான பசுவின் நெய் படி தான் வாரு
கோத்துமே குலுக்கியே கொதிக்கும் போது
கொட்டியே கோணிதனிற் கிட்டிகட்டி
பாத்துமே பாண்டத்திற் பிழிந்து வாங்கி
பதறாமலாற வைத்து மேல்நெய் வாங்கி
யேத்துமே தண்ணீரை யிறுத்துப் போட்டு
யித்தோடே அனுபானம் இயம்பக் கேளே. 510

இயம்பவே அபின்தானும் பலந்தான் அஞ்சு
இயலான பசுவின் பால் படியஞ்சில் போட்டுக்
கயம்பவே காச்சியெல்லாங் கரைந்த பின்பு
கசகாமற் புரைகுத்தி உறைந்த பின்பு
மயம்பவே யெடுத்திட்டுக் கடைஞ்சு வெண்ணை வாங்கு
வளமாக வுருக்கியே முன்னெய்யில் விட்டு
தயம்பவே சர்க்கரைதான் சேருவஞ்சு
சதுறாவின்பால் நாலு படியிற் சேரே. 511

### நாதாக்களுக்கு பூரணாதி கொடுக்கவும்

காச்சியே கரைந்த பின்பு வடிகட்டிக் கொண்டு
கனமான வஸ்து வொருபடியும் வார்த்து
பாச்சியே பாகுபதத்திறக்கி வைத்துப்
பகர்கின்ற சுக்கோடு யேல மாஞ்சில்
மீச்சியே மிளகோடு சாரப் பருப்பு
வெறிப்பானக் கிறாம்பு பத்திரி சாதிக்காய்
தாச்சியே தாளிச பத்திரியுங் கோஷ் டஞ்
சார்வான அதிமதுரங் கசகசா வித்தே. 512

வித்தோடு அமுக்கிறாவால் மிளகு கிராம்பு
விபரமாய் வகைக்கு ரெண்டு பலமுங் கூட்டி
புத்தோடு பொடி பண்ணி சூரணமாய் செய்து
பேரான பாகிலிட்டு கிளறிக் கொண்டு
முத்தோடு முன்னெய்யுங் கூட விட்டு
முயற்சியாந் தேனுமொரு படியும் வார்த்து
அத்தோடு அடுப்பில் வைத்து பதத்திறக்கு
ஆறவிட்டுப் பரணிதனி லடைத்திடாயே. 513

அடைத்திட்டு நாதாக்கள் அணுகும் போது
அடிவணங்கிப் பாக்களவு எடுத்து ஈவாய்
உடைத்திட்டு மனமகிழ்ந்து உள்ளே கொள்ள
ஓங்கி தோராறு தலம் வளியாய்க் காணும்

படைத்திட்டு மதிதனிலே அமுதஞ் சிந்தும்
மாசத்த சதகோடி பானுவுந் தோணுந்
தடைத்திட்ட சிவந்தனிலே சொக்கப் பண்ணு
சுகசீவ முத்தானந்தந் தோணும் பாரே. 514

**மேருவுக்கு வடதிசை சித்தர், கீழ்திசை சித்தர், மேல்திசை சித்தர், வயது வல்லமை, தென்திசை சித்தர்கள் மடபதிகள் பேர்களறிய**

பாரப்பா வானந்தமான பின்புப்
பரிவாக நல்விசேஷஞ் சொன்னாயாகில்
நேரப்பா மனதிலுள்ள கருவை யெல்லாம்
நிச்சயமாய்ச் சொல்லிடு வாரறிந்து கொள்ளு
தாரப்பா மகா மேரு வடக்கிலுள்ள
சுகமான சித்தர்களை சொல்லக் கேளு
ஓரப்பா உயரமது பனைமட்டாகும்
வுகந்து நின்ற வயசுனுட உறுதிகேளே. 515

உறுதி மூவாயிரமா மாண்டு தானும்
வுத்து நின்ற மகரமேரு கிழக்கிலுள்ள சித்தர்
திறுதியாய் உயரமது செப்பக்கேளு
செயலான பனையளவு முக்காலாகும்
இறுதியாய் வயததுவும் எழு நூறாகும்
மகத்தானச் சித்துண்டு குளிகையுண்டு
மிறுதியா மாமேரு மேல் குள்ளசித்தர்
மிடுக்கான வுயரமது யரைவாசி தானே. 516

அரையான பனைமட்டும் உயரமாகும்
மன்னூறு வயசாகு மாண்மை மெத்த
விரையான வாதமுண்டு குளிகையுண்டு
மிடுக்கான மூலிகையு பாஷாணமுண்டு
துரையான ஆதிரசக் கிணறுமுண்டு
சூஷமாம் வித்தையுண்டு துடியா மெத்த
மரையான மகாமேரு தென்திசையிற் கேளு
வாகான வுயரமது காற்பனையின் மட்டே. 517

மட்டான வயசதுவும் நூத்திருபதாகும்
வாசிப்பார் வெகு நூல்கள் மார்க்கம் மெத்த
திட்டான பொதிகையினிற் சூழுகின்ற
சித்தர் திரள் காணுந் தென்புறத்தில் நீட்சணமு மெத்த
குட்டான குளிகையுண்டு கொடிய வேகங்
கூறரிது வெகு பேர்க்கு குறிப்பு மெத்த
தட்டானை வலத்தில் வைத்த தாயார் தன்னை
சதாநித்தம் பூசிப்பார் தாயார் தானே. 518

தானென்ற மடபதிகள் பேரைக் கேளு
சாதகமாந் தெட்சணத்திற் சின்மய மாந்தேவர்
தேனென்ற சனகாதி குமார ரோடு
செப்பியதோர் வியாக்கிரமர், பதஞ்சலி தானாகும்
நானென்ற மூல வர்க்கம் நம்முடைய வர்க்கம்
நலமான சேஷ வரனந்தனாதர்
கானென்ற கத்துகி நாதரோடு
கடிதான கவுண்டிக நாத ராமே. 519

நாதரோடு கூறுமானந்த மூர்த்தி
நலமான யோக வானந்த மூர்த்தி
தீதரோடுங் கவானந்த மூர்த்தி
செப்பரிய சாந்த வானந்த மூர்த்தி
நீதரோடு ரிஷப வானந்த மூர்த்தி
நித்தியராங் கைவைத்தானந்த யோகி
சேதரோடு செகன வானந்த யோகி
சூரியானந்த ரென்ற யோகியாமே. 520

யோகியானந்த பேர் சித்தியானந்த யோகி
வுத்தமாங் கவுண்டி கானந்த மூர்த்தி
நூகியா மருபவானந்த மூர்த்தி
நுட்பமாங் கேசரானந்த மூர்த்தி
மாகியாங் கெந்தா வானந்த மூர்த்தி
மாகமாய் கைநாதரென்ற மூர்த்தியாகும்
போகியென்ற மாய்கை யானந்த யோகி
புகலரிய நித்தியானந்த மாமே. 521

ஆமென்ற மகா விசுவானந்த மூர்த்தி
ராத்திக வுமையானந்த நாதர்
சாமென்ற சமையானந்த மூர்த்தி
தாய் மத்த சறுவானந்த மூர்த்தி
தோமென்ற சுபகானந்த மூர்த்தி
சுத்த சைவ தன்னியானந்த மூர்த்தி
வாமென்ற அமுர்த வானந்த மூர்த்தி
மகத்தான செகண்டியானந்தர் காணே. 522

ஆனந்த லெட்சி யானந்த மூர்த்தி
ஆண்மை கொண்ட சத்து வானந்த மூர்த்தி
தேனந்த சுத்த வானந்த மூர்த்தி
செயங் கொண்டனந்த வானந்த மூர்த்தி
கானந்த கேச ரானந்த மூர்த்தி
கலந்து நின்ற கம்பீரானந்த மூர்த்தி
ஒனந்த வுலகை யானந்த மூர்த்தி
வுண்மையாட் பிரம்ம வானந்தர் காணே. 523

### அறுபத்து நாலு மடபதிகள் பேருமறிய

காணப்பா திரிலோ கானந்த மூர்த்தி
கடிசான ராக்ஷ தானந்த நாதா
வாணப்பா மாலின் வானந்த நாதா
மகத்தான பிரசண்ட வான்ந்த நாதா
ஆணப்பா வளங்க வானந்த நாதா
அனந்த வித்தியானந்த நாதா
ஊணப்பா வம்பிகானந்த நாதா
உத்தமமா நந்தியானந்தர் தாமே. 524

### குரு வர்க்கங்களறிய

தானென்ற மகானந்த மூர்த்தியோடு
சாந்த மாஞ் சுந்தரானந்த மூர்த்தி
தானென்ற டமரானந்த நாதர்
காடுதனிற் சஞ்சரித்த கலானந்தர்
வானென்ற அபைய வானந்த நாதர்
விதிகொண்ட விகார வானந்த நாதர்
பூனென்ற பூத வானந்த நாதர்
புகழ் பெரிய சாருவானந்தர் தானே. 525

ஆனந்த வியோம வானந்த ரோடு
அண்டரண்ட சொரூப வானந்த மூர்த்தி
வானந்தவாசி யானந்த மூர்த்தி
மகத்தான கங்களானந்த மூர்த்தி
பூனந்தப் பூரணா னந்த மூர்த்தி
புகழ் கொண்ட கமலவானந்தர் காணே
கோனந்த கோரக்க நாதரோடு
குற்றமில்லா நிற்குணானந்த மூர்த்தி. 526

காணப்பா அறுபத்து நாலாய் நின்ற
கனமான மடபதிகள் நாமமாகும்
பூணப்பா மரபுகளிற் சாத்திரங்கள் வெவ்வேறு
பேணியவர் சீடவர்க்கங் கோடா கோடி
ஆணப்பா நூல்தனிலே அங்கங் கோடி
ஆடுகிற சாறணையோ குளிகை கோடி
வீணப்பா வேதைதனில் வித்தை கோடி
மிடுக்கானச் செந்தூரங் கோடியாமே. 527

கோடியென்ற குருவர்க்கங் கூறக் கேளு
கூறான நந்தியென்ற நாமம் நால்வர்
சிடியென்ற சிவயோக முனிதானொன்று
திறமானப் பதஞ்சலி வியாக்கிரமர் ரெண்டு
நாடியென்ற மூல குருவோட்டே யெட்டு
நலமான நந்தியுடப்பிள்ளை யெண்மர்
வாடியென்ற மூலகுரு பிள்ளைக் கேளு
மாலாங்கள் கஞ்சமலை சித்தாமே. 528

**மூலவற்கம், கஞ்சமலை சித்தர், மாலாங்கி சித்தர்-நாலு திக்கும் நாலு நந்தி பதஞ்சலி வியாக்கிரமர்**

ஆமென்ற பிரமனோடு இந்திரனுஞ் சோமன்
அய்யனென்ற காலாங்கி ருத்திரர் ஏழு பேர்
காமென்ற காலாங்கி மூர்த்திக் கன்று
காரியமா மறுபத்துனாலு சீடர்
போமென்ற முதல் தீட்சை போகரென்ற யான்தான்
பின்புதான் அறுபத்து மூன்று பேர்கள்
தாமென்ற கஞ்சமலை சித்தருக்கு
சாதக மாயஞ்சு பிள்ளை சீடராச்சே. 529

ஆச்சென்ற மாலாங்கி மூர்த்திக்கப்பா
ஆண்மையா யொன்பது பேர் சீடராச்சு
யேச்சென்ற இந்திரனும் பிரமன் சோமன்
எழிலான ருத்திரருக்குப் பிள்ளையில்லை
வாச்சென்ற நாலுதிக்கும் நாலுமூர்த்தி
மகத்தான கீர்த்தி கொண்டார் மைந்தா கேளு
பாச்சென்ற பாட்டருடன் எட்டுப் பேரும்
படிப்படியாய் நாலுதிக்கும் நாலு நந்தியாச்சே. 530

நந்தியென்ற அகண்டம் போல் நாலுதிக்கும் நின்றார்
நலமான பதஞ்சலியும் வியாக்கிரமர் கேளு
சந்தியென்ற அம்பலத்தில் சேர்ந்து போனார்
சிவயோக முனிதானும் நெட்டாய்ச் சென்று
புந்தியென்ற பூரணத்திற் சேர்த்து ஆடிப்
பெரிதான மேருவிலே தாண்டி நின்று
ஓந்தியென்ற வுறைந்திடத்தில் வானோர்க்குள்ளே
உத்தமமா மொன்பது பேர் சீடராச்சே. 531

**திருமூல வர்க்க மறியவும், திருமூலவர்க்க வேடமறியவும்**

ஒன்பது பேர் சீடவர்க்கம் சீடர்களை யெல்லாம்
முத்துமே யிந்திரனும் உதறிப் போட்டார்
கன்பதென்ற மூலகுரு வர்க்கஞ் சொல்லக்
கணக்கிட்டு முடியாது காணப் போகா
வன்பதென்ற வறுபத்து மூணு பேர்க்கு
மளவிட்டு முடியாது சீடர் வர்க்கம்
நன்பதென்ற முதற்பிள்ளை கொங்கணர்தான் கேளு
நாற்பத்து யேழுபேர் பிறகு தானே. 532

தானான மூலவற்க வேடம் கேளு
சடை யொன்று பிரம்பொன்று கடக வாள்
மூனான உப்பினுடக் கெதை தான் ஒன்று
உசத்திட்டப் படிகமணி யோக வேட்டி

பானான படிகலிங்கம் பாத குறடோடு
வஸ்துகளுஞ் செம்புறுட்டு காதில் வேடம்
பூனான புலித்தோலும் புத்தகம் ருத்திராட்சம்
பிரபல மாந்திருமூல வர்க்கத் தோர்க்கே. 533

திருமுல வர்க்கமென்றால் கேசரத்தின்
செப்பரிய மலைதனிலே சித்தர் எல்லாம்
திருமூல வர்க்க மென்று அடி பணிந்து
சொரூப மணி கேட்பார்கள் கொடுக்க வேண்டாந்
திருமூல வர்க்க மென்றால் பான மீய்ந்து
சொரூப மணி செய்கிற திறமைக் கேட்பார்
திருமூல வர்க்கத்தில் சொரூப மணியுண்டு
செப்பினார் தெய்வமென்பார் சித்தர்தானே. 534

## துருசிக்குச் சத்துரு மித்துரு

தானென்ற துருசிக்குச் சத்துருவைக் கேளு
சவுடு தொட்டி அஞ்சனமும் பிணங்கு நாகம்
மானென்றுச் சூடனோடு அப்பிரகஞ் சீனம்
அடுக்கவே வெள்ளைப் பாஷாணங் கல்லுப்போடு
கானென்ற கற்சவடு மிருதாறு சிங்கிக்
காந்தமொடு இந்துப்பு நாகம் வங்கம்
வேனென்ற சவுக்காரம் இவ்வகை களெல்லாம்
மிகையாகத் துரிசிக்குச் சத்துருவாமே. 535

ஆகின்ற துரிசிக்கு மித்துருவைக் கேளு
அரிதாரஞ் சாரமொடு வெண்காரம் வீரம்
தீகின்ற கெந்தியோடு சூதம் பூரம்
சிலையோடு கபரியுடன் நிமிளையாகும்
பாகின்ற பண்ணையொடு கெவுரி லிங்கம்
பாருக்குள் துரிசிக்கு மித்துருவாகும்
போகின்ற வாதமெல்லாம் இதுக்குள் நிற்கும்
புரிசடையோன் சொன்னபடி போதித்தேனே. 536

## சாரத்தின் சத்துரு - மித்துரு

போதித்த சாரத்தின் சத்துருவைக் கேளு
பெரிசான கல்லுப்பு இந்துப்புப் படிகி
வாதித்த வளையலுப்பு இரும்பு காந்தம்
வங்கமோடண்டத் தோல் மடிஞ்ச சுக்கான்
சேதித்த நிலைச் சுன்னங் காரீயந்தான்
செப்பரிய கடல்நுரையும் அப்பிரகஞ் சவடு
சாதித்த கிளிஞ்சி முதல் இவ்வகை களெல்லாம்
சாரத்தின் சத்துருவாய் சாற்றலாமே. 537

சாத்தலாஞ் சாரத்தின் மித்துருவைக் கேளு
தாளகமுஞ் சிலையொடு கந்தகமுங்காரம்
வேத்தலாம் வெடியுப்பு வீரம் லிங்கம்
விளங்குகின்ற காரீயம் கல் நாராகும்
நீத்தலாங் கெவுரியோடு நாகமுடன் நிமிளை
நேரான வத்தமொடு செம்பு இதுவெல்லாம்
வீத்தலாஞ் சாரத்தின் மித்துருவே யாகும்
விபரமாய் பார்த்தறிந்து வேதை போடே. 538

### வெடியுப்புவின் சத்துரு - மித்துரு

போடவே வெடியுப்புச் சத்துருவைக் கேளு
பேரான காரீயஞ் சவடு சூடன்
வீடவே வெள்ளீயந் துரிசி வெள்ளி
விபரமா இரும்பு செம்பு காந்தம் வத்தம்
சூடவே சிலை தொட்டிக் கெந்தி சிங்கித்
தீமுறுகல் அண்டோடு சுரை கெந்தியுமாகும்
பூடவே பொட்டிலைக்குச் சத்துரு வாகும்
புவனியுள்ளோர் பிறித்திதுக்குள் சுண்ணம் பாரே. 539

பாரென்ற வெடியுப்பு மித்துருவைக் கேளு
படிகியுடன் இந்துப்பு கல்லுப்புக் காரம்
நேரென்ற லிங்கமொடு வீரந்துத்தம்
நிசமான தாளகமுங்கத்தும் நாகம்
காரென்ற கடலுநுரை நிமிளை வெள்ளை
கம்பிளியும் பழம் பிளியும் ரோமமாகும்
வேரென்ற வெடியுப்பு மித்துருவாகும்
மீறாமற் சேத்தரைத்து விரவிடாயே. 540

### கல்லுப்பு சத்துரு - மித்துரு

விரவிடவே கல்லுப்புச் சத்துருவைக் கேளு
வீரமொடு வெத்தமாஞ் சவட்டு வில்லை
பரவிடவே சூடனொடு படகியாகும்
பராபரமாங் காந்த மொடு இந்துப்பு
திரவிடவே சிங்கியொடு பவளப்புத்துச்
சிலையுடனே பழம் புளியும் சத்துருவாகும்
திரவிடவே சத்துருவால் கொன்று நீயுந்
தாக்கியே மித்துருவால் எழுப்பிக் கொள்ளே. 541

கொள்ளவே கல்லுப்பு மித்துருவைக் கேளு
கூறான் பூரமொடு இரும்புச் செம்பு
கள்ளவே காரமொடு கெவுரி நாகங்
கெந்தியொடு தாளகமு நிமிளை வெள்ளை
அள்ளவே அப்பிரகம் லிங்கம் வங்கம்
அடங்காத கல்லுப்பு மித்துரு வாகும்
துள்ளவே வாதமிதிற் சொக்கிப் போச்சு
சூதத்திற கட்டியே செந்தூராஞ் செய்யே. 542

### காரத்தின் சத்துரு - மித்துரு

செய்யவே காரத்தின் சத்துருவைக் கேளு
சிலாசித்து பிளியோடு அண்டமாகும்
தொய்யவே சூடனொடு சுண்ண வகையெல்லாஞ்
சூட்சமாம் பூரமொடு சத்துருவாகும்
மெய்யவே உபரசங்கள் பாஷாணங்கள்
வளமான லோகங்கள் மற்றதெல்லாம்
கையவே காரத்தின் மித்துருவாகும்
சுணக்காக வுள்ளபடி கருதிப் பாரே. 543

### சீனத்தின் சத்துரு - மித்துரு

கருதியதோர் சீனத்தின் சத்துருத்தான்
காரத்தின் சத்துருவு மிரண்டு மொன்றாம்
பருதியதோர் பாஷாண முபரசங்கள்
பாங்கான லோகங்கள் மற்றதெல்லாம்
திருதியதோர் சீனத்தின் மித்துருவாகும்
சிவனுடைய வாதார மிந்த வாறாம்
நிருதியதோர் வாதமெல்லா மதனாலாகும்
நேர்பாக அறிந்தவனே வாதியாமே. 544

அறிந்திந்த ஆறான சரக்குத் தன்னை
அகட்டியே சத்துரு வாலரைத்துக் கொண்டு
யொறிந்திந்த மித்துருவை ஒக்கச் சேர்த்து
உறுதியாய்ப் புடம் போட அது சுண்ணமாகும்
பிறிந்திந்த சுண்ணத்தில் கோச பீசம்
பேரான உபரசங்கள் கூட்டிச் சேர்த்து
தறிந்திந்த நவலோகந் தன்னிலீய
நலமாக யேமமாம் நாட்டிப் பாரே. 545

### தங்கத்தின் சத்துரு

நாட்டிப் பார் தங்கத்தின் சத்துருவைக் கேளு
நாகமொடு நிமிளை கண்டர் வங்கமாகும்
நீட்டிப்பார் கெவுரியோடு இணங்கன் வெள்ளை
நேரான சவுட்டுப்பு தாளக முஞ்சிங்கி
ஆட்டிப்பார் அப்பிரகங் கிளிஞ்சி மனோ சிலையும்
அண்டத்தோடு குதிரைப்பல் சூதங் கெந்தி
கூட்டிப்பார் கோமுகங் காந்தம் பொன்னம்பர்
குறியான சவ்வீரஞ் சத்துருவுமாமே. 546

### தங்கத்தின் மித்துரு

ஆமென்ற மற்றதெல்லா மித்துருவாகும்
அதட்டியே சத்துரு வாற்கொன்ற பின்பு
வேமென்ற மித்துருவை ஒக்கச் சேர்த்து
விரவியே லூதிடவே சுண்ணமாகுந்

தாமென்ற தங்கமது நீறினாக்கால்
சகலமெல்லாங் கட்டுண்டு தயங்கும் பாரு
கோமென்ற வாதத்திற் கோச பீசங்
குடியிருந்த லோக மெல்லாம் யேமமாமே. 547

## சூதத்தின் சத்துரு - மித்துரு

ஏமமாஞ் சூதத்தின் சத்துருவைக் கேளு
யெழிலான சிங்கியோடு கெவுரி வெள்ளை
கோமமாங் குதிரைப் பல் சத்தி சாரங்
கூர்மையாம் வெடியுப்பு யிரும்பு காந்தம்
நாமமாஞ் கூடனொரு பொன்னம் பர்பூரம்
நலமான கற்சவடு நிமிளைப்பூனீறு
வாமமாஞ் சூதத்தின் சத்துருவாகும்
வளமான கோச மென்றே வகுக்கலாமே. 548

ஆமென்ற சூதத்தின் மித்துருவைக் கேளு
அப்பிரகம் நாகமொடு காரீயம் வங்கந்
தேமென்றச் சிலையோடு கெந்தகமும் வீரஞ்
செயலான தாளகமுந் தொட்டி வெள்ளி
வாமென்ற செம்போடு துரிசி காரம்
வழக்கமாம் வெண்காரம் அஞ்சனக்காரம் துத்தங்
காமென்ற தீமுறுகல் கடும் பவளப்புத்து
கருதியதோர் சூதத்தின் மித்துருவாமே. 549

## இரும்புக்கு சத்துரு - மித்துரு

ஆமேதானிரும்புக்குச் சத்துருவைக் கேளு
அப்பிரகம் வெண்காரமண் டத்தோடு
வேமேதான் வெங்கலமுந் தீமுருகல் வங்கம்
மிக்கானக் கிளிஞ்சியொடு திராவுங் கெந்தி
சாமேதான் சாரமோடு சீலை சவ்வீரந்
தயங்காத சிங்கியோடு கெவுரி வெள்ளை
போமேதான் சிலா சித்துப் பூனீறாகும்
புவியதனி லிரும்புக்குச் சத்து மென்னே. 550

என்னவே யிரும்புக்கு மித்துருவைக் கேளு
யேத்தமாம் வெள்ளியொடு கபரினாகங்
கன்னவே காந்த மொடு செம்பு பூரங்
கனமானப் பூனாகம் பூநாகச் செம்பு
தன்னவே தங்க மொடு கெந்தி செம்பு
தயங்காத மயூரத்தின் செம்பு சூடம்
பன்னவே யிரும்புக்கு மித்துருவாகும்
பகரிந்தப் படியாகுங் காந்தத்துக்கே. 551

## இரும்பின் சத்துரு மித்துருவே காந்தத்திற்குமுண்டு நாகத்தின் சத்துரு - மித்துரு

காந்தமாம் நாகத்தின் சத்துருவைக் கேளு
கனமானக் கிளிஞ்சி யண்டங்கல்லுப்பு மாமே
பாந்தமாம் வெடியுப்பு படிகம் வங்கம்
பகர்கின்ற தங்க மொடு ராவும் வெள்ளி
வேந்தமாம் வெங்கலமும் நண்டோடு
வீரமுறு தாரம் உப்பினோடு மிளகு
நாந்தமாம் வளைய லுப்பு அன்னபேதி
நாகத்தின் சத்துருவாய் நாட்டலாமே. 552

நாட்டவே நாகத்தின் மித்துருவைக் கேளு
நலமான அப்பிரகம் இரும்பு காந்தம்
நீட்டவே சிலாசித்து நிமிளை செம்பு
நேரான கெவுரியோடு சூதங் கெந்தி
பூட்டவே பூனாகம் பூரச் செம்பு
பெருமையாங் கருநாகம் சாரமொடு
சூட்டவே சோரற்கு மித்துரு வாகுஞ்
சூட்சமெல்லாஞ் சத்துருவின் மித்துருவாலாச்சே. 553

## காரீயச் சத்துரு மித்துரு

ஆச்சப்பா காரீயச் சத்துருவைக் கேளு
அயங்காந்தம் நிமிளை யொடு ராசவர்த்தம்
நாச்சப்பா கிளிஞ்சி அண்டம் நண்டு மாகும்
நந்தையோடு கெவுரி கெந்தி நற்சுன்னங்கள்
காச்சப்பா அப்பிரகம் வெடியுப்போடு
கல்லுப்பு கல்நாருஞ் சாத்திர வேதி
யேச்சப்பா யிவ்வகை களீயச் சத்துரு
இயலான மித்துருவை இயம்பக் கேளு. 554

இயம்பவே நாகமொடு மயூரச் செம்பு
இதமானப் பூநாகச் செம்பு வெள்ளி
வயம்பவே வங்கமொடு சூதமாகும்
மகத்தான கடி செல்லா வெள்ளையாகும்
தயம்பவே கனம் வத்தைதகத்துச் சாடுஞ்
சாங்கமாய்க் களங்கை யள்ளியுள்ளே வாங்கும்
வியம்பவே வெள்ளையுங் கள்ளையுங் கூட்டு
மிடுங்கானக் கருனாகத் தன்மை தானே. 555

## வங்கத்தின் மித்துரு

தானென்ற வங்கத்தின் மித்துருவைக் கேளு
தளுக்கானக் காரீயஞ் சூதந்தங்கம்
கானென்ற மூன்றுக்கு முறவே யாகுங்
கார சாரங்கள் முதல் உபரசங்கள்

நாமென்ற நவலோகப் பாஷாணத்தில்
நணு கினாத் தூளாகுங் கெடுமித்திரமாகும்
வானென்ற வாதமுறை வகையில் கெர்ண்ணு
வளமானச் செந்தூரமாகில் கேளே. 556

**சரக்குத் தொகுப்பு - வெள்ளிக்குச் சத்துரு மித்துரு**

செந்தூர மாகில் பதினாறு மாத்தாஞ்
செப்பமாய் மதிதனிலே வேதை யாகுங்
கந்தூரச் செம்புருக்கில் கருனாகம் நிமிளை
கடிய வங்கஞ் சிங்கியொடு வெள்ளையுடன் கெவுரி
புந்தூரம் பூமாது பஞ்சப் பட்சிப்
புவிபுகழும் தொட்டியோடு அஞ்சனக்கல் கெந்தி
சிந்தூரக் களங்குகளைச் செம்பிலீயச்
செப்பமாய்ப் பொருமியே சிதறுந்தானே. 557

சிதறியே மேல் கறுக்கும் புத்து போலாஞ்
செப்பமாய்க் காரீயம் வைத்து ஊதக்
குதறியே மண் போற் குறுகிப் போகுங்
குறிப்பாகச் சத்தெல்லாம் வேதை யோடு
உதறியே சாத்திரத்தை யூணிப் பாரு
யொண்ணோடே ஒண்ணொடுங்கும் உற்பனத்தைப் பாரு
அதறியே அமுதாக்கால் வாதமாமோ
ஆராய்ந்து அறிந்தறிந்து எல்லாம் பாரே. 558

பாரென்ற மதியறுகில் வெள்ளீயம் நாகம்
பரிவானக் கெந்தியோடு நிமிளை காந்தஞ்
தீரென்ற தீமுறுகல் கவரி பஞ்சபட்சி
கியமானக் கம்பியுப்புச் சினந்த சாரங்
கோனென்ற குதிரைப் பல் பவளப்புத்து
கொடிதான களங் கெல்லாம் வெள்ளிக்காக
வானென்ற மற்ற களங்கமெல்லாம்
வெண்மையாய் ஆகு மென்று மதித்திடீரே. 559

**அயமுருகில் - கருனாகமுருகில் பரிட்சை அறிய**

மதித்திட்ட அயமுருகில் கெந்தியோடு சிலையும்
வண்மையதாம் தாளகமு நிமிளை சிங்கி
விதித்திட்ட வெள்ளை யோடு வீரஞ்சாரம்
விளக்க மாமாவைக் கிறாந்தங் குக்குடத்தின் கெந்தி
உதித்திட்ட அஞ்சனமு மிணங்க னோடு
உறுதியாஞ் சுரை கெந்தி குதிரைப் பல்லு
கதித்திட்ட களங்கிட்டால் கரியாகப் போகுங்
காரியமா மற்ற தெல்லாங் கருதிப்பாரே. 560

கருதிப்பார் கருணாகமுருகிற் கேளு
கடிசான நிமிளையோடுச் சிலைதான் கெந்தி
அருதிப் பாரப் பிரகங் கபரியோடு
அஞ்சனமுங் கோமுகமும் கெவுரி வெள்ளை
திருதிப் பாரீயத்திற் சோலிந்தக் களங்கு
சிதைத்திடித்துக் கெடுத்தழிக்குஞ் சிறந்த வர்ண மெல்லாம்
மருதிப்பார் மற்ற தெல்லா மித்துருவாக
வர்ணமது உண்டாகும் வளமாய்ப் பாரே. 561

**பந்தனம் சரக்குகளறிய**

வளமான வெங்கலமும் பித்தளையுந் திராவும்
வண்மையாய் முன் போலிரும்பித் தாக்க
வளமான வெண்மையாய் கருவுமுமாகும்
மேனியுமே தங்கமாய் மாறும் பாரு
தளமான சத்துருவு மித்துருவுந் தாக்க
தகர்ந்துடைந்து பொற்குணமாய்த் தவளமுறு
மிளமான கடிசான லோகத்துக் கெல்லா
மிளத் தோடே சேத்துமே இசைத்திடாதே. 562

இனந்தவறில் கடிசோடு மாத்து போலா
மிழுத்துரைக்கில் வழுவழுக்கில் வுரையிலூறும்
வளந்தவறில் கலிப் பெருக்கும் வன்ன மிழக்கும்
வரிசையாய் லோக மெல்லாம் அடித்தே நிற்கும்
உளந்தவறி லீயமிட்டு ஊதினாக்கால்
உத்தமாம் லோக மெல்லாம் திறந்து போகும்
பனந்தவறில் வாதியில்லை பங்கங்கொள்ளு
பகுத்தறிந்தோர் வாதி யென்று பகரலாமே. 563

பகரவே சாரமது தேர்தானாகும்
பரிவான துரிசியொடு கல்லுப்பு ரெண்டும்
நகரவே தேருக்கு அச்சாணியாகும்
நலமான காரமது வண்டியாச்சு
திகரவே சீனமது வளைய மாகுஞ்
சிறப்பான சவுக்காரங் குத்துக் காலாம்
இகரவே யிணங்கனது வடமுமாச்சு
இசைந்த சட்டஞ் சத்தியென்ற சாரந்தானே. 564

தானென்ற யெவாச் சாரஞ் சாத்தக் கேளு
சப்பிரமாய்த் தேரின் அலங்கார மாச்சு
பானென்ற பண்ணையது கொடியாடையாச்சுப்
பரிவான பூரமது உசர னாட்டுங் கழிதான்
ஊனென்ற உபரசங்கள் வடத்துக் கயிறாச்சு
உசத்தியாம் பாஷாணங் கொடுங் கையாச்சு
தேனென்ற சிகரமது வீரமாச்சு
தேர்ப்பாகன் கெவுரியென்றே செப்பலாமே. 565

செப்பவே தேருனுட உருளை யோடித்
திரும்பவே உருளைக்குள் எண்ணை வார்க்க
உப்பவே முறுகத்தின் கொழுப்பா மெல்லாம்
உருளை தானோடுதற்கு எண்ணையாகும்
அப்பவே சூதமது அரசனாகும்
அரசனுக்குத் தேவி கெந்தகமுமாச்சு
உப்பவே தங்கமது தேருக்குள் ஊஞ்சலாகு
முசத்தியொடு தாழ்த்தி ரெண்டும் பக்கங் கேளே. 566

கேளுநீ வங்கமொடு யீயம் நாகங்
கெடிதான இரும்போடு நாலுமாச்சு
தேளு நீ மால்தேவி திரையுமாச்சு
சிறப்பான நிமிளையது மெத்தை யாச்சு
தாணு நீ சிலையதுவுந் தலை காணியாச்சு
சமரசமாஞ் சுன்னங்களே வலாச்சு
தூளு நீ சூதமென்ற ராசர் தானுஞ்
துருசாக தேறிவிடச் சூட்சம் பாரே. 567

402. சரக்கு எல்லாம் இந்த வெடி உப்பு செயநீரால் சுருண்டு போகும். அது மட்டும் இன்றி காயசித்தியும், யோகசித்தியும் உண்டாகும். சூதம் ஒரு பலம் வாங்கி அதை கல்வத்தில் போட்டு வெடிஉப்புச் செயநீர் கொண்டு ஏழுநாள் அரைக்கவேண்டும், அரைத்த சரக்கை சூரிய ஒளியில்,

403. காயப்போட்டு பிறகு காடிநீர் கொண்டு கழுவி பீங்கானில் வைத்துக் கொண்டு, துரிசு ஒரு சேர் வாங்கி அதை ஏழுதரம் உருக்கிச் சுத்தி செய்து (வங்க பாத்திரத்தில் உருக்க வேண்டும் என்கிறார் முனிவர் வங்கம் என்றால் ஈயம்) அதை வெடிஉப்புச் செயநீரில் தோய்த்துப் பத்துநாள் சூரிய ஒளியில் காயப்போட்டு எடுத்து வைத்துக் கொள்ளவும். பிறகு இந்த சூதத்தையும், துரிசையும் அரைப்பதற்கு திராவகம் சொல்கிறேன் கேள்.

வெடிஉப்பு திராவகம்

404. வெடி உப்பு ஒரு பலம். சீனம் நூற்றுப் பத்து பலம் இவை இரண்டையும் கழுதை நீரில் அரைத்து ஒரு சக்கர வாலையில் போட்டு எரித்துத் திராவகமாகச் செய்து கொண்டு அந்த திராவகத்தை நல்ல குப்பியில் அடைத்து வைத்துக் கொள்ளவும். முன் எடுத்த சூதத்தையும் துருசையும் இந்த திராவகத்தை விட்டு மூன்று நாள் அரைத்து சூரியனில் காய வைக்கவும்.

405. நன்றாக உலர்ந்த பின் எடுத்து அதை ஒரு கனமான பீங்கானில் போட்டு உமி நெருப்பால் வறுக்கவும், அதை ஒரு காசிக்குப்பியில் போட்டு மூடி வாலுகையின் மேலே வைத்துக் கமலம் போல் தீமூட்டிப் பன்னிரண்டு சாமம் எரிக்கவும்.

406. இடையில் நிறுத்தக் கூடாது. பின் ஆறவிட்டு எடுத்து மீண்டும் திராவகத்தால் அரைத்து சூரியனில் காயவைத்து காசிக் குப்பிக்குள் போட்டு வாலுகையின் மேலே வைத்துப்,

407. பன்னிரண்டு சாமம் தீமூட்டி கமலம் போல் எரிக்க வேண்டும். இப்படியே மும்முறை செய்தால் சிவந்த நிறம் கொண்ட செந்தூரம் கிடைக்கும். இதை

நவலோகத்தில் நூற்றுக்கு ஒன்று போட்டால் தங்கமாகும். இந்த தங்கம் பன்னிரண்டு மாற்றாகும். இந்த செந்தூரத்தால் காயம் சித்திக்கும் கெவனம் (ஆகாய சஞ்சாரம்) சித்திக்கும்.

### நாகச் செந்தூரம்

408. பத்து பலம் நாகத்தை எடுத்துக் கொண்டு குகையில் இட்டு உருக்கி இலுப்பை நெய்யில் ஏழுமுறை சாய்த்தால் சுத்தியாகும். இந்த நாகத்தை எடுத்து வைத்துக் கொண்டு பிறகு, கெந்தி, அபின், சூடன் இவை மூன்றையும் வகைக்கு ஒருபலம் எடுத்துக் கொண்டு வெடி உப்புச் செயநீரால் அரைக்கவும்.

409. அரைத்ததை முன் எடுத்த நாகத்தை உருக்கும் போது சுருக்குக் கொடுத்தால் நாகம் கட்டிப் போகும். இந்த கட்டிய நாகத்தை எடுத்துக் கொண்ட, பிறகு ஓர் இலைத் தாமரை, அவுரி, ஆடுதின்னாப்பாளை, மணத்தக்காளி, சாணாக்கி இவை ஐந்தையும் அரைத்து,

410. இரண்டு அடையாகத் தட்டிக் கொள்ளவும். கெந்தி, அபின், சூடன் இவை மூன்றையும் வகைக்கு இரண்டு பலம் எடுத்துக் கொண்டு வெடிஉப்பு நீரால் அரைத்துக் கொண்டு கட்டிய நாகத்தை தகடாக தட்டி அதன்மேல் மருந்தை பூசி, அதன் மேல் கீழ் ஒன்று மேல் ஒன்றாக அடைகளை வைத்துக் கவசம் செய்து, சீலை மண் மூடி உலரவைத்து பத்தெருவில் புடம் போடவேண்டும்.

411-412 இப்படியே ஏழு முறை புடம் போட்டால் நாகம் செம்பாகும். அந்தச் செம்பைக் கிண்ணியாகச் செய்து கொள்ள வேண்டும் நாறும் பூவை (பூநீறை) பொற்றலையின் சாற்றால் அரைத்து கிண்ணிக்கு உள்ளே பூசிப் பின் கிண்ணி நிறையச் சூதம் விட்டு வாலுகையின் மேலே வைத்து எரித்தால் செந்தூரமாகும். இந்தச் செந்தூரத்தை பணஎடை தேனில் உண்டுவர, உடல் சூரியன் போல் பிரகாசிக்கும். மரணம் அற்றுப்போகும். இந்தச் செந்தூரத்தை நவலோகத்தில் ஆயிரத்துக்கு ஒன்று கூட்ட மாற்று பன்னிரண்டு கொண்ட தங்கமாகும் மலையில் சஞ்சரிக்கும் நாதாக்கள் (சித்தர்களுடைய) உயர்ந்த பாதத்தைப் போற்றிக் குளிகை செய்வதற்கு வழியை கேட்டு அனைத்தையும் கண்டறிந்து கொள்ளலாம்.

### கற்பம் உண்ண காந்தக் கிண்ணம்

413 - 418. ஊசி காந்தம் ஐம்பது பலம் எடுத்து மாவாக உடைத்துக் கொண்டு உருக்கி அதை ஒரு சீலையில் கட்டிக் கொள்ளு இலைச் சாற்றில் நால் சாமம் சுருக்கு போட்டுப் பிறகு வேளை இலைச் சாற்றிலும் குண்டுமணிச் சாற்றிலும், கல்லுருவி, சாணாங்கிச் சாறுகளிலும் வகை வகைக்கு நான்கு சாமம் சுறுக்குப் போட வேண்டும். பிறகு சூரிய வெப்பத்தில் உலர்த்திக் கொள்ளவும். வீரம், வெண்காரம், குண்டுமணி, குக்கில், கொம்புத்தேன், வெண்ணை, வெல்லம் இவை எல்லாம் வகை வகைக்கு ஐந்து பலம் எடுத்து வெடிஉப்பு நீரினால் மூன்று நாள் அரைத்து இதனுடன் காந்தம் கூட்டி, ஒரு சாமம் அரைத்து வில்லை தட்டி உலர வைத்து உலையில் வைத்து ஊத முத்துப் போல் மணிமணியாக இறங்கும். மணிகளைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு முன்போல் அரைத்து அஞ்சுதரம் ஊத மீண்டும் மணிமணியாக இறங்கி நிற்கும். அந்த மணிகளை எல்லாம் எடுத்துக் கொண்டு அத்துடன் வெண்காரம் கூட்டி உருக்கி ஆறியபின் கமலம் போல் வார்த்துக் கொண்டு எல்லா விதமான கற்பத்தையும் இந்தக் கிண்ணத்தில் உண்ணவேண்டும். கெட்டியான வஸ்துக்கள் பால், எல்லாவற்றையுமே

இந்தக் கிண்ணத்தில் உண்டால், மருந்துகளின் விஷத்தை நீக்கி கற்பத்தை சித்தியாக்கும். இந்தக் காந்தத்துடன் சூதம், கெந்தி, தாய் இவை மூன்றையும் கூட்டிச் செந்தூரம் பண்ணி உண்டால் கற்பாந்த காலம் வரை தேகம் அழியாமல் நிற்கும்.

இந்தச் செந்தூரத்தை நவலோகத்தில் நூற்றுக்கு ஒன்று தாக்கினால் பொன்னாகும். பொன்னைக் கண்டு ஆசைப் படாதே. கன்னியர் மேல் ஆசை கொள்ளாதே. ஆசைப்பட்டு துன்பத்தில் மாட்டிக் கொள்ளாதே. மாய வாசனையை அகற்றி ஆறுதலச் சக்கரத்தில் மனதை வைத்து குருபதத்தை அறிந்து அறுசுவை ருசியை விட்டுக் காயத்தைச் சித்தி பண்ணிக் கொள்.

### அப்ரக சத்தெடுக்கும் முறை

419. அப்பிரகம் நூறு பலம் கொண்டு வந்து அதை நன்றாகப் பொடித்துக் கொண்டு எருக்கன் (வேர்) கிழங்குச் சாற்றில் நாலுநாள் அரைக்கவும். அரைத்ததை வழித்து வில்லை பண்ணிக் காயப் போட்டு பெரும்புடம் போடவும். பின் அதை எடுத்துக் கல்வத்தில் இட்டு முள்ளங்கி சாற்றில் மூன்று நாள் அரைத்துப் புடம் போடவும்.

420. மீண்டும் பொடித்துப் பிடிகரணைக் கிழங்குச் சாற்றில் இரண்டு நாள் அரைத்து வில்லை பண்ணி முன் போல் புடம் போடவும். பிறகு சாணாங்கி இலைச் சாற்றில் ஒரு நாள் கொள்ளின் இலைச் சாற்றில் ஒருநாள், கொடிக் கள்ளிச் சாற்றில் ஓர் நாள், வாழைக்கிழங்குச் சாற்றில் ஒருநாள், அகத்திபழச் சாற்றில் ஒருநாள், அரைத்து புடம்போட்டு,

421. பிறகு குண்டுமணிச் சாற்றில் ஒருநாள், செங்கழுநீர்க் கிழங்குச் சாற்றில் ஒருநாள், புடம் போட்டு எடுத்துக் கொண்டு வீரம், வெண்காரம், சாரம், தேன், குன்றி, வெல்லம், வெண்ணை இவை எல்லாம் வகைக்கு அஞ்சுப்பலம் கூட்டி வெடிஉப்பு நீரால் அரைத்து,

422. அரைத்த மருந்தை மூன்று பங்காக்கி அதில் ஒரு பங்குடன் அப்பிரகம் கூட்டி நன்றாக அரைத்து வில்லை தட்டி உலர வைத்து,

423. உலையில் வைத்து ஊத, மணி மணியாக சத்து வீழும். மணியெல்லாம் பொருக்கிக் கொண்டு மற்றொரு பங்கால் அரைத்து முன்போல் ஊத மணியாகும். மீண்டும் மணிகளையெல்லாம் பொறுக்கி எடுத்துக் கொண்டு மற்றொரு பங்கால் அரைத்து ஊத மணியாகும்.

424-425. இந்த மணியுடன் ஒருபலம் வெண்காரம் சேர்த்து உருக்கி மித்திரத்திற் சாய்த்தால் சத்தாக நிற்கும். சத்தை பத்திரமாக எடுத்துக் கொள். (மித்திரம் என்றால் தேங்காய்ப்பால், வெள்ளாட்டுப்பால், தேன் இலுப்பை பூச்சாறு, நெய் இவை ஐந்தையும் சமனாகச் சேர்த்து இவற்றுடன் சதுரக்கள்ளிச் சாறும் சேர்ந்தது. சாரம், கருவளையல் (கரிஉப்பு, வளையல் உப்பு) ரெண்டு பலம் எடுத்துப் பொடித்துக் கூட்டிக் கலக்கிக் கொண்டால், மித்திரம் என்ற நீராகும். இதில் சத்தெல்லாம் உருக்கிச் சாய்த்தால் மாசு நீங்கித் தூய்மையாகும். செம்பு வகை சத்திற்கெல்லாம் மூன்று தரம் உருக்கிச் சாய்க்க முத்துப் போல் வெளுத்து மணியாகும்.

**அப்ரக கிண்ண ரசமணி**

426 - 429. அப்பிரகச் சத்தை யெடுத்து நாலில் ஒன்று தங்கம் சேர்த்து உருக்கிக் கிண்ணி செய்து கொண்டு - அந்தக் கிண்ணியில் இரண்டு பலம் சூதம் விட்டுக் கருஊமத்தைச் சாற்றை வார்த்து வாலுகையின் மேலே வைத்து கமலம் போல் தீயை மூட்டி எரிக்க வேண்டும். கருஊமத்தைச் சாறு வற்ற வற்ற மேலும் சாற்றை ஊற்றிக் கொண்டே இருக்க வேண்டும், ஆறு சாமம் தீ எரித்தால் சூதம் இறுகி வெண்ணையாகும்.

இந்த வெண்ணையை இரண்டு குளிகைகளாக உருட்டிக் குளிர்ந்த நீரில் போட்டு மறுநாள் எடுத்து ஊமத்தங்காய்க்குள் வைத்துப் புடம் போடவேண்டும். பத்து முறை புடம் போட வேண்டும். பிறகு ஆரை இலைக்குள்ளே வைத்துப் பத்து முறையும், விராலி இலைக்குள் வைத்துப் பத்து முறையும், பிராயினிலையில் வைத்துப் பத்து முறையும் புடம் போட்டு சூடனுடைய தீயில் வாட்டி எண்ணை குத்தி உருக்கினால் சூதம் மணியாகும்.

இந்த சூதமணியால் செந்தூரம் சித்தியாகும். குரு மருந்தாகும். களங்கு சித்தியாகும். வாதங்கள் நம் சொற்படி கேட்கும், காயம் சித்தியாகும். ஆதாரக் குறி எல்லாம் தோன்றும். இந்த மணியினால் பாதம் பூமியிலே படாமல் ஆகாயத்தில் பறக்கும் முறையை கூறுகிறேன் கேள்.

**கெவுன மணிக் குளிகை**

430. ஒரு பதக்குப் பூ நாகத்தைக் கொண்டு வந்து பாலில் ஊற வைத்து காடி விட்டுக் கழுவி சூரிய வெப்பத்தில் உலர வைத்துக் கொள்ளவும். பன்னிரண்டுபடி அவுரிச் சாற்றை ஒரு மண் பாண்டத்தில் ஊற்றி அதில் வெண்காரம் இரண்டு சேர் சேர்த்துக் கொதிக்க வைத்தால் வெண்காரம் கரைந்து போகும்.

431. இந்த நீரை பூநாகத்தின் மேல் தெளித்துப் பிறட்டிக் காயவைத்து பானையில் போட்டு மற்றொரு பானையால் மேலே மூடிச்சீலை மண் செய்து அடுப்பில் வைத்துக் கமலம் போல் ஆறு சாமம் எரித்தால் பானைக்குள்ளே உள்ள சரக்கு எல்லாம் கருகிச் சாம்பலாகும்.

432. அந்தச் சாம்பலில் சூதம் விட்டுத் தேய்த்தால் சூதம் அட்டை போல் ஆகும். பிறகு குண்டுமணி, சாரம் காரம், சவ்வீரம், ஏரண்ட வித்து, நெல், வெல்லம், குக்கில் இவை எல்லாம் வெடிஉப்பு செயநீரால் அரைத்து சூத அட்டையில் மத்தித்து குகையில் இட்டு உருககிச் சாய்த்தால் பூனாகச் சத்தோடு கூடிய ரசமணி ஆகும்.

**சுரபிமணி, ஸ்தம்பனமணி, கெவுனமணி**

433. சபம் பண்ணி இந்த பாதரசக்கட்டியில் பதினொறு பணஎடை எடுத்து உருக்கி நூற்று எட்டு மணிகளாகச் செய்துப் பட்டு நூலில் கோர்த்து அஞ்சு எழுத்தையும், எட்டு எழுத்தையும் ஓதிச் செபித்தால் சிவன் வந்து எல்லாம் கூறுவார் சிவகாமியும் வந்து புத்தி சொல்வாள்.

434. சுரபிமணிக்கு ஏழுவிராகன் எடையுள்ள சூதத்தை குளிகை பண்ண வேண்டும். ஸ்தம்பன மணிக்கு பதினைந்து விராகன் எடையிலும் கெவுன மணிக்கு எண்பத்தொன்று விராகன் எடையிலும் குளிகை செய்து சாரணை தீர்த்து இரண்டு குளிகையாக்கி கையில் ஒன்றும் வாயில் ஒன்றும் போட்டுக் கொ...ளவேண்டும்.

435. தங்கத்தால் சிமிழ் போல் பண்ணி குளிகைக்குத் துளையிட்டு இரு பக்கமும் தங்கச் சிமிழ் வைத்துத் தங்கச் சங்கிலியில் மாட்டி மாாபில் போட்டுக் கொள். கையில் ஒன்றும் வாயில் ஒன்றும் வைத்துக் கொண்டு ஆகாப மார்க்கமாகச் செல்ல ஒன்றில்லா விட்டால் இன்னொன்று உதவும்.

436. மணியை வாயில் அடக்கிக் கொண்டு வாசியை இழுத்து நிறுத்தி பூமியிலிருந்து எழும்பி நின்று வாயை மூடிக் கொண்டால் நாதம் கேட்கும், வாசியைக் கும்பித்து நின்றால் தான் பலிக்கும். தளரவிட்டால் கெவனம் சித்திக்காது. குளிகை வாயில் இருக்கும் போது வரும் உமிழ்நீரை உண்டால் நொடியில் காயம் சித்தியாகும்.

437. வாசியை விட்டால் சித்தன் என்ற பெயர் போய் விடும். அதனால் மனதை வாசியில் ஊன்றி நிற்கும் படியாகச் செய். பழகும் வரையில் குளிகைச் சங்கிலியை மார்பில் அணிந்து கொள். பழகிய பிறகு சங்கிலியை நீக்கி வெறும் குளிகை மட்டும் கொண்டு சஞ்சரிக்கலாம். மனம் தூய்மையாகும். மலையில் சஞ்சரிக்க குளிகை சொல்கிறேன் கேள்.

**மலைகளில் சஞ்சரிக்க குளிகை**

438 - 441. நம்மிடம் எவ்வளவு உபரசங்கள் உள்ளதோ அந்த உபரசங்களை பத்திரமாக வைத்துக் கொண்டு, ரசத்தை வாங்கி குளிகையாக்கிக் கொள். இந்த மணியால் மலைகளில் ஏறும் முறையை கூறுகிறேன் கேள். ரசக் குளிகையை குகையில் இட்டு உருக்கி அதனுடன் பூநாக சத்தைக் கொடுத்தால் ஒன்றோடு ஒன்று கலக்கும்.

எப்படி எனில் ஒரு வச்சிர குகை செய்து குகைக்குள் மருந்து பூசி மணியை குகையில் இட்டு உருக்கி, நன்றாக உருகி நிற்கும் பருவம் பார்த்து புடத்தயிலத்தை வார்த்து பூநாகச் சத்தைக் கொடுத்தால் மணியானது சத்தை தின்று விடும். பூநாக சத்தை மணி தின்ற பிறகும், மணியின் எடை, முன் இருந்த சூதத்தின் எடைதான் இருக்கும்.

பிறகு மருந்து பூசிய குகைக்குள் சூதத்தை உருக்கி, பூநீரின் சத்தை ஊட்டவும். பிறகு அப்பிரகசத்தை ஊட்ட வேண்டும். சூதமணியை உருக்கி அந்த எடைக்கு அப்பிரக சத்தை சேர்த்து புடத்தயிலத்தை வார்த்தால் சத்தை மணி உண்டு விடும். அப்பிரக சத்தின் எடை அகன்று மணியின் எடை சூதத்தின் எடை மட்டும் தான் இருக்கும். இந்த முறையை என்னுடைய எழுநூறு என்ற நூலில் சொல்லியிருக்கிறேன். (போகர் எழுநூறில்) அதைப் பார்த்து முறையாக அறிந்து கொள்.

**மலைகளில் சஞ்சரிக்கும் மணிக்கு உபரசத்தின் சத்தூட்டும் முறை**

442. வேறு ஒரு குகை செய்து, குகைக்குள் மருந்து பூசி மணியை இட்டு உருக்கி முதலில் நிமிளையின் சத்தைக் கொடு. பிறகு வைக்கிராந்த சத்தையும், அதன் பிறகு சகஸ்திர வேதியின் சத்தையும் ஈந்து புடம் போட்டு எடுத்துக் கொள்.

வேறு ஒரு குகையை செய்து மருந்து பூசி மணியை இட்டு உருகிநிற்கும் தருணத்தில் சிலாசத்தின் சத்தையும், கல்நாரின் சத்தையும், கல்மதத்தின் சத்தையும் ஊட்டி புடம் இட்டு எடுத்துக் கொள்.

பிறகு வேறு ஒரு குகை செய்து குகைக்கு மருந்து பூசி மணியை வைத்துருக்கி,

443. அஞ்சன கல்சத்தையும். படிகத்தின் சத்தையும் கொடுத்துப் புடம் போட்டு எடுத்துக் கொள். வேறு ஒரு குகை செய்து குகைக்குள் மருந்து பூசி மணியை இட்டு உருக்கி அதில் ராசவர்த்தக் கல்சத்தையும், கெருடபட்சி சத்தையும், சங்கினுட சத்தையும் கொடுத்து முன் போல் புடம் போட்டு எடுத்துக் கொண்டு, வேறு ஒரு குகை செய்து கொள்.

**முன் மணிக்கு பாஷாணத்தில் சத்தூட்டும் முறை**

444. குகைக்குள் மருந்து பூசி மணியை இட்டு உருக்கி மணி போல் நிற்கும் சமயத்தில் இயற்கையில் கிடைக்கும் பாஷாணங்களின் சத்தை வாங்கி ஒவ்வொன்றாகச் சேர்த்துப் புடம் போட்டு எடுத்துக் கொள்ளவேண்டும். பிறகு வைப்பு பாஷாணத்தை வரிசையாய்ச் செய்து சத்தை வாங்கி (மணியை குகையில் இட்டு உருக்கி) ஒவ்வொன்றாக வரிசையாக கொடுத்துப் புடம் போட வேண்டும்.

445. புடம் போட்ட பின் எடுத்து எடை போட்டுப் பார்த்தால் மணி சூதத்தின் எடை மட்டுமே இருக்க வேண்டும்.

446. **மணிக்கு காரசாரத்தின் சத்து** , பிறகு மணியை குகையில் இட்டு உருக்கி, காரசாரத்தின் சத்தை வாங்கி அந்த மணியுடன் சேர்த்து உருக்கிப் புடம் போட்டு எடுத்து எடை பார்க்க மணி சூதத்தின் எடை மட்டுமே இருக்க வேண்டும்.

447. **நவரத்தனசத்து, நவலோகசத்து, மூலிகை சத்தை மணிக்கு ஊட்டுதல்:** ரசமணியை குகையில் இட்டு உருக்கி அதனுடன் நவரத்ன சத்தையும், அதன் பிறகு நவலோக சத்தையும் பிறகு மூலிகை சத்தையும் ஒவ்வொன்றாக ஊட்டி புடம் போட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு மணியில் துளை போட்டு இரு புறமும் சிமிழ் பூட்டி சங்கிலியில் கோர்த்து வைத்துக் கொள்.

448. இந்த மணியை வாயில் ஒன்றும் கரத்தில் ஒன்றும் வைத்துக் கொண்டு வாசியை (மூச்சை) கட்டுப் படுத்தி ஓடலாம். மலைகளில் இருக்கும் முனிவர்களுடனும் ரிஷிகளுடனும் தர்க்கம் பேசக்கூடாது.

449. மலைகளில் பாஷாணங்கள் உபரசங்கள் மூலிகைகள், ஆதியான குதம் இவைகள் முதலானவற்றையும் தேடிக் கண்டு பிடி, சொரூபமணி குளிகைப் பண்ணி சித்தருடன் பேசி ஏழுஆதாரங்களை கண்டு ஏறி.

**உபரசத்தில் சத்தெடுக்க**

450 - 455. உபரசத்தை சத்தாகப் பண்ணுகிற முறையை கூறுகிறேன் கேள். வெடி உப்பு, சீனம், கல்லுப்பு, இந்துப்பு, காடி, பூசினிக்காய்ச்சாறு, கழுதையுட நீர், உன்னுடைய அமுரி, இவைகளை எல்லாம் சமபாகமாக எடுத்துச் சட்டியிலே போட்டு கலக்கி வைத்து விட்டுப் பிறகு சத்தாகப் பண்ண வேண்டிய உபரசத்தை பொடியாகச் செய்து ஒரு துணியில் கட்டி முன் கலக்கி வைத்த சட்டிக்குள் தொங்க விட வேண்டும். பிறகு அடுப்பில் வைத்து நீர் வற்றும் மட்டும் காய்ச்ச வேண்டும். நீர் முழுவதும் வற்றிய பின் துணியில் கட்டிய மருந்தை எடுத்துக் காடியில் கழுவி சூரியனின் வெப்பத்தில் உலர வைத்து பலம் பத்து எடுத்துக் கொண்டு வெடி உப்பு நீரில் தோய்த்து மறுபடியும் சூரிய வெப்பத்தில் உலர வைக்க வேண்டும்.

பிறகு பூநீறு, வெங்காரம், சாரம், வீரம், குண்டு மணி வெல்லம், வெண்ணை, ஆமணக்குவித்து, தேள் இவை எல்லாம் வகைக்கு இரு பலம் வீதம் எடுத்துக்

கொண்டு இவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு குடோரி ஒரு பலமும் கூட்டி எல்லாவற்றையும் வெடி உப்பு நீரால் அரைத்து மூன்று சம பங்காகப் பிரித்துக் கொண்டு ஒரு பங்குடன் உபரசத்தை வைத்து உலையில் வைத்து ஊத சத்தெல்லாம் மணி மணியாக இறங்கும்.' அதை யெடுத்து மற்றொரு பங்குடன் கூட்டி உலையில் வைத்து ஊத மீண்டும் சத்து வீழும். அதையெடுத்து மற்றொரு பங்குடன் கூட்டி மீண்டு உலையில் வைத்து ஊதி இறங்கும் மணிகளை எடுத்துக் கொண்டு அதனுடன் வெண்காரம் கூட்டி உருக்கி மித்திரத்திற் சாய்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த முறைப்படியே உபரசம் நூற்று இருபதுக்கும் செய்து சத்தை வாங்கி. அதனுடன் சூதம், தங்கம் கெந்தி இவை மூன்றையும் முறையான விகிதத்தில் கூட்டி செந்தூரம் பண்ணி உண்ண வேண்டும். இந்தச் செந்தூரத்தை உண்டால் தேகம் திடப்படும். நவலோகத்தில் நூற்றுக்கு ஒன்று இட்டால் வேதையாகும். இந்த செந்தூரம் உண்ணும் போது புளி, உப்பு, இவற்றை நீக்கி முறையாக மூச்சைப் பயிற்சி செய்து மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணி, பூரகம், அனாகதம், விசுத்தம், ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களிலும் ஏறி பராபரத்தை பூசித்து மாயையில் மயங்காமல் மனதைப் பக்குவமாக்க வேண்டும். பக்குவமாக்கிய மனதை பூரணத்தில் லயிக்கச் செய்ய வேண்டும்.

**பாஷாணசுத்தி - பாஷாணசத்து**

456 -461. பாஷாணத்தை சத்து பண்ணுகிற முறையைக் கேள். கல்லுப்பு சுன்னம், சவுக்கார சுன்னம், வீரம், வகைக்கு அரைப்பலம் எடுத்து வெடி உப்புச் செயநீரில் போட்டு கலக்கிச் சத்தாக்க வேண்டிய பாஷாணத்தை இந்த நீரில் மூழ்கத் தொங்க விட்டு நான்கு சாமம் தீ எரிக்க வேண்டும். பிறகு காடி நீரில் கழுவி உலர வைத்துப் பிறகு நான்கு சாமம் வெடி உப்பு நீரால் சுறுக்கிட்டு அதையெடுத்து வைத்துக் கொண்டு, துரிசு, பூநீறு, கற்சுன்னம் விட்டு சுன்னம், இவைநான்கையும் வெடி உப்பு செயநீரில் அரைத்து மெழுகு பதம் பார்த்து எடுத்துப் பாஷாணத்தின் மேலே பூசி சீலை செய்து புடம் போட்டால் பாஷாணம் சத்தாகும். சத்துடன் சம எடை பொரிகாரம் சேர்த்து வச்சிர குகையில் வைத்து சில்லிட்டு சீலை செய்து உருக்கினால் நல்ல சத்து கிடைக்கும்.

இந்த சத்தை சூதத்திற்கு ஊட்டி புடம் இட்டு இதனுடன் சூதம், கெந்தி, தங்கம் மூன்றையும் கூட்டி செந்தூரம் பண்ணி உண்டால் மேனி தங்கமாகும். இந்தச் சத்துடன் நவலோகம் ஆயிரத்துக்கு ஒன்று சேர்த்தால் இருபத்தைந்து மாற்று தங்கமாகும். மேலே சொன்னபடியே அறுபத்து நாலு பாஷாணத்துக்கும் செய்ய அனைத்தும் சத்தாகும்.

பாஷாணத்தை முதலில் சுத்தி செய்து கொள்ள வேண்டும். எங்கனம் எனில் முருக்கிலைச் சார், சிறுகீரை சார், கொள்ளிலைச் சார், குப்பைமேனிச் சார், வெள்ளைசாரணை சார், தும்பைச் சார், பாக்கிலைச் சார், நொச்சிச் சார், பூசனிச் சார், கள் என்ற காடி இவை எல்லாம் வகைக்கு ஒரு படி வீதம் எடுத்துக் கொண்டு பானையில் இட்டுக் கொள். பிறகு கற்சுன்னம், பூநீறு, சங்கு இவை மூன்றும் வகைக்கு ஒரு படி வீதம் எடுத்து மேற்படி பானையில் போட்டுக் கலக்கி சுத்தியாக்க வேண்டிய பாஷாணத்தை எடுத்துச் சீலையில் கட்டி முடிந்து பானை நீரில் மூழ்க விட்டு அடுப்பேற்றி நீர் வற்றும் மட்டும் எரித்து பிறகு எடுத்துக் கழுவி எடுத்தால் சத்தாகும். (அறுபத்து நாலு பாஷாண சுத்திக்கும் இம்முறைப் படியே செய்க) பாஷாணத்தை சுத்தியாக்கிப் பிறகு அதிலிருந்து சத்தெடுக்க வேண்டும்.

**லவணம் இருபத்தைந்துக்கும் சத்தெடுக்கும் முறை**

462 - 464. லவணம், காரசாரம் இருபத்தைந்தும் சத்தெடுக்க முறை கூறுவேன் கேள், சத்தாக வேண்டிய லவணத்தை எடுத்து வெடி உப்புச் செயநீர் தோய்த்து ஒரு பட்சம், (பதினைந்து நாள்) சூரிய வெப்பத்தில் போட்டு உலர்த்திக் கொள். இந்த உப்புக்கு நாலில் ஒருபங்கு சவுக்கார சுன்னமும், வீரமும் உப்புக்கு மேலே பூசி பூநீரின் நடுவே வைத்துப் புடம் போட வேண்டும்.

பிறகு வச்சிரக்குகையில் சுண்ணாம்பு பூசி குகைக்குள் மருந்தை வைத்து மண்பூசி எரியில் இட்டு உருக்கி சூதத்திற்கு சாரணை ஈந்து புடம் போட்டு எடுத்து திராவகத்தால் அரைத்து கெசபுடம் போட்டால் சிகப்பான செந்தூரம் கிட்டும். இதை உட்கொண்டால் காயம் சித்தியாகும். நவலோகத்தில் ஆயிரத்துக்கு ஒன்று இட்டால் அதிகமாத்து உள்ள தங்கம் கிட்டும்.

**நவலோக சத்து, நவலோக சத்து செந்தூரம்**

465 -469 வெடிஉப்புச் செயநீரில், துரிசியும் கெவுரியும் சம எடை கூட்டி அதில் நவலோகத்தில் சத்தாக்க வேண்டிய லோகத்தை ஊறவைத்து ஏழு நாள் சென்ற பிறகு, வெடிஉப்புச் செயநீரில் அரைத்து வில்லை தட்டி சூரிய வெப்பத்தில் வைத்து உலர்ந்த பின்பு, எரித்து கிளிஞ்சி நீர் உள்ளே வைத்து சாமம் ஒன்று ஆனபின்பு, கடுங்கார குகையில் இட்டு மூடி, பத்தெருவிற் புடத்தைப் போட்டால் வெண்மையாய் நீறும்.

பிறகு நவலோகத் தகட்டை வாங்கிச் செயநீரில் குழப்பி வெண்நீற்றை எடைக்கு எடை பூசி உலர வைத்து நிமிளையைப் பொடித்து தகடுக்கு மேலும் கீழும் தடவி பத்தெருவில் புடத்தை போட்டு ஆற விட்டு எடுத்துப் பார்த்தால் சத்து காரீயம் போல் இருக்கும்.

இதைச் சூதத்திற்கு சாரணை செய்து புடம் போட்டு வைத்துக் கொள். எடுத்து சத்துடன் சூதம் தங்கம் கெந்தி மூன்றையும் சேர்த்து செந்தூரம் பண்ணி உட்கொண்டால் சட்டை கக்கி இளமை உண்டாகும். இதை நவலோகத்தில் ஆயிரத்துக்கு ஒன்று இட்டால் பதினாறு மாற்று தங்கம் கிடைக்கும்.

**நவரத்தின சத்து, நவரத்தின செந்தூரம்**

470 -472. நவரத்தின சத்தை கூறுகிறேன் கேள். கழுதை, யானை, குதிரை, பசு, வெள்ளாடு இவற்றின் நீரைப் பாண்டத்தில் வாங்கி அதில் நவரத்ன கல்லைக் கட்டித் தொங்கவிட்டு இரவியில் புடம் போட்டு எடுத்து வைத்துக் கொள். பிறகு குண்டுமணி, குடோரி, வெண்காரம், குக்கில், புங்கு, பிரண்டை, கொளஞ்சி வேர், ஆமணக்கன் வித்து, கட்டாமணககன் வித்து, வெல்லம், தேன், பழம் இவற்றை எல்லாம் சம எடை எடுத்து சாணாங்கிச் சாறு விட்டு ஒருசாமம் அரைத்து நவரத்தினக் கல்லின் மேல் பிசறி குகையில் வைத்து ஊதினால் நவரத்தினம் சத்தாகும்.

இவ்வாறு மூன்று முறை செய்தால் நல்ல சத்தாகும்.

இந்தச் சத்துடன் தங்கம் இட்டு அதனுள் சூதம். கெந்திசேர்த்து வாலுகையில் வைத்து எரித்துச் செந்தூரம் பண்ணி உட்கொண்டால் தேகம் வைரம் போல் மின்னும், சாவு பொய்யாகும். கற்பகோடி காலம் வரை வாழலாகும். சமாதியில் இருந்து கொண்டு முடிவு காலம் இல்லாமல் சஞ்சரிக்கலாம். நவலோகத்தில், கோடிக்கு ஒன்று சேர்த்தால் இருபது மாற்று உள்ள தங்கம் கிட்டும்.

**மூலிகை செம்பு**

473 -476. மூலிகையில் இருந்து செம்பெடுக்கும் முறையை கூறுகிறேன் கேள். அவுரி, ஓர் இலைத் தாமரை, செவ்வல்லி, புளியரணை, அமுரிக்கோவை, செந்திரா, கரிசாலை, சிறுகீரை, பிடர்முக்கி, சிகப்புக் கொடி வேலி, சிகப்பு சித்திரமூலம், இவை பதினொன்றும், ஒவ்வொன்றாய் எடுத்துச் சாறு வாங்கி, மூன்று நாள் வைத்து அதனுடன் முட்டையின் வெண்கரு, குன்றி, சீனம் இவற்றைப் பொடி பண்ணிப் போட்டு பாண்டத்தில் காய்ச்சும்போது, அதனுடன் நாலு வகை மித்திரங்களான தாரம், இந்துப்பு, மெழுகு, வெண்ணை இவற்றையும் கூடப் போட்டு மறு சட்டி கவிழ்த்து மூடிச் சீலை மண் செய்து எரித்தால் சாம்பலாகும்.

சாம்பலுக்கு எட்டில் ஒன்று பசுவின் நெய், வெண்காரம், வெல்லம், குன்றி இவற்றைச் சேர்த்து இவற்றுடன் பத்துக்கு ஒன்று குடோரி போட்டு நான்கு நாள் அரைத்த பின்பு சூரியனில் காயப் போட்டு உலையில் வைத்து ஊதினால் மூலிகைச் செம்பு கிடைக்கும். இந்தச் செம்பை உருக்கி மித்திரத்தில் சாய்த்துக் கொண்டு பின்னர் சூதத்திற்கு சாரணையாக ஏற்றிக் கொள். இந்தச் செம்புடன் சூதம், தங்கம், கெந்தி இவற்றைச் சேர்த்து செந்தூரம் செய்து உட்கொண்டால் காயம் சித்தியாகும். நவலோகத்தில் ஆயிரத்துக்கு ஒன்று தாக்கினால் பொன் ஆகும்.

**மூலிகையில் ஈயம்**

477 - 479. மூலிகைகளில் ஈயம், எடுக்கும் முறையைக் கூறுகிறேன் கேள். பொன்னாங்கண்ணி, சுரை, சீந்தில், செருப்படை, சிறுபூளை, விழுதி, மூக்கறட்டை, முத்தெருக்கன் செவி, வெள்ளைச் சாரணை, வெள்ளருகு, உத்தாமணி போன்ற மூலிகைகளை எடுத்து முன் செம்புக்கு செய்ததுபோல் செய்து சத்தெடுத்து ரசமணியில் தாக்கிச் சாரணை ஏற்றி புடம் இட்டு எடை போட்டுப் பார்த்தால் சூதத்தின் எடைதான் நிற்கும். இதுபோல் இருபத்தொன்று முறை சுத்தமாய் சத்துக்களை எடுத்து ஈந்தால் சுருபம் என்ற ரசமணி கிடைக்கும். இந்த குளிகையால் ஒரு நொடிக்குள் மூன்று உலகங்களையும் சுற்று வரலாம்.

**திருமூலர் - காலாங்கிக்கும் - காலாங்கி போகருக்கும் உபதேசம்**

480 - 483. பாட்டர் (திருமூலர்) மூன்று உலகங்களையும் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் சுற்றி வந்து அதில் உள்ள அனைத்து அதிசயங்களையும் பார்த்து அறிந்து கொண்டு அகஸ்தியர் இருக்கும், மலைக்கு அப்பால் ஒரு அரச மரத்தின் அடியில் அமர்ந்து சீடர்களுக்கு உபதேசம் செய்து மூன்று உலகங்களிலும் கீர்த்தி பெற்று சமாதியை அடைந்தார். சமாதியில் இருந்து கொண்டு எழுபது யுகம் காலாங்கி நாதருக்கு வாதத்தை உபதேசம் செய்தார்.

காலாங்கி நாதர் என்னை அழைத்து வாதத்தின் சூட்சத்தையும், குளிகை செய்யும் முறையையும் கூறி நிற்குண பிரம்மத்தை அடைய வழியும் காட்டி, பசு, பதி, பாசம் ஆகிய மூன்றின் பண்புகளையும் எனக்கு விளக்கிக் கூறினார். நான் அவர் சொன்ன அந்த கருவை எல்லாம் ஏழாயிரத்திலும், ஏழு நூறிலும், இந்த நிகண்டான ஆயிரத்து ஏழுநூறிலும், வெளிப்படையாகத் திறந்து சொன்னேன். ஏன் எனில் சாத்திரங்கள் அழியாமல் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தினால் தான்!

நூல் பெருமை

484. இந்த நிகண்டானது ஆயிரத்து எழுநூறு பாடலைக் கொண்டது இது பரிபாஷை அனைத்திற்கும் திறவு கோலாகும். உலகத்தில் உள்ள அனைத்து விதமான சாத்திரங்களையும் சோதித்து, கருவைக் கண்டும், சிவகாமியான தாய் சொல்லக் கேட்கும் எனது ஐயரான காலாங்கிநாதர் சொல்லக் கேட்டு நன்றாக அறிந்து கொண்டு அனைத்தையும் இந்த நிகண்டில் கூறிவைத்தேன்.

பஞ்சபூதக் குறிப்பு

485. பஞ்ச பூதத்தை பற்றி குறிப்பு கூறுகிறேன் கேள். வேதையிலும் அஞ்சு பூதம், சிருஷ்டிக்கும் அஞ்சு பூதம், மனிதருக்கும் அஞ்சுபூதம் பறவைக்கும் அஞ்சு பூதம், யோனிகள் எல்லாம் அஞ்சுபூதம், வாதத்திலும் அஞ்சுபூதம் - எவ்வாறு இவை எல்லாம் மேலே கூறியவற்றில் நிற்கின்றன என்பதைக் கூறுகிறேன் கேள்.

பஞ்ச பூதக் கூறு நிறம்

486 - 488. பிரிதிவி என்ற பூதம் மண்ணாகும். அப்பு என்ற பூதம் தண்ணீராகும். தேயு என்ற பூதம் நெருப்பாகும். வாயு என்ற பூதம் காற்றாகும். ஆகாசம் என்ற பூதம் விண்ணாகும்.

பிரிதிவியின் நிறம் பொன்னாகும். அப்புவின் நிறம் பளிங்காகும். தேயுவின் நிறம் சிகப்பாகும். வாயுவின் நிறம் கறுப்பாகும். ஆகாசத்தின் நிறம் புகையாகும்.

உடலில் பஞ்சபூதக் கூறு

பிரிதிவியின் கூறு என்ன வென்றால் மயிர், எலும்பு, தோல், தசை, நரம்பு இவை அஞ்சும் பிரிதிவியின் கூறாகும்.

வெள்ளை நீர், ரத்தம், மூளை, வெண் சதை, மச்சை (மஜ்ஜை) இவை அஞ்சம் அப்புவான நீரின் கூறாகும்.

ஆகாரம், தூங்குதல், பயம், சம்போகம், சோம்பல் இவை அஞ்சும் தேயுவான நெருப்பின் கூறாகும்.

ஓடுதல், நடத்தல், அமர்தல், படுத்தல், நிற்றல், இவை அஞ்சும் வாயுவான காற்றின் கூறாகும்.

காமம், குரோதம், லோபம், மதம், மாச்சர்யம் இவை அஞ்சும் ஆகாசமான விண்ணின் கூறாகும்.

வஸ்துவில் பஞ்ச பூதம்

489. பிரிதிவியின் கூறு மலமாகும். அப்ப்வின் கூறு அமுரியாகும். சென்னீர், நாதம் இவை தேயுவின் கூறாகும். முலைப்பால், வாய்நீர் இவை வாயுவின் கூறாகும். விந்து ஆகாசத்தின் கூறாகும். இந்த ஐந்தும் கூடி சகலவஸ்துவும் தோன்றும். குரு என்ற பேரும் இதற்கேயாகும்.

லோகத்தில் அஞ்சு பூதம்

490. தங்கம் என்ற லோகம் பிரிதிவியாகும். காரீயம் என்ற லோகம் அப்புவாகும். தேயு என்ற பூதம் செம்பாகும். இரும்பு என்ற லோகம் வாயுவாகும். நாகம் என்ற

லோகம் ஆகாசமாகும். இதுவே பஞ்ச பூதலோகமாகும். இவை அஞ்சும் ஒன்று சேர்ந்தால் உடலில் உள்ள ஆவியானது பிரியாது.

**பஞ்சலோக சேர்மானம்**

491 - 497. தங்கத்தை தகடாக தட்டி காவியை பழச்சாற்றால் அரைத்துத் தகட்டின் மேலே பூசி, நாலு தரம் காய்ச்சி வைத்த பின்னர் செம்பைத் தகடாக தட்டி குண்டுமணி, வெடி உப்பு, சீனம் இவை மூன்று சரக்கையும் சமனாகக் கூட்டி கழுதை மூத்திரத்தில் அரைத்துப் பூசிக் காய வைத்துக் கழுதை மூத்திரத்தில் ஏழு தரம் தோய்த்து எடுத்து தங்கத்துடன் சமனாக சேர்த்துக் கொள்.

பிறகு இரும்புப் பொடியை ஒரு பலம் எடுத்துப் பழச்சாற்றில் ஊர வைத்து வெண்காரம் சமனாய்ச் சேர்த்து செவ்வல்லிக் கிழங்கு சாற்றில் அரைத்து குகையில் வைத்து உருக்கி அதையும் தங்கத்திற்கு சமனாய் சேர்த்துக் கொள்.

பின்பு காரீயம் பலம் வாங்கி குகையில் இட்டு உருக்கிச் சாய்த்து தங்கத்தின் எடைக்குச் சமனாய்ச் சேர்த்து அதற்குப் பிறகு நாகத்தை எடுத்து இலுப்பை நெய்யில் ஏழு தரம் உருக்கிச் சாய்த்து தங்கத்தின் எடைக்கு சமமாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் இவை ஐந்தையும் ஒன்றாக உருக்கி அந்த எடைக்கு வெள்ளி சமமாக சேர்த்து உருக்கி வைத்துக் கொண்டு செந்தூரம், களங்கு சுன்னம் மெழுகு தயிலம் இவற்றைத் தாக்கினால் பஞ்சலோகம் பழுக்கும். புடம் போடத் தங்கமாகும், 11 முறையாக செந்தூரத்தையும் களங்கையும் நவலோகத்தில் ஈவாய் என்று சுருக்கமாகவும் சூட்சமாகவும் சொன்னேன். இந்த பஞ்ச பூத சேர்க்கையே நவலோகமாகும். இதை இந்த நிகண்டில் திறந்து சொல்லி உள்ளேன்.

பிண்டம் எல்லாம் பஞ்ச பூதத்தால் ஆனது. அண்டமும் அஞ்சு பூதத்தால் ஆனது. யோனியும் அவ்வாறே மருந்தும் அஞ்சு பூதமாகும். கார சாரங்களும் அஞ்சு பூதமாகும். இந்த அஞ்சு பூதத்தால்தான் தத்துவம் தோன்றிற்று. வாதமும் இந்த அஞ்சாலே. இந்த சூட்சத்தை அறியாவிட்டால் வாதம் கை கூடாது. எல்லாவற்றையும் பிரித்து பூதத்தை அறிய வேண்டும். பூதத்தை அறியாவிட்டால் வாதம் பாழாகும். இதே போல் எல்லாவிதமான சரக்கையும் பிரித்துப் பார்த்து பூதத்தை அறிய வேண்டும்.

**லவணத்தில் பஞ்ச பூதம்**

498- 500. கல்லுப்பு, இந்துப்பு இவைரெண்டும் பிரிதிவியாகும். சத்திசாரம் நவச்சாரம் இவை ரெண்டும் அப்புவாகும். சவுட்டுப்பும், வெடி உப்பும் தேயு என்ற பூதமாகும். வெண்காரமும் துரிசும் வாயு என்ற பூதமாகும். பூரம் வழலை ஆகாசம் என்ற பூதமாகும். இந்த முறையை அறிந்து செய்தால்தான் வாதம் கைகூடும்.

குரு மருந்து செய்யவும் பஞ்ச பூதச் சேர்க்கை வேண்டும், அதாவது பஞ்ச பூதங்களும் ஒன்றாகச் சேர்த்தால்தான் குரு (மருந்து) செய்ய முடியும். இல்லையேல் முடியாது. செந்தூரம் செய்வதற்கும் பஞ்ச பூதச் சேர்க்கை வேண்டும். களங்கு, மெழுகு போன்றவைகளுக்கும் பஞ்சபூதச் சேர்க்கை அவசியம், இல்லையேல் களங்கும் மெழுகும் செய்ய முடியாது.

பஞ்ச பூதம் ஒன்றுள் ஒன்று அடங்கினால் சகல விதமான செய்கைகளும் கை கூடும். பஞ்ச பூதம் ஒடுங்கும் முறை எவ்வாறு எனில், பிரிதிவி அப்புவிலும், அப்பு,

தேயுவிலும் தேயு வாயுவிலும், வாயு ஆகாசத்திலும் ஒடுங்கும். அதாவது, பிரிதிவியான மண் நீரில் ஒடுங்கும். நீரான அப்பு நெருப்பான தேயுவில் ஒடுங்கும். நெருப்பான தேயு வாயு என்ற காற்றில் ஒடுங்கும். வாயு என்ற காற்று ஆகாசம் என்ற விண்ணில் கலக்கும். இந்த ஆகாசம் என்ற விண்ணானது தஹராகாசத்தில் உள்ள சிவனில் சென்று ஒடுங்கும். (தஹரம் - இருதயத்தில் உள்ள ஒரு வெற்றிடம் - திருச்சிற்றம்பலம்)

### பாஷாணத்தில் பஞ்ச பூதம்

501- 502. தொட்டி பாஷாணம், மிருதார் சிங்கி, கார்முகில், பவளபுத்து, தீமுருகல் இவை ஐந்தும் பிரிதிவியான மண்ணின் கூறு. கௌரி, சங்க பாஷாணம், குதிரைப்பல், வெள்ளை பாஷாணம், குக்குடம், சுரக்காய் கெந்தி இவை ஆறும் அப்புவான நீரின் கூறு. தாளகம், வீரம், கெந்தி, அரிதாரம், மனோசிலை, தேயு என்ற நெருப்பின் கூறு.

புத்தொட்டி, பஞ்சபட்சி, சரகண்ட பாஷாணம், மிறுதக பாஷாணம், லிங்கம் இவை ஐந்தும் வாயு என்ற காற்றின் கூறு. சூதபாஷாணம், ஆகாயம் என்ற விண்ணின் கூறாகும்.

503. பஞ்சபூத சரக்குகள் ஒன்றுடன் ஒன்று ஒடுங்கினால் வேதையானது கோடி அண்டம் வரை பாயும். இல்லையேல் பாயாது. எவ்வாறு பட்டமானது கயிற்றால் கட்டப்படும் சூத்திரம் சரியில்லை எனில் மேல் எழும்பாதோ அதே போல பூத சரக்கை அறிந்து செய்தால்தான் வாதம் பலிதமாகும். இல்லையேல் மண்ணாய்ப் போகும். களங்குக்கும் செந்தூரத்துக்கும் இவ்வாறே அறிய வேண்டும். அறிந்து செய்தால்தான் களங்கும் செந்தூரமும் பலிதமாகும்.

### உபரசத்தில் பஞ்சபூதம்

504. சிலாசத்து, அப்பிரகம், காந்தம், பூனாகம், ராசவர்தம் இவை எல்லாம் பிரிதிவியின் கூறாகும்.

சங்கு, கோழிமுட்டை, நாகவண்டு, கிளிஞ்சல், நண்டு இவை எல்லாம் அப்புவின் கூறாகும்.

அஸ்தி, இந்திரகோபம், மயிலிறகு, நிமிளை வெங்கலம் இவை ஐந்தும் தேயுவின் கூறாகும்.

சகஸ்திரபேதி, கல்நார், கல்மதம், அன்னபேதி, மயிர் இவை எல்லாம் வாயுவின் கூறாகும்.

சுக்கான், வைக்கிராந்தம், துத்தம், மிருதபாஷாணம் போன்ற சரக்கெல்லாம் ஆகாசத்தின் கூறாகும்.

### பஞ்சபூத கலப்பின் பெருமை

505 - 508. காரத்தில், பாஷாணத்தில் உபரசத்தில் பஞ்ச லோகத்தில் இவை நான்கிலும் பஞ்சபூதத்தை அறிந்து களங்கு மற்றும் செந்தூரம் செய்தால் வாதம் பலிதமாகும். இவைகளில் ஏதேனும் ஒரு பூதம் தப்பி விட்டாலும் வாதம் பலிக்காது. ஊனான இந்த உடலில் பஞ்ச பூதக் கலப்பில் ஏற்றத் தாழ்வு ஏற்பட்டால் நோய் ஏற்பட்டு காயம் நிலைக்காமல் அழிந்து போய் விடும். பூத வகைகளை அறிந்து சேர்த்து வாதம் புரிந்தால் நொடிக்குள் வாதம் கைகூடும். இதன் முறைகளை இந்த நூலில் கூறி உள்ளேன் எனகிறார் முனிவர்.

இந்த நூலைப் பார்த்து அறிந்தும் இந்த உலகத்தில் மலைகள் குகைகளில் வசிக்கும் சித்தர்களை வணங்கி அவர்களிடம் இருந்தும் வித்தைகளை அறிந்து கொள். முதலில் அவர்களை குறிப்பால் கண்டு உணர்ந்து பிறகு அவர்களுக்கு கற்பம், வஸ்து சுத்தி முதலியவைகளைக் கொடுத்துச் சந்தோஷப் படுத்திப் பிறகு அவர்களிடம் வாதத்தின் முறைகளையும் மற்றும் அனைத்துவிதமான கலைகளையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**காயகற்ப பூரணாதி லேகியம்**

509-514. கஞ்சாவை நூறு பலம் எடுத்த நல்ல நீரில் போட்டு ஊற வைத்து மறுநாள் தண்ணீரை வடித்து விட்டு நல்ல தண்ணீர்விட்டு மூன்று தரம் கழுவி பசுவின் பால் படி ஒன்றும் நல்ல தண்ணீர் இரண்டுபடியும் சேர்த்து அதில் கஞ்சாவைப் போட்டுக் கொதிக்கும் பதத்தில் ஆவின் நெய்படி வார்த்து எடுத்து ஒரு கோணியில் கொட்டி ஒரு பாண்டத்தில் பிழிந்து ஆற வைத்துத் தெளிந்தபிறகு தண்ணீரை நீக்கி நெய்யை மட்டும் எடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பிறகு அபின் அஞ்சு பலம் எடுத்து அதை அஞ்சு படி ஆவின் பாலில் போட்டுக் காய்ச்சிப் புரைகுத்தி தயிரான பிறகு அந்த தயிரைக் கடைந்து வெண்ணை எடுத்து உருக்கி நெய்யாக்கி முன்நெய்யுடன் சேர்த்துக் கொண்டு சர்க்கரை அஞ்சு சேர் போட்டு அதனுடன் ஆவின்பால் நாலுபடி சேர்த்து வடிகட்டிக் கொண்டு கனமான பானையில் கொட்டி பாகுபதம் வரும் வரை காய்ச்ச வேண்டும்.

அதில் சுக்கு, ஏலம், சடாமஞ்சில், மிளகு, சாரப்பருப்பு, கிராம்பு, பத்திரி, சாதிக்காய், தாளிச பத்திரி, கோஷ்டம், அதிமதுரம், கசகசா, அமுக்கிரா, வால்மிளகு.

இவை எல்லாம் வகைக்கு ரெண்டு பலம் எடுத்துப் பொடித்துச் சேர்த்து, தேன் ஒருபடி வார்த்து கிளறி அடுப்பில் வைத்துச் சுண்டும் பதத்தில் பரணியில் அடைத்து வைத்துக் கொண்டு, நாதாக்களான முனிவர்களைக் காணும்போது பாக்களவு எடுத்து கொடுத்து நீயும் உண்டால் ஆதாரங்கள் எல்லாம் கண்ணில் தெரியும்.

மதியமுதம் சிந்தும், மனம் சிவனிலே சென்று லயமாகும். இதனால் சீவன் முக்தன் என்ற பெயர் உண்டாகும்.

**மேருவுக்கு வடதிசை, கீழ்திசை, மேல்திசை<br>தென்திசைகளில் உள்ள சித்தர்களின்<br>வயது, உயரம், வல்லமை**

515 - 528. சித்தர்களைக் கண்டு அவர்களுக்குப் பூரணாதி அளித்து க்ஷேமம் விசாரித்தால் மனம் மகிழ்ச்சி கொண்டு மனதில் உள்ள கருவை எல்லாம் கூறுவார்கள்.

முதலில் சித்தர்களின் உயரம், வயது வல்லமை போன்றவற்றைக் கூறுகிறேன் கேட்டுக் கொள்.

மகாமேரு என்ற மலைக்கு வடக்கில் உள்ள சித்தர்களின் உயரம் ஒரு பனைமரமாகும். அவர்களது வயது மூன்று ஆயிரம் ஆண்டு ஆகும்.

மகாமேருக்கு கிழக்கில் உள்ள சித்தர்கள் முக்கால் பனைமரம் அளவு உயரம் உடையவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய வயது எழுநூறு ஆண்டாகும். அவர்களிடம் குளிகை வித்தை உண்டு. சித்து வித்தையும் உண்டு.

மகாமேருக்கு மேற்கில் உள்ள சித்தர்களின் உயரம் அரைப் பனைமரமாகும் வயது முன்நூறாகும்.

இவர்களிடம் வாதவித்தை, குளிகை, சகலவிதமான மூலிகையும், பாஷாணங்களும், உண்டு. மலைக்கு மேற்கே இரசக்கிணறும் உண்டு. சூட்சமமான வித்தையும் உண்டு.

மகாமேருக்கு தெற்கில் உள்ள சித்தர்களின் வயது நூற்றி இருபதாகும். உயரம் கால் பனைமரத்தளவு ஆகும்.

இவர்களிடம் அநேகவிதமான நூல்கள் இருக்கும். இவர்களைத் தவிர சித்தர்களில் வேறு வகையினர் உண்டு.

இவர்கள் எல்லோரும் எப்போதும் தாயாரான தேவியை பூஜிப்பவர்கள்.

**மடாதிபதிகளின் பெயர்**

தட்சிண தேசத்தில் உள்ள மடாதிபதிகளின் பெயர்கள் என்னவென்றால் சின்மய மாந்தேவர், சனகர், சனத்குமாரர், வியாக்கிரமர், பதஞ்சலி, மூலர், சேஷவானந்தர், கந்துகிநாதர், சவுண்டிக நாதர்.

கூர்மானந்த மூர்த்தி, யோகவானந்த மூர்த்தி, கவானந்தமூர்த்தி, சாந்தவானந்தமூர்த்தி, ரிஷபவானந்தமூர்த்தி, கைவைத்தானந்தயோகி, செகனவானந்தயோகி, சூரியானந்தயோகி, யோகியானந்தர், சித்தியானந்தயோகி, கவுண்டிகானந்த மூர்த்தி, மருபவானந்த மூர்த்தி, கேசரானந்தமூர்த்தி, கெந்தவானந்த மூர்த்தி, கைநாதமூர்த்தி, மாய்கையானந்தயோகி.

நித்தியானந்தர், மகாவிசுவானந்தமூர்த்தி, உமையானந்த நாதர், சமையானந்த மூர்த்தி, சர்வானந்தமூர்த்தி, சுபகானந்தமூர்த்தி, தன்னியானந்த மூர்த்தி, அமுர்தவானந்த மூர்த்தி, செகண்டியானந்தர், லெட்சியானந்த மூர்த்தி, சுத்தவானந்த மூர்த்தி, சத்துவானந்த மூர்த்தி, செயங்கொண்டானந்த மூர்த்தி, கேசரானந்த மூர்த்தி, கம்பீரானந்த மூர்த்தி, உலகானந்தமூர்த்தி, பிரம்மவானந்தமூர்த்தி, திரிலோகானந்தமூர்த்தி.

ராக்ஷதானந்தநாதர், மாலிவானந்தநாதர், பிரசண்டவானந்தநாதர், வளங்கவானந்தநாதர், வித்தியானந்தநாதர், அம்பிகானந்தநாதர், நத்தியனாந்தர். மகானந்தமூர்த்தி, சுந்தரானந்த மூர்த்தி, டமரானந்தநாதர், கலானந்தர், அபையவானந்தநாதர், விகாரவானந்தநாதர்.

பூதவானந்தநாதர், சாறுவானந்தர், வியோமலானந்தர், சொருபவானந்த மூர்த்தி, வாசியானந்த மூர்த்தி, கங்களானந்த மூர்த்தி, பூரணானந்தமூர்த்தி, கமலவானந்தர், கோரக்கநாதர், நிற்குணானந்த மூர்த்தி - என் மலையாம் மேலே கூறியவைகள் மடாதிபதிகளின் பெயர்களாகும்.

இவர்களின் கொள்கையும் மரபும் வெவ்வேறாகும். சீடர்களின் எண்ணிக்கை கோடியாகும். இவர்களால் ஆக்கப்பட்ட நூல்களும் கோடிக்கணக்கில் உள்ளன.

இவர்களின் சாரணைமுறை, குளிகைமுறை, வேதைமுறை, செந்தூரம் போன்ற முறைகள் கோடிக் கணக்கில் உள்ளன.

மேலே கூறிய பெயர்களில் சின்மயமாந்தேவர் முதல் மூலர் வரையான பெயர்கள் போகதேவருடைய தலைமுறையாகும்.

சேஷானந்தரி இருந்து அறுபத்து நாலு மட அதிபர்களின் பெயர்கள் ஆரம்பமாகின்றன.

**குருவர்க்கம் கூறல்**

529 - 531. நந்தி என்ற பெயருடையவர் நான்கு பேர். மற்றும் சிவயோகமுனிவர், பதஞ்சலி, வியாக்கிரமர், திருமூலர் ஆக எட்டுப்பேர். குருவர்க்கத்தைச் சேர்ந்தவராவர்.

நந்திக்கு சீடர்கள் எட்டு பேர். திருமூலருக்கு சீடர்கள் ஏழுபேர் அவர்களாவது, மாலாங்கர், கஞ்சமலை சித்தர், பிரமன், இந்திரன், சோமன், காலாங்கி, ருத்திரன் என்பவர்கள் ஆவர்.

காலாங்கி நாதருக்கு அறுபத்து நாலு சீடர்கள் முதல் சீடன் போகனாகிய நான். அதன்பிறகுதான் மற்ற அறுபத்து மூன்று பேர்களும்.

கஞ்சமலை சித்தருக்கு ஐந்து சீடர்கள். மாலாங்கிமூர்த்திக்கு எண்பது சீடர்கள். இந்திரன், சோமன், பிரமன், ருத்திரன் போன்றவர்களுக்கு சீடர்கள் இல்லை. இவர்கள் நான்கு திக்குக்கும் நான்கு பேர் சென்று கீர்த்திகள் பரவச் செய்தனர்.

திருமூலருடன் இருந்த நான்கு நந்திமார்களும் நான்கு திக்கு சென்று கீர்த்திபெற்றனர். பதஞ்சலியும், வியாக்கிரமரும் மேருவைத் தாண்டிச் சென்றனர். இவர்களுக்கு ஒன்பது பேர் சீடர்கள். இந்த ஒன்பது பேர்களுக்கு இந்திரனும் பாடம் கற்பித்தார்.

**திருமூலர் *சீடவர்க்கம்***

532. திருமூலருக்கு அறுபத்து நான்கு சீடர்கள். என்னை தவிர மீதி அறுபத்து மூன்று பேர்கள். இந்த அறுபத்து மூன்று பேர்களுக்கும் அளவிட முடியாத அளவிற்கு சீடர்கள் உள்ளனர். எனக்கு நாற்பத்து எட்டு பேர் சீடர்களாகும். முதல் சீடன் கொங்கணர். இவருக்குப் பிறகே மற்ற நாற்பத்து ஏழு சீடர்கள்.

**திருமூல வர்க்கத்தாரின் வேடம்**

533-534. சடாமுடி, பிரம்பு, கடகவாள், உப்புக்கதை, படிகமணி, யோகவேட்டி, படிகலிங்கம், பாதகுறடு, போன்றவற்றோடு காதில் குண்டலம், புலித்தோல், புத்தகம் மற்றும் ருத்திராட்ச மாலை போன்றவற்றை உடையவர்கள் பிரபலமான திருமூலர் வர்க்கத்தை சேர்ந்தவர்கள்.

உலகத்தில் உள்ள மலைகளில் வாழும் சித்தர்கள் எல்லாம் தாங்கள் திருமூலர் வர்க்கத்தை சேர்ந்தவர்கள் என்று கூறிக் கொண்டு சொரூப மணியை கேட்பார்கள். அவர்களுக்கு மணியை கொடுக்க வேண்டாம்.

நான் கூறியபடி வர்க்கத்தாரின் வேடம் அறிந்து மூலவர்க்கத்தவராய் இருந்தால், யோக பானம் அளித்து மணியின் செய்கை முறையை கேட்பார். திருமூலவர்க்கத்தாரிடம் சொரூப மணிக்குளிகை உண்டு. இவர்கள் எல்லோரும் சைவசமயத்தைச் சார்ந்தவர்கள்.

**துருசிக்கு சத்ரு, மித்ரு கூறல்**

535 - 536. சவுடு, தொட்டிபாஷாணம், அஞ்சன பாஷாணம், நாகம், சூடன், அப்பிரகம், சீனம், வெள்ளைபாஷாணம். கல் உப்பு, கற்சவடு, மிறுதார் சிங்கி, காந்தம், இந்துப்பு, வங்கம் சவுக்காரம், வகைகள் எல்லாம் துருசிக்கு சத்துருவாகும்.

அ.டதாரம், சாரம், வெண்காரம், வீரம், சிலை, கபரி, நிமி.ளை, கெவுரி, லிங்கம் இவை எல்லாம் துருசுக்கு மித்துருவாகும். இதனால் வாதம் கைகூடும். இதை சிவன் சொன்னபடி கூறியுள்ளேன்.

**சாரத்தின் சத்துரு மித்துரு**

537 - 538. கல்லுப்பு, இந்துப்பு, படிகம், வளையலுப்பு, இரும்பு, காந்தம், முட்டைத்தோல், சுக்கான், சிலைச்சுன்னம், காரீயம், கடல் நுரை, அப்பிரகம், சவுடு, கிளிஞ்சி வகையெல்லாம் சாரத்தின் சத்துருவாகும். தாளகம், (வத்தம்) சிலை, வெடி உப்பு, வீரம், லிங்கம், வெங்காரம், கல்நார், கெவுரி, நாகம், நிமிளை, செம்பு முதலான சரக்கெல்லாம் சாரத்தின் மித்துருவாகும். இதை அறிந்து வேதை செய்ய வேண்டும்.

**வெடிஉப்பின் சத்துரு மித்துரு**

539 - 540. சவுடு, சூடன், வெள்ளீயம், துரிசு, வெள்ளி, இரும்பு, செம்பு, காந்தம், வத்தம், மனோசிலை, தொட்டி, கெந்தி, சிங்கி, தீமுருகல், அண்டவோடு, சுரை கெந்தி, முதலானவை வெடிஉப்புக்கு சத்துருவாகும்.

இந்துப்பு, கல்லுப்பு, காரம், லிங்கம், வீரம், துத்தம், தாளகம், நாகம், கடல் நுரை, நிமிளை, வெள்ளை கம்பளி, பழம் புளி, ரோமம் முதலானவை வெடி உப்புக்கு மித்துருவாகும்.

**கல்லுப்புக்கு சத்துரு மித்துரு**

541 - 542. வீரம், வத்தம், சவுடு, சூடன், படிகாரம், காந்தம், இந்துப்பு, சிங்கி, பவளபுத்து, மனோசிலை, பழம்புளி என்பவை கல்லுப்புக்கு சத்துருவாகும். சரக்கை எல்லாம் சத்துருவால் கொல்ல வேண்டும். பிறகு அதை மித்துருவால் எழுப்ப வேண்டும்.

பூரம், இரும்பு, செம்பு, காரம், கெவுரி, நாகம், கெந்தி, தாளகம், நிமிளை, வெள்ளை, அப்பிரகம், லிங்கம், வங்கம் முதலானவை கல்லுப்புக்கு மித்துருவாகும். கல்லுப்பால் சூதத்தைக் கட்டி செந்தூரம் செய்தால் வாதம் கைக்கள் சிக்கும்.

**காரத்திற்கு சத்துரு மித்துரு**

543. சிலாசத்து, புளி, அண்டம், சூடன் எல்லாவகையான சுன்னங்களும் பூரமும், வெண்காரத்திற்கு சத்துருவாகும்.

மேலே கூறப்பட்ட சரக்குகள் நீங்கலாக உபரசங்கள், பா□ாணங்கள், லோகங்கள் எல்லாம் வெண்காரத்திற்கு மித்துருவாகும்.

**சீனத்திற்கு சத்துரு மித்துரு**

544. வெண்காரத்திற்கு எவை சத்துருவோ அநத சரக்கெல்லாம் சீனத்திற்கும் சத்துருவாகும். மற்ற எல்லா வகையான உபரசங்கள் பா□ாணங்கள் லோகங்கள் மித்துருவாகும். இந்த ஆறுவகையான சரக்கும் சிவனின் அவதாரமாகும். சகலவிதமான வாதங்கள் எல்லாம் இதனால் ஆகும். இதை எவர் அறிகிறாரோ அவர்தான் வாதியாக முடியும்.

545. இந்த ஆறுவகையான சரக்குகளை சத்துருவால் அரைத்து மித்துருவைக் கூடச் சேர்த்து புடம் போட்டால் சுண்ணமாகும் சுண்ணத்துடன் கோசம், பீசம் உப.சங்கள் சேர்த்து நவலோகத்தில் ஈந்தால் லோகங்கள் த.ங்கமாகும்.

(துரிசு, சாரம், காரம், வெடி உப்பு, சீனம், கல்லுப்பு இவையே ஆறு வகையான சரக்காகும்.)

**தங்கத்தின் சத்துரு**

546 - 547 நாகம், நிமிளை, கண்டர், வங்கம், கெவுரி, இணங்கன், வெள்ளை, சவுட்டுப்பு, தாளகம், சிங்கி, அப்பிரகம், கிளிஞ்சி, சிலை. அண்டவோடு, குதிரைப்பல் பாஷாணம், சூதம், தெந்தி, கோமுகம், காந்தம், பொன்னம்பர், சவ்வீரம் முதலான தங்கத்தின் சத்துருவாகும்.

சத்துரு நீங்கலாக மற்றவை எல்லாம் மித்துருவாகும். சத்துருவால் கொன்ற பின்பு மித்துருவை சேர்த்து அரைத்து ஊதினால் சுண்ணமாகும். தங்கம் நீறினால் சரக்கெல்லாம் கட்டும். இதனுடன் கோச பீசங்களைச் சேர்த்து நவலோகத்தில் ஈய்ந்தால் யேமமாகும்.

**சூதத்திற்கு சத்துரு மித்துரு**

548 - 549. சிங்கி, கெவுரி, வெள்ளை, குதிரைப் பல் பாஷாணம், சத்திசாரம், வெடி உப்பு, இரும்பு, காந்தம், சூடன், பொன்னம்பர், பூரம், கற்சுவடு. நிமிளை, பூநீறு முதலான சரக்குகள் சூதத்திற்கு சத்துருவாகும்.

அப்பிரகம், நாகம், காரீயம், வங்கம், சிலை, கெந்தகம், வீரம், தாளகம், தொட்டி, வெள்ளி, செம்பு, துரிசு, காரம், சாரம், அஞ்சனக்கல், துத்தம், தீமுறுகல், பவளப்புத்து முதலான சரக்குகள் இரும்புக்கு மித்துருவாகும்.

**இரும்புக்கு சத்துரு மித்துரு**

550- 551. அப்பிரகம், வெண்காரம், அண்டவோடு, வெங்கலம், தீமுருகல், வங்கம், கிளிஞ்சல் ஒடு, தரா, கெந்தி, சாரம், சீலை சவ்வீரம், சிங்கி, கெளரி, வெள்ளை, சிலாசத்து, பூநீறு முதலான சரக்குகள் இரும்புக்கு சத்துருவாகும்.

வெள்ளி, கபரி, காந்தம், செம்பு, பூரம், பூனாகம், ராசவர்த்தம், தங்கம், கெந்தி, செம்பு, மயூரத்தின் செம்பு, சூடன் போன்ற சரக்குகள் இரும்புக்கு மித்துருவாகும்.

இரும்புக்கு எதுவெல்லாம் சத்துரு மித்துருவோ அதுவே காந்தத்திற்கும் சத்துரு மித்துருவாகும்.

**நாகத்தின் சத்துரு மித்துரு**

552-553. கிளிஞ்சில், அண்டம், கல்லுப்பு, வெடிஉப்பு, படிகாரம், வங்கம், தங்கம், தரா, வெள்ளி, வெங்கலம், நண்டோடு, வீரம், அரிதாரம், அபின், மிளகு, வளையலுப்பு, அன்னபேதி இவை எல்லாம் நாகத்தின் சத்துருவாகும்.

அப்பிரகம், இரும்பு, காந்தம், சிலாசத்து, நிமிளை, செம்பு, கெவுரி, சூதம், கெந்தி; பூனாகம், மயூர செம்பு, கருநாகம், சாரம் இவை எல்லாம் நாகத்தின் மித்துருவாகும்.

**காரீயத்தின் சத்துரு மித்துரு**

554-555. அயகாந்தம், நிமிளை, ராசவர்த்தம், கிளிஞ்சி, அண்டம், நண்டோடு, நத்தை, கெவுரி, கெந்தி, நற்சுன்ன வகைகள், அப்பிரகம், வெடிஉப்பு, கல்லுப்பு, கல்நாறு, சகஸ்திரவேதி இவை எல்லாம் காரீயத்துக்கு சத்துருவாகும்.

நாகம், மயூரச்செம்பு, பூனாகம், செம்பு, வெள்ளி, வங்கம், சூதம், வெள்ளை போன்றவை காரீயத்தின் மித்துருவாகும். சத்துருவால் கொன்று மித்துருவால்

அப்தாரம், சாரம், வெண்காரம், வீரம், சிலை, கபரி, நிமிளை, கெவுரி, லிங்கம் இவை எல்லாம் துருசுக்கு மித்துருவாகும். இதனால் வாதம் கைகூடும். இதை சிவன் சொன்னபடி கூறியுள்ளேன்.

**சாரத்தின் சத்துரு மித்துரு**

537 - 538. கல்லுப்பு, இந்துப்பு, படிகம், வளையலுப்பு, இரும்பு, காந்தம், முட்டைத்தோல், சுக்கான், சிலைச்சுன்னம், காரீயம், கடல் நுரை, அப்பிரகம், சவுடு, கிளிஞ்சி வகையெல்லாம் சாரத்தின் சத்துருவாகும். தாளகம், (வத்தம்) சிலை, வெடி உப்பு, வீரம், லிங்கம், வெங்காரம், கல்நார், கெவுரி, நாகம், நிமிளை, செம்பு முதலான சரக்கெல்லாம் சாரத்தின் மித்துருவாகும். இதை அறிந்து வேதை செய்ய வேண்டும்.

**வெடி உப்பின் சத்துரு மித்துரு**

539 - 540. சவுடு, சூடன், வெள்ளீயம், துரிசு, வெள்ளி, இரும்பு, செம்பு, காந்தம், வத்தம், மனோசிலை, தொட்டி, கெந்தி, சிங்கி, தீமுருகல், அண்டவோடு, சுரை கெந்தி, முதலானவை வெடிஉப்புக்கு சத்துருவாகும்.

இந்துப்பு, கல்லுப்பு, காரம், லிங்கம், வீரம், துத்தம், தாளகம், நாகம், கடல் நுரை, நிமிளை, வெள்ளை கம்பளி, பழம் புளி, ரோமம் முதலானவை வெடி உப்புக்கு மித்துருவாகும்.

**கல்லுப்புக்கு சத்துரு மித்துரு**

541 - 542. வீரம், வத்தம், சவுடு, சூடன், படிகாரம், காந்தம், இந்துப்பு, சிங்கி, பவளபுத்து, மனோசிலை, பழம்புளி என்பவை கல்லுப்புக்கு சத்துருவாகும். சரக்கை எல்லாம் சத்துருவால் கொல்ல வேண்டும். பிறகு அதை மித்துருவால் எழுப்ப வேண்டும்.

பூரம், இரும்பு, செம்பு, காரம், கெவுரி, நாகம், கெந்தி, தாளகம், நிமிளை, வெள்ளை, அப்பிரகம், லிங்கம், வங்கம் முதலானவை கல்லுப்புக்கு மித்துருவாகும். கல்லுப்பால் சூதத்தைக் கட்டி செந்தூரம் செய்தால் வாதம் கைக்கள் சிக்கும்.

**காரத்திற்கு சத்துரு மித்துரு**

543. சிலாசத்து, புளி, அண்டம், சூடன் எல்லாவகையான சுன்னங்களும் பூரமும், வெண்காரத்திற்கு சத்துருவாகும்.

மேலே கூறப்பட்ட சரக்குகள் நீங்கலாக உபரசங்கள், பாடாணங்கள், லோகங்கள் எல்லாம் வெண்காரத்திற்கு மித்துருவாகும்.

**சீனத்திற்கு சத்துரு மித்துரு**

544. வெண்காரத்திற்கு எவை சத்துருவோ அநத சரக்கெல்லாம் சீனத்திற்கும் சத்துருவாகும். மற்ற எல்லா வகையான உபரசங்கள் பாடாணங்கள் லோகங்கள் மித்துருவாகும். இந்த ஆறுவகையான சரக்கும் சிவனின் அவதாரமாகும். சகலவிதமான வாதங்கள் எல்லாம் இதனால் ஆகும். இதை எவர் அறிகிறாரோ அவர்தான் வாதியாக முடியும்.

545. இந்த ஆறுவகையான சரக்குகளை சத்துருவால் அரைத்து மித்துருவைக் கூடச் சேர்த்து புடம் போட்டால் சுண்ணமாகும் சுண்ணத்துடன் கோசம், பீசம் உபரசங்கள் சேர்த்து நவலோகத்தில் ஈந்தால் லோகங்கள் தங்கமாகும்.

(துரிசு, சாரம், காரம், வெடி உப்பு, சீனம், கல்லுப்பு இவையே ஆறு வகையான சரக்காகும்.)

**தங்கத்தின் சத்துரு**

546 - 547 நாகம், நிமிளை, கண்டர், வங்கம், கெவுரி, இணங்கன், வெள்ளை, சவுட்டுப்பு, தாளகம், சிங்கி, அப்பிரகம், கிளிஞ்சி, சிலை. அண்டவோடு, குதிரைப்பல் பாஷாணம், சூதம், கெந்தி, கோமுகம், காந்தம், பொன்னம்பர், சவ்வீரம் முதலான தங்கத்தின் சத்துருவாகும்.

சத்துரு நீங்கலாக மற்றவை எல்லாம் மித்துருவாகும். சத்துருவால் கொன்ற பின்பு மித்துருவை சேர்த்து அரைத்து ஊதினால் சுண்ணமாகும். தங்கம் நீறினால் சரக்கெல்லாம் கட்டும். இதனுடன் கோச பீசங்களைச் சேர்த்து நவலோகத்தில் ஈய்ந்தால் யேமமாகும்.

**சூதத்திற்கு சத்துரு மித்துரு**

548 - 549. சிங்கி, கெவுரி, வெள்ளை, குதிரைப் பல் பாஷாணம், சத்திசாரம், வெடி உப்பு, இரும்பு, காந்தம், சூடன், பொன்னம்பர், பூரம், கற்சுவடு, நிமிளை, பூநீறு முதலான சரக்குகள் சூதத்திற்கு சத்துருவாகும்.

அப்பிரகம், நாகம், காரீயம், வங்கம், சிலை, கெந்தகம், வீரம், தாளகம், தொட்டி, வெள்ளி, செம்பு, துரிசு, காரம், சாரம், அஞ்சனக்கல், துத்தம், தீமுறுகல், பவளப்புத்து முதலான சரக்குகள் இரும்புக்கு மித்துருவாகும்.

**இரும்புக்கு சத்துரு மித்துரு**

550- 551. அப்பிரகம், வெண்காரம், அண்டவோடு, வெங்கலம், தீமுருகல், வங்கம், கிளிஞ்சல் ஒடு, தரா, கெந்தி, சாரம், சீலை சவ்வீரம், சிங்கி, கௌரி, வெள்ளை, சிலாசத்து, பூநீறு முதலான சரக்குகள் இரும்புக்கு சத்துருவாகும்.

வெள்ளி, கபரி, காந்தம், செம்பு, பூரம், பூனாகம், ராசவர்த்தம், தங்கம், கெந்தி, செம்பு, மயூரத்தின் செம்பு, சூடன் போன்ற சரக்குகள் இரும்புக்கு மித்துருவாகும்.

இரும்புக்கு எதுவெல்லாம் சத்துரு மித்துருவோ அதுவே காந்தத்திற்கும் சத்துரு மித்துருவாகும்.

**நாகத்தின் சத்துரு மித்துரு**

552-553 கிளிஞ்சில், அண்டம், கல்லுப்பு, வெடிஉப்பு, படிகாரம், வங்கம், தங்கம், தரா, வெள்ளி, வெங்கலம், நண்டோடு, வீரம், அரிதாரம், அபின், மிளகு, வளையலுப்பு, அன்னபேதி இவை எல்லாம் நாகத்தின் சத்துருவாகும்.

அப்பிரகம், இரும்பு, காந்தம், சிலாசத்து, நிமிளை, செம்பு, கெவுரி, சூதம், கெந்தி; பூனாகம், மயூர செம்பு, கருநாகம், சாரம் இவை எல்லாம் நாகத்தின் மித்துருவாகும்.

**காரீயத்தின் சத்துரு மித்துரு**

554-555. அயகாந்தம், நிமிளை, ராசவர்த்தம், கிளிஞ்சி, அண்டம், நண்டோடு, நத்தை, கெவுரி, கெந்தி, நற்சுன்ன வகைகள், அப்பிரகம், வெடிஉப்பு, கல்லுப்பு, கல்நாறு, சகஸ்திரவேதி இவை எல்லாம் காரீயத்துக்கு சத்துருவாகும்.

நாகம், மயூரச்செம்பு, பூனாகம், செம்பு, வெள்ளி, வங்கம், சூதம், வெள்ளை போன்றவை காரீயத்தின் மித்துருவாகும். சத்துருவால் கொன்று மித்துருவால்

எழு. பினால் எல்லாவிதமான களங்கையும் உள்ளே வாங்கிக் கொள்ளும். முறைப்படி கூட்டினால் எல்லா விதமான செய்கையும் கைகூடும்.

**வெள் வங்கத்தின் சத்துரு மித்துரு**

556. காரீயம், சூதம், துத்தம் இவை மூன்றும் சத்துருவாகும். சத்துரு நீங்கலாக மற்ற பாஷாணங்கள் உபரசங்கள், காரசாரங்கள் எல்லாம் மித்துருவாகும். காரீயம் செந்தூரமானால் வாதம் கைகூடும்.

557-558. வெள்ளீயம் செந்தூரமானால் மாற்று பதினாறாகும். இந்த செந்தூரம் மதியுடன் சேர்ந்தால் வேதையாகும். இந்த செம்பு உருகும் போது அதனுடன் கருநாகம், நிமிளை, கார்வங்கம், சிங்கி, வெள்ளை, கெவுரி, பூமாது, பஞ்சபட்சி, தொட்டி, அஞ்சனக்கல் கெந்தி போன்ற சரக்குகளின் செந்தூர களங்குகளை செம்பில் ஈந்தால் செம்பு சிதறும். சிதறி கரிய நிறமாகும். இதனுடன் காரீயம் சேர்த்து ஊதினால் மண் போல் குறுகி போகும். இதனால் சத்தெல்லாம் வேதையாகும். இதை அறிய வேண்டுமானால் என் சாத்திரத்தை பார். பிறகு ஒன்றொடு ஒன்று ஒடுங்கும் முறையைப் பார். அழுது புலம்பினால் வாதம் வராது. ஆராய்ந்து அறிந்தால்தான் எல்லாம் சித்தியாகும்.

**வெள்ளிக்கு சத்துரு மித்துரு**

559. வெள்ளீயம், நாகம், கெந்தி, நிமிளை, காந்தம், தீமுருகல், கெவுரி, பஞ்சபட்சி, கம்பி உப்பு, சாரம், குதிரைப்பல், பவளப்புத்து போன்ற சரக்குகளின் களங்குகள் வெள்ளிக்கு சத்துருவாகும்.

சத்துருவாகும் சரக்குகள் நீங்கலாக மற்ற சரக்கெல்லாம் மித்துருவாகும்.

**அயமுருகும் போது விபரம்**

560. அயம் உருகும்போது கெந்தி, சிலை, தாளகம், நிமிளை, சிங்கி, வெள்ளை, வீரம், சாரம், வைக்கிராந்தம், கோழித்தலை கெந்தி, அஞ்சன பாஷாணம், சுரைகெந்தி, குதிரைப்பல்லு போன்ற சரக்குகளின் களங்கை இட்டால் கரியாகி மடிந்து போகும். (கெட்டு போகும்) மற்ற சரக்கெல்லாம் இட்டால் ஒன்றும் ஆகாது.

**கருநாகம் உருகும்போது விபரம்**

561. கருநாகம் உருகும்போது அதில் நிமிளை, சிலை, கெந்தி, அப்பிரகம், கபரி, அஞ்சனம், கோமுகம், கெவுரி, வெள்ளை இவற்றில் ஒன்றை இட்டால் நாகத்தின் வர்ணம் அழிந்து கெட்டுப் போகும். மற்ற சரக்குகளை இட்டால் வர்ணத்தை மேலும் கூட்டும். ஆகவே மற்ற சரக்கெல்லாம் மித்துருவாகும்.

**பந்தனம் சரக்குகளறிய**

562-563. வெங்கலம், பித்தளை, திரா, இரும்பு உருகும்போது போட்டால் வெண்மை நிறம் கொண்டு தங்கம் போல் பிரகாசிக்கும். அதனுடன் சத்துருவும் மித்துவுரும் தாக்கினால் உருக்கானது தகர்ந்து உடைந்து தவளம் போல் ஆகும். மிதமான லோகத்துக்கு மிதமான சரக்கையும் கடிசான லோகத்துக்கு கடிசான சரக்கையும் சேர்த்து செய்தால் வாதம் முடியும். இந்த முறைக்கு மாறாக கொடுத்தால் லோகம் மடிந்தும் வர்ணத்தை இழந்தும் நிற்கும். லோகங்கள் எல்லாம் திறக்கும். சிறிது பிசகினாலும் வாதத்தில் பங்கம் ஏற்படும். உண்மையாகப் பகுத்து அறிப்வரே வாதியாவார்.

வாத சரக்கின் லட்சணம்

564. சாரம் என்ற சரக்கு தேர், தூரிகம், கல்லுப்பும் தேருக்கு அச்சாணி, காரம் வண்டியாகும். சீனம் தேர் வளையமாகும். சவுக்காரம் குத்துக் காலாகும். வெடிஉப்பு, வடமாகும் தேர்சட்டம் சத்திச் சாரமாகும்நவச்சாரம் தேரின் அலங்காரமாகும். பண்ணை என்பது கொடியின் துணியாகும் பூரம் என்பது கொடிநாட்டும் கழி (கொம்பு) உபசரங்கள் வடக்கால்களாகும்.

பாஷாணங்கள் தேரின் கொடுங்கையாகும். வீரம் என்ற சரக்கு தேருக்கு சிகரமாகும். கெவுரி என்ற சரக்கு தேர்ப்பாகனாகும். தேர் உருளைக்குள் வார்க்கும் எண்ணை மிருகத்தின் கொழுப்பாகும் சூதம் என்பது அரசனாகும். கெந்தி என்பது அரசனுக்கு மனைவி, தங்கம் தேருக்கு உள்ளே இருக்கும் ஊஞ்சல் பலகையாகும். வங்கம், ஈயம், நாகம், இரும்பு இவை நான்கும் தேரின் உசத்தி தாழ்த்தி பக்கங்களாகும். தேரின் திரைமால் தேவியாகும். மனோ சிலை தலைகாணியாகும். சுன்னங்கள் எல்லாம் தேரின் வாலாகும். சூதம் என்ற ராசர் செல்லும் தேரின் சூட்சம் இதுவேயாகும்.

குறிப்பு: இரசவாதம் என்பது ஓர் தேர். இதன் அங்கங்களாக இருப்பது முக்கியமான சரக்குகளாகும். இதன் சூட்சம் என்னவென்றால் இந்தத் தேரில் செல்லும் நபர் சூதம் என்ற ராசர் என்று கூறுகிறார் முனிவர். இதிலிருந்து நாம் அறிவது அரசன் கட்டளை இட்டால் தான் தேர் கிளம்பும். அதேபோல் பாதரசம் என்ற சரக்கு இருந்தால்தான் வாதம் முடியும். இல்லையேல் முடியாது. ரசத்தைக் கட்டி அதை மற்ற சரக்குடன் சேர்த்துச் செந்தூரம் செய்து லோகத்தில் ஊட்டினால் வாதம் கைகூடும். இதுவே இதன் உட்கருத்தாகும்.

புளிஉப்பு சரக்குகள்

மனிதருடைய மலம் புளிச்சரக்காகும். மூத்திரம் உப்பு சரக்காகும். இந்த இரண்டு சரக்கே முதல் தரமான புளிஉப்பு சரக்காகும். இவற்றை எவரும் அவிழ்தங்களில் கூட்டமாட்டார்கள். இந்த இரண்டு சரக்குகளும் மூலாதாரத்தின் கீழ் உண்டாகி புளி உப்புகளாக வெளி வருகின்றன. அதனால் இவையே மேலான புளிஉப்பு சரக்காகும்.

வெடிஉப்பு உப்பு சரக்காகும். படிகாரம் புளியாகும். கல்லுப்பு உப்பு சரக்காகும். பழம்புளி சரக்காகும். சூடன் என்ற சரக்கு உப்பாகும். துரிசி புளி என்பது சரக்காகும். கடல் நுரை உப்பு சரக்காகும். இதன் நேர் புளிச்சரக்கு கற்சுன்னமாகும். அன்னபேதி உப்பு சரக்காகும். இதன் நேர் புளிசரக்கு பொன்னம்பராகும். மாங்கிஷபேதி உப்பு சரக்காகும். இதன் நேர் புளி சரக்கு கல்மதமாகும், வீரம் உப்பு சரக்காகும், இதன் நேர் புளி சரக்கு புளியாரை என்ற மூலியாகும். அப்பிரகம் உப்பு சரக்காகும், புளிசரக்கு.

## புளியுப்பு அறிய

சூட்சமாய் புளியுப்புச் சொல்லக் கேளு
    சுகமான மனுஷனுட மலம் புளியே ஆச்சு
மோட்சமாய் மூத்திரமு முப்பேயாச்சு
    முதற் தரமாம் புளியுப்பு மூர்க்கம் மெத்த
சூட்சமாம் நிசிதமென்று கூட்டமாட்டார்
    கோரமா மூலத்திபிற் தோபமாகி
திட்சமாஞ் செரித்தவுப்புப் புளியுமாச்சு
    சிவமானப் புளியுப்புத் திறமாய்ப் பாரே. 568

பாரென்ற வெடியுப்பு உப்புமாகும்
படிகாரம் புளியாகும் பண்பாய்ப்பாரு
நேரென்ற கல்லுப்பு வுப்புமாகும்
நீங்காத புளியதுவும் பழம் புளிதானப்பா
தாரென்றச் சூடனது வுப்புமாகுஞ்
துரிசியது புளியாஞ் சூட்சம் பாரு
காரென்ற கடல் நுரை தான் வுப்புமாகுந்
கற்சுன்ன நீரதுவும் புளியுமாமே. 569

ஆமென்ற சூதமது உப்புமாகும்
அழகான கெந்தியது புளியுமாகும்
காமென்ற காந்தமது உப்புமாகும்
காடியது புளியாகும் கண்டு கொண்டு
ஏமென்ற இரும்பதுவும் உப்புமாகும்
எரிகாலன் எண்ணெயது புளியுமாகும்
தோமென்ற தொட்டியது உப்புமாகும்
சுக்கமாம் புளியரணை புளியுமாமே. 570

ஆமென்ற பேதியது உப்புமாகும்
அழகான பொன்னம்பர் புளியுமாகுஞ்
சாமென்ற மாங்கிஷத்தின் பேதியுப்பு
தயங்காத கல்மதந்தான் புளியுமாகும்
வேரென்ற வீரமது உப்புமாகும்
மிடுக்கானப் புளியாரைப் புளியுமாகும்
போமென்ற அப்பிரகம் உப்புமுமாகும்
புகழான காச்சரக்குப் புளியுமாமே. 571

ஆகுமே கெவுரியது உப்புமாகும்
அழகான புளிமாங்காய் புளியுமாகும்
வேகுமே வெண்ணெயது உப்புமாகும்
மிடுக்கான பனங்கள்ளு புளியுமாகும்
வாகுமே வைக்கிராந்தம் உப்புமாகும்
மஞ்சளென்ற நிமிளையது புளியுமாகும்
தாகுமே தங்கமது உப்புமாகும்
தயங்காத சிலையதுவும் புளியுமாகும்
நாகுமே நாகமது உப்புமாகும்
நலமான பூரமது புளியுமாமே. 572

## புளியுப்பு சரக்கு நாதவிந்து, சரக்கு, பதினெட்டும் விபரம்

புளியாகும் நாதமென்றச் சுரோணி தந்தான்
பேரான விந்துவது வுப்புவாகும்
புளியாகும் வெண்காரமது சாரந்தானும்
பேர்பெரிய வுப்பாகும் பேணிப்பாரு

புளியாகும் தேவியென்றச் சத்திதானும்
பெருமையாஞ் சிவந்தானு முப்புமாகும்
புளியாகு மண்டலத்தில் மஞ்சளென்றக் கருத்தான்
பெருமையாம் வெண்கருவும் வுப்புமாச்சே 573

உப்பாகுங் கிளிஞ்சியுட மேலினோடு
உன்சதையும் புளியென்றே யுணர்ந்து பாரு
முப்பாகுஞ் சங்கென்றே யுரைக்கலாகு
முறுட்சயாஞ் சதைதானும் புளியுமாகும்
உப்பாகும் பச்சையென்றப் பூரந்தானு
முயர்ந்திட்ட யிந்துப்பு புளியுமாகும்
உப்போடு புளிசேர்த்து வுரிசையாகும்
உப்பென்றும் புளியென்று முறைத்துப் பாரே. 574

பாருநீ பூரணமாம் பதினெட்டு சரக்கும்
பரிவான விபரமெல்லாஞ் சொல்லக்கேளு
கோரு நீ கௌரி கெந்திச் சீலைமால் தேவி
கொடு வீரஞ்சிங்கியொடு லிங்கம் வெள்ளை
பூருநீ தொட்டினொடு பொன்னம்பர்
பகர்கின்றக் கெவுரியோடு கோழிக்கெந்தி
நீருநீ நிமிளையொடு ராசவந்தம்
நெடிசான கார்முகியுங் குதிரைப் பல்லே. 575

பல்லொடு பஞ்சபட்சி யெருமை நாத்தொட்டி பதினெட்டு
பூரணமாய் நிறைந்த சிவசத்தி
கல்லோடு களங்கு பண்ணு சுன்னம் பண்ணுக்
கனகமிட்டுச் செந்தூர மெழுகு பண்ணு
நல்லோடு நவலோக மெட்டியோடும்
நலமான சரக்கெல்லா மிதினாற் கட்டு
மல்லோடு சூதமது யிதிலே சொக்கும்
மகத்தானக் குளிகையுமா மாட்டிப்பாரே. 576

**நாதவிந்து சரக்குகளறிய பஞ்சபூத சரக்குகள்**

மாட்டிப்பா ரப்பிரகஞ் சத்தி நாதம்
வண்மையாஞ் சூதமது விந்துவாகும்
பூட்டிப்பார் பூனீறுஞ் சத்தி நாதம்
பேரான சூடனது விந்து வாகும்
நீட்டிப்பார் நிமிளையது சத்தினாதம்
நேரான வெள்ளையது விந்துவாகுங்
கூட்டிப்பார் பூனாகஞ் சத்தி நாதம்
கூறான வீரமது விந்து வாச்சே. 577

ஆச்சப்பா திரிகுண சலத்தினாதம்
அதிகமாங் கடல் நுரைதான் விந்துவாகும்
நீச்சப்பா லிங்கமது சத்தினாதம்
நேரான கல்லுப்பு விந்துவாகும்

மேச்சப்பா யிரும்பதுவுஞ் சத்தினாதம்
    மேவாட்சரம் விந்துவென்றே யியம்பலாகும்
நாச்சப்பா நாகவங்கஞ் சத்தினாதம்
    நலமான பூரமது விந்துவாமே. 578

ஆமென்ற செம்புசத்தி நாதமாகும்
    அப்பனே சிலாசித்து விந்துவாகு
மோமென்றக் காந்தமது சத்தினாதம்
    உம்பணமாங் கல்மதந்தான் விந்துவாகும்
வாமென்ற நாதத்தில் விந்து சேர்க்க
    மாருதம்போல் வாதமெல்லாங் கைக்குள்ளாகும்
காமென்ற நாதவிந்தாற் சடமுமாச்சுக்
    கருதியதோர் சத்தியெல்லாம் நாதவிந்தலாச்சே. 579

விந்தாகப் பஞ்ச பூதத்தினிட வகையை
    விபரமாய் சேர்ப்பதற்கு விதத்தைக் கேளு
பிந்தாகப் பிரிதிவியின் கூறு கல்லுப்புப்
    பேரான யிந்துப்பு ரெண்டு மாச்சு
தந்தாகச் சலக்கூறு சத்திச்சாரந்
    தனித்ததொரு நவச்சார மிரண்டு மாகுஞ்
சிந்தாக வகைக்கி ரெண்டுப் பலமுங் கூட்டிச்
    சிறப்பாக மூத்திரமலமும் போடே. 580

**பஞ்சபூதச் சவுக்காரச் சுண்ணம், செயநீர்**

போடவே முன்சொன்ன சரக்கு சரியாய்
    பேரான அமுரிமலம் நிறையாய்க் கூட்டி
பூடவே பிரிதிவியின் கூறுமலமாச்சுப்
    பேரான அப்புவின் கூறமிரியாச்சு
நாடவே நாற்சாமமரைத்த பின்பு
    நலமான வப்பிறத்தே வைத்துக் கொண்டு
சாடவே சவுட்டுப்பு வெடியுப்பு ரெண்டுந்
    தணல்கூறு துரிசியொடு காரம் சாரம் ரெண்டே. 581

ரெண்டோடு வகைக்கு ரெண்டுப் பலமுங் கூட்டி
    நேரான தேயுவொடு வாயுவைக் கூட்டிக்
கண்டோடு கல்வத்திற் பொடித்துக்கொண்டு
    காரமாம் நாதமது தேய்வுக்கூறு
வண்டோடு வாய்நீரு முலைப்பால் தானும்
    வாயுவுடக் கூறாகு மிதனாலாட்டி
முண்டோடே முன் மருந்தோடொக்கக் கூட்டி
    முனிவான வாதரசஞ் சொல்லக் கேளே. 582

கேளப்பா சவுக்காரம் பூரம் ரெண்டுங்
    கெடியான ஆகாசக் கூறுமாச்சு
நீளப்பா சவுக்காரஞ் சுன்னமாக்கி
    நேர் சமனாய் பூரத்தை வொக்கப் போட்டு

வாளப்பா வகைக்கு ரெண்டு பலமுமெடுத்து
மருவியதோர் விந்துவினாலரைத்துக் கொண்டு
மீளப்பா முன் மருந்தோ டொக்கப் போட்டு
விரவியரைத்தெண் சாமம் வில்லை செய்யே. 583

செய்துமே யகலிலிட்டு மேலகலால் மூடி
சிதையாமல் சீலைசெய்து காயவைத்து
பெய்துமே பத்தெருவில் புடத்தைப் போட்டு
பரும்பீங்கான் தன்னிலிட்டுப் பனியில் வைப்பாய்
மெய்துமே ஆறுபோல் சலமுமாகும்
அரக்கானகுப்பி தனிலடைத்துப் போடு
வெய்துமே வீரத்தின் பொடிதான் தூவி
விபரமாய்ச் சொல்லுகிறேன் விரைந்து கேளே. 584

சொல்லென்றத் தொட்டியொடு சிங்கி ரெண்டுஞ்
சிறப்பானப் பிரிதிவியின் கூறதாச்சு
கெல்லென்ற கெவுரியொடு குதிரைப் பல்லு
கெடிதான அப்புவுடக் கூறதாச்சு
கல்லென்ற விதுனாலும் வெவ்வேறாகக்
காரணமாஞ் செயனீரிலூற வைச்சு
முல்லென்ற மூனுனாளான பின்பு
முயற்சியாயிரு சாமம் சுறுக்குப் போடே. 585

**செயனீர் பஞ்சபூதச் சரக்குகளைச் சுறுக்கிட்டு வைக்க**

சுறுக்கிட்டு பொடிபண்ணி நாலுசாமஞ்
சுத்தமாய் பீங்கானிலெடுத்து வைத்து
குறுக்கிட்டு கெந்தகமு மரிதாரந்தான்
கூறாத தேயுவுடக் குறிப்புமாகும்
நிறுக்கிட்ட லிங்கமது வாய்வுக்கூறு
நேரான சிலையதுவும் வொக்கச் சேர்த்து
முறுக்கிட்ட செயனீரிலூற வைச்சு
முயற்சியா யிருசாமஞ் சுறுக்குப் போடே. 586

போட்டுமே பொடிபண்ணி முன் பொடியிற் சேர்த்துப்
பீங்கானாம் பரணிதனிற் பதனம் பண்ணி
சூட்டுமே சூதத்தைச் சுத்தி பண்ணிச்
சுறுக்கிட்டுச் செயனீரில் நாலுசாமஞ்
சாட்டுமே பொடி நிறைக்குச் சமனாய்ச் சேர்த்து
தயங்காமல் வாய்நீரு முலைப்பால் விட்டு
நாட்டுமே நாதமொடு சுக்கிலமும் வாதம்
நாலுனாளரைத்த பின்பு வில்லை பண்ணே. 587

பண்ணியே யுலர வைத்துப் பாங்கைக் கேளு
பாங்கானக் கற்காவியப் பிரகமிரண்டும்
பொன்னியே பிரிதிவியின் கூறுமாகும்
பேரானச் சங்கோடு முட்டையோடு

சன்னியே யிதுநாலும் பொடியாய்ப் பண்ணித்
தயங்கவே அப்புவுடக் கூறுமாச்சு
வெண்ணியே வெண்கல்லு நிமிளையோடு
மேலானத் தேயுவுடக் கூறுமாச்சே. 588

**களங்கு வேதை**

கூறானக் கல்னாருஞ் சஹஸ்திரவேதிக்
குறிப்பான வாய்வுடக் கூறதாச்சு
தாறானயிது நாலுஞ் சமனாய்ச் சேர்த்து
தாக்கியே பொடி பண்ணி முன் பொடியிற் சேர்த்து
தூறான துத்தமொடு வைக்கிராந்த மிரண்டுஞ்
சுயம்பான வாகாசக் கூறுமாச்சு
வீறான யிதுரெண்டும் பொடியாய்ப் பண்ணி
யிசைவாக முன் பொடியை யொக்கப் போடே. 589

ஒக்கவே அரைத்தெல்லாம் அமுரியாலே
யுணரவச்சு வில்லைக்குக் கவசம்பண்ணி
சிக்கவே யுலறவிட்டுச் சீலை செய்து
சிறப்பாக அஞ்செருவிற் புடத்தைப் போடு
அக்கவே யஞ்சுபுடம் போட்டெடுத்து
யசகாமல் மேல் கவசம் வாங்கிப் போட்டுத்
தக்கவே பார்த்தாக்கால் களங்குமாகுஞ்
சார்கின்ற லோகத்தில் நூற்றுக் கொன்றே. 590

ஒன்றான மாத்ததுவும் பத்துமாகும்
உறுதியாய் வார்த்ததிலொளிப்பமில்லை
நன்றான நூல்தனிலே வெகு நூலுண்டு
நாதாக்கள் வொளிப்பாகச் சொல்லிப் போட்டார்
விண்ணான நிகண்டுக்குள் வெளியாய்ச் சொன்னேன்
முடிவான வாதமது மூர்க்கமெத்த
திண்ணான காலாங்கி நாயர் தாமும்
செப்பியதோ ருபதேசம் திறந்திட்டேனே. 591

திறந்திடா திருந்தாக்கால் பாவமென்று
செப்பினேன் நிகண்டுக்குள் வெளியாய்த் தானே
மறந்திடாது வுபதேசப் பொருளையெல்லாம்
மாற்கமாய் வழியோடு வண்மை சொன்னேன்
பறந்திடாற் பஞ்ச சீவக்கரணமாக
பார்த்தபடி பாடினேன் பாருள்ளோர்க்கு
இறந்திடாச் சித்தர்மயமாக வென்று
யெழுதினேன் ஏட்டுக்கு ளெளிதிற் தானே. 592

தானென்ற நூல்தனிலே நாதாக்கள் சொன்னார்
சமத்தாக மறை பொருளாய்ப் பாடிப் போட்டார்
கானென்ற காலாங்கி நாயர்தாமுங்
கார்ணமாய் தேசங் கருத்தாய்ச் சொன்னார்

பானென்ற பஞ்சகர்த்தாளில்லா விட்டால்
படைத்தடைத்தக் காடாட்சி பக்குவமும் போதா
ஊனென்ற அண்டபிண்டச்சரா சரங்களெல்லாம்
அஞ்சு பெறக்கூடி லெல்லாமாமே. 593

## அஞ்சாதே எல்லாமாகும் யோகம் காயசித்தி செந்தூரம்

அல்லாமாஞ் சரக்குள்ளாக வேணும்
அறுபத்து நாலுசித்தி அஞ்சிலாகும்
எல்லாமா மொண்ணுக்குள் ஒடுங்கிப் போகும்
ஏத்தமாம் பராபரமு மொண்ணானாற் போல்
செல்லாமாஞ் சிதம்பரத்தி லொடுங்கினாற்போல்
சிறப்பான வாதமெல்லாஞ் சிதம்பரத்திலாகும்
பொல்லாமை யில்லாமல் தவமார்க்கமாகிப்
புஞ்சையாங் கோபத்தைப் போக்கிப் போடே. 594

போக்கிட்டு மவுனமாயிருந்து கொண்டு
பேரான மூலத்திற் கருத்தைப் பூட்டி
நோக்கிட்டு ஆறுதல மேறிப்பாரு
நுட்பமெல்லாம் நுண்மையாய் நோக்கிப் பாரு
தேக்கிட்டு கற்பமுண்டு காயசித்திப் பண்ணுச்
சிகார வெளிப்போக மன மதியிலெத்தும்
தாக்கிட்டு வஸ்து வைத்தான் சமாதியிலே நில்லு
சந்திரனில முர்தத்தைச் சாப்பிடாயே. 595

சாப்பிட்டு வழலையைத் தான் முன்னே பண்ணி
சமரசமாயுப்பாலே சூதத்தைக் கட்டி
சீப்பிட்டுச் செந்தூரம் பண்ணித் திண்ணு
சியலான காயமெல்லாஞ் சித்தியாகும்
வாப்பிட்டு வரிசையாக
வளமாக யான் சொன்ன முறைபோற் பாரு
ஆப்பிட்டு அஞ்சாக யிசைந்து பாரு
அஷ்டமா சித்தியெல்லா மதின் பின் பாரே. 596

## திராவகம்

பாரப்பா குளிகைக்கு யிந்த செந்தூரம்
பாச்சாட்டால் குளிகைக்கு மிடுக்கோயில்லை
வாரப்பா மனோவேகம் போக மாட்டா
மாட்டுகிற சரக்கெல்லாம் மருவட்டாது
தாரப்பா சத்திரனிற் குளிர்ச்சியாலே
சஞ்சரிக்க வொட்டாது நடுக்கல் காணும்
தாரப்பா தமருக்குள் புக்கியோடச்
......வீரத்தைச் செய்திடாயே. 597

செய்திடவே திராவகத்தைச் சொல்லக் கேளு
சிறப்பான வெடியுப்பு நூறு பலமாகுங்
கொய்திடவே சீனமது நூற்றுப்பத்து
குறிப்பான சாரமது பலந்தான் பத்து
செய்திடவே கல்லுப்புப் பலமும் பத்து
கனமான யிந்துப்புப் பலமுமஞ்சு
பெய்திடவே பூனீறுப் பலமுமஞ்சுப்
பேரான சவுட்டுப்பு பலமுமஞ்சே. 598

அஞ்சோடு சவுக்காரம் பலமுமஞ்சு
அடுக்கான வளையலுப்புப் பலமுமஞ்சு
கிஞ்சோடு கெந்தியுப்பு பலமுமஞ்சு
கெடியான வாழையுப்பும் பலமுமஞ்சு
தஞ்சோடு சாதியென்றச் சாரமஞ்சு
சார்வானத் துரிசியது பலமு மஞ்சு
பிஞ்சோடு அன்னமென்ற யேமத்துமதில்
பேரான அமுரியுப்புப் பலமு மஞ்சே. 599

அஞ்சான நாயுருவியுப்பு அஞ்சு
யடுக்கு வெள்ளைப் பாஷாணம் பலமுமூன்று
கெஞ்சான கெவுரியது பலமுமூன்று
கேடில்லாத் தாளகமும் பலமுமூன்று
வஞ்சானச் சிலையதுவும் பலமுமூன்று
வகையாகயது வெல்லாங் கல்வத்திட்டு
விஞ்சான வெள்ளைச் சாரணையின் சாற்றால்
விளங்கவே மூணுனா ளரைத்திடாயே. 600

**செயனீர் செய்ய சரக்குகள், அண்டநீர் மேல் வாதசரக்கு**

அரைத்திட்டு அடித்ததைத் தோண்டியிலே போட்டு
அழகான பானை தன்னை மேலே மூடி
திரைத்திட்டு யடுப்பேத்தி யெரிப்பாயாகில்
சிலம் விழுகும் போக்காலே பீங்கான் வைத்து
வரைத்திட்டத் திராவகத்தை வாங்கி வாங்கி
வளமான அரக்கென்ற குப்பிதனிலடைத்து
உரைத்திட்ட திராவகத்தை மெத்த வாங்கி
வரமான அரக்கென்ற குப்பிதனில் வைய்யே. 601

வைத்தபின்பு செயனீர்தான் ஒன்று கேளு
வாகான சாரமொரு முப்பதாகுஞ்
சைத்தபின்பு வெடியுப்பு வீரங்கெந்திக்
காரீயம் லிங்கமொடு தாளகமுஞ் சிலையுந்
தைத்தபின்புச் சிலாசித்துக் கெவுரி வெண்காரஞ்
சாயமாம் வற்றமொடு செம்புனாகம்
நைத்தபின்பு நிமிளையொடு சூதமிவை யெல்லாம்
நேராக பலமிரண்டு கூடக் கூட்டே. 602

கூட்டியே கல்வத்திற் பொடியாய்ப் பண்ணிச்
கோழி முட்டை வெண்கருவு மெருக்கம்பாலுஞ்
சூட்டியே சமபாகஞ் சேர்த்துக் கொண்டு
சுத்தமாய் கலக்கி ரெண்டுஞ் சேருவொன்றாய்
பூட்டியே பீங்கானுக்குள்ளே வைத்துப்
பெருமையா யண்ட நீர் பலந்தானொன்று
காட்டியே நீருக்குள் கலக்கி வைத்துக்
கலங்காமல் மூனுநாள் தெளிவை வாங்கே. 603

வாங்கியே மூனுனாள் கல்வத்தாட்டி
வளமாக வில்லை செய்து காய வைத்து
தேங்கியே மேற்கவசஞ் செய்யக்கேளு
சீனமொடு இந்துப்பு இரும்பு வங்கந்
தாங்கியே காந்தமொடு கிளிஞ்சி சுக்கான்
சமரச மாயண்டோடு அப்பிரகஞ் சவுடு
ஓங்கியே கடல்நுரையும் வகைக்கி ரெண்டு
வுற்பனமாய்க் கல்வத்திற் பொடியாய்ப் பண்ணே. 604

**குருச்செயனீர்**

பண்ணியே அமுரிவிட்டு மூன்றுன்னாள் வைத்து
பாங்காகப்புடம் போட்டு யெடுத்துக் கொண்டு
ஒண்ணியே அமுரிவிட்டு அரைத்துக் கொண்டு
உணர்ந்திட்ட வில்லைக்குக் கவசம் பண்ணி
கண்ணியே காயவிட்டுச் சீலை செய்து
காரியமாய் பத்தெருவில் புடத்தைப் போட்டு
அண்ணியே அஞ்சுதரங் கவசத்தோடே
யதட்டியே புடம்போட்டு யெடுத்திடாயே. 605

எடுத்திடவே காரமது குருவுமாகு
யிசைவாகப் பொடிப்பண்ணிப் பனியில் வைப்பாய்
அடுத்திட்டு ஆறுபோல் செயனீராக
மழகான நீரிலே வீரம் போட்டு
அடுத்திட்டுக் குப்பியிலே யடைத்து வைத்து
அதன்பின்பு செய்யுகிறவண்மை கேளு
தடுத்திட்டுத் தங்கமது பலந்தானொன்று
சரக்கு போல் ரேக்கதுவும் பலந்தானொன்றே. 606

ஒன்றாக ரேக்கத்னைக் கல்வத்திட்டு
உறுதியாம் வீரமது பலந்தானொன்று
தின்றான வொக்கவிட்டு திராவகத்தை வார்த்து
சிறப்பாக நால்சாம மரைத்துப் பின்பு
கன்றானக் கல்வத்தைச் சாய்த்து வைக்க
கலந்தெல்லாஞ் சூதமாய்க் கழன்று வீழும்
பின்றானப் பிட்டிதனில் திராவகத்தை விட்டுப்
பிசகாமல் நால்சாம் மரைத்திடாயே. 607

## தங்கரசம், செம்பு ரசம், நாகரசம், காரீயரசம் இரும்பு ரசம்

அரைத்திட்டுச் சூதமெல்லாம் வாங்கிக் கொண்டு
யதன்பின்பு செம்பான அரப்பொடிதான் பலந்தான்
உரைத்திட்டு ஒருபலந்தான் வீரம்போட்டு
வொக்கவிட்டுத் திராவகத் தாலரைத்து முன்போல்
திரைத்திட்டுச் சூதத்தை வாங்கிக் கொண்டு
செயமாக முன்னீர் சூதநீரை விட்டு
நரைத்திட்டு நாகமொடு பலத்தை வாங்கி
நயமான தகடு தட்டி கல்வத்திற் போடே. 608

கல்வத்தில் வீரமொரு பலத்தைப் போட்டு
கடிசான திராவகத்திலரைத்து நாலு சாமங்
கலவத்திற் சூதமெல்லா மரைத்து வாங்கிச்
சுத்தமாய்ப்பலம் நிறுத்துக் கூட விட்டு
பலவத்திற் காரீயம் பலந்தான் வாங்கிப்
பஞ்சுபோல் தகடு தட்டிக் கல்வத்திற் போட்டு
வில்வத்திற் வீரமொரு பலமும் போட்டு
மிடுக்கான திராவகத் தாலரைத்திடாயே. 609

அரைத்திட்டுச் சூதமெல்லாம் வாங்கிக் கொண்டு
ஆகின்ற சூதத்திற் பலம் நிறுத்து விட்டு
இரைத்திட்டு யிரும்பினுட அரப்பொடியும் பலந்தான்
யேற்றமாம் வீரமொரு பலமும் போட்டு
நரைத்திட்டு நால் சாமந் திராவகத் தாலாட்டி
நலமானச் சூதம் வரும் வாங்கிக் கொண்டு
அரைத்திட்டு வொருபலந்தான் வொக்க விட்டு
வயற்கின்ற வஞ்சையுந்தான் வேறே வைய்யே. 610

## அப்பிரகம், நிமிளை வற்தம், சாஸ்திரவேதி, காந்தம் இவைகள் சத்தெடுக்க

வேறான காந்தமது பலந்தான் பத்து
மிடுக்கான வப்பிரகம் பலந்தான் பத்து
கூறான நிமிளையது பலந்தான் பத்து
குறிப்பான வத்தமது பலந்தான் பத்து
தாறான சாஸ்திரவேதி பலமும் பத்து
தளுக்கான யிதுவைந்தும் பொடியாய்ப் பண்ணி
தூறானச் சீலைதனிற் கிளிபோற் கட்டிச்
சுத்தமாய்ப் பேழையுடக் கிழங்கில் வைய்யே. 611

கிழங்கில் வைச்சுப் பட்சமொன்று வூறியபின்னெடுத்துக்
கெட்டியாக வுலறவிட்டு வெண்ணைக்குன்றி
பிழங்கில் வைச்சு பொரிகாரம் புரசம் வித்துப்
பெரிதான வெல்லியாலம்பால் விட்ட ரைத்து

முழங்கில் வைச்சு வகைக்கஞ்சு பலமுங்கூட்டு
மூனுபங்காய்ப் பண்ணி வித்துயொரு பங்குதானும்
வழங்கில் வைத்த மருந்தோடே யூறவச்சு
மறுநாள்தான் சரவுலையி லூதிடாயே. 612

ஊதியே சத்தெல்லா மெடுத்துக் கொண்டு
வூருகின்ற கரட்டோடே மருந்து கூட்டி
(மூன்று வரிகள் இல்லை)
காரியமாய் சத்தெல்லா மெடுத்து வாங்கி
சாதியே சத்துக்கு மருந்து கூட்டி
தயங்காமல் குகையிலிட்டு வுருக்கிடாயே. 613

உருக்கியே பலமஞ்சு நிறுத்துக்கொண்டு
உறுதியாய் வீரமது பலமுமஞ்சு
நருக்கியே கல்வத்திற் பொடியாய்ப் பண்ணி
நலமான திராவகத்தாலிரண்டு னாளரைத்து
துருக்கியே சூதத்தை யெடுத்துக் கொண்டு
தொடிசாக ........ ரைத்து
பருக்கியே சூதத்தை யெடுத்துக் கொண்டு
பலமஞ்சு நிறுத்துமே வொக்கப் போடே. 614

### சத்தில் ரசமெடுக்க, ரசபற்பம், தூரிசி

ஒக்கயிட லிங்கமது புலந்தானொன்று
உறுதியாங் கல்லுப்புப் பலமு மஞ்சு
பிக்கயிட வேப்பலையும் பலமுமஞ்சு போட்டு
முடிக்கியரைத்தொரு சாமம் பொடியாய்ப்பண்ணி
சக்கயிடச் சட்டிக்குள் வேக வைத்து
சந்தில்லா மேல் சட்டி மல்லாத்தி மூடி
தக்கயிடச் சந்துக்கு மணல் பிலக்கச் செய்து
சிறப்பாக மேலோட்டி ........ தண்ணீர்வாரே. 615

வார்த்துமே யடுப்பேத்தியெரி நால்சாமம்
வற்றவற்ற மேல் சட்டித் தண்ணீர்வாரு
போர்த்துமே யாறவிட்டு யெடுத்துப் பார்ப்பாய்
புகழாக மேற்சட்டித் தனிலே பற்றி
கார்த்துமே கரிபோலே மணிமணியாய் நிற்குங்
கசகாமல் வாங்கியெல்லாம் கையால் தேய்க்க
மாத்துமே சூதமது சிவந்துக் கொண்டு
மாலைபோல் சுத்தரச மாகுங் காணே. 616

காணிந்த சூதத்தை யொக்க விட்டுக்
காரணமாஞ் சாரனீர் சுறுக்குப் போடு
ஆணிந்த அயக்கரண்டிக்குள்ளே வார்த்து
அசகாமல் நால்சாம முறுக்குப் போடு

பூணிந்த பீங்கானி லெடுத்து வைத்துப்
பேரான திராவகத்தை விட்டு நித்தக் .
காணிந்தக் காளாம்போற் பொருமிப் போகுங்
கசகாமலெடுத்துமே பீங்கானில் வையே. 617

வைத்தபின்பு துருசியது பலந்தானெட்டு
வாகானச் சாரனீர் தன்னில் தோய்த்து
நைத்தபின்பு ரவிதனிலே யேழுனாள் போடு
நலமாகக் காயயிலே நாட்டங்கேளு
வைத்தபின்பு வீரமொடு காரஞ்சூதம்
மென்மையாங் கெந்தியொடுச் சிலைதான் பூரம்
நைத்தபின்பு நிமிளையொடு தாளகமுந்துத்தம்
நேரான கெவுரியொடு லிங்கமாமே. 618

## பனிரெண்டு சரக்கு கவசம் அதன்மேல் சரக்கு கவசம் நவச்சாரக் கட்டு

ஆமென்ற நாகமொடு பனிரெண்டுந்தான்
ஐங்கா சியிடைதூக்கி கல்வத்திட்டு
சாமென்றச் சாரனீர் விட்டு ஆட்டிக்
தயங்காமல் நால் சாமமரைத்து மைபோல்
காமென்ற கட்டிக்கிக் கவசம் பண்ணிக்
கடுரவியில் வைத்திட்டு மூன்று னாள்தான்
நாமென்ற யிணங்கனொடு அப்பிரகஞ்சூட
னியல்வான கல்லுப்பு யஞ்சனக்கல் சவுடே. 619

சவடோடு யிந்துப்பு படிகாரங்காந்தஞ்
சாந்தமாஞ் சிங்கியொடு மாங்கிஷபேதி
அவடோடு அன்னமென்ற பேதிவங்கம்
ஆண்மையாங் கடல் நுரையும் வகைக்கொன்று பலந்தான்
முவடோடு மூத்திரத்தை விட்டு ஆட்டி
முயற்சியாயதின் மேலே கவசங்கட்டி
கெவடோடு கிளிஞ்சி நீர்க்குள் வைத்து
கெட்டியாய் நால்சாம மெரித்திடாயே. 620

கெவுரியொடு நாகமது ராசவற்தங்
கெடியான செம்போடு நிமிளை சூதம்
அவுரியொடு அரைப் பலந்தான் கல்வத்திட்டு
யாதியாஞ் சாரனீர் தன்னாலாட்டி
நவுரியொடு நால்சாம மரைத்தபின்பு
நவாச்சாரக் கட்டிக்குள் கவசம்பண்ணி
முவுரியொடு மூனுனாள் காய வைத்து
முயற்சியாய் மேற்கவசஞ் செய்யக் கேளே. 621

செய்யவே படிகியொடுந் தூரிசிகாந்தம்
செப்பமாயிரும்பு வங்கம் யிந்துப்போடு
நய்யவே நண்டோடு கிளிஞ்சிசுக்கான்
நலமான கடல் நுரையுமுட்டையோடும்
அய்யவே அப்பிரகஞ் சவுடு வகைக்கு
யரைப்பலந்தான முரிவிட்டு யரைத்துக் கொண்டு
பெய்யவே யதின்மேலே கவசங் கட்டிப்
புளிபறணி சாம்பலுக்குள்ளழுத்திடாயே 622

## வெடியுப்புக்கட்டு

அழுத்திட்டுத் தீயெரிப்பாய் நாலு சாமம்
ஆறவிட்டு யெடுத்துப்பார் தந்தம் போலாம்
பிழுத்திட்டுப் பீங்கானிலெடுத்து வைத்து
பேரான கல்லுப்புப்பலமஞ்சு பெருங்கம்பி வாங்கி
சமுத்திட்டுச் சாரனீர்க்குள்ளே தோச்சு
தயங்காம லேழுனாள் ரவியிற்போடு
யிழுத்திட்டு ராக்கால மோட்டில் வைத்து
யெளிசான நெருப்படுக்க வைத்திடாயே. 623

அடுக்கவச்சு யிந்துப்புக் கல்லுப்பு சீனம்
ஆரமாம் வெண்காரம் லிங்கம் வீரம்
மடுக்கவச்சு மால் தேவி கெந்திதுத்தம்
வாழ்நாகங் கடல் நுரையும் நிமிளையிது வெல்லாஞ்
சடுக்கவைச்சுப் பொடி பண்ணிச் சாரனீர்விட்டு
தயங்காமல் நால்சாம மரைத்த பின்
உடுக்கவைச்சு கம்பிக்கு வொன்றாய்க் கட்டி
உறுதியாம் ரவிதனிலே காயப்போடே. 624

காய்ந்த பின்புச் சவடோடு சூடன் வங்கங்
கனமான யிரும்போடு காந்தந் தானும்
தேய்ந்த பின்பு செம்போடு காந்தம் வர்த்தம்
சிலைகெந்தி தொட்டிச் சிங்கி யண்டத்தோடு
வாய்ந்தபின்பு அனலிட்டு நால்சாமமரைத்து
ஆதியாங் கவசமேல் கவசம் பண்ணி
பேய்ந்தபின்புப் பிரண்டை யென்றச் சாம்பலுக்குள்
பிசகாமல் வைத்துமே யடுப்பிலேற்றே. 625

## கல்லுப்புக்கட்டு புட திட்டம்

ஏற்றியே யிருசாமம் தீயை மூட்டு
யிதமாக ஆறிய பின்னெடுத்துப்பாரு
மேத்தியே வெள்ளெலும்புப்போல் முப்பு
மிடுக்கானப் பீங்கானில் பதனம் பண்ணி
காத்தியே கல்லுப்புப் பலமும் பத்து
கனமான பாக்குப் போலுடைத்துக் கொண்டு
சாத்தியே சாரனீர் தன்னில் தோய்த்து
சமரசமாய் ரவிதனிலே காய':போடே. 626

காயவே யேழுநாளான பின்புக்
கனமான யிரும்போடு பூரஞ்செம்பு
தோயவே கெந்தியொடு கெவுரிநாகஞ்
சொல்லானக்காரமொடு நிமிளை வெள்ளை
ஆயவே யப்பிரகம் லிங்கம் வங்கம்
அடங்காத தாளகமு வகைக்கு யரைப்பலந்தான்
பாயவே யமுரி விட்டு மூன்றினாளாட்டி
பக்குவமா யுப்புக்குக் கவசங்கட்டே. 627

கட்டியே காயவிட்டுப் பார்க்கக் கேளு
காரமாம் வீரமொடு சவுட்டு வில்லை
வாட்டியே வர்த்தமொடு படிகிச் சூடன்
வளமான காந்தமொடு அன்னபேதி
யிட்டியே யிந்துப்பு சிங்கியோடு
யேத்தமாம் வகைக்கு யரைப்பலந்தான் கூட்டி
பட்டியே பழம் புளிதான் பலமும் நாலு
பாங்காக வுரலிலிட்டு யிடித்திடாயே. 628

இடித்திட்டு யதின்மேலே கவசங்கட்டி
யேழுபுடங் கவசத்தை வுடையா மற்போடு
படித்திட்டு முதற்புடந்தான் பத்தெருவிற் போடு
பாங்காக ஐவஞ்சா யேத்திப் போடு
தடித்திட்டு யெடுத்துப்பார் தந்தம் போலாங்
சார்வாகக் கரியில் நின்று ஆடுமாடும்
பிடித்திட்டு பீங்கானி லெடுத்து வைத்து
பேரான சீனமது பலமுமஞ்சே 629

### சீனக்கட்டு சவுக்காரஞ் செய்ய

அஞ்சானச் சாரனீர் தன்னால் தோச்சு
அஞ்சுனாள் ரவிதனிலே காயப் போட்டு
நெஞ்சான நிமிளையொடு யப்பிரகங் காந்தம்
நேரான யிரும்போடு நாகம் வங்கம்
அஞ்சான வகைக்கு அரைப்பலந்தான் கூட்டி
வளமான அமுரிவிட்டு நேரவாட்டி
தெஞ்சானச் சீனத்திற் கவசங் கட்டிச்
சிறப்பான ரவிதனிலே காயப் போடே. 630

காய்ந்த பின்பு அண்டோடு சுக்கான் கல்லு
கற்பூர சிலாசித்துக் கிளிஞ்சி சங்கு
ஓய்ந்த பின்புச் சுன்னமா வூதிக் கொண்டு
உணர்ந்திருந்த கவசத்தின் மேலே கட்டி
பாய்ந்த பின்பு பத்தெரு விலஞ்சு புடம் போட்டு
பக்குவமா யெடுத்துமே பீங்கானில் வைத்து
தாய்ந்த பின்பு சவுக்காரஞ் செய்யக் கேளு
தவளமாம் பூனீறுப்படிதான் பத்தே. 631

பத்தான பூனீரைப் பாண்டத்திற் போட்டுப்
பாலையாமனுஷனுட அமுரிதானும்
நித்தான ரெண்டு பத்துப் படிதான் வார்த்து
நேர்பாகத்தட்டியே கலக்கிப் போடு
கத்தானகற் சுன்னம் படிதானஞ்சு
கனமான பாண்டத்திலளந்துப் போட்டு
சித்தான அமுரிபடி பத்து வார்த்து
சிறப்பாகக் கலக்கியே வேறே வையே. 632

வேறான கல்லுப்பின் சுன்னத்திற் பாதி
விரைந்துவொரு பாண்டத்தி லளந்து போட்டு
ஆறான வமுரிபடி யைந்து வார்த்து
அரட்டியே கலக்கி வைத்து மூன்று நாள்தான்
நாறான நாலுநாள் தெளிய வைத்து
நலங்காம வைந்தாநாள் தெளிவிறுத்து வாங்கி
மூறான மூன்றையுமே கூடவிட்டு
மீறாம லடுப்பேற்றி யெரித்தி டாயே. 633

**சவுக்கார எண்ணை வாங்க**

அடுப்பேத்தி யெரித்திடுவாய் கமலம் போல
அடிதனிலே பத்தாமல் கம்பைக் கொண்டு வாங்கு
துடுப்பேத்தித் திரளுகின்ற பாகுவத்தி
திலர்தமாம் நல்லெண்ணைப் படிதான் வாரு
படுப்பேத்தி யெரித்துப் பதத்தில் வாங்கி
பரப்பான சட்டியிலே யூத்திப் போடு
கடுப்பேத்தி யாறவிட்டு கத்தி கொண்டு சீவிக்
கனமான நெல்லுப்போல் காயப்போடே. 634

காய்ந்த பின்பு பாக்குபோற் சீவிக் கொண்டு
கனமான மல்லிகையினிலை பரப்பி
காய்ந்த பின்பு சவுக்காரமதிலே வைத்துச்
சாங்கமாயிலை மூடிச் சீலைக்குள் வைத்து
நேய்ந்த பின்பு நெல்லில் வைத்து மேற்சட்டிமூடி
நேராகப் புழுங்கையிலே ஆவி வெளியே வந்தால்
பாயந்த பின்புப் பதமென்று யிப்புறத்தே வாங்கிப்
பாங்கான ரவிதனிலே காயப்போடே. 635

காய்ந்த பின்பு முன்போலே சீவலாக்கிக்
கணக்காக மூணுதரம் அவித்தெடுத்து
தேய்ந்த பின்புச் சீயக்கா யிலைக்குள் வைத்துச்
சிறப்பாக மூணுதிறம் அவித்துப் போடு
ஒய்ந்த பின்பு ரவிதனிலே குளுறவைத்து
யுறப்பானச் சீலைதனிற் கிளிபோல் கட்டி
ஆய்த்த பின்பு கற்சுன்னங் கட்டிக்கொண்டு
அயத்த கட்டில் தமருவொறு நூறுபோடே. 636

போட்ட பின்பு பூவமென்றப் பழத்தை வாங்கி
பிசைந்து நன்றாயமுரிதனிற் கொதிக்க வைத்து
வாட்ட பின்பு மட்டான வாயகன்ற பாண்டம்
வளமான கற்சுன்னம் அரைவாசி யிட்டு
கேட்ட பின்புக் கிளிதன்னை யதின்மேல் வைத்து
கெடியாய்க் கற்சுண்ணத்தாலே மூடி
ஆட்ட பின்பு தமரிட்ட அயத்தகடால்
அமுரிதான் காச்சினத்தால் விட்டு நீற்றே. 637

நீற்றியபின் மேல்சட்டி மூடிப் போடு
நீங்காமல் ஆறியபின் காய வைத்து
மாற்றியபின் மறுசிலைக்குள்ளே வைத்தும்
மயங்காமல் கல் சுன்னத்தாலே மூடி
போற்றியபின் முன்போலே விட்டு நீத்துப்
பேராகப் பதினொன்று தரந்தானப்பா
சாற்றியபின் சவுக்காரந்தன்னை வாங்கி
தளராமல் காய விட்டுத் திராவகத்தை வாங்கே. 638

## சவுக்காரச் சுன்னம்

திராவகத் தாளரைத்துமே வில்லைகட்டிச்
சிறப்பாக ரவிதனிலே காய வைத்து
அறாவுகத் தாலிலையொடு மல்லிகையின் வேரு
மருவ நன்றாயிடித்துமே பூச்சாறு விட்டு
சறாவுகத்தாற் சட்டியிலே பரப்பி வைத்து
சவுக்கார வில்லைதன்னை யதன்மேல் வைத்து
மறாவுகத்தால் மேலுமந்த யிலைவேரும் வைத்து
மேற்சட்டி மூடியே சீலை செய்யே. 639

செய்த பின்பு யிருபதெரு அடுக்கிப்போடு
திறமாகயாற விட்டு வில்லை வாங்கி
செய்த பின்புச் சியக்காய்க் கொண்டு வந்து
திறமான எலுமிச்சம் பழச்சாறு விட்டு
செய்த பின்பு மைபோலே நெகிழ வரைத்து
திராவகத் தாலரைத்துமே வில்லை பண்ணி
செய்த பின்பு சியக்காய் தன்னில் வைத்து
திறமாக மேல் மூடிப் புடத்தைப் போடே. 640

புடம் போட்டு பூவமென்ற பழத்தை வாங்கி
பேரான விரை தள்ளிப் பழச்சாறு விட்டு
வடம் போட்டு மைபோலே நேரரைத்து
மறவாதே முன்வில்லை திராவகத்தா லரைத்து
முடம் போட்டுச் சட்டிதனைக் கீழுமேலு
முயற்சியாய் நடுவாக மருந்தை வைத்து
நடம் போட்டு நாற்பதொரு அடிக்கிப்போடு
நலமாக யாறவிட்டு யெடுத்துக் கொள்ளே. 641

எடுத்துப் பின்கடுங்காரச் செய னீர் குத்தி
யிழுத்தரைத்து லேசாக வில்லை தட்டி
அடுத்துப் பின்புக்காய வைத்துப் பொடியாய்பண்ணி
அண்டோட்டுக்குள் வைத்துப் புடத்தைப் போடு
மடுத்த பின்புக் கடுங்காரச் செயனீர்குத்தி
மறவாமல் லேசாக வில்லை தட்டி
தொடுத்த பின்புச் சுண்ணாம்பு முப்புநேரே
தூளாகப் பொடி பண்ணியதுக்குள் போடே. 642

### சவுக்காரக் குருவு செயனீர் வெள்ளை கட்டு

போட்ட பின்பு ஆறவிட்டு யெடுத்து வாங்கி
பின்புமே கடுங்காரச் செயனீர் குத்தி
நீட்ட பின்பு யரைத்து நன்றாய் மெழுகுபோலே
லேசாக வில்லை தட்டி காய வைத்து
பாட்ட பின்புப் பஞ்சசுன்னக் குகையில் வைத்துப்
பக்குவமாய்ப் புடம் போட்டு யெடுத்துக்கொண்டு
ஆட்ட பின்பு கடுங்காரச் செயனீராலரைத்து
யஞ்சு சுண்ணந் தன்னில்வைத்து யெரித்திடாயே. 643

எரித்திடுவாய் நால்சாமங் கமலம் போல
யிதமாக ஆறவிட்டு எடுத்துப் பாரு
விரித்திடுவாய் வெண்ணீறாஞ் சவுக்காரந்தான்
வேதையதிற் சொல்லவென்றால் நாவோ சூகம்
மரித்திடுவா யென் போர்க்கு மார்பிலாணி
மகத்தான சித்தியெல்லா மிதுக்குள்ளாச்சு
பிரித்திடுவாய் பீங்கானி லெடுத்து வைத்துப்
பெருங்குருவாஞ் சவுக்காரம் பலமும் ரெண்டே. 644

ரெண்டோடு சாரமதைச் சமனாய் சேரு
நெற்பாக நால் சாமமாட்டிப் பின்பு
முண்டோடு முட்டையுட யோட்டி விட்டு
முயற்சியாய் பத்தெருவிற் புடத்தைப் போடு
பண்டோடு பீங்கானில் பனியில் வைக்க
பலபலெனச் செயனீராம் வீரம் போடு
கண்டோடு வெள்ளையென்ற பாஷாணத்துக்கு
கசாமல் சுறுக்கிடவே கட்டி யாமே. 645

### கௌரி, கெந்தி, குதிரைப்பல், தாளகம், மனோசிலை, அப்பிரகம் கட்டவும், முப்பு குரு

கட்டியதோர் வெள்ளையைப் போல் கெவுரிபண்ணு
கடிசான கந்தகத்தைக் குதிரைப் பல்லு
தட்டியதோர் தாளகத்தை மனோசிலையைப் பண்ணி
சமத்தாக அப்பிரகம் வெண்கருவா லரைத்து

எட்டியதோர் வொவ்வொன்றாய் கவசம் பண்ணி
வுமிக்குள்ளே புடம் போட்டு யெடுத்துக் கொள்ளு
யெட்டியதோர் சவுக்காரம் சுன்னம் ரெண்டும்
யிந்துப்புப் பலம் ரெண்டுச்சாரம் ரெண்டே. 646

சாரமொடு மூன்றையுந்தான் பொடியாய்ப் பண்ணி
தயக்காதே கடுங்காரச் செயனீர் குத்தி
பாரமொடு நால்சாமம் நேக வாட்டி
பக்குவமா யோட்டிலிட்டுப் புடத்தைப் போடு
தூரமொடு பீங்கானில் பனியில் வைக்கச்
சுருதியாஞ் செயனீராம் பீங்கானில் வார்த்து
பூரமொடு சூடனையுஞ் சமபாகம் சேர்த்து
பறித்துமே வெவ்வேறாய் பீங்கானில் வையே. 647

வைத்துமே செயனீரும் பூரந்தானும்
வரிசையாய் சமபாகம் நிறுத்து விட்டு
நெய்துமே நிழலில் வைத்து மூனுனாள் தான்
நேர்பாக ரவியில் வைத்து அஞ்சுனாள்தான்
பொய்த்துமே புறண்டதுவு முப்புமாகும்
பேரான வூமையென்ற குப்பியிலே வைத்துத்
தொய்த்துமே சுண்ணாம்புச் சீலை சுத்தி
துப்புரவா மணல் மறைவில் புடத்தைப்போடே. 648

புடம் போட்டு யெடுத்தாக்கால் பூரஞ்சூடன்
பெருங்குருவாம் சுன்னமுமாம் பேணிப்பாரு
விடம் போட்டுச் சுன்னத்தால் வேதை கோடி
மிடுக்கான கடல் நுரையைக் கற்சுன்ன நீரால்
அடம் போட்டு அழைத்தூது சுண்ணமாகுமாகும்
அழகான கற்பூரச் சிலையின் மேலே
கடம்போட்டு கற்சுண்ணங் கவசங் கட்டி
கரியில் வைத்து வூதிடவே சுன்னமாமே. 649

### கடல் நுரை, கற்பூரச் சீலை, கல்னார் கெருட்ப்பச்சை அண்டோடு பவழம் இவை சுன்னம் வீரவைப்பு

சுன்னமாங் கல்நாரிப்படியே யூது
துடியானக் கெருட பட்சியிப்படியே யூது
அன்னமா மண்டோட்டைப் பழச்சாற்றிலரைத்து
அடைபோலே லேசாக வில்லை தட்டி
கன்னமாங் கரியோட்டி லப்பி யூதிக்
கட்டான பவளத்தைச் சுன்னம் பண்ணு
முன்னமாம் வீரத்தை வைப்பதற்கு
மாற்கத்தைச் சொல்லுகிறேன் முனிந்து கேளே. 650

கேளப்பா தங்கமென்ற சூ௪ந்தானும்
கெடியாகப்பல மது ரெண்டாகும்
வாளப்பா பலம் ரெண்டு நாகஞ்சூதம்
வளமாகப் பலம் ரெண்டு க.... யச்சூத
மாளப்பா அயத்தியனிடச் சூதம் ரெண்டு
அஞ்சாதே வுபரசத்தின் சூதம் பத்து
நீளப்பா லிங்கத்தின் சூதம் ரெண்டு
நேரானத் துரிசி ரெண்டுதானே. 651

தானென்ற சாரத்தின் கட்டு ரெண்டு
தயங்காதே வெடியுப்புக் கட்டிரண்டு
கானென்ற கல்லுப்புக் கட்டிரண்டு
கலங்காதச் சீனத்தின் கட்டு ரெண்டு
தேனென்றச் சவுக்காரச் சுன்னம் ரெண்டு
திறமான ரெண்டு பவளத்தின் சுன்னம்
வேனென்ற சூடனுட சுன்னம் ரெண்டு
மேன்மையாம் பூரமென்றச் சுன்னம் ரெண்டே. 652

ரெண்டோடு கற்பூரச் சிலையின் சுன்னம்
நேர்பான கல்நாரின் சுன்னம் ரெண்டு
அண்டோடு சுன்னமது ரெண்டு பலமாகும்
ஆணவமாங் கடல் நுரையின் சுன்னம் ரெண்டு
பண்டோடு யன்ன மென்ற பேதிபலம் ரெண்டு
பாங்கானப் பொன்னம்பர் பலமும் ரெண்டு
தண்டோடே சத்தியென்ற சாரம் ரெண்டு
தயங்காதே சிங்கியது ரெண்டு பலமாமே. 653

## செயவீரவைப்பு இதில் வேதை

ஆமென்றத் தொட்டியது பலமும் ரெண்டு
அஞ்சனக்கல்பலம் ரெண்டு துத்தம் ரெண்டு
ஏமென்ற யிந்துப்பு பலமும் ரெண்டு
யேத்தமாங் கெந்தகமும் பலமும் ரெண்டு
தாமென்றத் தாளகமும் பலமும் ரெண்டு
தயங்காத சிலையதுவும் பலமும் ரெண்டு
கோனென்ற குதிரைப்பல் கெவுரி வெள்ளை
கொடிசாக வோறொன்றும் பலமும் போடே. 654

போட்டெல்லாங் கல்வத்திற் பொடியாய்ப் பண்ணி
பேரான திராவகத்தாலஞ்சு னாளாட்டி
பாட்டெல்லாம் கரும் பீங்கான் தன்னிலிட்டு
பக்குவமாய்ப் பொடிபோலே வறுத்துக்கொண்டு
ஆட்டெல்லா மரைவாசி குப்பிக்கிட்டு
அஞ்சுனாள் வாலுகையின் மேலே வைத்து
திட்டெல்லாங் கமலம்போல் தீயை மூட்டிச்
சிறப்பாக யேழுனாள் நால் சாமந்தானே. 655

ஏழுனாளான பின்பு தீயை மாத்தி
யிதமாக ஆறவிட்டு யெடுத்துப் பாரு
ஏழுனாள் மாதளம் பூப்போலாம் வீரம்
மகத்தான அருணன் போலடியில் நிற்கும்
தாழுனாள் சவ்வாதிட்டு மத்திச்சுக் கொண்டு
நடவியே நவலோகத் தகட்டின் மேலே
வீழுனாள் விளக்கதனிற் காச்சினாக்கால்
மிடுக்கான மாத்ததுவும் ஐம்பதாமே. 656

**செயவீரத்திலிருந்து லோகமும், வேதை நாகம்**

ஐம்பதென்றப் பரித்தகட்டிற் பூசி வாட்ட
அருணன் போற் சிவப்பாகும் ரவியுமாகும்
துன்பதென்றத் துய்யானிலாயிரத்துக் கொன்று
சூட்டினால் ஒருபத்து அஞ்சுமாகும்
தன்பதென்றக் குளிகைக்கு யிந்த வீரந்
தாக்கான சரக்கெல்லாமுள்ளே கொள்ளும்
நன்பதென்றச் சாரணைக்கு மிந்த வீரம்
நாட்டாட்டால் கெவன வழி நாடாதென்னே. 657

நாடாத பேர்களுக்கு வாதமென்ன
நலமானச் சித்தியென்ன குளிகையென்ன
ஊடாத யோகத்திலுறிதி யென்ன
உசந்திட்ட குண்டெலியின் நேத்தமென்ன
சூடான பூவுக்கு வாசனை தானென்ன
சுத்த சைதன்னியத்திற் தூக்கமென்ன
தேடாத சாஸ்திரத்திற் கருக்களென்ன
செயவீரம் விட்டாக்கால் குளிகை போச்சே. 658

போகாத வழலையினால் போக்குக்கோடி
பேரான வுப்பிலே விந்தை கோடி
யேகாத துரிசியினால் குளிகை கோடி
யேத்தமாஞ் சோரத்தாற் கட்டு கோடி
தேகாத சீனத்தாற் சுன்னங்கோடி
செப்பரிய கெவுரியினால் செந்தூரங்கோடி
பாகாதப் பாஷாண ரசித வித்தை
பகர்கின்றத் தாளகத்தாலே மமாமே. 659

யேமமாஞ் சவ்வீரம் பலந்தானொன்று
யேத்தமாம் நாகமது பலந்தானொன்று
சேமமாம் நாகத்தை தகடு தட்டிச்
சிறப்பாகச் செயநீரால் வீரத்தை யரைத்து
நாமமாம் நாகமென்ற தகட்டில் பூசி
நலமான ஓட்டி லிட்டுப் புடத்தைப் போடு
பூமமாம் பொருமியது சுன்னமாகும்
போங்கான நவலோகபுடயித்திற் கொன்றே. 660

பாடபேதம்: நாகமது பஃந்தான் மூன்று
சிறப்பாக வாய்நீரால்

### பராபரம் தாயைக் காணலாம்

ஒன்றான அயச்சல்லி பலமும் நாலு
உணர்வான வெண்காரம் பலமும் நாலு
வின்றான வீரமொரு பலமும் போட்டு
மிடுக்கான மாதளையின் பாலை விட்டு
கன்றான ரவிதனிலே காயப் போடக்
கலந்தொன்றாய் மெழுகாகுங் குளையிற் போட்டு
தின்றானச் சில்லிட்டு உருக்கினாக்கால்
சீறியதோர் நாகமுமாய் செயமுமாமே. 661

செயமான நாகத்தால் சூதங்கட்டுஞ்
செந்தூரம் பண்ணினால் கோடிக்கோடுந்
தயமான தங்கமது பலந்தானாலு
தகடுதட்டி வீரமது நாலுக்கொன்று
வயமான செயநீராலரைத்துப் பூசி
வச்சிரமாங்குகை தன்னிலுருக்கிப் போட
நயமான நாகமுமா மாயிரத்துக்கோடு
நணுகினாற் சூதமது கிட்டிப்போமே. 662

போமென்ற வீரத்திற் புனுகுசீனம்
போட்டல்லோ வாயனீரின் மத்திச்சுக்கொண்டு
பாமென்றப் பலகைதான் தகட்டின் மேலே
பரிவாக லேபிச்சு ரவியிற் போடு
யேமென்ற யேழுனாளான பின்பு
யெடுத்தமே யஞ்சு சுன்னக்குகையில் வைத்து
ஓமென்ற ஊதவே சுன்னமாகும்
உசந்த குருமுறையிதுதான் உன்னிப்பாரே. 663

முன்னியந்தக் குருவாலே சூதங்கட்டும்
மூட்டியே சத்துக்களை விரவிச் சேறும்
மன்னியே வரையேழுங் கடந்து போகும்
மாசற்ற நிர்குணத்தின் வழியுந் தோன்றுந்
தின்னியே சிலம்பே'ாசை காதில் கேட்குஞ்
சிவசிவா வென்றழைக்கிற் பரமுந் தோன்றும்
பன்னியே பரிபாஷைக் கருவெல்லாந் தோன்றும்
பராபரத்தாய் முன்வந்து பாஷிப்பாளே. 664

### விராலித்தழை வங்கம், வெங்கலம், இரும்பு காந்தம் பாஷாணங்கள் வேதை, செயவீரத்தின் பெருமையறிய

பாஷித்தக்குரு வெடுத்து விராலித்தழையிலிட்டுப்
பண்பாக விடித்து நன்றாய்ச் சாறு வாங்கித்
தூஷித்த வங்கத்தை யுருக்கிச் சாய்க்க
துய்யானாமிரு பத்து அஞ்சுமாத்து

கோஷித்த வெண்கலத்தை யுருக்கிச் சாய்க்க
குடிலம் போய் ரசிதமாம் பதினாறாகும்
சேஷித்த யிரும்புதன்னைக் காச்சித் தோய்க்க
க்ஷணத்திலே அதரதாராய்ச் சிதைந்து போமே. 665

சிதைந்து நின்ற அதரெடுத்துக் கவசங்கட்டி
சீக்கிரமாயு ருக்கையிலே யீயமாகுங்
கதைந்து நின்றக் காந்தமது யீயமாகுங்
கல்லோடுவு ரசமு மீயமாகும்
பதைந்து நின்ற பாஷாண மீயமாகும்
படிப்படியாய் லவணமெல்லாஞ் சத்துமாகும்
புதைந்து நின்ற நவலோக முற்றாற் போகும்
பேரான வீரத்தாலாடு மாட்டே. 666

ஆட்டான வீரத்தின் போக்குச் சொல்ல
அரனாலும் முடியாது ஆத்தாள் காணாள்
பூட்டான செயவீரம் விட்டாயானால்
பேரண்டப் பதமெல்லாம் போகமாட்டார்
மாட்டான மாருதத்திலி டியுக்குள்ளே
மயக்கியே தள்ளிவிடு மாண் போவாய்
தீட்டான குளிகை தீபனமோயில்லை
செயலான சத்தெல்லாந் திகட்டிப் போமே. 667

தெகட்டியே சத்தெல்லா முட்கொள்ளாதே
சிற்றண்டம் பேரண்டம் போகமாட்டா
மகிட்டியே மாருதத்திற் சுழற்றிப் போடு
மனோவேக மோடாமல் மக்கினமுமாகும்
நகிட்டியே பரிசிக்கில் வேதையில்லை
பண்பான சுரூபமென்ற பரிநாமம் போச்சு
அகிட்டியே செயவீரமனைத் தாயானால்
அறுபத்து நாலு சித்து மாடலாமே. 668

**சிகப்பு நவாச்சாரம்**

சித்திக்குச் சிவப்பான நவாச்சாரத்தை
செப்புகிறேன் தெரிசித்தால் வேதையாக
நத்திக்க நவாச்சாரம் பலந்தான் பத்து
நலமான எலியாலம் பாலாலாட்டி
கெத்திக்க அரைத்தரைத்து வெய்யிலிற் போடு
மிரளாதே யேழுநாள ரைத்தரைத்து
பத்திக்க காய்ந்த பின்பு பொடியாய்ப் பண்ணி
பாத்திரத்தில் வைத்த பின்பு பாங்கைக்கேளே. 669

பாங்கான கல்லுப்பு படிகி யிந்துப்புப்
பாரமாம் வளையலுப்பு இரும்பு காந்தம்
வாங்கான வங்கமென்றச் சுன்னத்தோடு
ம ஞ்சுக்கான் சுன்னமொடு யண்டச் சுன்னத்

தேங்கான சிலாசத்துட் சுன்னத்தோடு
செப்பரிய கடல்நுரையு மப்பிரகஞ்சவுடு
நீங்கானக் காரீயச் சுன்னத்தோடு
நெகிட்சியது கிளிஞ்சியென்றச் சுன்னந்தானே. 670

சுன்னந்தான் வகைக்கு ரெண்டு பலமே கூட்டி
தூளாகப் பொடி பண்ணித் தோண்டியிலே போட்டு
முன்னந்தான் முன்சாரப் பொடிமேல் வைத்து
மேல்தோண்டி வைத்தல்லோ மண்ணைப் பூசி
அன்னந்தானடுப் பேத்தி யாறுசாமம்
ஆடவே தீயிட்டு ஆறப்போடு
தன்னந்தான் சாரமது மேலேஏறி
தனித்ததொரு தோண்டியிலே நிற்கும் பாரே. 671

தோண்டியிலே நிற்கின்ற சாரந்தன்னை
துப்புறவாய் மயிற்கொண்டு இப்பால் வாங்கி
காண்டியிலே கல்வத்திலிதனைப் போட்டுக்
கடிசான ஆதளையின் பாலாலாட்டி
நாண்டியிரே ரவியிலிட்டுக் காய வைத்து
நலமான முன்தோண்டி மருந்தின்மேல் வைத்து
மீண்டியிலே மேல் தோண்டி வைத்து மண்செய்து
மிடுக்காக வடுப்பேத்தி யெரித்திடாயே. 672

எரித்திட்டு அஞ்சுசாமமான பின்பு
யிதமாக ஆறவிட்டு யிப்பால் வாங்கி
அரித்திட்டு ஆதளையின் பாலிலாட்டி
அஞ்சுதர மிப்படியே பதங்கமேற்று
பரித்திட்டுப் பலம்பத்து நிறுத்துக் கொண்டு
பாங்கான சூதமது பலமும் பத்து
தரித்திட்டு தங்கமது அஞ்சுபலமாகுந்
தன்னியத்தின் பாலாலே யரைத்திடாயே. 673

அரைத்திட்டு நாள்மூன்று பொடியாய்ப் பண்ணி
அரைவாசி காசியென்ற மேருக்கேத்தி
வரைத்திட்டு வாலுகையின் மேலே வைத்து
வரிசையாய் பதினாறு சாமந்தீயைப் போடு
திரைத்திட்டு ஆறவிட்டு யெடுத்துப்பாரு
சிவந்தெழுந்த சூரியன்போல் நிறமுமாகும்
பரைத்திட்டுப் பீங்கானாம் பறணைக்குள் வைத்து
பக்குவமாய் மூடிவைத்து பாங்கைக்கேளே. 674

பாங்காக எள்ளிடைதான் பாலிலுண்ணு
பத்தியமாய் மண்டலந்தான் வுண்டாயானால்
நீங்காத நோயெல்லாம் நீங்கிப் போகும்
நிலைத்தாறு தலம்நிற்கு மட்சரமும் தோன்றும்

தூங்காமல் நித்திரையும் பசியும் போகுஞ்
சுக்கிலந்தான் மேலேறும் கீழோடாது
ஆங்காத யடுக்கோடு பதமும் காணும்
அந்தரத்தின் மீனெல்லாம் தோன்றும் பாரே. 675

## பைகம்பச்சாரம், சூதமணி, களங்குவேதை காசிச்சாரம்

பாரிந்தச் சாரத்தின் பேரேதென்னில்
பைகம்பச் சாரமென்று யிதுக்குப்பேரு
யேரிந்த வேகம்பச் சார மென்றுபேறு
யேத்தமாந்தத்தையுட மூக்கென்றும் பேரு
ஆரிந்த சாரத்தின் முடிவைக்காண்பார்
அரனாலு முடியாதாத்தாள் காணாள்
தாரிந்தப் பரம தேவரிதினாட்டாலல்லோ
சதுர்யுகமா மாடியல்லோ கரைகாணாரே. 676

கரைகாணா சாரத்தை ஆயிரத்துக் கொன்று
காட்டிடவே கனகமது பதினாறாகுந்
துரையானச் சூதத்தைக் கரண்டிக்குள் வார்த்து
சூட்சமாம் யெலுமிச்சம் பழச்சாறுவிட்டு
பரையானச் சாரத்தைப் பொடித்துத்தூவ
பாரமாம் யானைபோல் வீரிட்டுச்சாகுந்
திரையானச் சூதத்தை மணியாய்ப் பண்ணிச்
சிவம்பண்ணச் சித்தியெல்லாம் க்ஷணத்திலாமே. 677

ஆமிந்தமணி தனக்கு நாலிலொன்று
யாடகமாந் தங்கத்தை யுருக்கையிலே யீய
நேமிந்த ரெண்டு மொன்றாயுருகும் போது
நீட்டிடுவாய் சூதயிடை சுத்தித்த நாகங்
காமிந்த நாகயிடை காரீயம் போடு
கண்திறந்து யாடயிலே கெந்திபோடு
சேமிந்தச் செயப்பட்டக் களங்குமாகுஞ்
செந்த நவலோகத்தி லாயிரத்துக் கொன்றே. 678

ஒன்றாகக் காசியென்றச் சாரவைப்பு
உறுதியிது கட்டினமாம் வேதையாகும்
பென்றானப் பூனீறு பதக்குவாரி
பண்பான பாண்டத்திற் போட்டபின்பு
கன்றான கழுதையுட நீருதானுங்
கணக்காக யிருதூணி யளந்துவார்த்து
முன்றான மூனுனாள் கலக்கிவைத்து
முயற்சியாய் நாலுனாள் தெளிவைவாங்கே. 679

### வாதம் செயனீர் செய்ய

வாங்கியே பாண்டத்திற் விட்டு காச்சி
வற்றியே குழம்பான பதத்திற் கேளு
தீங்கியே சீனமொரு பலந்தானஞ்சு
சிறப்பான வெடியுப்பு பலந்தானஞ்சு
பாங்கியே இம்முறை தானார்க்குக் கிட்டும்
பற்றற்ற தேகிகட்குக் கிட்டுமப்பா
தாங்கியே சாரமொரு பலந்தானஞ்சு
சாரித்துப் பொடிபண்ணி குழம்பிற் போடே. 680

போட்டுமே திரளநன்றாய் வற்றக் காச்சிப்
பொடிப்பண்ணிக் காசியென்ற மேருக்கேத்தி
வாட்டுமே வாலுகையின் மேலே வைத்து
வளமாகத் தீபோடு நாலு சாமம்
ஆட்டுமே ஆறவிட்டு வுடைத்து வாங்கி
அடுக்கடுக்காய் காசியென்றச் சாரமாகுங்
கூட்டுமே கட்டினமாங் குருவுமாகுங்
கொள்ளையோ கொள்ளையிதில் வாதந்தானே. 681

தானென்ற காரமது பலந்தானஞ்சு
சமத்தான சாரமது பலந்தானஞ்சு
கானென்ற கல்வத்திலிதனைப் போட்டு
கடுங்கார நீர்விட்டு யரைத்தெண் சாமம்
தேனென்ற தெல்லுப் போல் வில்லைபண்ணி
சிறக்கவே மணல்மறைவில் புடத்தைப் போட்டு
பானென்றப் பனியில் வைக்கச் செயனீராகும்
பாங்கான நீருடப் பருவங் கேளே. 682

பருவமாந் நீர்தனிலே வீரம்பூரம்
பணவிடைதான் பொடித்திட்டுக் கலக்கிக் கொண்டு
உருவமாந்துரிசியது தோய்த்துத் தோய்த்து
உரப்போடு ரவிதனிலே தினந்தானேழு
துருவமாஞ் சூடனது காசு அஞ்சு
சுறுக்கான வீரமது காசு அஞ்சு
நருவமா நாறும்பூ காசு அஞ்சு
நலக்கரைத்துத் துரிசியின் மேல் பூசிடாயே. 683

### துரிசிக்குரு, சூதங்கட்டி, செந்தூரம்

பூசியே யுலர்ந்த பின்பு கற்சுன்னச்சிலை
பிசகாமல் செய்திட்டுக் காய வைத்து
வேசியே வெள்ளீயங் குகையில் வைத்துருக்கி
மிடுக்காகத் தோய்த்திடுவாய் யேழுதிரந்தான்
தூசியே பத்தெருவிற் புடத்தைப் போட்டுத்
துப்புரவாய் வாங்கியே கவசந்தன்னை
கூசியே யெடுத்துப்பார் குருவாய் நிற்குங்
கோடிமட்டுந் தொந்தமது யேறும்பாரே. 684

யேறிட தோர் குருவெடுத்து விராலியிலைக்கிட்டு
யிடித்து வைத்து வொருசாமம் பிழிந்துக் கொண்டு
ஆறியதோர் அயச்சட்டித் தன்னில் வார்த்து
ஆதியாஞ் சூதமது சுத்தித்துக் கொண்டு
கூறியதோர் பலம் நிறுத்துக் கூடவிட்டுக்
கொடிசான யடுப்பேற்றி யெரித்தாயானால்
தூறியதோர் தோசைபோல் வெண்ணையாகும்
துப்புறவா யெடுத்துருட்டித் தண்ணியிலே போடே. 685

போட்டுமே சூடனுட தீயில் வாட்டி
பேரான யெண்ணைக்குத்தி கறண்டி தனிலுருக்கி
சாட்டுமே சாரணையாய் செய்தாயானால்
சங்கவரை நிமைக்கு முன்னே தாண்டியோடுந்
தாட்டுமே தங்கமிட்டு கெந்தியிட்டுச்
சாங்கமாய் வாலுகையில் செந்தூரித்துண்ணு
கூட்டுமே கோடியுகங் காயந்தானுங்
கொடுத்திடவே நவலோக மாயிரத்துக் கொண்ணே. 686

ஒன்றான குருவுக்கு வொப்பே தென்னில்
உத்தவட வாக்கினி தானென்று பேரு
தின்றான திரிபுரத்தை யெரித்தோ னென்னுஞ்
சிறந்த சூலாயுதப் பாணியாகும்
பன்றான பஞ்சாக்கினி ருத்திரனென்றும்
பாசுபதாஸ்திர மென்றும் பரமமென்றும்
விண்ணான மேதினிக்குள் குருவுமென்றும்
வேதாந்தக் குருவென்றும் விளம்பலாமே. 687

### சார வைப்பு

ஆமென்ற சாரத்தின் வைப்பு கேளு
ஆணையுட குதிரையுட அமுரிதானுங்
காமென்றக் கழுதையுட னாடுமாடு
காரத்தின மூரியொடு வொட்டை கூட
வேமென்ற அமுரியெல்லா மொன்றாய்ச் சேர்த்து
வெடியுப்புச் சூடனொடு சீனங்கூட
யேமென்ற அமுரிக்குள் யெட்டிலொன்று கூட்டி
யேத்தமாம் பாண்டத்தி லெரித்திடாயே. 688

எரித்திட்டுப் புட்டுப்போல் பொடியாய் பண்ணி
யிதமாக வாய்க்குவிஞ்ச பாண்டத்திற் போட்டு
அரித்திட்டு யரைவாசி மட்டும் போட்டு
யசங்காமல் சில்லிட்டுச் சீலை செய்து
பரித்திட்டு வடுப்பேத்தி யஞ்சுனாள் தான்
பாங்கான கமலம் போல் தீயைப்போடு
தரித்திட்டு ஆறவிட்டு யுடைத்து வாங்கிச்
சாரமது பலகை போலிருக்கும் பாரே. 689

இருக்கிறதோர் சாரமது யேதாற் கட்டும்
மேத்தமாமிணங்கனால் எளிதில் கட்டுந்
தெருக்கிறதோர் சீனத்தின் சுன்னத்தாற் கட்டுஞ்
செப்பரிய துரிசியின் சுன்னத்தாற் கட்டு
மருக்கிறதோர் வங்கமென்றச் சுன்னத்தாலு
மகத்தான நிமிளையென்ற சுன்னத்தாற் கட்டும்
அருக்கிறதோர் வாதமெல்லா மிதினாலல்லோ
ஆச்சரிய மிதைக்கட்ட யெல்லாஞ் சாமே. 690

### வெடியுப்பு பிறப்பரிய, வெடியுப்புக் காச்சவும் அஞ்சாங்காச்சல் வெடியுப்பு செயனீர்

சாமென்ற வெடியுப்புச் சாற்றக்கேளு
தனியான வூஷரத்தின் வேகத்தாலே
பாமென்ற மண்ணதுவும் வுதிர்ந்து பூப்போல்
பாழாக நிலத்தில் நிற்கு மண்ணைவாரி
கோமென்றக் குருதுகட்டிப் பாண்டந்தன்னிற்
கொட்டியே மண்ணதனிற் தண்ணி குத்து
ஆமென்றத் தெளிவையெல்லாங் காச்சக் காச்ச
அப்பு போலுப்பாகு மப்பால் வாங்கே. 691

வாங்கியே வுப்பொன்றுத் தண்ணீர் நாலு
வளமான பாண்டத்திலளந்து விட்டு
தேங்கியே கொதிக்கவிட்டு வடிகட்டிக் கொண்டு
தேசிச்சார் மோருமே கூட விட்டு
வாங்கியே யடுப்பில் வைத்துப் பொங்காமல் காச்சி
உப்பெடுத்து வொலைதனிற் குத்திப்பாரு
நீங்கியே யுறைந்தாக்கால் பதமென்று வாங்கி
நேராக அஞ்சி திரங் காச்சிடாயே. 692

அஞ்சுதரங் காச்சிடவே கம்பியாகும்
அறிந்ததனைச் சுண்ணாம்புச் செய்யக்கேளு
பிஞ்சுதிரப் பழம் புளியும் பலந்தான் பத்து
பேரான வெடியுப்பு பலந்தான் பத்து
நஞ்சுதரம் நையவே சேர்த்திடித்து
நலமான புதுச் சட்டிக்குள்ளே வைத்து
அஞ்சுதரம் யெரியிடவே சாமமென்று
பத்தியே யெரிந்துமே சுண்ணாம்பாமே. 693

### பாஷாணக்கட்டு, நாகவங்கக்கட்டு உபரச சத்து பாஷாணம் அறுபத்து நாலுஞ் சுண்ணம்

சுண்ணத்துக் கிடைக்கிடைதான் வெடியுப்புச் சேர்த்து
துவளரைத்துப் பழச்சாற்றில் நாலுசாம
முண்ணத்துக்குலர வைத்து வில்லைபோ
ற்றுதியா யெரியவிட்டு வுடைத்து வாங்கி

வண்ணத்துக்கிடைக் கிடைதான் வெடியுப்புக் கூட்டி
மீறாமல் பழச் சாற்றில் நேர வரைத்து
தண்ணத்துச் சாரமொன்று யெரியவிட்டு வாங்கி
சமத்தாக பத்துவிசைச் சதிறாய்ச் செய்யே. 694

செய்த பின்பு வெடியுப்புச் சுன்னந்தானும்
திறமாக வெகுசுறுக்குச் செய்யப் போகா
பைய்த பின்பு பலத்துக்குக் காசிடைதான் சூடன்
பண்பான சீனமொரு காசிடைபோடு
கைய்த பின்பு கல்லுப்புக் காசிடைதான் போடு
கனமான சீனமொரு காசு போடு
தொய்த பின்பு துரிசியது துட்டுப் போடு
துருசான பூனீரு காசு போடே. 695

போட்டெல்லாம் பழச்சாறு விட்டு ஆட்டிப்
பேராக நால் சாமமரைத்த பின்பு
நீட்டெல்லாங் குகையிலிட்டுச் சீலை செய்து
நேர்பாகப் புடம் போடச் சுன்னமாகும்
பூட்டெல்லாம் பீங்கானில் பனியில் வைக்கப்
பெருமையாம் செயநீரின் போக்கைக் கேளு
பாட்டெல்லாம் பாஷாணஞ் சுறுக்கு போட
பதையாமல் கட்டிப் போம் பண்பாய்ப் பாரே. 696

பாரப்பா நாகவங்கஞ் சாயக் கட்டும்
பரிவான அயந்தானு முருகியாடுங்
காரப்பா காரமது சத்தாய்ப் போகுங்
கடிசான வுபரசங்கள் மிருது சத்தாம்
சேரப்பா வெடியுப்புச் செயனீர்தானு
மிடுக்காகும் வாதத்துக் குறுதியாகும்
சூரப்பா சூட்சமெல்லாம் இதனாலாகும்
அஞ்சுண்ணம் புத்துரைக் கெல்லாம் சூட்டிப்பாரே. 697

சூட்டினதோர் நிகண்டுக்குள் கருவெல்லாஞ் சொன்னேன்
சூட்சமாம் பரையெல்லாந் திறந்து சொன்னேன்
தாட்டினதோ ரம்புக்குள் கூர்மை போல
செகச்சாலத் தொழிலை யெல்லாந் திறமாய்ச் சொன்னேன்
பூட்டினதோர் காயசித்திக் கடுத்த கற்பம்
பேரானக்கடை மருந்து பேரையெல்லாம்
வீட்டினதோர் விடுவிச்சு வெளியாய்ச் சொன்னேன்
வேதாந்த நுட்பமெல்லாம் விரவிக்கேளே. 698

### சுக்கின் பேர்

சுக்குனுடப் பேர் தனையே சொல்லக் கேளு
சுண்டியாங்கால் வீதம் விசுவமாகும்
முக்குனுட நாகமாம் பேசுஷமுமாகும்
முக்கிரமாங் கற்பத்திரஞ் சிறுங்கின் பேர்

நக்கினுட தாதுதிரிபஞ் சாதகமுமாகும்
சாங்கமா யுறப்புமாங் கசப்புமாகும்
பக்கினுடத் திறிதோஷ மானியாகும்
பரிபாஷை நாமமெல்லாஞ் சுக்குக்காமே. 699

### மிளகின் பேர்

முளகினுடப் பேர்தனையே விளம்பக் கேளு
முதிர்ந்து நின்றத் திரை போக்கி மரிசியாகும்
வளகினுட வலசமுமா தீட்சணமுமாகும்
மகத்தானது வன்மாஞ் சியாமமாகுங்
குளகினுட மூஷ்ணமாம் பத்துவ நேஷங்
கோலக மாஞ்சரநுந் தனியுமாகும்
வளகினுட வாதத்தை யறுக்குகின்ற
மகத்தான முளகுக்கு நாமமாமே. 700

### திப்பிலி பேர்

திப்பிலியின் பேர்தனையே செப்பக் கேளு
தீட்சண தண்டுலகமாகு .... மாகும்
பப்பிலிபாளாக்கி யாம் சபலமாகும்
பெருத்த சவுண்டிசியமாமுபகுல்லிய மாகும்
வப்பிலியாம் வையதெக்க கோலனாமம்
வாதகுன்மத் திரிதோஷ நாசனியுமாகும்
கப்பிலியாங் கோழைதனை யறுக்குஞ் சூதன்
கருதியதோர் திப்பிலியின் நாமமாமே. 701

### திப்பிலி மூலப்பேர்

திப்பிலி மூலப் பேரைச் செப்பக் கேளு
சிறந்ததேசாபுர மென்று மூலமாகுந்
திப்பிலி மூலம் நறுக்கு மூலமாகும்
பேரான கிரந்திகமாங் கண்டு மூலங்
கப்பிலி மூல கோல் மூலமாகுங்
கடுங்கிரந்தி முஷணமாங் காகா நிறமுமாகும்
மப்பிலிமூலம் வாத நாசினியுமாகு
மருவுந்திப்பிலி மூலப் பேருமாமே. 702

### ஆனைத் திப்பிலி

ஆனைத்திப்பிலி பேரை யறியக்கேளு
யதிகமாருதசிப் பலஞ் சமுதிட்ட மாகுஞ்
சேனையாஞ் சேறே யதி கேசப்பிப் பிளியாகுஞ்
செப்பியதோர் கரி கண்ரவிக பாலமுமாகும்
தானையாந் தங்கத்தின் கிரணமுமாகும்
மகத்தானக்கிறுதிமாசங் கெச கணமுமாகும்
கானையாங் கபமறுக்குங்கு டோரியாகுங்
கருதிப்பாரானைத் திப்பிலிப் பேருமாமே. 703

### செவ்வியப் பேர்

செவ்வியத்நின் பேர்தனையே செப்பக்கேளு
சவ்வியமாங்கோல வல்லீரமாகும்
மவ்விய மாங் கெந்தா நாகொ வியுமாகு
மாரமாங் கண்டீரங்கடுஷ்ணி யாகும்
திவ்வியமாந்திர மகத்து மதீரனாகும்
சிலேட்டுமத்தைப் போக்குகின்ற திறமானாகும்
வவ்வியமாம் வந்தகோப சமனியாகும்
வருத்துரைத்த செவ்வியத்தின் பேருமாமே. 704

### சித்திர மூலம், கொடிவேலி, கறுப்புக் கொடி வேலி, ஓமம், புளிப்பெயர்கள்

சித்திர மூலப் பேர்தனையே செப்பக் கேளு
சித்திரமாங் கொடி சோதிகாந்த முமேயாகும்
பத்திரமாம் பகப்பாதி பாவிபாளி
பாச கோதருணாக்கினி யுமாகுங்
சூத்திரமாஞ் சுவாலினி வாளாச்சி கையுமாகும்
கொடியதக வினோதத்தால் பட்சமாம்
பத்திரமாம் படிபாடக் குச்சுபமுக்காகும்
பண்பானச் சித்திர மூலப் பேருமாமே. 705

நீலநிறக்கொடி வேலி நிகழ்த்தக் கேளு
நேயமாங் கானகக் கறுப்பியாகுங்
மாலகாலத்தின் விஷ நிறுத்தியாகு
மடங்காத் தணலியாங் கனலியாகுஞ்
சீலமாஞ்சிலை மண்கள் பேதிச்சியாகுஞ்
செயலான காயங்கள் சூலைத்திறட்சி
காலமாங் கானகத்தின் கறுப்பியாகுங்
கறுத்திருக்குங் கொடி வேலி நாமமாமே. 706

அசமதாகத்தின் பேரையறியக் கேளு
அசமோகமான திப்பியகமுமாகுந்
துசமோதவ சுவனாங் கொக்கிற் கெந்தன்
தீட்ச ரக்ஷுண வாதகப சமனியாகும்
பெசமோதங் குன்மத்தை போக்குகின்றோன்
பேரான தீபனியாம் புசவனாகு
திசமோதஞ் செடத்துக்குள் கிருமி போக்கிச்
செப்பியதோர் ஓமத்தின் பெயருமாமே. 707

புளியினுட பேர்தனையே புகலக்கேளு
பெருசான திந்திருணி விருக்ஷ மலமாடு
மளியினுட வம்பிலி சஞ்சா சுக்கிலக
மறிந்தமாம் பகுதி பத்திரா கனச்சாவாகும்

சளியினுட கனச்சாய மிலா மிலாகும்
சாத்தாமல் மாந்த பூரகமுமாகும்
களியினுட சீமகமாந் தம்மில்பூசக்
கண்டுரைத்த நாமமெல்லாம் புளியின் பேரே. 708

கொறுக்காயின் புளிதனையே கூறக்கேளு
கொடுஞ் சக்கிர வீரியமாம் வேக்காவாகும்
இறுக்காயின் காமிலோமலம் பீசாம்லமாகும்
அடுக்கான ரத்தசத் பேதியாகும்
உருக்காயின் தீபனமாம் ருசிகரமுமாகும்
உப்புக்கு முறுதியாஞ் சுண்ணமானோன்
நருக்காயி னரைமீறி கபவாத மரியாம்
நாமமெல்லாம் கொறுக்காயின் புளிக்குமாமே. 709

## சீரகப் பேர்

சீரகத்தின் பேர்தனையே செப்பக்கேளு
செயலான துத்தாரம் பலமுமாகு
மேரகத்தின் மெத்திபஞ் சியமசாரியாகி
மிடுக்கான உப பகும் பம் மீரமாகும்
காரகத்தின் காளிகா சுரபஞ்சியாகுங்
கடிசான குஞ்சிகா பிறத்தி விகாயாகும்
தாரகத்தின் பித்த நாசனியுமாகுந்
தளுக்கான சீரகத்தின் நாமமாமே. 710

## கருஞ்சீரகம் சத்நுக்குப் பேர்

கருஞ்சீரகத்தின் பேரைக் கருதக்கேளு
காளி கோகார சோதினியுமாகுங்
குருஞ்சீரங் கருஷண சாசிது வாகுங்
கொடிதான சூலக்கினி சோபகுஞ்சியற்கு
தருஞ் சீரஞ் சாளிகாரணி பானியாகுங்
தயங்காத கால் சீரகமுமாகுங்
பருஞ்சீரஞ் பலவர்த்தனந்தி தோவுமாகும்
பாடியதோர் கருஞ்சீரக நாமமாமே. 711

## சதகுப்பி பேர்

சதகுப்பிப் பேர்தனையே சாற்றக்கேளு
சதாகுவையா சதபுட்பா கதிராவாகு
மதகுப்பை வாக்குபிசப்பி யென்னலாகும்
மகத்தான காராவி கணிசமாகும்
சிதபுஷ்பி சிக்கு யத்திரஷா மாதவிப்பாகும்
சிலேத்துமத்தை வாதத்தைத் துரத்தும் தீரன்
சதகுப்பை கதவரியாம் விரணம் போக்கி
சொல்லியதோர் சதகுப்பைப் பேருமாமே. 712

### காட்டுச் சதகுப்பிப் பேர்

காட்டினுட சதகுப்பைப் பேரைக் கேளு
கானகத்திற் காயேசிச் சித்தியாகும்
நாட்டினுட சதகுப்பைக்குச் சக்களவனாகும்
நலமான சாவீனியாம் சிரேவாயாகும்
பூட்டுச் சதகுப்பை யாந்தோஷணமாகும்
புகழான நேத்திரத்தின் விரணம் போக்கி
மூட்டினுட விஷத்திற்குத் தீரனாகும்
மூற்கமாம் சதகுப்பை நாமமாமே. 713

### வெந்தையத்தின் பேர்

வெந்தையத்தின் பேர்தனையே விளம்பக்கேளு
மெந்தியாந்தா பத்திராதி வாகும்
விந்தையமாஞ்சி ரேபரி சித்திரவாகு
மீறாத சாவேயச் சாலமாகுஞ்
சிந்தையமாஞ்சிவாம தானுயமுனா சத்தி
சிறப்பான உலுவாலாங் கசப்புமாகும்
மந்தையமாம் க்ஷய ரோக வரமுமாகும்
அறிந்துரைத்த வெந்தையத்தின் நாமமாமே. 714

### கொத்தமல்லிப் பேர்

கொத்தமல்லிப் பேர்தனையே கூறக்கேளு
குணமான களியாவாங் குசும்பரியாகும்
வித்துமல்லி தான்னியாகும் விதுன்னகமுமாகும்
விளங்கிய தொருல்லி கோயிறுத்திய கெந்தம்
நத்தமல்லி சாபிபோஷ ணமுமாகுங்
தனிக்கான காப்பிறவாரணிச முமாகுங்
குத்தமல்லிக் குலைதும் பருசு வாசாக் கினினாசி
கூறியதோர் நாமமெல்லாங் கொத்தமல்லிக்காமே. 715

### வசம்புப் பேர்

வசம்புனுடப் பேர்தனையே வமுத்தக் கேளும்
வசொக்கிற கெந்தாவாங் கொலோமியாகு
தசம்புனுட கொடி கெவுரி கிராச ரோமசமாம்
தசீரணமாம் விசமித்தியாடின காந்தமாகும்
அசும் புலன்னியாகு வேதய கிமனத்திப்பியாகு
மாற்கமாம் விஷர மாத்திரிபங்கு சாதி
துசம்புசுக்கி லகந்தங் கிருமியரியாகுஞ்
சொல்லியதோர் நாமமெல்லாம் வசம்பின் பேரே. 716

### கடுக்காயின் பேர்

கடுக்காயின் பேர்தனையே கருதக்கேளு
கஞ்சான ரோகிக்குப் பண்டி தனாகும்
மடுக்காயினரித சியம்பிம் வாதியாகு
அபையனாம் வயஹ்தாலாம் பிறாண தூதா தம் ..

படுக்கான பத்தியா செயமிறுத்தாவாகும்
பண்பானப் பிரபன்ன மோகா வாகுந்
திடுக்கானத்தீ பனிபாசனி யாகுஞ்
சேர்ந்தவரித் தாயென்று மோகமாமே. 717

### கடுக்காய் உற்பத்தி யேழுக்கும் பேர்

மோகமாம் பூதனாவிய தாவாகு
மிடுக்கான சேதகி சிரேயணியாகும்
பாகமாம் பாஞ்சாப சாலவண வரசியாகும்
பண்பான ரேசகி சிவா வென்றுமாகும்
வாகமாம் வனதுற்கி வனத்துக்குடோரி
மதுர் பாசி வாதனாசினியாகும்
காகமாங்க பத்தினா சனியுமாகுங்
கருதியதோர் பேரெல்லாங் கடுக்காய்க்காமே. 718

ஆமென்ற கடுக்காய்க்கு வுற்பத்தி கேளு
ஆதிசிவன் அமுர்தந்தான் கடையும் போது
தேமென்ற தேவர்க்கு விஷ்ணுதானுஞ்
சிந்தை மகிழ்ந்தமுர்த மதை உதவும்போது
போமென்ற பகுந்தளித்துக் கையைவீசி
பண்பாகத் தெறித்த துளியேழு காயாச்சு
பாமென்ற யேழுவகைக் கடுகாய்க்குள்ள
பாங்கான குணமெல்லாம் பகரக் கேளே. 719

### கடுக்காய் உற்பத்தி தேசமும் நிறமும்

பகரவே விசையனென்றும் அரோகணி யென்றும்
பாங்கான பிரிதிவியுமமிர்தை யென்றுந்
திகரவே சிவந்தி திரிவிறுதா யென்றுஞ்
செப்பமாம் பையனோடேழுமாகும்
விகரவே விசையனுட வுற்பத்திதானும்
விந்தியதே சந்தனில் பிறக்கும் பாரு
ககரவே ரோகணி யென்னுங் கடுக்காய்தானுங்
கன்னியா குமரிதனிலுதித்த தாமே. 720

ஆமேதான் பிரிதிவிதான் பிறக்குகின்ற தேச
மழகான சவுராஷ்டிர தேசமாகும்
மாமேதான முற்தமெனுங் கடுக்காய்த் தானும்
மகத்தான காசியென்ற தேசத்திற்கு
தேமேதான் சிவந்தி பிறக்குகின்ற தேசம்
சிக்கான காசிதனிலுற்பத்தி யாகும்
வாமேதான் திறிலிறுதை மலைதனிலே பிறக்கு
மகத்தான வபையனது பொதிகை மலையாமே. 721

மலையான விசையந்தன்னிறமே கேளு
மாற்கந்தான் பேய்ச்சுரைக்காய் போன்றிருக்கும்
முலையான ரோகணி தானால் வக்கிறாய்த் தோணு
முத்தமாம் பிரிதிவியின் மேற்தோற் மெல்லியதா
மலையான அமுற்தமெனுங் கடுக்காய்த்தானு
மழகாகச் சதைபோல் போன்றிருக்கும்
நிலையான சிவந்தி பொன்னிறமாய்க் காணுந்
திரி விருதை பஞ்சவர்ணமாகும் பாரே. 722

ஆகுமே யபையந்தான் குறுக்குமாகும்
அடிக்குமே வாதத்தை விசையந்தானும்
வேகுமே ரோகணிதான் சன்னிதானக்காதி
விடுவிக்கும் பத்தியத்தை பிரிதிவிதானுஞ்
சாகுமே சிலேஷ்மங்கள் முறதாவுக்குத்
தகத்துமே மூலத்தை சிவந்தி தானும்
யேகுமே யிறணந் திற்விருதைக்குத்தா
னிடுக்க மெல்லாந் தீத்திடு மெய்ய பையற்கென்றே. 723

## நெல்லிக்காய் பேர்

நெல்லிக்காய் பேர்தனையே நிகழ்த்தக் கேளு
நேயமாஞ் சபலமாஞ் சிதுபலமாகுந்
தல்லிக் காத்திரிபல மாஞ் சலமுமாகுஞ்
சமான வாமங் கிதறிசிய பலமாகும்
வில்லிக்காய் சிறிபலமா மேவசமுமாகும்
விளங்கியதோர் பஞ்ச சாவறுஷ பலமாகும்
நெல்லிக்காய் திரிதோஷ பணியமாகுஞ்
செப்பியதோர் நெல்லிக்காய் பேருமாமே. 724

## தான்றிக்காய் பேர்

தான்றிக்காய் பேர்தனையே சாற்றக்கேளு
சாங்கமாம் விபிதகமாங் கறுஷ பலமாகும்
மூன்றிக்காய் வசந்தோடே சங்கிலித் தாக்கு
மீறியதோர் பூதவாசனியுமாகும்
பூன்றிக்காய் பூதவிருட்சத்து வாகும்
போக்கான லட்சுமி வாசனியுமாகும்
மீன்றிக்காய் தேசியங் குஷ்டானியுமாகு
மியம்பியதோர் தான்றிக்காய் பேருமாமே. 725

## கடுகு பேர்

கடுகினுட பேர்தனையே கருதக் கேளு
காரமாஞ் சாகசி ராசி காமாற்பூசி
விடுகினுட வீரச்சா ரத்தசருஷ்பமாகு
மிடுக்காகா தீக்ஷண கெந்தீ க்ஷணமுமாகுஞ்

சடுகினுடக் கவசமாஞ் சுங்கமாகுந்
தயங்காதார் சோடசமாய்த் தியன்னியாகுங்
குடுகினுடக் கிருஷணக் குடிபமாகுங்
கூறியதோர் நாமமெல்லாங் கடுகுக்கு காணே. 726

**வெண்கடுகின் பேர்**

வெண்மையாங் கடுகினுட விபரங்கேளு
மிடுக்கான கிராணவேத காஷமாகும்
கண்மையாங் கடுகேந்த கருவுமாகும்
கண்டு சினம் ரச்சிதா பலமுமாகும்
திண்மையாங் கெவுசித்தா ரத்தமாகும்
சிலுக்கான பூத நாசனமாகும்
துண்மையாம் தூயலேபனமுமாகும்
சூலையாம் வெண்கடுகின் சூட்சந்தானே. 727

**மஞ்சள் பேர்**

மஞ்சளுட நாமத்தை மருவிக் கேளு
மக்கியதோரரித் திராவாம் பதிகாவாகுங்
கஞ்சளுட கவுரி வர்ணகரவாதியாகுங்
கனகம் போல் வர்ணி நீர்த்திசமாகும்
விஞ்சளுட விலாசனி விஷக நாசனியுமாகு
மிடுக்கானத்து ரஞ்சி திராவகமாமிது
துஞ்சளுட வீரணஅரி மேகசமனாகுந்
துலக்கமாந்தேக வர்னி மஞ்சள் பேரே. 728

**மரமஞ்சள் பேர்**

மரமஞ்சள் பேர்தனையே வகுக்கக் கேளு
மகத்தானப் பித சந்தனமுமாகு
மரமஞ்சா ளண்ணியமாந்தாரு வாகும்
பரித்திரா சமநிஷகாஷமு மாகும்
விரமஞ்சள் வித்திரகங் கோதாரஷியு மாகும்
விரணவிரிசி பசன்னிய மேகம் போக்கி
துரமஞ்சள் சுவாசத்தை துரத்துஞ்ஞான
சொல்லியதோர் மரமஞ்சள் பேருமாமே. 729

**அதிவிடையம் பேர்**

அதிவிடையம் பேர்தனையே யறியக் கேளு
யதிவா சுக்குல கெந்தமுமே யாகும்
புதிவிடையம் பங்குராவிசவா மாகும்
பகர்கின்ற நேயமாங் கெத்தறவாகும்
விதிவிடையம் விஷ்ரமாகா சிறிவங்கிச் சோபமாகும்
விளங்கியதோர் சிசாரசுரச மறனபாகும்
நெதிவிடையஞ்சத்திவினா சனியுமாகும்
நேயமாமதி விடையம் பேருமாமே 730

### கடுகுரோகணி பேர்

கடுகு ரோகணி பேரு கருதக் கேளு
கசப.... சங்கின் துயமா வாகுங்
குடுகியாம் பித்தரோகணியு மாகுங்
கிருஷண பேதாகண்டிருகா நாமூனாவாகும்
யடுகு சகலாதினி அகோ .... ரோகணி
யாமாமக் கினி நிற்க ரோகணியுமாகும்
விடுகு விஷ சுயரியாம் வித்தக்கினியாகும்
விளங்கியதோ ரோகணியின் விபரமாமே. 731

### மஞ்சிஷ்ட்டி பேர்

மஞ்சிஷ்ட்டி பேர்தனையே வழுத்தக் கேளு
மஞ்சிஷா கால மெடிசமாகுஞ்
சஞ்சிஷமங்காலி சாரணியுமாகுஞ்
சமாந்தத்தயக்ஷ மாகும்
வஞ்சிஷ வஸ்திர பூஷணியுமாகு
மஞ்சுகாகுமாசி சம பாண்டியாகும்
நஞ்சிஷட்டாக்காட்சி தீர்த்தனாதி
நாமமெல்லா மஞ்சிஷ்ட்டிப் பேருமாமே. 732

### சிறு தேக்குப் பேர்

சிறுதேக்கின் பேர்தனையே செப்பக்கேளு
செயமான கெற்தப சாதஞ்சமாகும்
பறுதேக்குப் பரங்கிப் பதுமியாகும்
பாங்கானப் பிறாமனய ஷகமாகும்
மறு தேக்கு யாங்கார வல்லியாகு
மழகான சுக்கிறமாதாசமாகுங்
கறுதேக்கு காசத்திப் பரமுமாகுங்
காட்டியதோர் சிறு தேக்கின் கணக்குமாமே. 733

### கிச்சிலியின் கிழங்கு பேர்

கிச்சிலியின் கிழங்கு பேர் கூறக்கேளு
கெடியான சுகந்தாளி கெந்தமுலாந்
தச்சிலியின் சுந்திரன் சந்தி கெந்தா
சங்கிதா தூத விதேயாது வாகும்
பிச்சிலியின் மிறது பலாசி காவுமாகும்
பிரளய மாஞ்சன்னிக்குக் குடாரியானோன்
கச்சிலியின் கடுவிரண நாசனியாகும்
கண்டுரைத்தக் கிச்சிலியின் கணக்குதானே. 734

### கற்கடக சிங்கியின் பேர்

கற்கடக சிங்கியின் பேர் கருதக் கேளு
கடுசிறிங்கங்குளிங்கா வாங் கடுக்காய் பூவாம்
வற்கடகம் வக்கிறாச மகா கோஷாவாகும்
வாரங்கி கஞ்சந்திராசம் விஷனாசமாகு

'டர்கடக மறத சாவஞ் சாவதாகும்
மருவியதோர திசாரப் பெந்தியாகுங்
கற்கடகந் துவற்பான பச்சை வறனி
கருத்தெல்லாங் கற்கடக சிங்கிக்காமே. 735

## அதிமதுரம் பேர்

அதிமதுரம் பேர்தனையே அறியக் கேளு
அட்டிக மதுகமாங்கிவி தகமுமாகு
மதிமதுர மாதுரமா மதுராசிர மாகும்
வல்லியென்ற மதுகமா மடசி மயமாகுந்
திதிமதுரஞ் சிறிதசிர் மோவயமுமாகுஞ்
சிறப்பான காஷமென்ற மதுரமாகும்
பிதிமதுரம் பித்தனா சனியுமாகும்
பேசியதோ ரதிமதுரப் பேருமாமே. 736

## கார்போக அரிசியின் பேர்

கார்போக அரிசியின் பேர் கருதக் கேளு
கனமான வாகுசி சோமறாசி
தூர் போக சுவல்லியபி சோமவல்லி
துடிசான வயக்குசங் கிறுணம் பலமாகும்
பார்போகம் பலாமிரு தானசவ பூதி
பண்பான சிலேஷ்ம நாசனியுமாகுந்
தார்போகங் கிருமிகளைத் தகத்துச்சாடுந்
தயங்காத கார்போகத் தண்மையாமே. 737

## அரத்தைப் பேர்

அரத்தையுட பேர்தனையே அறியக் கேளு
ஆண்மையா மிராசி நாவாமா சாசா சியமாகு
முரத்தையா முத்தலாஞ் சிறெங்கியாகு
முண்மையா மாசாந்தா சைவவுத்தமாகுந்
துரத்தையாஞ் சுகந்த மூலாதிச் சமாகுந்
திரிதோஷ வாதகாசத்தினி யாகுங்
கரத்தையாங் கபவுதாசனியாகுங்
கண்டுரைத்த பேரெல்லா மரத்தைக்காமே. 738

## வாய்விளங்கப் பேர்

வாய்விளங்கப பேர்தனையே மருவிக் கேளு
மருவியதோர் வெண்ணொச்சில் விரையுமாகுந்
தாய் விளங்கஞ் சந்துவுந்தி சமாகுந்
தயவான தீக்ஷணத்தண லோவுமாகுங்
கேய் விளங் கிறுமிகனோ கிறு யாணி
கெடியான மிறுக வாகனியுமாமே
மாய் விளங்க மாந்தியத்தை மறுக்கு கின்றோன்
வண்மையாம் வாய் விளங்கப் பேருமாமே. 739

### வாலுழுவையின் பேர்

வாலுழுவையதின் பேர் வழுத்தக் கேளு
மகத்தான தேசவதி தேசா குலவாகுந்
தேலுழுவை தேச்சுவனி தேசனிதலையாஞ்
செப்பரிய அசுவத்தின் வலகலாவாகும்
மாலுகை சுாசினி செங்கோல் வித்து
மகத்தான சத்தசோதி வாக்குடையாளாகும்
பாலுவை சாதகச் சத்தி வாணிப்
பாடியதோர் வாலுழுவை பண்புமாமே. 740

### சின்ன வாலுழுவைப் பேர்

சின்ன வாலுழுவைப் பேர் செப்பக் கேளு
செயலான கங்குணசி யொதிமைதி யாகுங்
கன்னமாஞ் சுவானா செவிசமுமாகுங்
கடியலவனெ ரத்தங்தந் துறமனாவாகும்
பன்னிமாங் கசப்பியாந்திச் சாக்கினி
பாண்டு தாநா சனியாவிரோசனியுமாகு
முன்னமாங்கடி விரணயானியாகு
மூற்கமாஞ்சின்ன வாலுழுவைப் பேரே. 741

### பெருங்காயத்தின் பேர்

பெருங்காயத்தின் பேர்தனையே பேசக் கேளு
பேரான யிங்குறாமடமுமாகும்
மருங்காய மதியுக்கிரஞ் சந்துக்கினமாகு
மாதாளிப் பூத நாசனியுமாகுஞ்
சுருங்கா யஞ்சூப தாபனமுமாகுஞ்
சிரணமாங் கெந்திவாதி லிகமாகும்
நருங்காயம் நிதிகுன்ம சூலை நாசனியாம்
நாடியதோர் பெருங்காய நாமமாமே. 742

### செங்கொட்டைப் பேர்

செங்கொட்டைப் பேர்தனையே செப்பக் கேளு
செயமாக்கி காயத்தைச் சித்தியாக்கி
காங்கொட்டை மூலிகையைக் கருப்பு மாக்கி
கடிய வல்லாத் திமிரு தம ஷமாகும்
தாங்கொட்டைத் தாபாக்கினியுமாகுந்
தகன ஆரிஷக் குரோணிவீர் தருவுமாகும்
ஆங்கொட்டை யக்கினி முகாதறாவுமாகு
மதியமாஞ் செங்கொட்டைப் பேருமாமே. 743

### கங்குட்டப் பேர்

கங்குட்டப் பேர்தனையே கருதக் கேளு
காக வாலுகமென்றுங் கங்குட்டமாகும்
நங்குட்டமாங்க நாயகமு மாகும்
நலமான ரேசகமாம் புலகமாகும்

மெங்குட்ட மிறுத்திய சேர்தளமுமாகு
மேத்தமாங்காக் குட்டமுமேயாகும்
மிங்குட்ட விளங்கவாம் வீரன்னிியாகு
மிச்சமாங் கங்குட்டப் பேருமாமே. 744

### அரக்குப் பேர்

அரக்காகும் பேர்தனையே யறியக்கேளு
அதிகமாம் பலாசமா .....குங்
கரக்கானக்கி .....றி போசனமுமாகுங்
கெடியான தித்த தீத்த செயமுமாகுஞ்
சரக்கான சத்தகனா வாங்கண்டு முலா
சஞ்சமாஞ் சிறந்தகமு மாகும்
புரக்கான பூதகானாச மாகு மணியுமாகும்
பேரான அரக்கினுடப் பேருமாமே. 745

### தாளிச பத்திரி பேர்

தாளிச பத்திரிபேர் சாற்றக் கேளு
சங்கத்துத் தாளிசமாகும்
பாளிசம் பத்திற் தாளிசமாகும்
பத்திரிகந்தச் சதமலரியாகும்
நீளிசம் நிருசுகோதா பத்திராட்டி
நிக்ஷயமாஞ் சுவா க்ஷக்கினியுமாகுந்
தெளிஞ்சிரோவ் வத்திரவி சோதளியுமாகுஞ்
செப்பியதோர் தாளிசைத் திறமைதானே. 746

### தாமாலப் பத்திரிப் பேர்

தாமாலப் பத்திரிபேர் சாற்றக் கேளு
சாட்டு வலாக்கசதா பத்திரகமாகும்
வாமாலதச் செனம் வக்கிற மங்குசமா
மருவுகின்ற ரோமந்தாபாசங் குவாவாகும்
பூமாலப் பத்திரஞ்சுவாச ....... கினமாகும்
பெரிதானத் தீபனமா ..... ருவாதநாதன்
சீமால பத்திரங்கண்டு வஸ்த்து தேகவுபசாரி
செப்பியதோர் தாமாலப் பத்திரிச் செய்தியாமே. 747

### சிறுனாகப்பூ பேர்

சிறுனாகப்பூப் பேரை செப்பக் கேளு
செயமான வோமகாஞ் சனமுமாகும்
நறுனாகப் புஷ்பியற்தப் புஷ்பியாகும்
நாகேச ரசமுமாகு முறகமாகுஞ்
சறுனாகஞ் சாம்பெய் மனாகதி செலக்கஞ்
சாம்புந்த மாடகம் பிதகேசரமா
முறுணாகம் யோகொமேங் கேயாகு
முன்ர்த்த சிறுணாகப்பூ வுண்மையாமே. 748

**ஏலத்தின் பேர்**

ஏலத்தின் பேர்தனையே யியம்பக் கேளு
யெத்தயேமத்திர வசகா தேவமாகுந்
தூலமாஞ் சூடகம் கோலகம்
துல்லியா திறிபுடா திறிதி வேர் துடியுமாகும்
வாலமாம் வக்கிரகெந்த ரசமாகும்
வளமான பிறோச்சிய தேசபத்திரைக்
காலமாங் காறணி காச்சப்புடாவு மாகுங்
காரியமா மேலத்தின் கணக்குமாமே. 749

**கிராம்புப் பேர்**

கிராம்புனுடப் பேர்தனையே கருதிக் கேளு
கடலடியின் புட்பமாங்காருக் குளம்பு
தேறாங்கு சுமல வங்க மாகுஞ்
சிகர கேவலமாகுஞ் சிவ சந்தன புஷ்பம்
வறாம்பு வாகிரி சம்பம்ஸ்ரீ புஷ்பமாகும்
வாருத்த சின்னியாகு மருவு பாங்கிச்சி
தறாம்பு தாகசமினித் தளமாஞ் சத்தி
சதிரான கிராம்பென்றுஞ் சாத்தலாமே. 750

**சடாமாஞ்சில் பேர்**

சடாமாஞ்சிப் பேர்தனையே சாற்றக்கேளு
தபசுவிணிச் சடாமாஞ்சிச் சாத்தினியுமாகு
தடாமாஞ்சிப் பிசாசின்றன் நளினமாதா
தாக்கான சடாபூதசடாகி ருஷ்ணாவாகும்
புடமாஞ்சி கிப்பூத கேசனியுமாகும்
புகழான பேசிவா சுகையுமாகும்
நடமாஞ்சிரத்த பித்தச மனியாகும்
நாட்டியதோர் சடாமாஞ்சி நாமமாமே. 751

**கெந்தமாஞ்சிலிப் பேர்**

கெந்த மாஞ்சிலின் பேரைக் கூறக்கேளு
கெந்தமாஞ் சிதுவாம பூதகோசி
சந்தமாஞ் சடாசுமிறுதா ரோமச்சத்தி
தாகமாந் தோஷத்தின் சமனியாகும்
விந்தமாம் விஷவிளா சனியுமாகு
மிகுந்த சீதளத்தி சுகந்தமாட்சி
திந்தமா திந்த கிஷாவக்னி யாகுஞ்
செப்பியதோர் கெந்தமாஞ்சிற் பேராமே. 752

**கோஷ்ட்டத்தின் பேர்**

கோஷட்டத்தின் பேர்தனையே கூறக்கேளு
குறுதுபலம் பாகாஞ்ச மஞ்சமுமாகுங்
கூட்ட மாங்குட்ட ரோகணியாகுங்
கிளெர்வியாதி வாத்தியுவாசிர மாகும்

வட்டமாம் வாமங்கவு போகமாகும்
வண்மையாம் பாரிபாவியகணு மாகுந்
திட்டமாந்திரி தோஷணியாகுஞ்
செப்பியதோர் கோஷ்ட்டத்தின் பேருமாமே. 753

## தேன் மெழுகுப் பேர்

மெழுகுனுட பேர்தனையே விளம்பக்கேளு
மெதுவான சித்தகம் விகசெரிதம்
மழுகினுட மதுச்சிட்ட மதுஷதமுமாகு
மது சேஷம் மிதனத்து மதுகமாகு
மெழுகுனுட மாட்சி காசியாய முருக்கினமா
முபகாரி விறணவுத்தமு மாகுங்
கழுகினுட மெழுகாகும் பேருதனைக்
கண்டுரைத்த படியெல்லாங் கருதிப்பாரே. 754

## குங்கிலியம் பேர்

குங்கிலியப் பேர்தனையே கூறக்கேளு
கொழுமையா மாழ்ச்சுவாலிலைஞ் சாரமாகும்
குங்கிலிய மதன்காண காரளப மாகுங்
கடிசான சச்சுவாலி துலனா சாகும்
யெங்கிலியமட்சய தூபாக்கினி யாகு
மேந்த மாத்திடு யாபம் வல்லபமுமாகும்
விங்கிலியம் விரணகோப சமனியாகு
மிடுக்கான குங்கிலியப் பேருமாமே. 755

## குக்கில் பேர்

குக்கிலுட பேர்தனையே கூறக் கேளு
குக்கிலா கால நிசி பாசமாகுங்
கக்கிலு மாசிடா வாயாங் கவுசிகமுமாகுங்
கனமானந்த தஞ்சமாகி வொத்த கொம்பி
மக்கிலுடமை சாட்சி பலமுமாகு
மாசத்த வுருக்கினத்துக் காதியாகுஞ்
சுக்கிலுடச் சூலை நாசனியுமாகுஞ்
சூட்சமாங் குக்கிலுட நாமமாமே. 756

## குந்திரிக்கம் பேர்

குந்திக்கப் பேர்தனையே கூறக் கேளு
குருக்காநோ தூமி நற்பறனிசமாகும்
பிந்துருக்கம் பிண்டோ பின்னியாக மாகும்
பேரான திட்சண கேந்தஞ்சமாகுந்
துந்துருக்கஞ் சுகாதீதம லோயுத்தமாகுஞ்
சூதானச் சோனிடா காச்சியுமாகு
முந்துருக்க முகுந்து பாவினதமாகு
முயற்சியாங் குந்துருக்கமுரகம் பேரே. 757

### கஸ்தூரிப் பேர்

கஸ்தூரிப் பேர்தனையே கருதக் கேளு
கானகத்திற் காமிருகங் கோமிருகமாகுஞ்
நத்தூரி நாபிமிரு காண்டமாகும்
நலமான மகச்சாரம் வேத முக்கியாச
மத்தூரி மதகெந்தம் வெளிகாவாம்
மகத்தான கருஷ்ணியாம் வாதநாசனியுமாகும்
சித்தூரி வக்கிர சாரப்பியமாகும்
சிட்சியாங் கஸ்தூரிப் பேருமாமே. 758

### கருப்பு அகரத்தின் பேர்

கருப்பு அகாரப் பேர் தனையே கருதக்கேளு
கனத்த பிரவாந் தோசங் கிருமித்துவாகும்
குறிப்புக் கிருட்டின கருசியாம் நேமநாற்
சுகமாகும் கோவிசு வரூபமாம் தகருயோக
மருப்புகு திரிதோஷணங் கலுசி நித்தம்
வாதகப அரமாகும் சுருதி நேத்திரம்
நருப்புமாங் கல்லியமாங் குட்ட நாசனியாகும்
நாட்டியதோர் கருப்பனிட பேருமாமே. 759

### கோரோசனைப் பேர்

கோரோசனையின் பேரைக் கூறக் கேளு
கோரோசனை பிங்கள பிரமி
கோரோச கெவுதமி கெவுரிது வாகுங்
கெவுரி பிண்டமா மேத்தியா வாகு
மாறோ சனங் கினியந்தி திரியாசத்தி
மாசத்த வித்தாரரு சிழாஞ்சியுமாகும்
பேறோச பித்த நாசனியுமாகும்
புகழ்கின்ற கோரோசனைப் பேருமாமே. 760

### குங்குமப் பூவின் பேர்

குங்குமப்பூ பேர்தனையே கூறக்கேளு
குங்குமமாம் ருத்திரமாம் மாத்தமாகு
மங்குமப்பூ அன்னிய கீத்தஞ்ச பித்தனமா
மழகான காலைரசாரு பாகிலிசஞ்
சங்குமப்பூ சங்கோசம் பாம்பிசுன மாகுஞ்
க்ஷய ரோகச்சி வோறோக விரணரிது வாகுங்
கங்குமப்பூக் கய காந்தி தகமுமாகுங்
காமியமாங் குங்குமப்பூப் பேர் கருதமாமே. 761

### சந்தனப் பேர்

சந்தனப் பேர்தனையே சாற்றக் கேளு
சாந்தமாங் கெந்த சந்த சாரஞ்சமாகு
மந்தனத்தின் மலைய சோபன வாதிரிவா
மகர்சுவேத சந்திரகாந் தஞ்சமாகும்

நந்தனரேந்திர போக்கியமுமாகும்
நலமான பத்திரிசிவவுரி சந்தனமுமாகுஞ்
சிந்தனத்தின் சிதகாத்தில் பானமாகுஞ்
செப்பியதோர் சந்தனத்தின் செயலுமாமே. 762

### சிகப்புச் சந்தனப் பேர்

செகப்பான சந்தனத்தைச் செப்பக் கேளு
சிதசாரங்கு சந்தனமுமாகுந்
தகப்பான றாசதம லேந்தித சாகரமா
மிரமாம் நற்சந்தனமு மாகும்
பகத்தான பத்திராங் காசனமுமாகு
மன்பான நீத்திட்டஞ் சுவாது சீதளமாந்
தகப்பான மந்தாரம் பாரிசாத
மருவிய செஞ்சந்தனத்தின் மார்க்கமாமே. 763

### சாதிக்காய் பேர்

சாதிக்காய் பேர்தனையே சாத்தக் கேளு
சாதிபலஞ் சாதிச்சி யமுமாகும்
மாதிக்காய் காலுரமா மதிபலமா
மதசவுண்டஞ் சாதிகமுமாகுங்
கடுக்காய் கப்பிலினிற துறங்சியாகுங்
கடுக்காயின் லகிரிதான் பலவழகியாகுஞ்
சூதிக்காய் திறக்கின் பித்தனா சனியாகுஞ்
செப்பியதோர் சாதிக்காய் செயலுமாமே. 764

### சாதிபத்திரியின் பேர்

பத்திரியின் பேர்தனையே பகரக் கேளு
பத்திரிகா சாதிகே களாசு வாகு
மத்திரியின் மலது பத்திரகா வாகும்
வாருதிவோர் குடிச்சிவா சனையாங் கன்னி
தத்திரின் சைவப்பிறத் தாசாவாகுஞ்
சாதினிக பத்திரி..... னியுமாகும்
நத்திரியின் வாகிரியாஞ் சுக்கில விருத்தி
நறுஞ் சாதிப் பத்திரியின் நாமமாமே. 765

### பாக்கினுடைய பேர்

பாக்குனுட பேர்தனையே பகரக் கேளு
பலசு மிர்தம் பூகபல முத்துவேகாமாகுஞ்
சீக்கினுட சிக்கண வக்கணஞ்சமாகுந்
தீபனமாம் பல்லுக்கு வொளியுமாகும்
ஆக்கினிட கொண்டான அழகுமாகும்
ஆக்கைக்கு வீரோசனமாம் பித்தமாகும்
நோக்கினிட லட்சுமியின் விலாசமாகும்
கெடியான் பாக்கினுட பேருந்தானே. 766

## தூணியங்கப் பிசின்

தூணியங்கப் பிசின் தனையே சொல்லக் கேளு
சுத்தது விடமேயாம் வன்னி சூட்சம்
தாணியாங் கஞ்சாரடி தயிலமீதஞ்
சத்த சோரா பலமாஞ் சிரண ரோமம்
சூணியாங் கஞ்சமாம் சதமாம் ரோமம்
சுளுவான சிவப்புடன் வெளுப்பு பொன்மை
வாணியாங் கபவாத சுரங் குட்ட நாசினியாம்
வகுத்த தெல்லாம் தூணியங்கப் பிசினுமாமே. 767

## செவ்வரளிப் பேர்

செவ்வரளிப் பேர்தனையே செப்பக்கேளு
சிறந்தாக்காலேயத மாம்பீத சாரம்
நள்ளிய மாந்திற விம்மிலகி சந்தனமாகும்
நலமான வானப் பிரசாத னமுமாகும்
புள்ளியமாம் பீதவர்னம் பீத சோபகமாம்
பேரான க்ஷய சரம் பித்தப் பாண்டு
பள்ளியமாம் பார்வதி தான் தீர்த்தமாடி
பரந்த செவ்வரளியதின் பண்புமாமே. 768

## முன்சொன்ன சரக்குகளின் குணம்

பாடினேன் கடைமருந்தின் பேர்கடன்னை
பரிவாக அறுபத்து நாலுமாகும்
வாடினேன் மதியேங்கி வடமொழியைப் பார்த்து
வகையெல்லாமாத் தாளைக் கேட்டு கேட்டு
மூடினேன் முத்துப் போல் பொருக்கிக் கோத்தேன்
மூடருக்குந் தெரிய வென்று மொழிந்தேனப்பா
நீடினேன் நிகண்டுக்குள் நேர்மையாக
நேற்பாகச் சொன்னபடி நினைவாய்ப் பாரே. 769

பார்த்திட்ட சுக்கினால் சருவ ரோகம்
பண்பாக முளகுக்கு வாத நாசனியாம்
மேத்தியதிப்புலிதான் சிலேத்து மத்துக்காதி
யெளிதான மூலந்தான் சுரத்துக்காதி
காத்திட்ட கரியினொடு திப்பிலிட்டினாலே
கனமான சன்னிதனக்காதி யாகுஞ்
சேர்த்திட்ட செவ்வியந்தான் திமிருக்காதி
சித்திர மூலந்தனக்குச் சுரங்கள் போமே. 770

## கடை சரக்குகளின் குணம்

போமேதான் கறுத்திருக்குங் கொடி வேலிக்கு
போதற சந்திரன் தான் கட்டிப் போகும்
மாமேதான் ஓமமது அக்கினியுண்டாக்கு
மாண்மை யாம் புளி தன்னாலுப்புக் கட்டுங்

கோமேதான் கொருக்காயின் புளிதனக்குக்
சூர்மையாம் வெடியுப்புக் கட்டிப் போகுந்
தேமேதான் சீரகந்தான் பித்தத்தை யறுக்குஞ்
சிறந்த கறுஞ் சீரகந்தான் கிருமிப் போமே. 771

போமென்ற சதகுப்பையுடன் வாதம் போம்
புகழ்கின்ற கானகத்தின் சதகுப்பை தன்னால்
கோமென்ற குஷ்டங்கள் போகும்
குணமான வெந்தியந்தான் யெரிவு போக்குந்
தேமென்ற கொத்தமல்லி சேத்துமத்தை யறுக்குஞ்
சிறப்பான வசம்புதான் கிறாவணத்துக் காதி
காமென்ற கடுக்காய் தான் அடிக்கற்பமாகுங்
கருதியதோர் நெல்லிக்காயுஷ்ணம் போமே. 772

நெல்லியொடு தானிக்காய் சுவாசம் போக்கும்
நேரான கடுகுக்குச் சூலை போகும்
வில்லியொடு வெண்கடுகு குஷ்டம் போக்கும்
மீறியதோர் மஞ்சளது மந்தம் போக்கும்
மல்லியதோர் மரமஞ்சள் சுவாசத்தை யறுக்கும்
மாக்கியதோ ரதிவிடையங் கிராணி போக்குங்
கல்லியதோர் கடுகுரோகணியினாலே
களிப்பத்து மலநெகிட்சியா கும்பாரே. 773

பாரென்ற மஞ்சிஷ்டி ரெத்த பித்தஞ் சாடும்
பகரமாஞ் சிறுதேக்கு வாதசுரம் போக்குங்
கோரென்ற கிச்சிலிக்கிழங்கு தன்னால்
கெடியான தலைவலிதான் சாடிப் போகுங்
காரென்ற கற்கடக சிங்கதானுங்
கடுப்பான அதிசாரங் கட்டிப் போகு
மாரென்ற அதிமதுரந் தோஷத்தை யறுக்கும்
மார்க்கமாங் கார்போக வண்மை கேளே. 774

கேளப்பா விஷங்குஷ்ட நாசமாகுங்
கெடியான அரத்தைக்குச் சுவாசம் போக்கும்
வாளப்பா வாய்விளங்கம் புழுக்கள் மாயும்
வாலுழுவையரி சிக்குக் குஷ்டந் தீரும்
கேளப்பா சிறிய வாலுழுவையானால்
சிறப்பான தயிலத்திற் கெந்தி கட்டும்
நீளப்பா பெருங்காயம் தீபனமு முண்டாக்கும்
நெடிதான செங்கோட்டை கடிவிஷங்கள் போமே. 775

விஷம் போகுங்கருங் குஷ்டம் விரணந்தீரும்
மெதுவான அரக்குக்கு அஸ்திசுரம் போக்கும்
மெஷம் போகுந் தாளிசபத்திரியின் தனக்கு
மேலிரைப்புச் சேத்துமமுஞ் சுவாசம் போகும்

விஷம் போகு.ம த்ன்மர்ல் பத்திரிதனக்கு
மிகையான சிலேத்துமமுஞ் சுரமும் போகும்
விஷம் போக்கும் யேலந்தான் தினவு போக்கும்
வேகமாஞ் கிராம்பினுட வண்மை கேளே. 776

மென்மையாஞ் சுரங்களொடு சன்னி கோழை
மிடுக்கான அதிசாரம் பித்தம் போகும்
வெண்மையாஞ் சிறுநாகப்பூ தனக்கு
வெறிப்பான பித்தமொடு வாதந்நீருந்
தண்மையாஞ் சடாமாஞ்சி மேகத்தை யறுக்குந்
தனிக்கெந்த மாஞ்சிலினா னீரைக்கட்டும்
கொண்மையாங் கோஷ்டமது தாபம் நீக்குங்
கெண்மையாம் மெழுகாலே விரணம் போமே. 777

விரணம் போங் குங்கிலியக் குக்கிலுக்கு
மீறியதோர் சூலைபோங் குந்தரி கந்தனக்குத்
திரணமாந் தலைவலி பீனிசங்கள் போகும்
நீதமாங் கூகைநீர் பிரமியங்கள் போக்குங்
கரணமாங் கஸ்தூரி ராசவசியங்
கறுப்புயகா யெண்பது வாதத்தைப் போக்குங்
குரண கோரோசனை தானுள் விரணம் போக்குங்
குங்குமப்பூ சிரசில் நிற்கும் வாதம் போமே. 778

வாதமாஞ் சந்தனம் விஷத்தை தீர்க்கு
மருவியதோர் செகப்பான சந்தனந்தான்
நீதமாந் தாகத்தைப் போக்கு விக்கும்
நேரான சாதிக்காய் வலுவுண்டாக்கும்
பாதந்தான் பத்திரிக்குப் பரவுஞ் சுக்கிலம்
பாக்குத்தான் பல்லுக்கு வொளி கொடுக்கும்
வேகந்தான் தூணியங்கம் வெள்ளை கட்டும்
மிரண்ட செவ்வள்ளியந்தான் மூச்சுப் போமே. 779

**ரசபற்பம்**

போமென்ற கடை மருந்தின் குணங்களெல்லாம்
பிரித்துமே வெவ்வேறாய்ப் பேராய்ச் சொன்னேன்
ஆமென்ற கடைமருந்து பலன்கள் செய்ய
அதிற் கொடுக்குங் குருபற்ப மாண்பைக் கேளு
பாமென்ற பரும்பாண்ட மஞ்சுக்குள்ளே
பருத்த மரம் வேப்பிலை தான் பாதி போட்டு
நாமென்ற நல்ல தண்ணீர் கலந்தான் வார்த்து
நாடியே யடுப்பேத்தி யெரித்திடாயே. 780

எரித்துமே அருசாமம் பொங்காமற் தான்
யீரெட்டுக் கொன்றாகக் காச்சிக் கொண்டு
வரித்துமே யஞ்சையுந்தான் வடிகட்டிக் கொண்டு
வடிசுனத்த் பருஞ் சட்டிக்குள்ளே வைத்து

கரித்துமே சூதமது யீரெட்டு பலந்தான்
சுத்தி பண்ணி பெருஞ் சட்டிக்குள்ளே வார்த்துப்
பிரித்துமே அடுப்பேத்தி தீபம் போலே
பேராக நீர் வத்த வெரித்திடாயே. 781

எரித்திடவே சூரணமது குருவுமாகு
மிதமாக வழிச் செடுத்துக் கல்வத்திட்டு
விரித்திடவே குப்பி கண்டு பதனம் பண்ணி
பிப்பிலாஞ் சாம்பலுக் குளமத்தி
பிரித்திடவே பாவுகலில் வைத்துமூடி
பலக்கவே மண்செய்து காய வைத்து
தரித்திடவே நாலுத்தெரு அடக்கிப் போடு
நலமான குருவாகும் நயந்து பாரே. 782

## ரசகுரு பற்பம்

பாரென்ற குருவெடுத்து நவலோகத்தாட்டப்
பரிவாக மாத்தஞ்சு காணுங் காணும்
நேரென்றயிக் குருவைக் கடை மருந்திற் சேர்த்து
நிறை தானும் பணவிடை தான் உள்ளே கொள்ளு
பாரென்ற நோயெல்லாந் தவிடு பொடியாகும்
நோக்கறிந்து பக்குவமாயுள்ளே கொள்ள
காரென்ற காயசித்திக் கடைசி யிலாகுங்
கடைமருந்தின் தொகுப்பையினி கருதிக்கேளே. 783

## கடைமருந்தின் தொகுப்பு

கேளப்பா சுக்கினொடு மிளகோ டொக்க
கெடியான திப்பிலி மூலத்தினோடு
ஆரப்பா ஆனை திப்பிலியுமாகும்
அழகான செவ்வியமாஞ் சித்திரமூலம்
காளப்பா கருங்கொடி வேலியினோடக்
கனத்த சமதாகமொடு புளியுமாகுங்
கேளப்பா கொறுக்காயின் புளியினோடு
குணமான கருஞ்சீரகமுஞ் சீரகமுமாமே. 784

ஆமென்ற சதகுப்பை காட்டுச் சதகுப்பை
அதிகமாம் வெந்தியமாங் கொத்தமல்லி
வாமென்ற வசம் பொடுகடுக்காய் நெல்லி
மகத்தான தானிக்காய் கடுகுதானும்
வேமென்ற வெண்கடுகு மஞ்சள் மரமஞ்சள்
மிகையான அதிவிடையம் கடுகுரோகணியு
மாமென்ற மஞ்சிஷ்டி சிறுதேக் கோடு
மகத்தான கிச்சிலியின் கிழங்குமாமே. 785

கிழங்கோடு கற்கடக சிங்கி தானுங்
குளிர்ச்சியாய திமதுரங்கார் போக வித்து
அழங்கோடு அரத்தை தான் வாய் விளங்கம்
மாண்மையாம் வாலுளுவை யரிசியாகும்
கிழங்கோடு சின்ன வாலுழுவை காயஞ்
செங்கோட்டை கங்குஷ்டமாகுந்
தழங்கோடு தாளிசப்பத்திரிதான்
தென்பத்தமால் பத்திரியொடு சிறு நாகப்பூவே. 786

நாகப்பூ யேலமொடு கிராம்பு சடாமாஞ்சி
நங்கெந்த மாஞ்சிலொடு மெழுகு கோஷ்டங்
கடகப்பூ குங்கிலியங் குந்திருக்கங்
குக்குற கடத்திற் கஸ்தூரி கறுப்பு அறக்காகும்
பாகப்பூ கோரோசனை குங்குமப்பூ வோடு
பாரமாஞ் சந்தனஞ் சாதிக்காய்
சாதிபத்திரி பாக்குத்தானுந் தரித்த
தூணியங் கம்பிசின் செவ்வள்ளியாமே. 787

ஆமென்ற கடை மருந்தின் தொகுப்பைச் சொன்னேன்
அறுபத்து நாலினுட பேரைச் சொன்னேன்
கோனென்ற குருபற்பம் முறையாய்ச் சொன்னேன்
கொடுக்கின்ற வயணமொடு குணமுஞ் சொன்னேன்
காமென்ற காயசித்திக் கெடுத்த மூலி
கலந்து நின்ற பேரையெல்லாங் கருவாய்க் கேளு
தேமென்ற சிவகாமி சொல்லக் கேட்டு
செப்புகிறேன் வடமொழியைத் திறந்து காணே. 788

**காயசித்தி மூலிகைகள் பேர்**

சிந்திலுட பேர்தனையே செப்பக் கேளு
திறமான கெஞ்சியா மமுர்த வல்லி
கூந்த லென்ற குண்டலியாம் விகல்லிய தாரா
குணமான சைவரத்தர் சோமவல்லி
விந்தலென்ற சின்னருகா சிவந்தியாகு
மிறுதலத்தராச்சாந் தேவ நிற்மிதாமர்
வந்திலமது பானிவிசவிக்கினி யாகு
மருவிய தோர் சிந்திலினுட பேருமாமே. 789

**மருளின் பெயர்**

மருளினுட பேர்தனையே வழுத்தக் கேளு
மஞ்சியாக் கக்குரியான் மலைக்குஞ்சாரஞ்
சரளான தான் கட்டுச் சாரையான
தணப்பியதோர் வீரியன் சனப்புக் குஞ்சம்
முரளினுட முருவா மதுரசாதேவி
முனிவான தனுசோலை மோரடாவான்
திறளினுட சிறுபாணி சீருற்ற பாணி
செப்பியதோர் மருளினுட செயலுமாமே. 790

### சிறுகாஞ்சோரிப் பேர்

சிறுகாஞ் சோரிப் பேரைச் சொல்லக் கேளு
சுணைச்சியாமயா கோவா மயவாசு வாகும்
குறுகாத்தினக் கோ பாலபுத்திகோ
கேண்மையாந் தூரமுலசமாகுங்
கறுகாத காண்டக முத்திராந்தாக்
காட்சியாந் துற்பவாதிறகமுலாசுக்
காத சுவாசகாசக் கினியாகுஞ்
செப்பரிய காஞ்சொரியின் திறமுமாமே. 791

### பெருங்காஞ் சோரிப் பேர்

பெருங்காஞ் சோரிப் பேரைக் கேளு
பெருமையாந் தாமமா மூலிசமாகுந்
துருங்கவே துலா ரம்பம்யண்ணுவ பாஷஞ்
சுணச்சியாங் கச்ச சுராத்துரால் பாசகம்
அருங்கவவ் வாசகனா துறப்பசினாகு
மடங்காத தாக நாசனியு மாகும்
வுருங்கவே யோகயுத்தி பித்த சுரசமணி
யுரைத்த பெருங்காஞ்சோரி யுண்மையாமே. 792

### ஆடா தோடைப் பேர்

ஆடாதோடைப் பேரையறியக் கேளு
யழகான வாசவாளஞ் சிங்கயணி
விடாத விருட்ச வாச்சமாகு
மென்மையாஞ் சிங்கி காயாருடறை
பிடாத சிங்கமுகியிந்து மாதர்
பெருங்காசப் பித்த சிலேத்துமக் கினியாகுஞ்
சடாத க்ஷயக் கூட்ட சுத்தி சுரசமணி
சமரசமாடா தோடைத் தன்மையாமே. 793

### கருங்காலிப் பேர்

கருங்காலிப் பேரைக் கருதிக் கேளு
கண்டகி பாலபத்தி ராசமாகும்
நருங்காலி ரத்தகாரச் சமாகும்
நலமான காயத்திரி தந்த தாவனியாங்
குருங்காலி குஷ்டத்தின் சிங்க சல்லியங்
கொடியதோர் ரோம விருட்சக குடிலகண்டகமா
முருங்காலி மோக விருட்சங்க சப்பியாகு
முண்மையாங் கருங்காலி முறகமாமே. 794

### வெண்கருங்காலிப் பேர்

வெண்கருங்காலிப் பேரை விளம்பக் கேளு
மிகையான சோம வலக்கமுமாகு
மிணக்குங்கை தித்து மேகவேதசார்
மிடுக்க்மாங் கார்முகங் குப்பிக் கண்டங்

குண்கருபக கும்பபதர் கொர்ளா வாசங்
கொடிதான சம விருட்சஞ் சாப சாரங்
கண்கருங் கதிர் சுவேத பெத்தையாச
மளகைப் பேராம் வெண்கருங்காலின் பேருமாமே. 795

## வேம்புப் பேர்

வேம்பினுட பேர்தனையே விரும்பிக் கேளு
மிடுக்கான பிசாசு மந்தம் நிம்பாவாகும்
மாம்பான யரிட்டமாஞ் சறுவதோ பத்திரம்
மழகான பிரமபத்திரம் பாரிபத்திரமாந்
தாம்பூலம் நேயவா நேட்டமாகுஞ்
சாகாத மூலிகைகள் நாகவாக்கி
தனியானச் சுத்தித்தகஞ் சூதபற்பமாக்கிச்
சுத்தமாம் வேம்பினுட புதுமையாமே. 796

## பெரிய வேம்பின் பேர்

பெரிய வேம்பின் பேரைப் பேசக்கேளு
பெருமையுள்ள மகாநிம்பம் மிருத்தி ரோகம்
கரிய விஷமுஷ்டிகா காண்டமாகும்
கரோமய சோஷாமே வசம்புமாகும்
கரியதோர் கெஜபுஷ்பின் கரிகோ நிம்ட க்
கெடியான ரத்தச்ச வாகையாகும்
தரியதோர் சுத்தபரி யாய மாகுஞ்
சாற்றியதோர் பெருவேம்பின் தன்மையாமே. 797

## நிலவேம்பின் பெயர்

நிலவேம்பின் பெயர் தனையே நிகழ்த்தக் கேளு
நித்தார கோஷச்சா கண்ட தித்தன்
கிலவேம்பு கிராதித்தமுமாகும்
கிரார்த்தகமாம் புளிம்பர் சாதி தீர்த்தம்
கலவேம்பு கயிராதோ யேமசன மாகும்
கட்சிமா நிம்பாகு ராமசெனமாகும்
குலவேம்பு சிலேஷ்மாதி சோபக்கினியாகும்
குணமான நிலவேம்பின் கூறதாமே. 798

## சர்க்கரை வேம்பின் பெயர்

சர்க்கரை வேம்பின் பெயரைச் சாற்றக் கேளு
தாதுமற்று வண்டியாஞ் சதாநிம்பாவாம்
அக்கரமா மலையதுவும் சர்க்கரை போற்காணும்
அழகான சிம்பிச்சி மதுரவல்லி
துக்கரையாம் சூதமது சணத்தில் கட்டும்
சிறயதோர் நாகத்தை யமர்த்திக் கொல்லும்
உக்கரையாம் காய்த்தை உகாந்த வரை இறுத்தும்
உண்மையாஞ் சர்க்கரை வேம்பு உறுதியாமே. 799

### கோரைக் கிழங்கின் பெயர்

கோரைக் கிழங்கின் பெயரைக் கூறக்கேளு
குருவித்தகனே ராசிக் கிருகமாகும்
நாரேயங் கண்ட . முத்தாசியாம்
நலமான மம்புதா முத்தாவாகும்
வாரையுட வராஸ்தாகாங் கேயமாகும்
மகத்தான பித்த நாசனியாகும்
தாரையுட சிலேத்துமத்தின் சனியுமாகும்
சாற்றினதோர் கோரையுட தன்மையாமே. 800

### பற்படாகத்தின் பெயர்

பற்படாகப் பெயர்தனையே பகரக் கேளு
பற்படா கொத்த மகண்டகமு மாகும்
நற்படிக வந்தித்தோ நரைதிரையுமில்லா
நலமான சீதப் பிரிய சூட்ச பத்திரி
நிற்படக திரிஷணக்கி நாபாஞ்ச மாகும்
திரிதோஷ மகராச வேணுமாகும்
சிற்படக சீதள சத்தியாமுஞ் சிறந்திட்ட
பற்படாகத் திறமையாமே. 801

### வெட்டிவேரின் பேர்

வெட்டிவேர் பெயர்தனையே விளம்பக் கேளு
வெறியா இமிருபோம் வாரிகேசாம்
உட்டிவேர் உதிச்சியம் வாதஞ்சலமாம்
உற்பனமாம் வாரிதோரஞ் சுகமாகும்
வட்டிவேர் வாதுகஞ் சலமுமாகும்
வாந்திசுரந் தாக நாசனியுமாகும்
சட்டிவேர் கண்டு குஷ் விசர்த்தியாகும்
காரியாம் வெட்டிவேர் கணக்குமாமே. 802

### இலாமிச்ச வேரின் பேர்

இலாமிச்சம் வேர்தனையே இயம்பக்கேளு
ஏற்றமாம் உசிரமாம் சபையம் செவியம்
நலாமிச்சம் நாதசல வசயமு மாகும்
நல்ச்சமா மீரள மலகு மூலம்
சலாமிச்சம் அவதான முதுர்ச்சியாகும்
சதா வெட்ட காபதேக சிரவச்சாம்
பிலாமிச்சம் பிம்கமானம் சகாஞ்சம்
பெருமையா மிலாமிச்சம் பேருமாமே. 803

### பேய்ப்புடலின் பேர்

பேய்ப்புடலின் பெயர்தனையே பேசக் கேளு
பிரோத்த பாண்டுட் கருச்சத்தியாகும்
பாய்ப்புடல் பாண்டுபல குலகமாகும்
ப்ான்மையாங் கெறுசி சந்தனமுமாகும்

16

காய்ப்பூடல் கருதித்த காச்சகமு மாகுங்
கசப்பான ராசவர்ன மிருதபலியாகும்
நாய்ப்புடல் தாகபித்த சமனியாகும்
சமரசமாம் பேய்ப்புடலின் தன்மையாமே. 804

## உரை - தொடர்ச்சி

மஞ்சள் என்ற நிமிளை புளிசரக்காகும். தங்கம் உப்பு சரக்காகும். இதன் நேர் புளிசரக்கு சிலையாகும். நாகம் உப்பு சரக்காகும். இதன் நேர் புளிச்சரக்கு வீரமாகும்.

571-572. சுரோணிதம் புளிசரக்காகும். இதன் நேர் உப்பு சரக்கு விந்து. வெண்காரம் புளிசரக்கு இதன் நேர் உப்புச் சரக்கு சாரம். சத்திசாரம் புளி சரக்காகும். இதன் நேர் உப்புச் சரக்கு மூப்பு. மஞ்சள் கரு புளிசரக்கு. இதன் உப்பு சரக்கு வெண்கருவாகும். கிளிஞ்சல் மேல் ஓடு உப்புசரக்கு இதற் நேர் புளிசரக்கு அதன் உள்சதையாகும் (கிளிஞ்சலின் உள்சதை). சங்கு உப்பு சரக்கு இதன புளிசரக்கு அதன் உள்ளிருக்கும் சதை. பச்சை கற்பூரம் உப்பு சரக்கு. இதன் புளிச்சரக்கு இந்துப்பு. உப்புடன் புளி சேர்ந்து சரக்கை கட்டும். உப்பையும் புளியையும் முறைப்படி அறிந்துகொள்ள வேண்டும். (ஒன்றின் உப்பு இன்னொன்றின் புளியுடன் சேராது. அதேமாதிரி ஒன்றின் புளி வேறொன்றின் உப்புடனும் சேராது).

### பதினெட்டு வகையான பூரணசரக்கின் விவரம்

573-576. கெவுரி, கெந்தி, மனோசிலை, மால் தேவி, வீரம், சிங்கி, லிங்கம், வெள்ளை, தொட்டி, பொன்னம்பர், கோழித்தலை கெந்தி, நிமிளை, இராசவர்த்தம், கார்முகில், குதிரைப்பல்லு, பஞ்சபட்சி, எருமைநாத் தொட்டி, கெவுரி இவை பதினெட்டும் பூரணமாய் நிறை சிவசத்தி சரக்காகும்.

இந்த சரக்கை களங்காகவும் சுன்னமாகவும் செய்து களங்குடன் தங்கம் சேர்த்து செந்தூரம் செய்து நவலோகத்தில் கொடுத்தால் மாற்று அதிகம் கிடைக்கும். சரக்கெல்லாம் கட்டும், சூதம் இந்த செந்தூரத்தில் கட்டும். குளிகையுமாகும். (கவனிக்கவும்: பாட்டில் இரண்டு முறை கெவுரி வருகிறது).

### நாதவிந்து சரக்கின் விபரம்

577- 579.அப்பிரகம் நாத சரக்காகும். சூதம் விந்துச் சரக்காகும். பூநீறு நாதம் இதற்கு நேர்விந்து சூடன் நிமிளை நாதம் இதன் நேர் விந்து வெள்ளை, பூனாகம், நாதம் இதற்கு நேர் விந்து வீரம், திருகடத்தின் சலம் நாதம் இதன் நேர் விந்து கடல் நுரை, லிங்கம் நாதம் கல்லுப்பு விந்து, இரும்பு நாதம் இதன் நேர் விந்து க்ஷீரம், நாகவங்கம் நாத சரக்காகும். விந்துச்சரக்கு, பூரமாகும். செம்பு நாதம் இதற்கு விந்து சிலாசத்து காந்தம் நாதமாகும். இதன் விந்து கல்மதம் நாதமும் விந்துவும் ஒன்று சேர்ந்தால் வாதவித்தை எல்லாம் கைகூடும். நாதவிந்தால் தான் இந்த காயமும் உண்டாயிற்று. சித்தி எல்லாம் நாதவிந்தால் ஆயிற்று. அதாவது நாதவிந்தால் தான்சித்தி.

### பஞ்சபூத சவுக்காரச் சுன்ன செயநீர்

580-585. பிரிதிவியின் (மண்ணில்) கூறான கல்லுப்பையும், இந்துப்பையும் சலத்தின் கூறான் நவச்சாரசத்தையும சத்தி சாரத்தையும் வகைக்கு இரண்டு பலம் எடுத்து

ஒன்றாகக்கூட்டி அதனுடன் மலத்தையும் அமுரியையும் வகைக்கு இரண்டு பலம் சேர்க்க வேண்டும். மலம், பிரிதிவியின் (பூமி) கூறு அமுரி அப்பான (நீரின்) கூறாகும்.

பிறகு சரக்கெல்லாவற்றையும் அரைத்து எடுத்து வைத்துக் கொண்டு, தணல் கூறான (தேவியின்) சவுட்டுப்பு, வெடிஉப்பும், வாயுவின் கூறான துரிசையும், வெங்காரத்தையும் வகைக்கு இரண்டு பலம் எடுத்து, நான்கு சரக்கையும் ஒன்றாய்க்கூட்டி, நாதமும் வாய்நீரும் முறைப்பாலும் கூட்டி அரைக்க வேண்டும். (காரமான நாதம் தேய்வுனுடைய கூறாகும்). முன் அரைத்த மருந்தையும், இந்த மருந்தையும் சேர்த்து வைத்துக் கொண்டு, பின்னர் ஆகாச சரக்கான சவுக்காரம் பூரம் இவை இரண்டையும் எடுத்துக் கொண்டு சவுக்காரத்தை சுன்னம் பண்ணி, பூரத்தை அதற்கு சமனாய் சேர்த்து (வகைக்கு இரண்டு பலம் சேர்க்கவேண்டும்) விந்து நீரால் அரைத்து முன் அரைத்து வைத்த மருந்துடன் கூட்டி அரைத்து வில்லை தட்டி அகலில் இட்டு மேல்மூடி போட்டு சீலைமண் செய்து காயவைத்து பத்தெருவில் புடத்தை போட வேண்டும். புடம் போட்ட மருந்தை பீங்கானில் இட்டுப் பனியில் வைத்தால் சரக்கு செயநீராகும் இந்தச் செயநீரை அரக்கால் செய்யப்பட்ட குப்பியில் வைத்து அதன் மேல் வீரத்தைப் பொடி செய்து தூவி பத்திரமாக வைத்துக் கொள்ளவேண்டும். இதன் பெயர் பஞ்சபூத செயநீர்.

செயநீரில் பஞ்சபூத சரக்கை சுருக்கு போடுதல்

586-590: 'மிருதார்சிங்கி, தொட்டி இவை இரண்டும் பிரிதிவியின் கூறாகும். கெவுரியும் குதிரைப் பல்லும் அப்புவினுடைய கூறாம். இந்த நான்கு சரக்கையும் வகைக்கு இரண்டு பலம் ஒவ்வொன்றாக செயநீரில் மூன்று நாள் ஊர வைத்து இரண்டு சாமம் சுருக்கு போட்டு, பொடிபண்ணி நாலு சரக்கையும் பீங்கானில் வைத்துக் கொண்டு, பின்னர் தேய்வுக் கூறான கெந்தகமும் அரிதாரத்தையும் வாயுக்கூறான லிங்கத்தையும் அதற்கு நேர் மனோசிலையும் சேர்த்து செயநீரில் ஊறவைத்து இருசாமம் சுருக்கு போட்டுப் பொடி பண்ணி முன் பொடியில் சேர்த்து பீங்கானில் வைத்துக் கொண்டு அதன் பிறகு சூதத்தைச் சுத்தி செய்து செயநீரில் நான்கு சாமம் சுருக்கிட்டு முன் பொடிக்குச் சமனாகச் சேர்த்து வாய்நீர் முலைப்பால்,, நாதம், சுக்குலம் இவற்றால் நான்கு நாள் அரைத்து வில்லை பண்ணி உலர வைத்துக் கொள்ளவும்.

பிரிதிவியின் கூறான காவிக்கல்லும் அப்பிரகமும் அப்புவின் கூறான சங்கும், முட்டை ஓடு ஆகிய நான்கு சரக்கையும் எடுத்துப் பொடிபண்ணித் தனியாக வைத்துக் கொள்ளவும். தேயுசரக்கான வெண்கல்லும், நிமிளையும் வாயுக்கூறான கல்நாரு, சகஸ்திர. வேதி ஆகிய நான்கு சரக்கையும் எடுத்துப் பொடி பண்ணி முன் செய்த பொடியுடன் சேர்த்து ஆகாசக் கூறான துத்தம் வைக்கிராந்தம் ஆகிய இரண்டும் பொடி பண்ணி அதையும் முன்பொடியுடன் சேர்த்து எல்லாவற்றியும் நன்றாகக் கலந்து அமுரியால் அரைத்து அதைக் கொண்டு முன் உலர வைத்த வில்லைக்கு கவசம் பண்ணி சீலை செய்து அஞ்செருவிற் புடத்தைப் போட்டால் களங்காகும்.

இதை லோகத்தில் நூற்றுக்கு ஒன்று தாக்கினால் பத்து மாற்று உள்ள பொன் கிட்டும். என் வார்த்தையில் ஒளிவு மறைவு இல்லை. இதே போல் பலநூல் உண்டு. அதில் நாதாக்களான குருமார்கள் மறைமுகமாக சொல்லி வைத்தார்கள். ஆனால் நிகண்டுக்குள் வெளிப்படையாகச் சொல்லாமற் போனால் பாவம் வரும் என்று நான் வெளியாக சொன்னேன்.

591-593. மறக்காமல் எலலாவற்றையும் வழிமுறையோடு சொன்னேன். நான் பார்த்தபடி எல்லாவற்றையும் பாடினேன். ஏன் என்றால் படிப்போர் எல்லாம் சித்தராக வேண்டும் என்று எலலாவற்றையும் வெளிபடையாகப் பாடி வைத்தேன். பல நூல்கள் குருமார்கள் மறைபொருளாகப் பாடி வைத்தார்கள்.

காலாங்கி நாதர் தன் நூலில் வெளிப்படையாகப் பாடி வைத்தார். அஞ்சுபூதம் இல்லாவிட்டால் எதுவும் ஆகாது. அண்ட பிண்டங்கள் சராசரங்கள் எல்லாம் இந்த பஞ்சபூதத்தால் ஆனது. சரக்கெல்லாம் ஆக பஞ்சபூதம் வேணும்.

அறுபத்து நாலுசித்தும் இந்த பஞ்சபூதத்தால் ஆகும். ஒவ்வொரு பூதமும் ஒன்றினுள் ஒன்று ஒடுங்கி போகும். பிறகு அவை எல்லாமாகச் சேர்ந்து பராபரத்துடன் இரண்டறக் கலக்கும். இந்த பராபரத்தின் கிருபையால் வாதங்கள் எல்லாம் கைகூடும். பொல்லாத குணங்களை அகற்றி தவமார்க்கத்தில் சென்று கோபத்தைப் போக்கி தவமார்க்கத்தில் செல்ல வேண்டும்.

594. மவுனமாய் இருந்து கொண்டு மூலாதாரத்தில் மனதை வைத்து ஆறு ஆதாரங்கள் ஏறி நுட்பமெல்லாம் அறிந்து கொண்டு கற்பத்தை உட்கொண்டு காயத்தை சித்தி செய்து சிகாரத்தில் மனதை நாட்டி (வஸ்து வைத்து) வாயுவை நிறுத்தி சமாதி யோகத்தில் நின்று மதி அமுர்தம் பருக வேண்டும்.

595-596. வழலையை முதலில் செய்து பின்னர் உப்பாலே சூதத்தைக் கட்டிச் செந்தூரம் செய்து உண்ண வேண்டும். இந்த செந்தூரத்தால் காயம் சித்தியாகும். அதன் பிறகு வரிசையாக எல்லாவற்றையும் நான் சொன்ன முறைப்படி பார்த்து பஞ்சபூதச் சரக்கை அறிந்து கொண்டு அதன் பின்னர் அஷ்டமா சித்தியை பார்க்க வேண்டும். செந்தூரஞ் செய்து குளிகைக்கு பாய்ச்சா விட்டால் குளிகைக்கு மிடுக்கு ஏற்படாது. மனோ வேகத்தில் சஞ்சரிக்க முடியாது. எந்தச் சரக்கையும் குளிகை ஏற்காது. ஆகவே முதலில் செந்தூரம் செய்ய வேண்டும்.

திராவகம்

597-600. வெடியுப்பு நூறு பலம் எடுத்து அதனுடன் சீனம் நூற்றுப் பத்து பலம், சாரம் பலம் பத்து, கல்லுப்பு பலம் பத்து, இந்துப்பு பலம் அஞ்சு, சவுட்டுப்பு பலம் அஞ்சு, சவுக்காரம் பலம் அஞ்சு, வளையலுப்பு பலம் அஞ்சு, கெந்தியுப்பு பலம் அஞ்சு, வாழையுப்பு பலம் அஞ்சு, சத்திசாரம் பலம் அஞ்சு, துரிசு பலம் அஞ்சு, அன்னபேதி பலம் அஞ்சு, அமுரியுப்பு பலம் அஞ்சு, நாயுருவியுப்பு பலம் அஞ்சு, வெள்ளை பாஷாணம் பலம் மூன்று, கெவுரி பலம் மூன்று, தாளகம் பலம் மூன்று, சிலை பலம் மூன்று, இவை எல்லாவற்றையும் கல்வத்தில் போட்டு வெள்ளைச்சாரணையின் சாற்றால் மூன்று நாள் அரைத்து அதை அடிகனத்த தோண்டியில் போட்டு நல்ல பானையால் மேலே மூடி அடுப்பேற்றி எரித்தால் திராவகமானது பானையின் விளிம்பு வழியாக சொட்டும். அதைப் பீங்கானில் வாங்கி அரக்கால் செய்த குப்பியில் பத்திரமாக வைத்துக் கொள்க.

செயநீர்

601-610. சாரம் முப்பது பலம் எடுத்து அதனுடன் வெடியுப்பு, வீரம், கெந்தி, காரியம், லிங்கம், தாளகம், சிலை, சிலாசத்து, கெவுரி, வெண்காரம், செம்பு, நாகம், நிமிளை, சூதம் இவை எல்லாம் வகைக்கு பலம் இரண்டு கூட்டு கல்வத்திற் போட்டு

பொடியாய்ப் பண்ணி கோழி முட்டை வெண்கருவும் எருக்கம் பாலும் சம எடையாகச் சேர்த்துக் கொண்டு, பீங்கானில் விட்டு அதனுடன் அண்ட நீர் பலம் ஒன்று சேர்த்து நன்றாகக் கலக்கி, மூன்று நாள் அசையாமல் வைத்திருக்கவும்.

பின் தெளிந்த நீரை எடுத்து முன் சொன்ன சரக்கை அரைத்து காயவைத்துப் பின்னர் இந்துப்பு, இரும்பு, வங்கம், காந்தம், கிளிஞ்சல், சுக்கான், அண்டவோடு, அப்பிரகம், சவுடு, கடல்நுரை இவை எல்லாம் வகைக்கு இரண்டு பலம் எடுத்து சேர்த்துக் கல்வத்தில் பொடித்துக் கொண்டு அமுரி விட்டு மூன்று நாள் ஊற வைத்துப் புடம் போட நீறும். இந்த நீற்றை மீண்டும் அமுரி விட்டு அரைத்து முன் அரைத்த மருந்துக்கு கவசம் பண்ணி சீலை மண் செய்து காய வைத்துப் பத்தெருவில் புடம் போட காரம் ஏறி குருமருந்தாகும். இந்த குரு மருந்தை பொடி பண்ணி பனியில் வைத்தால் செயநீராகும். இந்த நீரில் வீரம் பொடி பண்ணி போட்டு குப்பியில் அடைத்துப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

**தங்க ரசம், செம்பு ரசம், நாக ரசம், காரீய சரம்**
**இரும்பு ரசம்**

605-606. தங்கம் ஒரு பலம் எடுத்து மெல்லிய தகடாகத் தட்டி அதனுடன் வீரம் ஒரு பலம் சேர்த்து திராவகத்தால் நான்கு சாமம் அரைத்து அரைத்த கல்வத்தைச் சாய்த்தால் தங்கம் ரசமாக விழும்.

அதைப் பத்திரப் படுத்திக் கொள்ளவும். பின்பு செம்புத்தூள் ஒரு பலம் எடுத்து அதனுடன் வீரம் ஒரு பலம் சேர்த்து திராவகத்தால் முன் போல் நான்கு சாமம் அரைத்து ரசமாக வாங்கி முன் செய்த தங்க ரசத்துடன் சேர்த்துக் கொள்ளவும்.

பின்னர் நாகம் ஒரு பலம் வாங்கி அதனுடன் வீரம் ஒரு பலம் போட்டு திராவகத்தால் நான்கு சாமம் அரைத்து ரசத்தை வாங்கி முன் செய்த தங்க செம்பு ரசத்துடன் சேர்த்துக் கொள்ளவும்.

பின்னர் காரீயம் ஒரு பலம் எடுத்து அதனுடன் வீரம் பலம் ஒன்று சேர்த்து திராவகத்தால் அரைத்து ரசத்தை வாங்கி முன் செய்த தங்கம், செம்பு, நாகம் ஆகிய ரசத்துடன் சேர்த்துக் கொள்ளவும். பின்பு இரும்புப் பொடி ஒரு பலம் எடுத்து அதனுடன் வீரம் ஒரு பலம் போட்டு நான்கு சாமம் திராவகத்தால் அரைத்துக் கொண்டு ரசத்தை வாங்கி முன் செய்த எல்லா ரசத்துடன் ஒன்றாகக் கூட்டி வைத்துக் கொள்ளவும்.

(இந்த ஐந்து ரசத்தையம் ஒன்றாகச் சேர்த்தது பஞ்ச லோக ரசமாகும்).

**அப்பிரகம், நிமிளை, காந்தம், சகஸ்திரவேதி, வர்த்தம்**
**இவற்றில் சத்தெடுக்க**

611-620. காந்தம் பலம் பத்து, அப்பிரகம் பலம் பத்து, நிமிளை பலம் பத்து, வர்த்தம் பலம் பத்து, சகஸ்திரவேதி பலம் பத்து, இவை எல்லாம் பொடியாய் பண்ணி சீலையிற் போட்டு கிளிபோற் கட்டி பேழைக்கிழங்குக்குள் வைத்துப் பதினைந்து நாள் ஊறிய பின் எடுத்து உலர வைத்து எடுத்துக் கொள்ளவும்.

வெண்ணை, குன்றி, பொரிகாரம், புரசம் வித்து, இவற்றை எல்லாம் வகைக்கு ஐந்து பலம் எடுத்து எலியாலம் பால் விட்டு அரைத்து மூன்று பங்காய் செய்து ஒரு

பங்குடன் முன் மருந்தை சேர்த்து ஊற வைத்து மறுநாள் சரவுலையில் வைத்து ஊதினால் சத்தாக விழும்.

அந்த சத்தை எல்லாம் எடுத்து அதனுடன் மற்றொரு பங்கைக் கூட்டி உலையில் வைத்து ஊத சத்தெல்லாம் மணிமணியாய் விழும். அந்த சத்துடன் மற்றொரு பங்கையும் கூட்டி உலையில் வைத்து ஊத சத்தாக விழும்.

விழுந்த சத்தை ஐந்து பலம் எடுத்து அதனுடன் வீரம் ஐந்து பலம் கூட்டி கல்வத்தில் இட்டுப் பொடியாய்ப் பண்ணி திராவகத்தை விட்டு இரண்டு நாள் அரைத்து பின் அரைத்த ரசத்தை எடுத்து அதனுடன் பலம் ஒன்று லிங்கம் சேர்த்து ஐந்து பலம் கல்லுப்பும், வேப்பிலை ஐந்து பலமும், போட்டு ஒரு சாமம் அரைத்து சட்டிக்குள் போட்டு ஓட்டையில்லாத சட்டியை மேலே மூடி (நிமிர்த்தி மூடி) வாய் இடுக்கில் மண்ணால் சீலை செய்து, மேல் சட்டி நிரம்ப நீர் வார்த்து அடுப்பேற்றி நான்கு சாமம் தீமூட்டி எரிக்க வேண்டும். எரிக்கும் போது மேல் சட்டியில் உள்ள நீர் வற்றும். நீர்வற்ற வற்ற மேலும் நீர் ஊற்ற வேண்டும்.

நான்கு சாமம் சென்ற பிறகு, ஆற விட்டு எடுத்துப் பார்த்தால், மேல் சட்டியின் அடியில் கரிய நிறத்தில் மணியாய் ஒட்டிக் கொண்டு நிற்கும்.

அந்த மணியை கையால் தேய்த்து எடுத்தால் சிவந்த நிறம் உள்ள சுத்த ரசமாய் கிடைக்கும்.

இந்த ரசத்தை சாரநீரில் சுருக்குப் போட்டு அயக்கரண்டிக்குள் வைத்து நான்கு சாமம் உருக்கி பீங்கானில் எடுத்து வைத்துக் கொண்டு அதில் திராவகத்தை விட்டால் காளான் போல் பொருமிப் போகும், (காளான் போல் வெண்மை நிறமான தட்டு போல் விசிறி நிற்கும்).

அதையெடுத்து பீங்கானில் வைத்துக் கொண்டு துரிசும் சார நீரும் விட்டு மத்தித்து சூரிய வெப்பத்தில் ஏழு நாள் காயப் போட்டு பின்பு வீரம், காரம், சூதம், கெந்தி, சிலை, பூரம், நிமிளை, தாளகம், துத்தம், கெவுரி, லிங்கம், நாகம் இவை பன்னிரண்டு சரக்கையும் வகைக்கு காசு எடை எடுத்து கல்வத்தில் போட்டு சாரனீர் விட்டு நான்கு சாமம் அரைத்து, சூரியனில் காயப்போட்டு மருந்துக்கு கவசம் பண்ணி பிறகு வெடி உப்பு, அப்பிரகம், சூடன், கல்லுப்பு அஞ்சனக்கல் சவுடு, இந்துப்பு படிகாரம், காந்தம், சிங்கி, மாங்கிஷ பேதி, அன்னபேதி, வங்கம், கடல் நுரை இவை எல்லாம் வகைக்கு ஒருபலம் எடுத்து அமுரிவிட்டு அரைத்து (கவசம் செய்து காயப் போட்ட மருந்துக்கு) மீண்டும் கவசம் பண்ணிக் கிளிஞ்சல் சாம்பலுக்குள்ளே வைத்து நான்கு சாமநேரம் எரிப்பாயாக.

621. கெவுரி, நாகம், ராசவர்த்தம், செம்பு நிமிளை, சூதம், வகைக்கு அரைப்பலம் கல்வத்திலிட்டு முதலில் சாரநீரால் நான்கு சாமநேரம் நன்றாக அரைத்து, நவச்சாரக் கட்டிக்குக் கவசம் செய்து மூன்று நாள் காயவைக்கவும்.

622. பிறகு படிகி, துரிசு, காந்தம், இரும்பு வங்கம், இந்துப்பு, நண்டோடு, கிளிஞ்சல், சுக்கான், கடல்நுரை, முட்டைஓடு, அப்பிரகம், சவுடு இவற்றை வகைக்கு அரைப்பலம் எடுத்துக் கொண்டு அமுரிவிட்டு அரைத்து அதை முன் காய வைத்துள்ள கட்டியின்மேலே கவசம் செய்து புளிப் பறணி (புளியோடு) சாம்பலுக்குள் அழுத்தி வைத்து.

623. நான்கு சாமநேரம் தீ எரிக்கவும். ஆறிய பின் எடுத்துப் பார்த்தால் தந்தம் போல் இருக்கும். அதைப் பீங்கானில் எடுத்து வைத்துக் கொள்ளவும். பிறகு ஐந்துபலம் கல்லுப்பு பெருங்கம்பியாக வாங்கிச் சார நீரில் தோய்த்து ஏழுநாள் சூரிய வெப்பத்தில் காய வைக்கவும். இரவு நேரத்தில் வெப்பமான இடத்தில் வைக்கவும்.

624. பின் இந்துப்பு, கல்லுப்பு, சீனம், வெண்காரம், லிங்கம், வீரம், அரிதாரம், கெந்தி, துத்தம், நாகம், கடல்நுரை, நிமிளை இவை எல்லாம் பொடி செய்து சாரநீர்விட்டு நான்கு சாமநேரம் அரைத்து கம்பிமேல் கவசம் பண்ணி சூரிய வெப்பத்தில் காயப்போடவும்.

625. காய்ந்த பின்பு சவுடு, சூடன், வங்கம், இரும்பு, காந்தம், செம்பு, ரசாவர்த்தம், மனோசிலை, கெந்தி, தொட்டிச்சிங்கி, முட்டையோடு, இவற்றைச் சம அளவாக எடுத்துக் கொண்டு நான்கு சாமநேரம் அரைத்து முன் கவசத்தின் மேல் கவசம் பண்ணி பிரண்டைச் சாம்பலுக்குள் வைத்து அடுப்பில் ஏற்றவும்.

626. இரண்டு சாமநேரம் தீ எரித்தபின் எடுத்து ஆறப் போட்டு பார்த்தால் வெள்ளையான எலும்பைப் போல் உப்பு பூத்திருக்கும். இதை எடுத்துப் பீங்கானில் பதனம் பண்ணவும். பிறகு பத்துப் பலம் கல்லுப்பு எடுத்துப் பாக்கு போல் உடைத்துக் கொண்டு சாரநீரில் தோய்த்து சூரிய வெப்பத்தில் காயப்போடவும்.

627. ஏழுநாள் காய வைத்தபின்பு இரும்பு, பூரம், செம்பு, கெந்தி, கெவுரி, நாகம், காரம் நிமிளை, வெள்ளை, அப்பிரகம், லிங்கம், வங்கம், தாளகம் இவ்றறை வகைக்கு அரைப்பலம் எடுத்து அமுரி விட்டு மூன்றுநாள் நன்றாக அரைத்து உப்புக்குக் கவசம் கட்டவும்.

628. பிறகு காரம், வீரம், சவுடு, ரசாவர்த்தம், படிகி, சூடன், காந்தம், அன்னபேதி, இந்துப்பு, சிங்கி ஆகியவற்றை வகைக்கு அரைப்பலம் வீதம் எடுத்துக் கொண்டு பழைய புளி நான்கு பலத்துடன் உரலில் போட்டு இடிக்கவும்.

629. புளியுடன் இடித்ததை வழித்து முன் கவசம்கட்டி வைத்துள்ளதற்கு மேலே கவசம்கட்டி கவசம் உடையாமல் ஏழுபுடம் போட வேண்டும். முதல் புடம் பத்தெருவில், போட்டு பிறகு ஒவ்வொரு புடத்துக்கும் ஐந்து எரு வீதம் கூட்டிக் கொண்டு போடவேண்டும், கடைசியாகப் புடம் போட்டபின் எடுத்துப் பார்த்தால் தந்தம்போல் இருக்கும். உருக்கினால் கரியில் கண்விட்டு ஆடும். அதைப் பீங்கானில் எடுத்து வைத்துக் கொண்டு,

630. ஐந்துபலம் சீனம் எடுத்து சாரநீரில் தோய்த்து, ஐந்து நாள் சூரிய வெப்பத்தில் காயப்போடவும். நிமிளை, அப்பிரகம், காந்தம், இரும்பு, நாகம், வங்கம், வகைக்கு அரைப்பலம் சேர்த்து அமுரிவிட்டு ஆட்டி சீனத்திற்குக் கவசம் கட்டவும்.

631. பின் முட்டை ஒடு, சுக்கான் கல், கற்பூர சிலாசத்து, கிழிஞ்சல், சங்கு இவற்றைச் சுன்னமாகச் செய்து முன் கவசத்தின் மேலே கவசம் கட்டிப் பத்து எருக்களில் ஐந்து புடம் போட வேண்டும். ஐந்தாவது புடம் முடிந்த பின் எடுத்துப் பீங்கானில் வைக்கவும். இனி சவர்க்காரம் செய்ய வழியைக் கேள்.

632. பூநீறு பத்துப்படி ஒரு மண் பாண்டத்தில் போட்டு மனிதமூத்திரம் இருபது படி விட்டு நன்றாகக் கலக்கிக் கொள். கல்சுன்னம் ஐந்துபடி வேறொரு பாண்டத்தில் அளந்து போட்டு பத்துப்படி அமுரி விட்டுக் கலக்கி வைத்துக் கொள்.

633 கற்சுன்னத்தில் பாதி கல்லுப்பு வேறொரு பாண்டத்தில் போட்டு ஐந்துபடி அமுரி விட்டுக் கலக்கி வைத்துக் கொள் மூன்று நாள் அப்படியே வைத்திருந்து நான்காம்நாள் மூன்று பாண்டத்தில் உள்ளதையும், தெளிவாக இறுத்து வாங்கி ஒரு பாண்டத்திலிட்டு அடுப்பில் ஏற்றவும்

634. கமலாக்கினியாக அடிப்பற்ற விடாமல் அகப்பையால் துழாவியபடி எரித்து உப்புத் திரளுகிற பருவத்தில் ஒருபடி நல்லெண்ணெய் வார்த்து எரித்துப் பாகு பதத்தில் வாயகன்ற சட்டியில் ஊற்றி ஆற விட்டுக் கத்தியால் சீவி நெல்லைப் போல் காயப்போடவும்.

635. காய்ந்தபின்பு பாக்குப்போல் சீவிக் கொண்டு, மல்லிகை இலைகளைக் கனமாகப் பரப்பி அதன்மேல் வைத்து மேற்புறமும் மல்லிகை இலைகளால் மூடி, ஒரு துணியில் பொதிந்து வைத்து, ஒரு சட்டியில் நெல்லைப் போட்டு அதன் மேல் வைத்து மேலேயும் நெல் போட்டு மேல் சட்டி கொண்டு மூடி புழுங்க வைக்கவும். ஆவி வந்தவுடன் எடுத்து சூரிய வெப்பத்தில் காயப் போடவும்.

636. காய்ந்தபின்பு சீவலாக்கி மூன்று முறை வேக வைத்து எடுத்துப் பின் சீயக்காய் இலைக்குள் வைத்து மூன்று தரம் அவித்து எடுக்கவும். பிறகு அதைக் குளிர வைத்து ஒரு துணியில் கிழி கட்டிக் கொள்ளவும். கற்சுன்னம் கொஞ்சம் எடுத்து தயாராக வைத்துக் கொண்டு, ஒரு இரும்புத் தகட்டின் நடுவில் நூறு துளை போட்டு வைத்துக் கொள்ளவும்.

637. பூவன் பழம் வாங்கி நன்றாகப் பிசைந்து அமுரியில் போட்டுக் கொதிக்க வைத்து ஒரு வாயகன்ற பாண்டத்தில் விட்டு அதில் பாதிவரை கற்சுன்னம் போட்டு அதன் மேல் முன் கட்டிவைத்துள்ள கிழியை வைத்து மேலே கற்சுன்னத்தைப் போட்டு மூடி துளையிட்ட இரும்புத் தகட்டால் சட்டியின் வாயை மூடி அமுரிவிட்டு மேல் சட்டி கொண்டு மூடி நீற்றவும்.

638. ஆறிய பின் எடுத்து வேறொரு துலையில் சுற்றிக் கல்சுன்னத்தால் மூடி மறுபடியும் நீற்றவும், இம்மாதிரிப் பதினொரு முறை நீற்றவேண்டும். சவர்க்காரம் கிட்டும். அதிலிருந்து திராவகத்தை வாங்கவேண்டும்.

**சவர்க்காரச் சுன்னம்**

639. திராவகத்தால் அரைத்து வில்லை கட்டி வெயிலில் உலர வைத்து, மல்லிகை இலையும் வேரும் மல்லிகைப் பூச்சாறு விட்டு நன்றாக இடித்து ஒரு சட்டியில் பரப்பி வைத்து அதன் மேல் சவர்க்கார வில்லைகளை வைத்து மேலேயும் மல்லிகையும் இலையும் வேரும் அரைத்ததைப் போட்டு மூடி சீலை மண் செய்து,

640. இருபது எருக்களால் புடம் போடவும். புடம் ஆறியபின் வில்லைகளை எடுத்துக் கொள். சீயக்காயை எலுமிச்சம் பழச்சாறுவிட்டு மைபோல் அரைத்துக் கொண்டு பின் திராவகத்தால் அரைத்து வில்லை பண்ணி சீயக்காய்க்குள் வைத்து மேலே மூடிப் புடம் போடவும்.

641. பூவம் பழத்தை எலுமிச்சம் பழச்சாறு (விரையில்லாமல்) விட்டு மைபோலரைத்துக் கொள்ளவும். முன் செய்த வில்லைகளைத் திராவகத்தாலரைத்துக் கொள்ளவும். சட்டியில் மேலும் கீழும் அரைத்த பூவம் பழத்தை வைத்து அதன் நடுவில் மருந்தை வைத்து நாற்பது எருவால் புடம் போட்டு ஆறியபின் எடுத்துக் கொள்.

642. பிறகு கடுங்காரச் செயநீர் குத்தி நன்றாக அரைத்து வில்லை தட்டிக் காயவைத்துப் பொடித்து முட்டை ஓட்டுக்குள் வைத்துப் புடம் போட்டு எடுத்துக் கொண்டு மறுபடியும் கடுங்காரச் செயநீர் குத்தி இலேசாக வில்லை தட்டி சுண்ணாம்பு முப்பு பொடி செய்து அதற்குள் போடவும்.

643. புடம் போட்டு ஆறியபின் எடுத்து மறுபடியும் கடுங்காரச் செயநீர் குத்தி நன்றாக மெழுகுபோல் அரைத்து இலேசாக வில்லை தட்டிக் காயவைத்து பஞ்ச சுன்னக் குகையில் வைத்துப் புடம் போடவும். பிறகு கடுங்காரச் செயநீரால் அரைத்து மறுபடியும் பஞ்ச சுன்னக் குகையில் வைத்து எரிக்கவும்.

644. நான்கு சாமநேரம் கமலம்போல் தீ எரித்துபின் ஆற விட்டு எடுத்துப் பார்த்தால் சவர்க்காரம் வெண்ணீறு போல் இருக்கும். அதன் வேதைத் திறன் சொல்ல முடியாது. அதில் எல்லாச் சித்திகளும் அடங்கியிருக்கும் பீங்கானில் எடுத்து வைத்துக் கொள்.

645. இரண்டு பலம் சவர்க்காரத்தோடுச் சரிக்குச்சரி சாரம் சேர்த்து நான்கு சாமம் ஆட்டி முட்டை ஓட்டிலிட்டுப் பத்தெருவில் புடம்போட்டு எடுத்துப் பீங்கானில் வைத்து பனியில் வைத்தால் பலபலவெனச் செயநீராகும். அதில் வீரம் போட்டு வெள்ளைப் பாஷாணத்துக்குச் சுருக்குக் கொடுத்தால் கட்டியாகும்.

646. அதே போல் கௌரி பாஷாணத்துக்குச் சுருக்குக் கொடுத்து கட்டியாகச் செய்து கொள். கந்தகம், குதிரைப்பல் பாஷாணம், தாளகம், மனோசிலை, அப்பிரகம் ஒவ்வொன்றையும் கட்டியாகச் செய்து கொண்டு வெண்கருவால் அரைத்துக் கவசம் செய்து உமிப்புடம் போட்டு எடுத்துக் கொள்.

இரண்டுபலம் சவர்க்காரச் சுன்னம், இரண்டுபலம் இந்துப்பு, இரண்டு பலம் சாரம்.

647. மூன்றையும் பொடியாய்ச் செய்து கடுங்காரச் செயநீர் குத்தி நான்கு சாமநேரம் நெகிழ அரைத்துப் புடம் போடவும். ஆறியபின் எடுத்துப் பீங்கானில் கொட்டிப் பனியில் வைக்கச் செயநீராகும். பிறகு சூடன், பூரம் இரண்டையும் சமஎடை எடுத்துக் கொண்டு தனித்தனியாக பீங்கானில் வைக்கவும்.

648. செயநீரும் பூரமும் சமமாக நிறுத்துக் கலந்து நிழலில் மூன்று நாட்கள் உலர்த்திக் கொண்டு, வெயிலில் ஐந்து நாள் காயவைக்க முப்பாகும். அதை ஊமைக்குப்பியில் போட்டு சுண்ணாம்புச் சீலைசுத்தி மணல் மறைவில் புடம் போடவும்.

649. அப்படி எடுத்த பூரம், சூடன் இரண்டும் உன்னதமான குரு ஆகும். இந்தச் சுன்னத்தின் வேதை சொல்ல முடியாது. கடல்நுரையை கற் சுன்னநீரால் அரைத்து ஊதச் சுன்னமாகும். கற்பூரச் சிலை மேலே கற்சுன்னக் கவசம் கட்டி கரியில் வைத்து ஊதச் சுன்னமாகும்.

650. கல்நார், கருடப் பட்சிக்கல் இவற்றையும் இப்படியே ஊது. முட்டை ஓட்டை எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து இலேசாக் வில்லை தட்டி கல் ஓட்டில் அப்பி ஊதி அதில் பவளத்தை வைத்துப் புடம் போட்டுச் சுன்னம் செய்து கொள்.

**வீர வைப்பு**

651. தங்கச் சூதம், நாகச் சூதம், இரும்புச் சூதம், பித்தளை சூதம், வகைக்கு ரெண்டு பலம், உபரசங்களின் சூதம் பத்துப்பலம், லிங்கத்தின் சூதம் இரண்டு பலம், இவற்றோடு துரிசு இரண்டு பலம்.

652. சாரக்கட்டு, வெடியுப்புக்கட்டு, கல்லுப்புக்கட்டு, சீனக்கட்டு, வகைக்கு இரண்டு பலம், சீனம் சவுக்காரச் சுன்னம், பவளச் சுன்னம், சூடன் சுன்னம், பூரச் சுன்னம். கற்பூரச் சிலைச் சுன்னம்.

653. கல்நார்ச்சுன்னம், அண்டோட்டுச் சுன்னம், கடல்நுரைச் சுன்னம், அன்னபேதிச் சுன்னம், வகைக்கு இரண்டு பலம், பொன்னம்பர், சத்திச்சாரம், மிருதார்சிங்கி,

654. தொட்டிப் பாஷாணம், அஞ்சனக்கல், துத்தம், இந்துப்பு, கெந்தகம், தாளகம், மனோசிலை, வகைக்கு இரண்டு பலம் வீதமும், குதிரைப்பல், கெவுரி, வெள்ளைப் பாஷாணம் ஆகியவை வகைக்கு ஒருபலம் வீதமும் போட்டு.

655. எல்லாவற்றையும் பொடி செய்து, திராவகம் விட்டு ஐந்து நாள் ஆட்டி கரும்பீங்கானில் போட்டு வறுத்து எடுத்துக் கொண்டு குப்பியில் பாதி வரை போட்டு அஞ்சுநாள் சென்றபின் வாலுகையில் ஏற்றி ஏழுநாள் தினசரி நான்கு சாமநேரம் கமலத்தியாக எரித்துப்பின்,

656. ஏழாம் நாள் தீயை ஆற்றி ஆறியபின் எடுத்துப் பார்க்க மாதுளம் பூப்போல் வீரம் அடியில் நிற்கும். அதில் சவ்வாது இட்டு மத்தித்துக் கொண்டு நவலோகத் தகட்டில் பூசிக் காய்ச்சினால் ஐம்பது மாற்றுப் பொன் கிடைக்கும்.

657. இதைப் பொன் தகட்டில் பூசி வாட்ட சிவந்து சுத்தமான செம்பாகும். வெள்ளியில் ஆயிரத்துக்கொன்று கொடுத்தால் பதினைந்து மாற்றாகும். இந்த வீரம் மற்ற எல்லாச் சரக்குகளையும் உள்ளே இழுத்துக் கொள்ளக் கூடியது. இதைக் கொண்டு குளிகைக்குச் சாரணை கொடுத்தால் விண்ணில் சஞ்சரிக்கலாம். இதைச் சாரணை கொடுக்காவிட்டால் விண்ணில் சஞ்சரிக்க முடியாது.

658. கஷ்டப்பட்டு இந்தமாதிரித் தொழில் செய்யாதவர்களுக்கு வாதம் எதற்கு? வைத்தியம் எதற்கு? சித்தி எதற்கு? குளிகை எதற்கு? யோகத்தில் உறுதி எவ்வாறு ஏற்படும்? குண்டலியை எவ்வாறு எழுப்ப முடியும்? எதுவுமே நடவாது என்றபடி.

659. வழலையின் போக்குக் கோடியாகும். உப்பிலே விந்தை கோடி, துரிசினால் குளிகை வகை கோடி. சோரத்தினால் உண்டாகும் கட்டுக்கள் கோடி. சீனத்தினால் சுன்னங்கள் கோடி. கெவுரியினால் செந்தூரங்கள் கோடி. பாஷாணங்களால் உண்டாகின்ற வாத வித்தைகளைப் பற்றிச் சொல்லவே முடியாது.

660. ஒரு பலம் நாகத்தைத் தகடாகத் தட்டிக் கொண்டு, ஒருபலம் வீரத்தைச் செயநீரால் அரைத்து அதன்மேல் பூசி, ஓட்டிலிட்டுப் புடம் போட்டால் அது பொருமிச் சுன்னமாகும், நவலோகத்தில் ஆயிரத்துக் கொன்று கொடுக்க ஏமமாகும்.

661. அயத்தகட்டுத் துண்டுகள் நான்கு பலம், வெண்காரம் நான்கு பலம், வீரம் ஒருபலம் சேர்த்து ஆதளையின் பால்விட்டு அரைத்து வெயிலில் காயப் போட்டால் எல்லாம் கலந்து மெழுகு ஆகும். அதைக் குகையில் வைத்துச் சில்லால் மூடி உருக்கினால் செய நாகமாகும்.

662. அந்த நாகத்தினால் சூதம் கட்டும். அதைச் செந்தூரம் பண்ணினால் அதன் வேதை கோடிக்கு ஓடும்.

தங்கம் நாலுபலம் எடுத்துத் தகடாய்த்தட்டி, நாலுக்கு ஒன்று- ஒருபலம் வீரத்தை செயநீரால் அரைத்து அதன்மேல் பூசி வச்சிரக் குகையில் வைத்து உருக்க ஆயிரம் மடங்கு வேதை உடைய நாகமாகும்.

663. வீரம், புனுகு, சீனம் மூன்றையும் வாய்நீரால் மத்தித்துக் கொண்டு தகட்டின் மேல் பூசி ஏழுநாள் வெயிலில் போட்டு எடுத்து பஞ்ச சுன்னக் குகையில் வைத்து ஊதச் சுன்னமாகும். மிகவும் உயர்ந்த குருமுறையாகும் இது.

664. இந்த குருவால் சூதம் கட்டும் எல்லாவகைச் சத்துக்களுடனும் நன்கு சேரும். இதனால் நிர்க்குணத்தின் (பரம் பொருளான கடவுளின்) வழியும் தோன்றும். தாயின் சிலம்போசை கேட்கும். பரிபாஷைச் சொற்களின் பொருளெல்லாம் தோன்றும். தாயே முன்னால் வந்து கூறுவாள்.

665. இந்த குருவை விராலித்தழையுடன் போட்டு இடித்துச் சாறு எடுத்துக் கொண்டு (விராலித்தழை சாறு வராத தழைகளில் ஒன்று) அதில் வங்கத்தை உருக்கிச் சாய்த்தால் இருபத்தைந்து மாற்று உள்ள வெள்ளியாகும். வெண்கலத்தை உருக்கிச் சாய்த்தால் பதினாறு மாற்று வெள்ளியாகும். இரும்பைக் காய்ச்சித் தோய்த்தால் அதர் அதராக நொறுங்கி வீழும்.

666. நொறுங்கிய இரும்புத் தூள்களை எடுத்து ஒன்று சேர்த்து அதற்குக் கவசம் கட்டி உருக்கினால் ஈயமாகும். காந்தத்துக்குக் கவசம் கட்டி உருக்கினாலும் ஈயமாகும். உபசரங்கள், பாஷாணங்கள் எல்லாம் ஈயமாகும். உப்புக்கள் சத்தாக மாறும், இவையெல்லாம் வீரத்தால் உண்டாகும் வேதைகளாம்.

667. வீரத்தின் போக்கைச் சொல்வதற்குச் சிவபெருமானாலும் முடியாது. ஆத்தாளும் அறிய மாட்டாள். செயவீரத்தை விட்டார் பேரண்டப் பதத்தை அடைய முடியாது. காற்றுமண்டலத்திலேயே இடி தாக்கிக் கொன்றுவிடும். குளிகையும் வசமாகாது. சத்துக்களும் பயன் படாமல் போய்விடும்.

668. செயவீரத்தை விட்டால் எதுவுமே நடைபெறாது. குளிகை சத்துக்களை ஏற்காது. குளிகையால் வேதை உண்டாகாது. சுரூப மணி செய்யவும் முடியாது. செயவீரத்தைச் செய்தால் மட்டுமே அறுபத்து நான்கு சித்துக்களும் ஆட முடியும்.

சிவப்பு நவாச்சாரம்

669. பத்துப் பலம் நவாச்சாரம் எடுத்து காட்டாமணக்கின் பால் விட்டு ஆட்டி, நன்றாக அரைத்து வெயிலில் போடு. ஏழுநாள் திரும்பத் திரும்ப அரைத்து அரைத்து வெயிலில் போட வேண்டும். நன்றாகக் காய்ந்தபின்பு பொடிபண்ணி ஒரு பாத்திரத்தில் எடுத்தக் கொள்.

670. கல்லுப்பு, படிகி, இந்துப்பு, வளையலுப்பு, இரும்பு, காந்தம், வங்கச்சுண்ணம், சுக்கான் சுன்னம், முட்டை ஓட்டுச் சுன்னம், சிலாசத்துச் சுன்னம், கடல்நுரை, அப்பிரகம், சவுடு, காரீயச் சுன்னம், கிளிஞ்சற் சுன்னம்.

671. வகைக்கு இரண்டு பலம் எடுத்துச் சேர்த்து நன்றாகப் பொடிபண்ணி ஒரு தோண்டியில் போட்டு முன் எடுத்து வைத்துள்ள சாரப் பொடிமேல் வைத்து மேல்

தோண்டிக்கு மண்பூசி அடுப்பேற்றி ஆறு சாமம் தீ எரித்து ஆறவிடு. கீழே இருந்த சாரம் மேலே ஏறி, தோண்டியில் பற்றிக் கொண்டிருக்கும்.

672. அதை மயிர்க்கற்றையால் (பிரஷ்) துடைத்து எடுத்துக் கல்வத்தில் போட்டு ஆதளைப் பாலால் ஆட்டி வெயிலில் காய வைத்து தோண்டியிலுள்ள மருந்தின் மேல் வைத்துச் சீலை மண் செய்து அடுப்பில் ஏற்றி எரிக்கவும்.

673. ஐந்து சாமநேரம் எரித்தபின் இறக்கி ஆறவைத்து மறுபடியும் ஆதளையின் பால் விட்டு ஆட்டி அடுப்பேற்றி எரிக்கவும். இவ்வாறு ஐந்துமுறை செய்து பதங்கத்தை எடுத்துப் பத்துப் பலம் நிறுத்துக் கொண்டு அதனுடன் சூதம் பத்துப்பலம் தங்கம் ஐந்து பலம் சேர்த்து தாய்ப்பாலால் அரைக்கவும்.

674. மூன்று நாள் அரைத்துப் பொடி செய்து கொண்டு அதில் பாதியை காசி என்ற மேருவில் ஏற்றி வாலுகையில் வைத்து விடாமல் பதினாறு சாமம் தீயை எரிக்கவும். ஆறியபின் எடுத்துப் பார்த்தால் உதய சூரியனைப் போல் நிறம் காணும். அதை எடுத்துப் பீங்கான் பரணியில் மூடி வைத்துக் கொள்.

675. இந்த செந்தூரத்தில் எள்ளின் இடை பாலுடன் உட்கொண்டு பத்தியமாக இருந்தால் உன் உடம்பிலிருந்த நீங்காத நோயெல்லாம் நீங்கிப் போகும். உடம்பில் உள்ள ஆறு தலங்களையும் காணலாகும். சுக்கிலம் கீழே இறங்காது. உடல் வச்சிர காயமாகும்.

676. இந்தச் சாரத்திற்கும் பைகம்பச் சாரமென்று பெயர். ஏகம்பச் சாரமென்றும் பெயர். கிளி (தத்தை) மூக்கென்றும் பெயர். இதன் ஆட்டத்தை அறிய அரனாலும் முடியாது. ஆத்தாளாலும் முடியாது.

677. இந்தச் சாரத்தில் ஆயிரத்துக் கொன்று வீதம் (மற்ற உலோகங்களுக்கு) கொடுத்தால் பதினாறு மாற்றுத் தங்கமாகும். கரண்டியில் பாதரசத்தை எடுத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டுக் காய்ச்சும் போது சிறிதளவு சாரத்தைத் தூவினால் சூதம் வீரிட்டு அலறியபடி மடியும் அதை மணி பண்ணி வைத்துக் கொண்டு செபம் செய்தால் சித்திகள் யாவும் கைகூடும்.

678. இந்த மணிக்கு நாலுக்கு ஒன்று ஆடகம் என்ற தங்கத்தை உருக்கிக் கொடுத்து இரண்டும் சேர்ந்து உருகும் போது சூதத்தின் எடை சுத்தித்த நாகமும் நாகத்தின் எடை காரீயமும், போட்டு எல்லாம் சேர்ந்து உருகிக் கண்விட்டு ஆடும்போது கெந்தமும் போடு. களங்கு ஆகும். இந்தக் களங்கை நவலோகத்தில் ஆயிரத்துக் கொன்று கொடுத்தாலே வேதையாகும்.

**காசிச் சார வைப்பு**

679. கட்டினங்களுக்கும் வேதைக்கும் உறுதியான சார வைப்புக் கூறுகிறேன்.

ஒரு பதக்கு பூநீறு வாரி பாண்டத்தில் போட்டு இரு தூணியளவு கழுதை மூத்திரம் அளந்து வார்த்துக் கலக்கி மூன்று நாள் வைத்திருந்து நாலாம் நாள் தெளிவை இறுத்து எடுத்துக் கொள்.

680. அதை ஒரு பாண்டத்தில் வார்த்துக் காயவைத்துக் குழம்பான பதத்தில் எடுத்துக் கொண்டு

சீனம் ஐந்து பலம், வெடியுப்பு ஐந்து பலம், சாரம் ஐந்துபலம் பொடி பண்ணிக் குழம்பில் போடவும்.

681. போட்டு நன்றாக வற்றக் காய்ச்சி எடுத்துப் பொடி பண்ணி காசியென்ற மேருவில் ஏற்றி வாலுகையில் வைத்துத் தீ எரிக்கவும். நான்கு சாமம் எரித்த பின்பு ஆறவிட்டு குப்பியை உடைத்து எடுத்தால் சாரக்கட்டு கிடைக்கும். இதன் வாதத் திறமை மிகவும் அதிகம்.

துரிசிக்குரு

682. ஐந்துபலம் காரம், ஐந்துபலம் சாரம் கல்வத்தில் போட்டுக் கடுங்காரச் செயநீர்விட்டு எட்டுசாம நேரம் நன்றாக அரைத்து சிறுசிறு வில்லைகளாகச் செய்து மணல் மறைவில் புடம் போடவும், அதை எடுத்துப் பனியில் வைத்தால் செயநீராகும்.

683. அந்தச் செயநீரில் பணவிடை வீரம், பணவிடை பூரம் பொடித்துப் போட்டுக் கலக்கிக் கொண்டு துரிசைத் தோய்த்துத் தோய்த்துக் காயப் போடவும். இவ்வாறு ஏழு நாள் செய்ய வேண்டும். பிறகு ஐந்து காசெடை சூடம், ஐந்து காசெடை வீரம், ஐந்து காசெடை கந்தகம் சேர்த்து அரைத்து அந்தத் துரிசின் மேல் பூசவும்.

684. அது உலர்ந்த பின்பு கற்சுன்னத்தால் சீலை செய்து காய வைத்து வெள்ளீயக் குகையில் வைத்து உருக்கி முன் செய்த செயநீரில் தோய்க்கவும். ஏழுதரம் தோய்த்தபின் பத்து எருவில் புடம் போட்டு எடுத்துப் பார்த்தால் குருவாகி இருக்கும்.

685. இந்த குருவை விராலி இலையுடன் சேர்த்து இடித்து ஒரு சாம நேரம் வைத்திருந்து பிழிந்து எடுத்து இரும்புச் சட்டியில் வார்த்து சுத்தித்த சூதம் ஒரு பலம் நிறுத்து விட்டு அடுப்பேற்றி எரித்தால் சூதம் வெண்ணெயாகும். அதை வழித்தெடுத்து உருட்டித் தண்ணீரில் போடவும்.

686. பிறகு அதை சூடன் பற்ற வைத்த தீயில் வாட்டி கரண்டியில் எண்ணெய் குத்தி உருக்கிச் சாரணை கொடுத்தால் கண் இமைக்கும் நேரத்திற்குள் தொலை தூரம் பாய்ந்து ஓடும். இதனுடன் தங்கமும் கெந்தகமும் சேர்த்து வாலுகையில் வைத்து எரித்துச் செந்தூரம் செய்து உட்கொண்டால் கற்பாந்த காலம் வாழலாம்.

687. இந்த குருவுக்கு ஒப்பான தென்று சொல்ல வேண்டுமென்றால் வடவாக்கினியைச் சொல்லவேண்டும். திரிபுரத்தை எரித்த சிவனைச் சொல்ல வேண்டும். பஞ்சாக்கினி ருத்திரன் என்றும் பாசுபதாஸ்ரம் என்றும் சொல்ல வேண்டும்.

சார வைப்பு

688. யானை, குதிரை, கழுதை, ஆடு, மாடு, ஒட்டகம் இவற்றின் மூத்திரங்களைச் சம அளவாகச் சேர்த்து அதற்கு எட்டில் ஒன்று சூடனும், சீனமும் கூட்டிப் பாண்டத்திலிட்டு எரிக்கவும்.

689. எரித்துக் கட்டியானபின் பொடி செய்து ஒரு வாய் குவிந்த பாண்டத்தில் அரை வாசி வரை போட்டு சில்லிட்டுச் சீலைசெய்து அடுப்பேற்றி ஐந்து நாட்கள் கமலாக்கினியாக எரித்துப் புடம் போடவும். ஐந்தாம் நாள் உடைத்துப் பார்த்தால் சாரம் பலகை போலாகும்.

690. இந்தச் சாரம் உப்பால் கட்டப்படும். சீனச்சுன்னத்தால் கட்டப்படும். துரிசிச் சுன்னத்தால் கட்டு ஆகும். வங்கச் சுன்னத்தாலும் கட்டு ஆகும். நிமிளைச் சுன்னத்தால் கட்டு ஆகும். இதனால் சகல வாதங்களும் சித்தியாகும். இதைக் கட்டினால் மற்ற சரக்குகள் யாவும் சாகும்.

**அஞ்சாங் காய்ச்சல் வெடிஉப்பு செயநீர்**

691-698. உப்புக்காற்றின் பலத்தால் மண் சுவர்கள் பூப்போல் பூத்து உதிர்ந்து விழும். அந்த மண்ணை எடுத்து வந்து ஒரு பானையில் போட்டு தண்ணீர் கொட்டி, தெளிந்தபின் நீரை வாங்கி குருது கட்டிய பானையில் விட்டுக் காச்சி உப்பாக செய்து அந்த உப்பை எடுத்து வேறொரு பாண்டத்தில் போட்டு ஒரு பங்கு உப்புக்கு நான்கு பங்கு தண்ணீர் என்ற விகிதத்தில் தண்ணீர் வார்த்து வடிகட்டி தேசிச்சார் மோர் இவை இரண்டையும் விட்டு அடுப்பில் வைத்து பொங்காமல் காய்ச்சி அந்த நீரை ஒரு சொட்டு தென்னை அல்லது பனை ஓலையில் விட்டால் உறையும். இந்த பதத்தை பார்த்து எடுத்து மீண்டும் முன்போல் காய்ச்ச வேண்டும். இவ்வாறு அஞ்சு தரம் செய்தால் கம்பி போல் ஆகும்.

**கம்பி உப்பு சுன்னம் (வெடிஉப்பு சுன்னம்)**

இந்தக் கம்பி உப்புடன் ஒரு பழம்புளி சேர்த்து ஒன்றாக இடித்து புதுச்சட்டிக்குள் வைத்து சாமம் ஒன்று எரித்தால் சுண்ணாம்பாகும்.

இதுபோல் அஞ்சு முறை செய்தால் நல்ல சுன்னமாகும்.

இந்த சுன்னத்திற்கு சரிஎடை வெடி உப்பு சேர்த்து பழச்சாற்றில் நாலு சாமம் அரைத்து வில்லை செய்து உலர வைத்து அகலில் இட்டு எரித்து வாங்கி மீண்டும் அந்த எடைக்கு வெடிஉப்பு சேர்த்துப் பழச்சாற்றால் அரைத்து எரிய விட்டு வாங்கி மீண்டும் வெடிஉப்பு பழச்சாற் சேர்த்து முன்போல் செய்யவேண்டும்.

இவ்வாறு பத்து விசை செய்து பின்னர் இதனுடன் சூடன், சீனம், கல்லுப்பு, துரிசு, பூனீறு இவை எல்லாம் வகைக்கு ஒரு காசு எடை எடுத்து பழச்சாற்றால் நான்கு சாமம் அரைத்து அகலில்விட்டு சீலை செய்து புடம் போட சுன்னமாகும்.

இந்தச் சுன்னத்தை பீங்கானில் போட்டு பனியில் வைக்க செயநீராகும். இந்தச் செயநீரால் நாகம், வங்கம் மற்று லோகங்கள் கட்டும். அயம் உருகி கண் விட்டாடும், உபரசங்கள் சத்தாகும். மெழுகாகும். சரக்கெல்லாம் மெழுகாகும் சத்தாகும். சகலவிதமான சூட்சங்கள் எல்லாம் வெளியாய் நான் இந்த நிகண்டிற்குள் சொன்னேன். அம்பினுடைய கூர்மைப்போல் சகலவிதமான மருந்துகளையும் கற்பங்களையும், காய சித்தியையும் சொன்னேன். பிறகு கடை மருந்தின் பேர் எல்லாம் சொல்கிறேன் கேள்.

699. சுண்டி, கால்வீதம், விசுவம், நாகம், பேஷம், கற்பத்திரஞ் சிறுக்கி, தாத்திரிபஞ்சாதகம், உறப்பு, கசப்பு, திரிதோஷ மானி இவை எல்லாம் சுக்கின் பேராகும்.

700. திரைபோக்கி, மரிசி, வலசம், திட்சணம், துவனம், சியாமம், மூஷ்ணம், பத்துவநேஷம், கோலகம், சரநுந்தனி, வாதஅறுகி இவை எல்லாம் மிளகின் பேராகும்.

701. தேசாபுரமூலம், திப்பிலி மூலம், நறுக்கு மூலம், கோல் மூலம், கடுங்கிரந்தி முஷ்ணம், வாத நாசினி, மூலம். கிரந்திகம், கண்டு போன்றவை திப்பிலி மூலப் பேராகும்.

702. திட்சணதண்டுலகம், பாளாக்கி சபலம், பெருத்தசவுண்டி, சியமாமுபகுல்லியம், வையதெக்க கோலன், வாதகுணதிரிதோஷ நாசனி, கோழையறுக்கும் சூரன் இவை எல்லாம் ஆனைத் திப்பிலியின் பேராகும்.

703. மாருதசிபலம், சமுதிட்டம், தங்கிரணம், கிறுதிமாசம், கெசகணம், கரிகண் ரவி, கபாலகம், அதிகேசபிப்பிலி, வாதநாசனி இவை எல்லாம் ஆனைதிப்பிலியின் பேர்.

704. சவ்வியம், கோலவல்லீரம், மாங்கெந்தா, கண்டீரம், கருஷ்ணி, மாந்திரமகத்து, மதீரனா, சிலேத்துமம் போக்கி, வாதகோபசமனி என்டவை செவ்வியத்தின் பெயர்களாம்.

705. கொடிசோதி, காந்தம், பகப்பாதி, பாவிபாளி, தருணாக்கினி, சுவாலினி, வாளாச்சிகை, சுபமுக்கா என்பவை சித்திரமூலத்தின் பெயர்கள்.

706. கானகக்கறுப்பி, ஆலகால விஷ நிறுத்தி, அடங்காத் தணலி, கனலி, சீலைமண் பேதிச்சி, ஓலைத்திரட்சி, நீலக் கொடிவேலி என்பவை கருப்புக் கொடிவேலியின் பெயர்கள்.

707. அசமதாகம், அசமோக இப்பியகம், துசமோதஞ்சுவரி, கோக்கிற்கெந்தம், குன்மத்தை போக்கி, மகாதீபனி, புசவன், செடத்தின் கிருமி போக்கி, வாத கபசமனி போன்றவை ஓமத்தின் பெயராகும்.

708. திந்திருணி, விருட்சமலம், வம்பிலிசஞ்சா, சுக்கிலகம், திகைசசாயா, சாயாமிலே, மிலாமலம் போன்றவை எல்லாம் புளியுனுட பெயர்களாகும்.

709. சக்கிரவீரியம், வேக்கா, காமிலோமலம், பீசாமலம், ரத்தசத்பேதி, தீபணம், ருசிகரம், உப்புக்கு உறுதியாஞ் சுண்ணமானோன், கபவாத அரி என்பவை கொறுக்காய்புளியின் பெயர்கள்.

710. துத்தாரபலம், மெத்திபம், சியமசாரி, காசரபகுஞ்சி, குஞ்சிகா, பிறத்திவிதாயாம், பித்த நர்சனி இவை எல்லாம் சீரகத்தின் பேராகும்.

711. காளி, கோகாரசோதினி, க்ருஷ்ண சாசி, சூலக்கினி, சோபகுஞ்சி, சாளிகாரணபானி போன்றவை சீரகத்தின் பேராகும்.

712. சதகுப்பையின் பெயர்கள் சதாகுவையா. சதபுட்பா, காதிரவாகு, வாக்குபசப்பி, காராவிகணிசம், சிக்கு யத்திக்ஷா, மாதவிப்பா, சிலேத்துமத்தை வாதத்தைத் துரத்தும் தீரன், விரணம் போக்கி.

காட்டுசத குப்பை பேர்

713. கானக காயேசி சித்தி, தோஷணம், நேத்திரத்தின் இரணம் போக்கி, விஷத்திற்குத் தீரன்,

714. மேந்திரத்தான், பத்திராதி, சித்திரவாகு, சாலேயசாலம், வுலிசிவால கசப்பு, க்ஷயரோக அரம் இவை எல்லாம் வெந்தயத்தின் பெயராகும்.

715. கறியாவம், குசும்பரி, தான்னியாசம், வ்துன்னகம், வல்லிகோயி, இறுத்திய கெந்தம், சாபிபோஷணம், காப்பிறவாரணிசம், குலைதும் பருசு, வாசாக்கினி நாசி இவை எல்லாம் கொத்தமல்லியின் பெயராகும்.

716. வசொக்கிறகெந்தா, கொலோமி, கொடிகெவுரி, வங்கிராசம், ஓமசம் ஆசுவேதயம், கிமணத்திப்பி, விஷரம், திரிபங்குசாதி, வசுந்தகிருமியரி இவை எல்லாம் வசம்பின் பெயராகும்.

717 ரோகி பண்டிதன், அரிதகியம்பிவாதி, வயஹ்தாலம், பிரர்ண தாதா, (ப்ராண நாதா.) த்தியாசம். செயாமிறுத்தம், பிரபன்னா மோகா, தீபனநாசனி, சேர்ந்தவாரித்தாய்,

பூ நனாவி, சேதகி, சிரேயணி, பாஞ்சாபசாலம், வனவர்சி, ரேசகி, சிவா, வனதுர்க்கி, மலத்துக் குடோரி, வாத நாசினி, கபத்தி நாசினி இவை எல்லாம் கடுக்காயின் பெயராகும்.

**கடுக்காயின் உற்பத்தி**

718. ஆதியில் தேவர்களும் அசுரர்களும் அமிர்தத்தை கடைந்தபோது, விஷ்ணு மோகினி ரூபம் கொண்டு அந்த அமிர்தத்தை தேவர்களுக்கு பகிர்ந்தளித்தப் பிறகு கையை உதறும் போது கையில் ஒட்டிக் கொண்டிருந்த அமிர்தத் துளிகள் பூமியில் வீழ்ந்து ஏழு வித பேதமுள்ள கடுக்காய்கள் உண்டாயின.

**ஏழுவகை கடுக்காயின் பெயர் மற்றும் விளையும் இடம்**

719-721. விசயன், அரோகிணி, பிரிதிவி, அமிர்தை, சிவந்தி, திரிவிருதை, அபயன் என்று ஏழு வகையான கடுக்காய்கள் உண்டு.

விசயன் என்ற கடுக்காய் விந்திய தேசத்தில் விளையும், அரோகிணி என்ற கடுக்காய் கன்னியாகுமரியில் விளைவதாகும். பிரிதிவி என்ற கடுக்காய் சவுராஷ்டிர தேசத்தில் விளையும். அமுர்தம் என்ற கடுக்காய் காசி என்ற தேசத்தில் உற்பத்தியாகும். சிவந்தி என்ற கடுக்காயும் காசி என்ற தேசத்தில் உற்பத்தியாவதாகும்.

(இதே சிவந்தி கடுக்காய் போகரால் எழுதப்பட்ட மற்றொரு நூலில் மத்திய தேசத்தில் உற்பத்தியாவதாகக்கூறுகிறார். இதே இடத்தில் திரிவிருதையும் விளைவதாக கூறுகிறார்.)

திரிவிருதை என்ற கடுக்காய் மலைகளில் உற்பத்தியாகின்றது. அபயன் என்ற கடுக்காய் பொதிகை மலையிலும் உற்பத்தியாகின்றது.

**கடுக்காயின் உருவத்தோற்றம் மற்றும் குணம்**

722-723. விஜயன் என்ற கடுக்காய் பேய் சுரைக்காய் போல் இருக்கும். அரோகினி கடுக்காயில் நான்கு கோடுகள் இருக்கும். பிரிதிவி கடுக்காயின் மேல் தோல் மெலிதாய் இருக்கும். அமிர்தம் கடுக்காய் வழுவழுப்பான சதையும் மஞ்சள் நிறமாகவும் இருக்கும், சிவந்தி கடுக்காய் பொன் நிறமாய் இருக்கும். திரிவிருதை கடுக்காய் பஞ்சவர்ணமாய் இருக்கும். அபயன் என்ற கடுக்காய் கருப்பு வர்ணமாய் இருக்கும். விசயன் கடுக்காய் வாதத்தை விரட்டும்.அரோகினி கடுக்காய் சன்னி தோஷத்தைப் போக்கும். பிரிதிவிகடுக்காய் சிலேத்துமத்தைப் போக்கு விக்கும். திருவிருதை ரணத்தைப் போக்கி காயத்தை திடப்படுத்தும். அபயன் என்ற கடுக்காய் சகல விதமான தோஷங்களையும் அகற்றும்.

724. நேயம், சபலம், சிதுபலம், திரிபலம், சலம், சமானவாமம், கிதறிசியபலம், பஞ்சசாவறுஷ பலம், திரிதோஷ பணியம் இவை எல்லாம் நெல்லிக்காயின் பெயராகும்.

725. சாங்கம் விபிதம், கறுஷம், சங்கிலித்தாக்கி, பூதவிருட்சம், லட்சுமி வாசனி, தேசியங்குஷ்டானி, இவை எல்லாம் தான்றிக்காயின் பேராகும்.

726. சாகசிராசி, காமாற்பூசி வீரச்சாரத்த சறுஷ்பம், தீக்ஷ்ண கெந்தீக்ஷணம், சுங்கம் கிறுஷணக்குடிபம் இவை எல்லாம் கடுகின் பெயராகும்.

727.-பூதநாசனம், தூபலேபன் இரான வேதகாஷன், கடுகேந்தகரு, சினம்ரச்சிதா, கெவுசித்தர் இவை வெண்கடுகின் பெயர்களாகும்

728. இத்திரா, பதிகா, விலாசனி, வர்ணகரவாதி, தேகவர்ணி, ரிஷகநாசம், அத்துரஞ்சி, வீரன், அரிமேகசம் இவை எல்லாம் மஞ்சளின் பெயர்களாகும்.

729. பிதசந்தனம், அண்ணிய மாந்தாரு, சமந்திஷகாஷம், வித்திரகங்கோதாரஷி, விரணவிரிசி பசன்னியம், மேகம் போக்கி, சுவாசத்தை துரத்தி போன்றவை மரமஞ்சள் பெயர்களாகும்.

730. சுக்கு கெந்தம், பங்குராசிசவா, கெந்றவா, விஷரமாகாசி, இவங்கிச் சோபம், சத்தி, வினாசனி இவை எல்லாம் அதிவிடையத்தின் பேர்.

731. பித்தரோகினி, கிருஷணபேதா, கண்டிருகா நாமூனா, சகலாதினி, அக்கினி, நிற்கரோகிணி, விஷசுயரி, வித்தக்கிணி என்பவை கடுகு ரோகிணியின் பெயர்கள்.

732. மஞ்சிஷாகாலமெடிசய், மங்காலி, சாரணி, சமாந்தத்தயட்சயம், வஸ்திரபூஷணி, மஞ்சுகாகுமாசி ரமபாண்டி, காட்சிதிர்த்தநாதி போன்றவைகள் எல்லாம் மஞ்சிஷ்டியின் பெயர்களாகும்.

733. கெந்தபசாதஞ்சம், பரங்கிப்பதுமி பிராமனயஷகம், ஆங்காரவல்லி, சுக்கிறமாதாசம், காசத்திப்பரம் இவை எல்லாம் சிறுதேக்கின் டெயர்.

734. சுகந்தாளி, சுந்திரன் சந்தி தூதவி கெந்தமூலாம், பலாசிகா, சன்னிக்குடோரியோன், கடுவிரணநாசினி இவை எல்லாம் கிச்சிலிகிழங்கின் பெயராகும்.

735. கடுசிறிங்கங்குளிங்கா, வக்கிறாச மகா கோஷா, விஷனாசம், மறதசாவஞ் சாவதம், திசாரப்பெந்தி, பச்சை வறனி இவை எல்லாம் கற்கடக சிங்கியின் பெயராகும், (மூலத்தில் சில பெயர்தள் சிதைந்து விட்டன).

736. மதுகமாங்கிவிதகம், மாதுரமா, மதுராசிரம், மதுகமா, மடசிமயம், சிறிதசிர்மோ வயம், காஷமதுரம், பித்தனாசனி இவை எல்லாம் அதிமதுரத்தின் பெயர்களாகும்.

737. வாகுசி, சோமறாசி, பிசோமவல்லி, அவலக்குசம், கிறுணம்பலம், பலாம்பறி, தாசைவபூதி, சிலேபநாசினி, கிறுபறிதனைத் தக்த்துசாடம் போன்றவை கார்போக் அரிசியின் பெயராகும்.

738. இராசிநாவாம், ஆசாசாசியம், முத்தாலான சிறங்கி, மாசாந்தாசைவ உத்தா, சுகந்த மூலாதிச்சம், திரிதோஷனி, வாதகா சத்தினி, கபஉதாசனி இவை எல்லாம் அரத்தைக்குப் பெயர்களாகும்.

739. வெண் நொச்சில் விரை, சந்துவுந்திசம், தீக்ஷணத்தணலோவம், கிறுமிகனோ, கிறுயாணி, மிருகவாகனி, மாந்தியத்தை மறுக்குகின்றோன் இவை எல்லாம் வாய் விளங்கத்தின் பெயராகும்.

740. தேசவதிதேசாகுலம், தேச்சுவனி, தேசனிதலை அசுவத்தின் வலகலா, காசினி, செங்கொல்வித்து, சத்தசோதி, வாக்குடையாள், சாதகச்சத்திவாணி இவை எல்லாம் வாலுமுவையின் பெயர்.

741. கங்குணசி, ஓதிமைதி, சுவானாசெவிசம், ரத்தங்கந்துறமனா, கசப்பியாந்திச் சாக்கினி, கடிவிரணயானி இவை எல்லாம் சின்ன வாலுமுவையின் பெயராகும்.

742. இங்குறா மடம், சூபதாபனம், கெந்தி வாதிலிகம், குன்ம சூலை நாசனி இவை எல்லாம் பெருங்காய்த்தின் பெயர்களாகும்.

743. மூலிகையை கறுப்பாக்கி, தாராக்கினி, யக்கினிமுகாதரு இவை எல்லாம் செங்கோட்டையின் பெயராகும்.

744. காகவாலுகம், கநாயகம், ரேசகம், புலகம், மிறுத்திய சேர்தளம், காக்குட்டம், விளங்கம், வீரன்னரி இவை எல்லாம் கங்குட்டத்தின் பெயர்களாகும்.

745. தீத்த செயம், சத்தகனா, கண்டு முலா பூதகானாசம், மணி இவை எல்லாம் அரக்கின் பெயர்களாகும்.

746. சங்கத்துத் தாளிசம், பத்தித்தாளிசம், பத்திரி கந்தச்சதமலரி, நிருசு, கோதா, பத்திராட்டி, சுவாகஷாக்கினி, சிரோவ்வத்தி, ரவிசோதரி இவை எல்லாம் தாளிசபத்திரியின் பெயர்களாகும்.

747. வக்கிர மங்குசம், ரோமந்தா பாங்குவம், பெரிதான தீபனம், கண்டு வஸ்து தேகவுபசாரி இவை எல்லாம் தாமாலப்பத்திரி பெயர்களாகும்.

748. வோம காஞ்சனம், நாகேசரசம், முறகம், சாம்பெய், மனாகதி செலக்கம், சாம்புத்த மாடகம், பிதகெசரம், யோகொமேங்கே இவை எல்லாம் சிறு நாகப்பூவின் பெயர்களாகும்.

749. வசகாதேவம், கிநிறிபுடா, திறிதிவோ துடியம், வக்கிர கெந்தரசம், பிறோச்சி, அதே சறுவப்பெத்திரை, காப்புடிடா, இவை எல்லாம் ஏலத்தின் பெயர்களாகும்.

750. சுமலவங்கம், சிகரகேவலம், வாகிரி சமஸ்த்து புஷ்பம், வாருத்த சின்னி, மருவுபாங்கிச்சி இவை எல்லாம் கிராம்பினுட பெயர்களாகும்.

751. தபசுன்னி, சடாமாஞ்சி, சாத்தினி, பிசாசினி, திருஷ்ணா, ரத்த பித்த சமனி இவை எல்லாம் சடாமாஞ்சில் பெயர்களாகும்.

752. கெந்தமாஞ்சி, துவாம பூதகோசி, தோஷ சமனி, விஷவினா சனி, சீதளத்தி, சுகந்தம் இவை எல்லாம் கெந்தமாசிற் பெயர்களாகும்.

753. குட்டரோகணி, கிளெர் வியாதி, வாத்தியு வாசிரம், வாமங்கவு போகம், பாரிபாவிய கனு, திரிதோஷணி இவை எல்லாம் கோஷ்டத்தின் பெயர்களாகும்.

754. சித்தகம், விகசெரிதம், மதுச்சிட்டம், மதுசேஷம், தனகம், மதுகம், மாட்சி, காசியாய முருக்கினம், உபகாரி, விரணவுத்தம் இவை எல்லாம் தேன் மெழுகினுட பெயர்களாகும்.

